SHRIRAM GROUP
45 YEARS
IN FINANCIAL SERVICES
SINCE 1974



நாளும் நினைவோம் பாரதியார்

366

முனைவர் ஔவை அருள்

ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம்
12/6, போயஸ் சாலை,
தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
தொலைபேசி : 044–4341 8700

ஸ்ரீராம் நிறுவனங்கள் ஆதரவில்
ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம்
மகாகவி பாரதியாரின் 138ஆம் பிறந்த நாள்
விழாவில் 8-2-2020 அன்று வெளியிடப்பட்டு
அன்பளிப்பாக வழங்கப்பெறுகிறது.

செயலாக்கம்
பொன்னேரி பிரதாப்

மேலட்டை ஓவியம்
இரா.மகேஷ்

ஒளிஅச்சு
ஸ்ரீ மகி கிராபிக்ஸ்
சென்னை - 600 004.

அச்சிட்டோர்
ஆர்.எஸ்.டி பிரிண்டர்ஸ்
சென்னை - 600 004.

நாளும் நினைவோம்

பாரதியார் – 366

முனைவர்
ஔவை அருள்



பதிப்புரை

நாட்டுக்குப் பெருமையூட்டும் உயர்ந்த தொழில் நிறுவனமான ஸ்ரீராம் குழுமத்தின் அங்கமான பாரதி கலை இலக்கியக் கழகத்தினர் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக மகாகவி பாரதியார் படைப்புகளைப் பரப்பும் முயற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். பாரதியாரின் பல்வகைச் சிறப்பைப் பல பரிமாணங்களில் கொண்டாடி பேச்சால், எழுத்தால், தொண்டால் பாரதியத்தைப் பரப்பி வரும் பாரதி ஆர்வலர்கள், தக்க அறிஞர்கள் பலருக்குப் பரிசுகள் வழங்கிப் பாராட்டுகிறோம்.

சென்ற ஆண்டு "பாரதியார் பதில்கள் 100" என்ற நூலை முனைவர் ந. அருளைக் கொண்டு எழுத வைத்து எழுநூறு படிகளையும் பாரதியார் பிறந்த நாள் விழாவிற்கு வந்த அனைவருக்கும் இலவசமாக வழங்கினோம். எங்களுக்கு ஊக்கம் தரும் வகையில் படிகளைக் கேட்டு நூற்றுக்கணக்கான கடிதங்கள் தொடர்ந்து வந்தன. எங்களுக்குப் பெருமையாக இருந்தது. எனவே இந்த ஆண்டும் அதே நூலை மூன்று மடங்கு பெரிதாக 366 கேள்விகளாகச் சேர்க்கச் சொல்லி இந்த ஆண்டு "லீப் வருடம்" என்பதால் நான் சொன்ன " 366 – நாளும் நினைவோம் – பாரதியார்" என்ற நூலை வெளியிட்டு வழங்குகிறோம் .

முனைவர் ஔவை அருள் எங்களுக்காக இந்தப் பணியில் மும்முரமாக உழைத்ததைப் பாராட்டுகிறேன். முனைவர் அருள் என்னுடைய துணைவராகப் பாரதியார் கலை இலக்கியக்கழகத்தில் பங்கேற்றுள்ளார். முனைவர் அருள் வழங்கும் இந்த நூல் எளிய இனிய தமிழில் பள்ளிப் பிள்ளைகளும் படித்து மகிழத் தக்க வகையில் வெளியிடப்பெறுகிறது.

இந்த நூல் பாரதியாரைப் பற்றிய உணர்வையும், எழுச்சியையும் உருவாக்கும் என்பது எங்கள் நம்பிக்கையாகும். அயர்வில்லாமல் அல்லும், பகலும் என்னோடு உடன் உழைத்து இந்த நற்பணிக்குப் பொலிவூட்டிய செயற்செம்மல் திரு. பிரதாப்புக்கு என் நல்வாழ்த்துக்கள், பாரதி இலக்கியக் கழகத்தில் அவர் தொண்டு தொடர்ந்து வளமூட்டுகிறது.

மகாகவி பாரதியாரின் 138 – ஆம் பிறந்த நாள் நினைவாக, ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம், கேள்வி – பதில் வடிவத்தில் வெளியிடப்படும் இந்நூல் விலையில்லாமல் விருந்தினர் அனைவருக்கும் கையுறையாக வழங்கப்பெறுகிறது.

"காவியம் செய்வோம் நல்ல காடு வளர்ப்போம்
கலை வளர்ப் போம் கொல்லருளை வளர்ப்போம்
ஓவியம் செய்வோம் நல்ல ஊசிகள் செய்வோம்
உலகத் தொழிலனைத்து முவந்து செய்வோம்"

– மகாகவி பாரதியார்

ஸ்ரீராம் நிறுவனங்கள்
சென்னை

ஜி.சுந்தரேசன்
தலைவர்

பதிப்புரை

நுழைவாயில்...

பள்ளி மாணவனாக நான் பயிலத் தொடங்கிய முதலே பாரதியார் கவிதைகளின் கன்னல் வரிகளை மனனம் செய்து போட்டிகளில் எழுத்துரையாகவும் – மேடைத் தொடர்களாகவும் தடுமாறிப் பேச முயன்றதை என்னால் இன்றும் மறக்க முடியவில்லை.

இன்னும் கூட என் தனி ஆசிரியர் மறைந்த புலவர் திலகம் அமிர்தலிங்கம் "அச்சமில்லை அச்சமில்லை" என்ற பாடலைச் சரியாக ஒப்புவிக்கவில்லை என்று காதைத்திருகியது நினைவில் நிற்கிறது .

கல்லூரிக்கு வந்த பிறகு ஆங்கிலப் பேச்சுப் போட்டியில் பேசும் பொழுது, ஆங்கிலத் தொடர்களை நீ எப்படி ஒலிக்கிறாய் என்று பார்க்கிறேன் என்று தந்தையாரின் இனிய நண்பராகிய பேராசிரியர் கேட்டபொழுது, அப்போது நான் ஒப்புவித்த பகுதியை இப்போது நினைவு கூர்ந்து எழுதுகிறேன்.

"The gloom that overshadowed the country during the past four centuries is slowly passing away and a new dawn is in sight. The harbinger of the approaching dawn is our latest poet Subramanya Bharathi. He is essentially a religious poet, With religious mysticism he combines an unbounded love for the poor and the downtrodden. The poems that he addresses to Kannan are as sweet and soul-stirring as any that we meet with in ancient literature; the hymns to Shakti are grander than the old hymns addressed to Korravai. The charm of his lyrics, and the dignified tone of his patriotic songs have endeared him to his people. The healthy outlook on life underlying his poems has a universal appeal. He views humanity as a whole and stands ready to embrace the North and the South, the East and the West,as well as

the educated and the illiterate. May the Tamil people, the inheritors of a glorious civilisation, view the world with the eyes of Bharathi.

The great poet rising above narrow sectarianism and petty social conventions march on the path that will lead them to the Divine Spirit, which is the source of all goodness, beauty and truth"

இந்தத் தொடர்கள் பாரதியாரின் பெருமையைப் பற்றி விபுலானந்த அடிகள் ஆற்றிய உரையாகும்.

பாரதியாரின் படைப்புகளில் அருவியாகப் பாய்ந்தோடும் கவிதைகளைப் போலவே அவருடைய உரைநடைப் பகுதிகளும் சிறப்புக்குரியவை. மொழிநடை, எடுத்த பொருளைத் தொடுத்துக் கூறும் வழிமுறை, எளிமை, கருத்துச்செறிவு, ஆழம், தெளிவு, சொல் கூர்மை ஆகிய பல திறங்களைக் கொண்டு அமைந்தன.

கூடியவரை, பேசுவது போலவே எழுதுவது தான் உத்தமம் என்பது என்னுடைய கட்சி என்று வசன நடை பற்றிப் பாரதியார் குறிப்பிடுகிறார். வசனநடை என்பது தெளிவு, ஒளி, தண்மை, ஒழுக்கம் இவை நான்கும் உடையதாக இருக்கவேண்டும் என்றும் பாரதியார் வரையறை செய்தார்.

பேச்சு நடையில் அந்நாளைய வட்டார வழக்கும் – வடமொழிச் சொற்களும் உரைநடையில் மலிந்துள்ளன. இக்காலத்துக்குக்குரிய வகையில் இளைஞர் – உரைநடையைப் பொருள் விளங்கிக்கொண்டால் கருத்துக்களின் ஆழம் நம் மனத்தைக் கவரும், அந்த வகையில் நூற்றுக்கணக்கான கேள்விகளையும் – பதில்களையும் பல்வேறு விழா மலர்களிலிருந்து படித்துத் தொகுத்தவையே இப்பதிப்பில் 300 க்கு மேற்பட்ட வினாக்களாக வினா விடை வடிவில் சேர்த்துள்ளேன்.

இந்த ஆண்டு 366 நாள்களைக் கொண்ட “மிகைநாள் ஆண்டாக“ அமைவதால் நாளுக்கொரு கேள்வி என்ற கணக்கில் என் நண்பர்களோடு தொகுக்க முற்பட்டேன். தொகுப்பைக்கூடத் தொடர்ந்து சீராக்க வேண்டும் என்ற கருத்து என் உள்ளத்தில் உள்ளது.

வினா – விடை என்று வழங்குவதே மரபு கேள்வி – பதில் என்று சொல்லிப் பழகிவிட்டோம். குறிப்பாகச் சொல்வதானால், செவியால் கேட்பது கேள்வி, வாயால் கேட்பது வினா என்றும் கொள்வதே இலக்கிய வழக்காகும். பாரதியாரைப் பற்றி ஏறத்தாழ நிறைவாக நானும் நீங்களும் உணர்ந்துகொள்ள, வினா – விடையை இலக்கிய உத்தியாக அமைத்துக்கொண்டேன்.

பாரதியார் பதில்கள் நூறு என்ற விலையில்லாப் பதிப்பை நூற்றுக்கணக்கானோர் விரும்பி வேண்டியதை மனத்திற்கொண்டு ஸ்ரீராம் கலை இலக்கியக் கழகத்தின் தலைவர் திரு. ஜி. சுந்தரேசன் அவர்கள் ஊட்டிய ஊக்கத்துக்கு ஈடில்லை. எனவே இதனை இரண்டாம் பதிப்பாக வெளியிட வேண்டும். முடியுமானால் இன்னும் கூடக் கேள்விகளைச் சேர்த்து உரை நடையாக விளங்கும் பாரதி தமிழையும் படித்துப்பாருங்கள் என்று அவரால் இந்தப் பதிப்பு வனப்பும் – கூடுதலான பக்கங்களையும் கொண்டு வெளிவருகிறது. பதில்கள் 366 ஆகச் சேர்க்க வேண்டும் என்ற சிந்தனையையும் வழங்கினார்கள். பாரதியார் விழா மலர்களைத் தேடிக்காணும் முயற்சியை நான் மேற்கொண்டேன். பாரதியாரைப் பற்றி நூற்றாண்டு விழாவில் ஆயிரம் நூல்கள் வெளிவந்தன என்றால் மிகையாகாது. பாரதியார் பல்கலைக்கழகம் நூற்றாண்டு விழா மலரைக் களஞ்சியமாக அளித்தார்கள் .

பதில்களுக்கு ஏற்ற கேள்விகள் என்ற முறையை – வடிவமைத்த துணைவர் பொன்னேரி பிரதாப் எனக்குப் பெரிதும் தோள்கொடுத்தார். வினாக்களை ஒழுங்குபடுத்திய திருமதி சுபத்திரா தேவி, திருக்குறள் மாமணி நயம்பு அறிவுடை நம்பி, சொல்லருவி சிவ. சதீஷ்குமாருக்கு என் நன்றி.

எந்த வகையிலும் தான் ஓர் ஒப்பற்ற தலைவர் என்று அணுவளவும் காட்டிக்கொள்ளமால் நடை, உடை, செயல், சிந்தனை, பாங்கு, பண்பாடு என்ற நலங்களை உயரிய திறமைக்குள் பதிய வைத்துக்கொண்டு இலங்கும் "பத்மபூஷண்" "ஆற்றல் சிகரம்" ஆர்.டி அவர்களிடம் நான் நெருங்காமலேயே நெஞ்சில் இடம் பிடித்தவன். அவர் காட்டிய வழிதான் எனக்குச் சில திசைகளைக் காட்டின .

என் தந்தையால் எனக்குக் கிட்டிய அவருடைய வாழ்த்து, மூலையில் கிடந்த என்னை பாரதி முற்றத்துக்கு அழைத்து வந்திருக்கிறது. தொடங்குவது மட்டும் அல்ல பெரிது – தொடர்வது தான் அறிவு என்ற பாடத்தை நான் எப்போதும் படித்து வருகிறேன் .

தந்தை அருள் வலியாலும் – இன்று
சாந்த தலைவர் தவ வலியாலும்
புகழ் ஏறிப் புவிமிசை பொலிவோம்

என்ற பாரதியாரின் நோக்கம் தழுவிய சூளுரை அனைவருக்கும் வாழ்க்கை நெறியாகட்டும்.

வாழிய செந்தமிழ் ! வாழிய பாரதியார் வான்புகழ் !!

முனைவர் ஔவை அருள்

1. கேள்வி : பாரதியாரின் இளமைப் பருவம் பற்றி எழுதுக ?

பதில் : தொண்டை நாடு போலவே தென் பாண்டி நாடும் உயர்ந்த சான்றோர் பலரை உலகிற்கு வழங்கியுள்ளது. நெல்லை, தூத்துக்குடி, தென்குமரி என்னும் மூன்று மாவட்டங்கள் தென் தமிழ் நாடென்றும் அழைக்கப்படும். அந்நாட்டில் எட்டையபுரம் புகழ்பெற்ற பேரூராகும். இவ்வூரில் சீவலப்பெரி சின்னசாமி ஐயரும், இலட்சுமி அம்மையாரும் இல்லறமாம் நல்லறத்தை இனிதே நடத்தி வந்தனர். அவ்விருவரின் இல்லறப் பயனாய் ஆண் மகவு 1882 ஆம் ஆண்டு திசம்பர் பதினொன்றாம் நாள் பிறந்தது. சித்திரபானு ஆண்டு கார்த்திகைத் திங்கள் 27–ஆம் நாள், திங்கட்கிழமை மூல நட்சத்திரத்தில் பிறந்த மகனார் ஆவார். சுப்பிரமணியம் என்ற பெயர் வைக்கப்பட்டது. மகனுக்குச் சுப்பையா எனச் செல்லப் பெயரிட்டனர். சுப்பையாவைப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தனர். சுப்பையாவுக்கு ஐந்து அகவை நிறைவு பெறு முன்னரே தாயார் இயற்கை எய்தினார். தந்தையார் 1889 இல் மறுமணம் செய்து கொண்டார். அதே நாளில் சுப்பையாவுக்கு பூணூல் சடங்கு நிகழ்ந்தது. 1893 இல் எட்டையபுரம் புலவர்களுக்காகப் பாட்டியற்றும் போட்டி நடைபெற்றது. அதில் பங்கு கலந்து கொண்டு முதலிடம் பெற்றார். அதனால் கலைமகளைக் குறிக்கும் பாரதி என்ற பட்டம் வழங்கினர். பாரதி என்பது இவரது கலைத் தெளிவிற்கும், கவிதைத் திறனுக்கும் அமைந்த பட்டப் பெயராகும். அன்று முதல் சுப்பையா என்னும் சுப்பிரமணியன், சுப்பிரமணிய பாரதி என்றும், பாரதியார் என்றும் அழைக்கப்பட்டார். பாரதியார் பெயரில் பலர் இருப்பினும் பாரதியார் என்றாலே சுப்பிரமணிய பாரதியாரைத் தான் குறிக்கும்.

பாரதியார் 1894 முதல் 1897 முடிய திருநெல்வேலி இந்து கலாசாலையில் ஐந்தாம் வகுப்பு வரை படித்தார். வகுப்பில் பாடல் இயற்றல், வாய் திறந்தால் வண்ணம் பாடுதல் இவற்றில் தன்னிகரற்று விளங்கினார். மாணவர்கள், ஆசிரியர்கள் பாரதியாரிடம் ததும்பிய தமிழ்ப்புலமை கண்டு வியந்தனர். நயந்தனர். மருண்டனர்.

1897ஆம் ஆண்டில் பாரதியார் தம் 15 ஆம் அகவையில் கடையம் செல்லப்பா ஐயர் மகள் செல்லம்மாளை மணந்தார். 1898 இல் தந்தையார் மறைந்தார். 1898 முதல் 1902 முடிய காசியில் அத்தை குப்பம்மாள் வீட்டில் இருந்தார். அங்கு அலகாபாத் தேர்வில் முதல் நிலையில் முன்னிலைத் தேர்வில் தேறினார். காசி வாழ்க்கையில் சமஸ்கிருதம், இந்தி, அரபி முதலிய மொழிகளில் தேர்ச்சியும் பெற்றார். கச்சம், வால்விட்ட தலைப்பாகை, மீசை முதலியன அவரின் பழக்கமாயின. இங்ஙனம் பாரதியாரின் இளமைப் பருவம் வாழ்க்கை எட்டையபுரம், திருநெல்வேலி, காசி என்னும் மூன்று ஊர்களில் கழிந்தது.

2. கேள்வி : பாரதியார் தன்னை பழித்த புலவர் காந்திமதி நாதனுக்குப் அளித்த எதிருரை யாது ?

பதில் : ஓரிடத்தில் இளைஞர்களும் பெரியோர்களும் கூடியிருந்தனர். அவருள் காந்திமதி நாதனும், பாரதியாரும் இக்கூட்டத்தில் இருந்தனர். காந்திமதி நாதன் இளைஞரான பாரதியாரின் புலமை கண்டு பொறாமை கொண்டார். பாரதியாரை மட்டம் தட்ட எண்ணிய காந்திமதி நாதன் "பாரதி சின்னப்பையல்" என்ற ஈற்றடியைப் பாரதியாரிடம் கூறி, அந்த வெண்பாவை நிறைவு செய்யுமாறு கூறினார். அங்குக் கூடியிருந்தோர் பாரதியார் என்ன சொல்லப் போகிறார் என்று திகைத்து நின்றனர். பாரதியார் வானத்தில் பாடித்திரியும் வானம் பாடியல்லவா ? ஒரு நொடியும் தாமதிக்காமல் வெண்பாவை விரைந்து கூறி முடித்தார்.

"ஆண்டில் இளையவனென் றந்தோ அகந்தையினால்
ஈண்டின்று இகழ்ந்தென்னை ஏளனஞ்செய் – மாண்பற்ற
காரது போலுள்ளத்தான் காந்திமதி நாதனப்
பாரதி சின்னப் பையல்"

இதைக்கேட்ட அனைவரும் பாரதியாரின் கவிப்புலமையைப் பாராட்டினர். காந்திமதி நாதனைப் பார்த்து நகைத்தனர். எரிச்சல் கொண்ட காந்திமதி நாதன் தலை கவிழ்ந்தார்.

3. கேள்வி : தமிழ்ப் புலவர் வினாவுக்குப் பாரதியார் நினைவு கூறி விடையளித்த நிகழ்வை நினைவு கூர் ?

பதில் : புலவருலகில் தமிழாசிரியர் ஒருவர் பாரதியார் மீது வெறுப்புக் கொண்டிருந்தார். வகுப்பில் அமர் மேடையில் மேல் வரிசையில் பாரதியார் அமர்ந்திருந்தார். வேண்டுமென்றே அப்பண்டிதர் பாரதியாரைப் பார்த்து இடக்குமடக்காக ஒரு கேள்வி கேட்டார். அதற்கு பாரதியார் வேண்டுமென்றே விடையளிக்காமல் அமைதியாக அமர்ந்திருந்தார்.

அப்போது அப்பண்டிதர். "காளமேகம் போலக் கவி மழை பொழிவதாக ஊரிலே உம்மைப் புகழ்கிறார்கள். மேலான இடத்திலே உயர்வாக அமர்ந்திருக்கிறீர்கள். காளமேகம் போன்றவரான நீர் சும்மா இருப்பதேன்" என நகையாடினார்.

உடனே பாரதியார், "ஆசிரியர் அவர்களே! கொண்டல் மேகத்தின் குணம் கூடத் தெரியாமல் கூறலாமா? காளமேகம் தனக்குத் தோன்றிய போதுதான் இடித்து மழை பொழியும், பண்டிதர் மற்றும் பலரின் ஆணைக்கு அடங்கி மழை பொழிவதில்லையே. இவ்வியல்பை உணராமல் எம்மைப் பாடுமாறு கட்டாயப்படுத்தும் உம்மிடம் பரிவு காட்டுவது எப்படி?" எனப் பதிலளித்தார். அதைக்கேட்ட மாணவர்கள் கைகொட்டி நகைத்தனர். தமிழாசிரியர் நாணமுற்றார். பதிப்பாளர் முல்லை முத்தையா 'பாரதியார் விருந்து' என்ற நூலில் இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுள்ளார். பாரதியார் பிறர் வியக்குமாறு விடை கூறிய நிகழ்ச்சிகள் பலவாகும்.

4. கேள்வி : "வரிதே உலகம் பேணுநர் பலரே" பெருமிதற்கிணங்கப் பாரதியார் கொண்டிருந்த நிலை குறிக்கவும் ?

பதில் : கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு உண்டு. சோழன் கம்பரை நாட்டை விட்டுத் துரத்தியபோது "குரங்கு ஏற்றுக் கொள்ளாத கொம்புண்டோ" எனக் கூறிச் சென்றார். பாரதியாரும் ஒரு போதும் அடிமை வாழ்வை விரும்பினாரில்லை.

"விட்டு விடுதலையாகி நிற்பாய் – இந்தச்
சிட்டுக் குருவியைப் போலே"

என முழங்கியவர், "பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்" எனப்பாடித் திரிந்தவர். அவரது விடுதலை வேட்கைக்குச் சான்றுகள் பல உள்ளன. பாரதியார் இளமை முதலே விடுதலை வெறி கொண்டவர்.

காசியிலிருந்து பாரதியார் எட்டையபுரம் வந்தார். அரண்மனையில் கைகட்டிச் சேவகம் பார்ப்பது இவருக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

மன்னர் முன்னர் எவரும் மார்பின் மேலே ஆடை அணியலாகாது என்பது அரண்மனை வழக்கம். மன்னர் தெருவில் வந்தால் எழுந்து நிற்க வேண்டும். கைகட்டிக் கொள்ள வேண்டும். இவையெல்லாம் பாரதியாருக்கு அறவே பிடிக்கவில்லை.

ஒரு சமயம் மன்னர் தெரு வழியே போனார். பாரதியார் எழுந்து நிற்கவில்லை. அரண்மனையில் ஒரே சலசலப்பு. பாரதியாருக்கு அரண்மனை வேலை போய் விட்டது. அதைப்பற்றிப் பாரதியார் கவலைப்படவில்லை. சிலர் பாரதியாரிடம் வந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் மீண்டும் வேலைக்குச் சேரலாம் எனக் கூறினர். அதற்குப் பாரதியார் "எட்டையபுர அரசர் சுண்டைக்காய் அளவு நிலம் வைத்திருக்கிறார். உலகமோ மிகப்பெரிது. அதிலே எங்கே சென்றாலும் எனக்கு இடமிருக்கிறது" எனக்கூறி மன்னிப்புக் கேட்க மறுத்து விட்டார். இதிலிருந்து பாரதியாரின் பெருமித வாழ்வுணர்ச்சியை நாம் அறியலாம்.

5. கேள்வி : பாரதியாரின் தாய்மொழிப் பற்றை விளக்குக?

பதில் : பாரதியார் தமிழால் புகழ் பெற்றவர். தமிழுக்குப் புகழ் சேர்த்தவர்.

"என்னென்று சொல்வேன்
தமிழால் பாரதி தகுதி பெற்றதும்
பாரதியால் தமிழ் தகுதி பெற்றதும்"

என்று பாவேந்தர் பாடினார்.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்குப்பின் தமிழகத்தைக் களப்பிரர், நாயக்கர், நவாப்பு, மராத்தியர், ஆங்கிலேயர் என மொழியால் வேறுபட்டவரெல்லாம் ஆண்டனர். வழிபாட்டில் வட மொழி, வாய்ப்பாட்டில் தெலுங்கு, வளர்த்த கல்வியோ ஆங்கிலம், இங்ஙனம் எங்கும் தமிழ் புறக்கணிக்கப்பட்டது. எங்கும் தமிழ், எதிலும் தமிழ் இல்லாத காலம். அன்னிய மொழிகளின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போர்முரசு கொட்டவும், பரணி பாடவும் தமிழ்ப்புலவருள் ஒருவரேனும் முன்வரவில்லை. "திசைதிறந்து அண்டம் சீறிச் சிரித்தது அச்செங்கண் சீயம். அதுபோல ஆங்கில ஆதிக்கம் கண்டு அண்டமெல்லாம் அதிரச் சிரித்தனள் செந்தமிழ்த்தாய். அந்தச் சிரிப்பிலிருந்து பாரதி பிறந்தான்" என சிலம்புச் செல்வர் ம.பொ.சி கூறியது உணர்வூட்டும் சிறப்புரையாகும்.

நூற்றுக்கணக்கான பாடல்களைப் பாரதியார் பாடியுள்ளார். அவற்றுள் தாய்மொழிப்பற்றை தடைகளைத் தகர்க்கும் பொங்கும் கடலாகவும், பொழியும் மழையாகவும், வீசும் புயலாகவும் பாடியுள்ளார். வாழ்த்து. வாழிய செந்தமிழ் என்ற தலைப்பிலுள்ள நான்கு பாடல்கள் தமிழைப் பற்றி நினைக்கத்தக்கவை.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்"

என்று தமிழ்மொழியைச் சிறப்பித்தார்.

"வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி வாழிய வாழியவே
வானமளந்ததனைத்தும் அளந்திடும் வண்மொழி"

என்று தமிழ்மொழியை வாழ்த்தினார்.

"வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர் வாழிய பாரத மணித்திருநாடு"

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"
என்று தமிழ்நாட்டைச் சிறப்பித்தார்.

"சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும்
திருக்குறள் உறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்
எல்லையொன்றின்மைஎனும் பொருள் அதனை
கம்பன் குறிகளால் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும் முன்பு நான்தமிழ்ச்
சாதியை அமரத் தன்மைவாய்ந்தது என்று
உறுதிகொண்டிருந்தேன்"

என்று பாராட்டி மகிழ்ந்தார். ஆனால் தமிழரின் மொழிப்பற்றின்மை, புறக்கணிப்பைக் கண்டு

"விதியே ! விதியே ! தமிழ்ச் சாதியை
என்செயக் கருதி இருக்கின்றாயடா"

என வருந்தினார்.

இங்ஙனம் தமிழரின் உயர்வுக்கு வழிகாட்டும் அவரின் பாடல் வரிகள் புதுமை வரிகளாய்த் திகழ்ந்தன.

"நமது மூதாதையர் நயமுறக் காட்டிய
ஒழுக்கமும் நடையும் கிரியையும் கொள்கையும்
அங்கவர் காட்டிய அவ்வப் படியே
தழுவிடின் வாழ்வு தமிழர்க்கு உண்டு"

பாரதியார் பாடிய ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களுள் அங்கிங்கெனாதபடி எங்கும் தமிழ்க் காதல் கரைபுரண்டோடுகிறது.

6. கேள்வி : தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவ பாரதியார் கூறிய வழிமுறைகள் யாவை?

பதில் : பாரதியாரின் விருப்பங்கள் பல. அவற்றுள் மொழி வளர அவர் காட்டிய வழிமுறைகள், நெறிகள், விருப்பங்கள், திட்டங்கள் சிறப்பானவை. ஒன்று பிறமொழி நூல்களைத் தமிழிலே மொழிபெயர்க்க வேண்டும் என்பது முதன்மையானது.

தமிழ்நாட்டிலுள்ள சிலர் மேலை நாடுகளில் பல புதிய கண்டுபிடிப்புகள், புத்தாக்கங்கள் பற்றிய நுட்பங்கள் கூறும் நூல்களில்லை என்கின்றனர். அதைக் கேட்ட பாரதியார் நெஞ்சம் வருந்தியது. அதனைப் போக்க என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் – கலைச்
செல்வங்கள் யாவும்கொணர்ந்திங்கு சேர்ப்பீர்
தந்தை அருள்வலியாலும் இன்று
சாந்தபுலவர் தவ வலியாலும்
இந்தப் பெரும்பழி நீங்கும் – புகழ்
ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்"

7. கேள்வி : தமிழர் செய்ய வேண்டிய முதற்பணி யாது ?

பதில் : "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும், இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும் மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்"

இதிலிருந்து தரமான, இறவாத புகழுடைய நூல்களைத் தமிழ்ப்புலவர்கள் இயற்ற வேண்டும். அவற்றால் அயல்நாட்டார் தமிழை விரும்பி வணங்கிப் படிப்பர் என வழிகாட்டினார். பாரதியார் விருப்பம் நிறைவேறியுள்ளது. இன்று உலக நாடுகளில் உயர்ந்த பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கைகள் அமைந்துள்ளன.

"ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒருசொற்கேளீர்
சேமமுறவேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்"

என்றார்.

அதாவது கடைத்தெருவில் ஒருவர்க்கொருவர் கண்டு உரையாடும் போது தமிழிலேயே உரையாட வேண்டும். கடைப்பெயர்கள் தமிழிலே எழுதப்பட்டிருக்க வேண்டும். ஊர்தோறும், தெருத்தோறும் தமிழ்ப்பள்ளிக்கூடங்கள் நிறுவ வேண்டும். இங்ஙனமெல்லாம் ஒல்லும் வகையெல்லாம் தமிழைப் பரப்ப வேண்டுமென்றார். அங்ஙனம் தமிழைப் பரப்பினால் என்ன விளையும் என்பதை,

"தெள்ளுற்றதமிழமுதின் சுவை கண்டார்
இங்கமரர் சிறப்புக்கண்டார்"

என்பதில் தெளிவு படுத்தினார்.

8. கேள்வி : பாரதியாரின் கடிதங்கள் எத்தகைய தமிழ் உணர்வைப் புலப்படுத்துகின்றன ?

பதில் : பாரதியார் பாடல்கள், வசனகவிதை, கட்டுரை முதலியவற்றின் வாயிலாக அவரது தமிழ் உணர்வைக் காணலாம். அதைப்போல அவரது கடிதங்களிலும் தமிழ் உணர்வு மேலோங்கியிருப்பதைக் காணமுடியும். பாரதியாரின் இருபத்து மூன்று கடிதங்களை அறிஞர் தொகுத்து வெளியிட்டுள்ளனர். அவற்றுள் மூன்றை மட்டும் இங்குக் காணலாம்.

மனைவி செல்லமாளுக்கு எழுதிய கடிதம்

பாரதியார் காசியில் இருந்த போது 1901 இல் தன் மனைவிக்கு எழுதிய கடிதம் பின்வருமாறு.

"எனதருமை மனைவி செல்லம்மாளுக்கு ஆசீர்வாதம். விசுவநாதன் அனாவசியமாக எனக்குப் பயத்தை விளைவித்திருக்கிறான். நீ இந்த மாதிரி கவலைப்படும் நேரங்களில் தமிழை நன்றாகப் படித்து வந்தாயானால் மிகவும் சந்தோஷமுறுவேன்".

உனதன்பன்
சி. சுப்பிரமணிய பாரதி

தம்பி விசுவநாதனுக்கு எழுதிய கடிதம்

பாரதியாரின் தம்பி விசுவநாதன் பாரதியாருக்கு ஒரு கடிதம் எழுதினார். அது ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. அதற்குப் பதில் எழுதிய பாரதியார் கடிதம் பின்வருமாறு :

"எனக்கு இனிமேல் இங்கிலீஷில் காகிதம் எழுதாதே!

நீ எழுதும் தமிழ் எத்தனைக் கொச்சையாக இருந்த போதிலும் அதைப்படிக்க நான் ஆவலுறுவேன்".

எனதன்புள்ள சகோதரன்

சி. சுப்பிரமணிய பாரதி

தம்பி என்றழைக்கப்பட்ட

பரலி. சு. நெல்லையப்பருக்கு எழுதிய கடிதம்

தம்பி! நான் என்ன செய்வேனடா! தமிழை விட மற்றொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும் போது எனக்கு வருத்தமுண்டாகிறது. தம்பி – உள்ளமே உலகம். தம்பி – தமிழ்நாடு வாழ்க என்று எழுது. தமிழ்நாட்டிலே ஒரே ஜாதிதான் உண்டு அதன் பெயர் தமிழ்ச்சாதி.

எனதன்புள்ள

பாரதி

மேற்கண்ட மூன்று கடிதங்களிலும் பாரதியாரின் தமிழ்மொழிப்பற்று குன்றிலிட்ட விளக்குப் போலப் புலப்படும்.

9. கேள்வி : பாரதியாரின் நாட்டுப்புறப் பாடல் வகைகள் யாவை ?

பதில் : கும்மி, மறவன் பாட்டு, பள்ளுப்பாட்டு, வண்டிக்காரன் பாட்டு, புதிய கோணங்கி முதலியன பாரதியாரின் நாட்டுப்புறப்பாடல் வகைகளாகும். இவற்றை வாய்மொழிப் பாடல்கள் என்றும், ஏட்டில் எழுதாக் கவிதைகள் நாடோடிப் பாடல், நாட்டார் பாடல் என்றும் வழங்குவர். இதன் இன்றியமையாமையை பாஞ்சாலி சபதத்தின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

"எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு, இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்தில் செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவான் ஆகிறான். ஓரிரண்டு வருடத்து நூற் பழக்கமுள்ள தமிழ்மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவு படாமலும் எழுதுதல் வேண்டும்" என்றார். பாடல்கள் படிப்பதற்காக அல்ல. இசையுடன் பாடுவதற்கே என்று பாரதியார் விரும்புவார். இதனை அவரது வாய்மொழிப் பாடல்கள் உறுதிப்படுத்தும்.

"வில்லினை ஒத்த புருவம் வளைத்தனை வேலவா
அங்கோர் வெற்பு நொறுங்கிப் பொடி பொடி யானது வேலவா"

என்பது காவடிச் சிந்து பாடலாகும்.

"நெஞ்சு பொறுக்குதில்லையே – இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்"
என்பது நொண்டிச் சிந்தாகும்.

"எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கேபெண்
இளைப்பில்லை காண் என்று கும்மியடி"
என்பது நாட்டுப்புறக் கும்மியாகும்.

"குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு
நல்லகாலம் வருகுது வருகுது"
என்பது குடுகுடுப்பைக்காரன் பாட்டாகும்.

"நிறுத்து வண்டி என்றே– கள்ளர்
நெருங்கிக் கேட்கையிலே – எங்கள்
கறுத்தமாரியம்மன்பேர் சொன்னால்
காலனும் அஞ்சுமடா"
என்பது வண்டிக்காரன் பாட்டாகும்.

புதுவையில் பண்டாரங்கள் பலருடன் பழகியவர். இவரது கவிதைகளில் பண்டாரப் பாட்டொன்றும் காணக் கிடைக்கிறது. இதோ அப்பாட்டு.

"எங்கும் சிவனைக் காணடா –
இனப் பயத்தைத் துரத்தடா!
கங்கை சடையா! காலன் கூற்றே!
காமன்பகையே! வாழ்க நீ "

இவற்றுடன் குறி சொல்லும் குறத்திப் பாட்டும் பாரதியார் பாடியுள்ளார்.

"மாயச் சூதி னுக்கே ஐயன்
மனமி ணங்கிவிட்டான்
தாயம் உருட்ட லானார் – அங்கே
சகுனி யார்ப்ப ரித்தான்
நேய முற்ற விதுரன் – போலே
நெறியு ளோர்க ளெல்லாம்
வாயை மூடி விட்டார் – தங்கள்
மதிம யங்கி விட்டார்."

மேலும், சிற்றூர்ப்புறங்களில் பெண்கள் நெல் குத்துதல், சுண்ணம் இடித்தல் முதலிய பாடல்களில் தாம் மயங்கி விட்டதாகக் கூறியுள்ளார். பாரதியார் மரபு சார்ந்த இலக்கியம் படைத்தவர். அதே வேளையில் வாய்மொழி இலக்கியமும் படைத்துள்ளார். இவ்விரு வகையில் பாரதியார் தம் புலமையின் பரப்பைக் காட்டினார்.

10. கேள்வி : பாரதியார் பாடாததும், பாடியதும் எவை ?

பதில் : பாரதியார் காலத்திற்கு முன்னர் குலசேகர ஆழ்வார் திருமாலைக் குழந்தையாகப் பாவித்துத் தாலாட்டுப் பாடியுள்ளார். அவரின் சமகாலத்துப் புலவர்களும் தாலாட்டுப் பாடியுள்ளனர். பிள்ளைத் தமிழில் தாலாட்டு பாடல்கள் என்றே ஒரு பருவம் உண்டு.

"பூவில் அயனும் இந்தப் பூமீது வள்ளுவர் தம்
பாவின்நயம் உணரப் பாலகனாய் வந்தானோ
கண்ணுறங்கு கண்மணியே
ஆராரோ ஆரிரரோ"

என்று கவிமணி தேசிக விநாயகம் தாலாட்டுப் பாடியுள்ளார்.

"சாணிக்குப் பொட்டிட்டு சாமியென்பார் செய்கைக்கு
நாணி உறங்கு நகைத்து நீ கண்ணுறங்கு"

என்றும்,

"மானிடரின் தோளின் மகத்துவத்தைக் காட்ட வந்த
தேனின் பெருக்கே என்செந்தமிழே கண்ணுறங்கு"

என்றும் பாவேந்தர் முறையே பெண்மகவுக்கும், ஆண் பிள்ளைக்கும் தாலாட்டுப் பாடியுள்ளார்.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை.

"சீராடும் காவேரி தேவி திருவருளால்
வாராமல் வந்துதித்த மாமணியே கண்ணுறங்கு"

என்று பாடியுள்ளார்.

ஆனால் பாரதியார் மட்டும் தாலாட்டுப் பாடல் பாடவேயில்லை. காரணம் என்ன? நாட்டு மக்கள் வாயிருந்தும் பேச்சிலராய், கண்ணிருந்தும் காணாராய், காதிருந்தும் கேளாராய் உள்ளனர். இத்தகைய சூழலில் தாலாட்டுப் பாட பாரதியார் விரும்பவில்லை. அடிமையாக வாழும் மக்களை விழித்தெழச் செய்ய வேண்டும் என்றே எண்ணினார். இங்ஙனம் புலவர்கள் வழிவழியாகப் பின்பற்றி வந்த மரபை பாரதியார் புறக்கணித்து விட்டார். அம்மரபுக்கு மாறாக நாட்டுச் சூழலை எண்ணி உறங்குவோரை எழுப்புகின்ற திருப்பள்ளியெழுச்சிப் பாடினார்.

இவருக்கு முன்னர் மாணிக்கவாசகரும் ஆழ்வாரும் இறைவனுக்குத் திருப்பள்ளி எழுச்சி பாடியுள்ளனர். பாரதியார் பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி பாடினார். பாரதியாரின் உள்ளத்து உணர்வை நன்குணர்ந்தவரான பாவேந்தர், பாரதியாரைப் பற்றிக் குறிப்பிடுகையில் "'நீடுதுயில் நீக்கப்பாடி வந்த நிலா'' என்று பாடினார். இங்கே மெல்ல அசைந்து வரும் குளிர்ச்சியான ஒளி என்று பொருள் கொள்ள வேண்டும் ஏனென்றால் நிலா என்பதற்குக் குளிர்ச்சி என்றும் பொருள் கூறுவர். நிலா உறக்கத்தைத் தரும் ஆனால் இந்த இனிய நிலா வெளிச்ச விழிப்பைத் தருகிறது.துயில் என்னும் உறக்கம் பொதுவாக இருவகைப் படும். அறிதுயில் என்பது அவற்றுள் ஒன்று. இது இறைவனுக்கானது. அதாவது தூங்காமல் தூங்குவதாகும். திருவரங்கப் பெருமானின் துயில் அறிதுயிலாகும். "தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவது எக்காலம்'' என்றார் தாயுமானவர்.

"பொழுது புலர்ந்தது யாம் செய் தவத்தால்
புன்மைஇருட்கணம் போயினயாவும்
எழும்பசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி
இதமுறவந்தெமை ஆண்டருள் செய்வாய்
இனியவளே! பள்ளி எழுந்தருளாயே''

எனப் பாரதியார் மக்களையும், பாரத அன்னையையும் எழுப்பினார். இங்ஙனம் பாரதியார் பாடாதது தாலாட்டுப்பாட்டு. மக்களைத் தட்டி எழுப்பியது திருப்பள்ளி எழுச்சி.

11. கேள்வி : பாரதியாரின் ஒரு சிறுகதையை குறிப்பிடுக ?

பதில் : பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பதைப் பாரதியார் நன்கு உணர்ந்தவர். ஆத்திசூடியில் "பணத்தினைப் பெருக்கு'' எனக் கூறியுள்ளார். இக்கருத்தை எல்லோரும் எளிதில் விளங்கிக் கொள்ள "ஒரு வியாதிக்கு ஒரு புதிய காரணம்'' என்ற சிறுகதையில் அவர் எழுதியதைக் காணலாம். 'வேதபுரி என்ற ஊரில் ஒரு பள்ளிக்கூடத்து

வாத்தியாரும், ஒரு செட்டியாரும் சிநேகமாக இருந்தார்கள். வாத்தியார் செட்டியாரிடம் கொஞ்சம் கடன் வாங்கியிருந்தார். செட்டியாருக்கு ஒருநாள் காலிலே முள்தைத்துப் பிரமாதமாக வீங்கியிருந்தது.

செட்டியாரே! கால் ஏன் வீங்கியிருக்கிறது? என்று வாத்தியார் கேட்டார். எல்லாத்துக்கும் காரணம் கையிலே பணம் இல்லாததுதான் என்று செட்டியார் சொன்னார். சில தினங்களுக்குப் பின் வாத்தியாருக்குப் பலமான ஜலதோஷம் பிடித்திருத்தது. செட்டியார் வந்தார். ஏன் ஐயரே! ஜலதோஷம் பலமாக இருக்கிறதே! என்று கேட்டார். கையிலே பணமில்லை. அதுதான் சகலத்துக்கும் காரணம் என்று வாத்தியார் சொன்னார். செட்டியார் புன்சிரிப்புடன் போய்விட்டார் இதுதான் சிறுகதை. இங்ஙனம், தனிமனிதன், சமுதாயம், நாடு அனைத்திற்கும் பணமே அடித்தளமாக உள்ளது என்பதை நகைச்சுவை வாயிலாகக் குறிப்பிட்டார்.

அண்ணல் காந்தியடிகள் தனிமனிதன் எண்ணம், சொல், செயல் என்னும் இம்மூன்றிலும் தூய்மை உடையவனாக விளங்கு வேண்டுமென விரும்பினார். இதற்காகக் காந்தியண்ணல் சத்தியம், அகிம்சை, பிரம்மச்சரியம், திருடாமை, சொத்துச் சேர்க்காமை, உடலுழைப்பு, நாவடக்கம், அஞ்சாமை, சமய ஒற்றுமை, சுதேசி, தீண்டாமை ஒழிப்பு என்னும் பதினொன்று விரதங்களை வலியுறுத்தினார். இவற்றுடன் பொருளைத் தேடு என பாரதியார் வலியுறுத்தினார்.

“காந்தி பதினோரு விரதம் சொன்னார். நான் பன்னிரண்டாவது விரதம் ஒன்று சொல்லுகிறேன். அது யாதெனில் எப்பாடுபட்டும் பொருளைத் தேடு. இவ்வுலகத்தில் உயர்ந்த நிலை பேறு அதுதான்.

பன்னிரண்டாவது விரதத்தை தேசம் முழுவதும் அனுஷ்டிக்க வேண்டும்” என்றார் பாரதியார்.

பாரதியார் திருக்குறளிலுள்ள பொருள் செயல்வகை அதிகாரத்தை ஆழ்ந்து படித்துள்ளார். வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்று பெரும்புகழை வான்புகழ் என்று திருவள்ளுவருக்குச் சேர்த்தார். பொருள் அல்லவரைப் பொருளாகச்

செய்யும். செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு. பொருள் இருளறுக்கும் எண்ணிய தேயத்துச் சென்று என்ற திருக்குறட்பாக்களை நன்கு உணர்ந்தவர். அதனால்தான் தன்பாடல், வசனம், கட்டுரை, சிறுகதை, ஆத்திசூடி முதலியவற்றில் பொருளின் இன்றியாமையைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

12. கேள்வி : பாரதியார் வரைந்த தெளிவான தமிழ்நடையினைச் சான்று தந்து விளக்குக ?

பதில் : பாரதியார் கவிதைகள், வசன கவிதை, கட்டுரை முதலியவற்றில் நேரான, தெளிவான தமிழ் நடையினைக் காணலாம். கருத்தைச் சுற்றி வளைக்காமல் கூறுவதே சீரான தமிழ்நடையாகும். சிலரது நடை நீண்டதாகவும், கடினமான சொற்களைக் கொண்டதாகவும் இருக்கும். ஆனால் பாரதியாரின் இனிய நடையில் எளிய சொற்கள். சிறுசிறு தொடர்கள் இவையே பெரும்பாலும் இடம்பெற்றிருக்கும்.

"குடைகள் செய்வோம் உழுபடைகள் செய்வோம்
கோணிகள் செய்வோம் இரும்பாணிகள் செய்வோம்
மந்திரம் கற்போம் வினைத் தந்திரம் கற்போம்
வானை அளப்போம்"

பாரதியார் கவிதையை ஒருமுறை படித்தாலே பொருள் விளங்கி விடும். யாரும் விளக்கத் தேவையில்லை. சொல்லுக்குப் பொருள் தெரிய வில்லை என அகராதி தேடவேண்டியதில்லை. இங்ஙனம் கவிதையில் நேர்நடையை எளிமையில் எழில் கொஞ்சும் நடைத் திறத்தைக் கையாண்டார்.

"நடுக்கடல் தனிக் கப்பல்
வானமேசினந்து வருவது போன்றபுயற்காற்று
அலைகள் சாரி வீசுகின்றன. நீர்த்துளிபடுகின்றன
அவை மோதி வெடிக்கின்றன சூறையாடுகின்றன
கப்பல் நிர்த்தனம் செய்கிறது
மின்வேகத்தில் ஏற்றப்படுகின்றனது
பாறையிலே மோதிவிட்டது"

இதை யாரேனும் ஒருவர் படித்தாலோ, பள்ளியில் படிக்காதவர் கூடக் கேட்டாலோ விளங்கிவிடும். எது நல்ல உரை என்பதற்குச் "சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்"என நன்னூல் விளக்கம் கூறுகிறது. மேற்கண்ட இரண்டும் உடையது நேர்நடை எனலாம்.

இலக்கியங்கள் பலவற்றை நாமே படித்து உணரமுடியும். ஆனால் உரையாசிரியர் சிலர் உரைநடை பலருக்கு விளங்காது. மூல நூலை விடச் சில உரைகள் கடுமையாக இருக்கும். திருக்குறளுக்கு திருக்குறளே உரை என்பார்கள். அது முற்றிலும் உண்மை. அதைப்போல எழுதுவதில் மட்டுமன்று பேசுவதிலும் பாரதியார் எளிய நடையையே பின்பற்றுவார். வெட்டு ஒன்று. துண்டு இரண்டு என்பார்களே அதைப் போன்றது அவரது நேர்நடைஎனலாம்.

13. கேள்வி : பாரதியாரின் உரைநடைப் பண்பு எத்தகையது ?

பதில் : இறையனார் களவியல் உரையிலும், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனச் சிலப்பதிகாரம் போற்றப்படுவதாலும் சங்ககாலத்திலேயே தமிழ் உரைநடை கையாளப்பட்டது என்பது விளங்கும். இருப்பினும் தமிழ் உரைநடை அந்நாளைய வழக்கிற்கேற்ப அமைந்தது எதைப் படித்தாலும் அதில் அரிய சொற்கள் இடம் பெற்றால் மொழி வளத்தைத் தெரிந்து கொள்ளலாம் என்று நினைத்தனர். ஆங்கிலேயர் வருகையால் தமிழ் உரைநடை எளிய விளக்கத்தோடு வளரலாயிற்று. கவிதையில் புதுமை படைத்தது போலப் பாரதியார் உரைநடையிலும் புதுச்சொற்களை படைப்பதிலும் புதுமை புகுத்தினார்.

எளிய சொற்கள், நறுக்குத் தெறித்தது போலக் குறுந் தொடர்கள், கருத்தை விளக்க உதாரணங்கள், உவமைகள் என்பது இவரின் உரைநடையில் காணலாம். பாரதியாரின் உரைநடைக்கு ஓர் எடுத்துக்காட்டு இதோ :

"சிட்டுக்குருவி சிறிய தானியம் போன்ற மூக்கு, சின்னக் கண்கள், வெள்ளைக் கழுத்து, அழகிய மங்கல வெண்மை நிறமுடைய பட்டுப்போர்த்த வயிறு, கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல்

நிறத்தாலாகிய பட்டுப்போர்த்த முதுகு, சிறிய தோகை, துளித்துளிக் கால்கள், இத்துணையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்து விடலாம். இவ்விதமான உடலைச் சுமந்து கொண்டு என் வீட்டிலே இரண்டு உயிர்கள் வாழ்கின்றன. அவற்றில் ஒன்று ஆண், மற்றொன்று பெண்.''

இங்ஙனம் எளிய உரைநடைப் பண்பைக் காணலாம். இதைவிட எளிமையாக யாரால் எழுத முடியும் ? பாரதியாரின் வசன கவிதையில் எளிமையும், புதுமையும் காணலாம்.

''உடல் நன்று, புலன்கள் மிகவும் இயைன
உயிர் சுவையுடையது
மனம் தேன்அறிவு தேன்உணர்வு அமுதம்
உணர்வே அமுதம். தெய்வம்''

இங்ஙனம் இவரது வசனகவிதை எளிமையினும் மிக எளிமையானது. ஒரு கருத்துடைய இயற்கை வருணனையில் பாஞ்சாலி சபதத்தில் கவிதையாகவும், பின்னர் உரைநடையிலும் எழுதினார். இவ்விரண்டையும் சுட்டிக்காட்டி வசனம் கவிதையை வென்று விட்டது என்று பேராசிரியர் சீனிவாசராகவன் மதிப்பிட்டுப் பேசினார். பாரதியாரின் உரைநடையின் உன்னதத்துக்கு வேறென்ன சான்று வேண்டும். நாட்டில் உயர்ந்த மனிதனாக இருப்பவன் அரசன். அவனுக்குரிய பண்புகள் பல. ''காட்சிக்கு எளியன்'' என்பது முதற்பண்பு. இதனைத் திருவள்ளுவர் முதன்மைப் பண்பு என்றார். ஒருவர் பண்புடையவர் என்பதற்கு இலக்கணமே எளிமையாகும். அதேபோல் கவிதையாயினும், உரைநடை ஆயினும் எளிய நடையில் எழுதுவதே முக்கியமாகும். பாரதியாரின் கவிதைகள் பற்றி விரிவாக எழுதப்பட்ட நூல்கள் பல. அந்த அளவிற்கு அவரது உரைநடை பற்றித் தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்தவில்லை. அவர் நல்ல கவிஞராகவும். அதற்கு நிகரான உரைநடையாளராகவும் விளங்கினார். என்று பேராசிரியர் மோகன் திறனாய்ந்து எழுதினார்.

"பாரதியார் படைத்த அனைத்தையும் ஆராய வேண்டும். அதைவிட்டு விட்டு ஒரு குறிப்பிட்ட அம்சத்தை மட்டும் வைத்துக் கொண்டு விளக்கமுனைவது கூடாது. பாரதியாரின் வசனநூல்களைப் பொறுத்தமட்டில் அவை இன்னும் சரியாக ஆராயப்படவில்லை" என்றார் கமில்சுவலபில் பாரதியார் வசனச் செழுமையிலும் சிந்தை செலுத்த வேண்டும்.

14. கேள்வி : திருக்குறளின் கருத்தாழம் குறித்து பாரதியாரின் மதிப்பீட்டைச் சுட்டுக ?

பதில் : ஒவ்வொரு குறளும் உறுதி. தெளிவு மட்டும் உடையன அல்ல. ஆழமான சிந்தனைகளை உள்ளடக்கியவாகும். அறிவின் பேரொளியாய் விளங்குபவர் அறிஞர். உணர்ச்சி ஊற்றாய் இலங்குபவர் கவிஞர். வாழ்க்கை ஒளிவிளக்காய் மிளிர்பவர் சான்றோர். அம்முப்பெரும் திறனுடையோர் திருவள்ளுவரே! ஒவ்வொரு திருக்குறளும் ஆழம் காண முடியாத கருத்துகள் கொண்டவை. கடலாழம் கண்டோரும் மகளிர் மனதாழம் காண முடியாது என்பது வழக்குமொழி. திருக்குறள் ஆழம் ஒருவரும் காண முடியாது என்பதே புதுமொழி. அதன் ஆழம் காணத்தான் நூற்றுக்கணக்கான உரைகள் அன்றாடம் தோன்றிய வண்ணம் உள்ளன.

சிலருக்குப் பதவியால் பெருமை. சிலருக்குப் பணத்தால் பெருமை. சிலருக்குப் படிப்பால் பெருமை. உலகிற்கு என்ன பெருமை?

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

மலைகள், காடுகள், வயல்கள், ஆறுகள், சாலைகள், உயிர்கள் இவையெல்லாம் கண்ணுக்குப் புலப்படும் பெருமைகள். நிலையாமை என்ற ஆழமான நிலைப்பாடு உடையதே நிலத்திற்குப் பெருமை என்பது. இவ்வுலகில் செல்வம், யாக்கை ஆகியன நிலையில்லாதவை. ஆகவே உடலில் உயிர் உள்ளபோதே நல்லன செய்ய வேண்டும் என்பது உணர்த்தப்பட்ட ஆழமான கருத்தாகும். அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க என்பது திருக்குறள். இதை நன்கு உணர்ந்தால்தான் பாரதியார். "திருக்குறளின் ஆழமும் விரிவும் அழகும் கருதியும்" என்றார்.

நேற்று இருந்தவர் இன்று உயிரோடு இல்லை என்பது ஓர் உண்மை. ஒருவர் நேற்று இருந்தது போல் இன்றில்லை என்பது மற்றொரு கருத்து. அதாவது நேற்று நண்பரானவர் இன்று பகைவராகி விட்டார். நேற்று நல்லவனாக இருந்தவன் இன்று என்ன காரணத்தாலோ தீயவனாகிறான். இங்ஙனம் பல புதுமை கருத்துகளின் புதையல் திருக்குறள். உண்மை அறிவு என்கிறார் திருவள்ளுவர். நூலறிவு. பட்டறிவு நுண்ணறிவு என்பன விளங்குகிறது. உண்மையறிவு என்பது ஆழமான பொருளுடையது. திருவுடையார் ஆதலும் தெள்ளியராதலும் வேறு என உலக மக்கள் வாழ்க்கையை நுட்பமாக உணர்ந்து கூறியுள்ளார். திருவள்ளுவர் ஆழமான, நுட்பமான விரிவான கருத்துகளைக் கூறியதுடன் மட்டுமல்லாமல் நம்மையும் சிந்திக்கத் தூண்டுகிறார்.

15. கேள்வி : உலர்ந்த தமிழன் உருவாக வேண்டுமெனப் பாரதியார் குறிப்பிட்டதேன் ?

பதில் : பாரதியார் வாழ்ந்த காலத்தில் சாதிகள் பலவாக இருந்தன. ஏற்றத்தாழ்வும், அறியாமையும், மூடச்செயல்களும் அடர்ந்திருந்தன. கல்வியின்மையால் மக்கள் தமிழைப் புறக்கணித்து ஆங்கிலக் கல்வியைக் கண்மூடித்தனமாக விரும்பினர். நாம் விடுதலை பெறவேண்டுமென்று கொஞ்சமும் உணரவில்லை. அச்சமே மக்களின் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. இத்தகைய மக்களைக் கண்ட பாரதியார் மனம் வெதும்பினார். இச்சூழலில்தான் உலர்ந்த தமிழன் உருவாக வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

“போலீஸ் வேவுத் தொழில் செய்பவன் பிராமணன் ஆக மாட்டான். குமாஸ்தா வேலை செய்பவன் சத்திரியனாக மாட்டான். முன்னோர் வைத்து விட்டுப் போன பொருளை அழித்துத் தின்பவன் வைசியனாக மாட்டான். கைத்தொழில்களைக் கைவிட்டு சோற்றுக்குத் தாளம் போடுபவன் சூத்திரனாக மாட்டான். நம் தேசம் முன்போல கீர்த்திக்கு வரவேண்டுமானால் உண்மையான வகுப்புகள் ஏற்பட வேண்டும். பொய் வகுப்புகளும். போலிப் பெருமைகளும் நசுக்கப்பட வேண்டும்” என்றார்.

"சாதிக் கொள்கைகள் வேரூன்றிக் கிடக்கும் நாட்டில் மனித சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் கொள்கைகள் நிலைநிறுத்துவதென்றால் அது சாதாரண வேலையா?"

என வினவினார். ஆகவேதான்,

"சாதிகள் இல்லையடி பாப்பா— குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்"

என்றார்.

மக்கள் தாய் மொழியான தமிழ் கற்காமல், ஆங்கில மோகம் கொண்டு அலைவதைக் கண்டித்தார்.

"வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ
வீட்டு பாஷை கற்கிலாய் போ, போ, போ"

என விரட்டினார்.

மக்கள் அடிமையாகவும், அடிமைக்குருடர்களாகவும் வாழ்வது கண்டு

"நெஞ்சு பொறுக்கு தில்லையே – இந்த
நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால்"

என ஏக்கப்பெருமூச்சு விட்டார்.

இங்ஙனம் சாதி வேற்றுமையில், மொழிப்பற்றின்றி, அடிமைகளாய் நாள்கள் நகர்த்திக் கொண்டிருந்த மக்களைக் கண்டார். இந்நிலையில்தான் "மழை பெய்கிறது, ஊர் முழுவதும் ஈரமாகி விட்டது. தமிழ்மக்கள் எருமைகளைப் போல எப்போதும் ஈரத்திலேயே நிற்கிறார்கள், ஈரத்திலேயே உட்காந்திருக்கிறார்கள், ஈரத்திலேயே படுக்கிறார்கள், ஈரத்திலேயே சமையல், ஈரத்திலேயே உணவு, உலர்ந்த தமிழன் மருந்துக்குக்கூட அகப்பட மாட்டான்" எனக் குறிப்பிட்டார். யார் உலர்ந்த தமிழன் என்றால் சாதி பேதம் பாராட்டாதவன், தாய்மொழிக் கல்வி விரும்புபவன், விடுதலை வேட்கையை உடையவன் எவனோ அவனே உயர்ந்த தமிழன் ஆவான் என்பது அவரது கருத்து. ஆனால் உண்மையிலே இக்காலத்திலகூட பெரும்பாலான தமிழர்கள் ஈரத்திலேயே

கிடக்கிறார்கள். சிலர் தான் உலர்ந்த தமிழராக விளங்குகிறார்கள். தேங்கிய நீரும், ஈரமும் நோய்க்கு இடம் தருவது அழுக்குப் படிவது நீநாற்றத்துக்கு இடம் தருவது. குளிர் காலத்தில் நடுங்கும் துன்பம் தருவது. இக் கொடுமைகளுக்கு இடம் தராமல் உலர்ந்திருக்க வேண்டும் என்பது பாரதியாரின் புதுமையான கருத்து.

16. கேள்வி : பாரதியாரின் பாடல்கள், உரைநடை இவற்றில் காணப்படும் பழமொழிகளின் ஆட்சி பற்றி விரிவாக எழுதுக ?

பதில் : பழமொழி, முதுமொழி, சொல்லடை என்பன பொதுவாக ஒரு பொருளை உணர்த்துவனவாகும். முன்னோர்கள் தம் அனுபவத்தில் அழுந்திக் கண்டவற்றைச் சுருங்கச் சொல்லியுள்ளனர். சொற் சுருக்கமும், பொருட் பெருக்கமும் அடங்கியவை அவை பழம் போல் இனிப்பவை. எல்லா மொழிகளிலும் பழமொழிகள் உண்டு. எல்லா நூல்களிலும் பழமொழிகள் உண்டு. முன்னோர் மொழியைப் பொன்னே போல் போற்றுதல் என்ற மரபிற்கு இணங்கப் பாரதியார் பல பழமொழிகளை எடுத்தாண்டுள்ளார்.

முப்பெரும் பாடல்களுள் ஒன்றான பாஞ்சாலி சபதத்தில் "கல்லிடைநார் உரிப்பார் உண்டோ" என்ற பழமொழியை எடுத்தாண்டுள்ளார்.

"பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரம்" என்ற பழமொழியைப் பாஞ்சாலி வாயிலாகப் பேச வைத்தார்.

பாரதியார் சந்திரிகையின் கதையில் பணத்தின் அருமையைப் பழமொழி வாயிலாக உணர்த்தியுள்ளார். சுப்புசாமிக் கோனார் ஏறக்குறையக் கொட்டாவியளவுக்கு வாயைப்பிளந்தார். இதற்குப் பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும் என்ற பழமொழியைப் பொருத்தமாகக் கையாண்டுள்ளார்.

"ஊர் வாயை மூட ஓர் உலைமூடியுண்டோ" என்பதோர் பழமொழியைக் கையாண்டவர். அவ்வினாவிற்கு ஒரு விடையும் கூறியுள்ளார். அதுதான் காலம். இங்ஙனம் பழமொழியின் கருத்திற்கு மேலும் மெருகேற்றியவர் பாரதியாராவார்.

மக்கள் ஆங்காங்கே ஒவ்வோர் ஊரிலும் மக்கள் அவையைக் கூட்ட வேண்டும். அதில் சுயராச்சியம் வேண்டுமென்று பேச வேண்டும். "ஜனங்களே! உடனே சுயராஜ்ய ஸ்தாபன சபையைக் கூட்டுங்கள். சுதந்தரம் வேண்டிக் கூச்சல் போடுங்கள்" என்று உரைநடைப் பகுதியில் எழுதியுள்ளார். இவ்விடத்தில். "அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்" என்ற பழமொழியை அருமையாகப் பொருத்தமாக எடுத்தாண்டுள்ளார். மற்றோரிடத்தில் "தாயும் பிள்ளையும் ஆனாலும் வாயும் வயிறும் வேறு" என்ற பழமொழியைக் காட்டி, "அவரவர்க்கு வேண்டிய விஷயங்களைக் குறித்து அவரவர் பாடுபட்டாலொழியக் காரியம் நடவாது" என்ற கருத்தை விளக்கினார்.

இங்ஙனம் கவிதை, உரைநடை முதலியவற்றில் பாரதியார் கையாண்ட பழமொழிகள் பல. கருத்தைத் தெளிவுபடுத்தவும், கருத்தை நேராக உணர்த்தவும் கையாளப்பட்டுள்ளன.

17. கேள்வி : இந்தியா வார இதழுக்குப் பாரதியார் வரையறுத்த கட்டண விவரங்களைக் குறிப்பிடுக ?

பதில் : தமிழகத்தில் அக்காலத்தில் வெளி வந்த வார இதழ்களில் 'இந்தியா' என்பது முக்கிய இதழாகும். இதனைப் பாரதியார் 1906 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், சென்னையில் ஆரம்பித்தார். தனிப்பிரதி விலை ஓர் அணா. அவ் இதழுக்கு ஆண்டுச் சந்தாவைக் கீழ்க்காணுமாறு வரையறுத்துள்ளார்.

நமது பத்திரிகையின் சந்தா விவரம்

எல்லா கவர் மெண்டாருக்கும் ரூ. 50.00

ஜமீன்தார்கள், இராஜாக்கள் முதலியோர்க்கு ரூ. 30.00

மாதம் ரூ 200க்கு மேற்பட்டவருமானம் உடையவர்களுக்கு ரூ. 15.00

மற்றவர்களுக்கு ரூ. 3.00

மேற்கண்ட சந்தா விவரங்கள் பற்றி பொதுவுடைமைச் சிந்தனையாளர் ஜீவா எழுதியுள்ள பாரதியைப் பற்றிய நூலில் காணப்படுகிறது. இந்திய இதழின் குறிக்கோள் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பனவாகும். விலை நிர்ணயம் பாரதியார் வகுத்தது போல இதுவரை எவரும் வரையறுத்தாரில்லை. ஆனால் தற்போது எல்லோருக்கும், எல்லா இதழ்களும் ஒரே விலைதான். நூலகம், பள்ளிகளுக்கென, எளியவர்க்கென விலை வைப்பது மிகவும் நல்லது.

18. கேள்வி : பாரதியார் பாப்பா பாட்டால் நாம் அறிவன யாவை?

பதில் : குழந்தைகள் தெய்வம் போன்றவர்கள். "குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்" என்ற பழமொழி உறுதிப்படுத்தும். "அன்பு, நம்பிக்கை, அமைதி, அரவணைப்பு முதலிய பண்புகளை குழந்தைகளிடம் காணலாம். இவ்வுலகில் ஆண்டவனால் அன்றாடம் அனுப்பப் பெறுகின்ற நல்லதூதர்களே குழந்தைகள்" என்ற அறிஞர்கள் மொழிந்தனர். மக்கள் மெய்தீண்டலும் மழலைச்சொல் கேட்டாலும் வாய் சிந்திய உணவை நாம் அமுதமாக உண்ணலும் என்ற நிலையில் ஐந்து சுவைகளையும் குழ்தைகளிடம் பெறலாம் என்று திருக்குறள் குறிப்பிடுவது அரும்புலமைக்கு அடையாளமாகும். குழந்தைகளுக்காகப் பாடல்கள் பாடுவது அரிதினும் அரிதாகும். பாரதியார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பாவேந்தர், அழ. வள்ளியப்பா, செல்வ கணபதி முதலியோர் இதில் வெற்றி பெற்றவர்கள்.

பாரதியார் புதுவையில் இருந்தபோது, 1917இல் பாப்பாப்பாட்டை வெளியிட்டுள்ளார். இதில் பதினாறு பாடல்கள் உள்ளன. அதற்குமுன் குழந்தைகளுக்காகப் புதிய ஆத்திசூடியை வெளியிட்டுள்ளார்.

சிறு பெண் குழந்தையை அழைக்கப் பயன்படுத்தும் சொல்லே பாப்பா என்பதாகும். சங்க இலக்கியங்களில் நிலவுடன் தொடர்பு படுத்திப் பாடப்பட்ட குழந்தைப் பாடல்கள் உண்டு என்பதைக் குறிப்பாய் உணர முடிகிறது.

"முகிழ்நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்
பொன்னுடைத் தாலி என்மகள் எற்றி
வருகையாயின்பால் தருவேன்"

ஏ! நிலவே! என் மகளுடன் விளையாட வந்தால் உனக்கும் பால்தருவேன் என்றாள் ஒரு தாய்.

"நிலாநிலா ஓடி வா! நில்லாமல் ஓடி வா"

என்பது இக்காலப்பாட்டு.

பாப்பாவுக்கு பாரதியார் கூறிய அறிவுரைகள் பல.

அவை பாப்பாவுக்கு மட்டுமன்று, பாரிலுள்ள அனைவருக்கும் ஏற்றவையாகும்.

"காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு
கனிவு கொடுக்கும் நல்லபாட்டு
மாலை முழுதும் விளையாட்டு – என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா"

என்று படிப்பு, விளையாட்டு இவை இரண்டும் எப்போது வேண்டும் என உணர்த்தினார்.

ஓடி விளையாட வேண்டும். கூடி விளையாட வேண்டும் என்றார்.

"தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற–எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா
அமிழ்தின் இனியதடி – நம்
ஆன்றோர்கள் தேசமடி"

என்று மொழிப்பற்றையும், நாட்டுப்பற்றையும் குழந்தைப் பருவத்திலேயே ஊட்டினார்.

இந்தியாவின் எல்லை, சாதி வேற்றுமை கூடாது. உயிர்களிடத்தில் அன்பு காட்ட வேண்டும் என்று அருமையாக உணர்த்தியுள்ளார்.

எப்படி வாழ வேண்டும் என்பதை.

"உயிர்களிடத்து அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்
வயிரமுடைய நெஞ்சு வேணும் – இது
வாழும் முறைமையடி பாப்பா"

என்றார்.

பாரதியாரின் பாட்டைப் பின்பற்றினாலே உலகம் இன்பமயமாய் ஏற்றம் பெற்று விடும்.

19. கேள்வி : பாரதியாரின் தமிழ் உணர்வு வெளிப்பட்ட சில இடங்கள் கூறுக?

பதில் : ஒருமுறை புதுவை கடற்கரையில் பாரதியார். வ.வே.சு. ஐயர். திருச்சி வழக்கறிஞர் வ.ரா. முதலியோர் உரையாடிக் கொண்டிருந்தனர். இடையிடையே பாரதியார் சில பாடல்களை ஆவேசமாகப் பாடினார். பாட்டு முடிந்தது. திருச்சி வழக்கறிஞர் வ.வே.சு. ஐயரைப் பார்த்து "உங்க திலக் இப்போது எப்படி இருக்கான்" என வெகுளித் தனமாகக் கேட்டார். திலக் என்று கேட்டது "சுதந்தரம் எமது பிறப்புரிமை" என்று முழங்கிய பாலகங்காதர திலகரைத்தான். வ.வே.சு. ஐயருக்குச் சொல்லொணாக் கோபம். முகமே சிவந்துவிட்டது. ஆனாலும் மௌனமாய் இருந்தார்.

பாரதியாருக்குக் கோபம் பீறிட்டு வந்தது. புயலெனச் சீறினார். "ஏண்டா! நீ தமிழன் இல்லையா, வெள்ளைக்காரனா! என்னடா டிலக் வேண்டியிருக்கு? திலகர் என்று கூற உன் நாக்கு கூசுகிறதோ? எங்கள் தலைவர் திலகர் உன் வீட்டு மாட்டுக்காரனா! அந்த மகானை மரியாதை இல்லாமல் பேசுகிறாயே! முழு மூடா!" எனக் கோபத்துடன் பொறிந்து தள்ளிவிட்டார்.

வழக்கறிஞரின் முகம் அச்சத்தால் வெளுத்துப் போயிற்று. பாரதியாரிடம் தம் பேச்சுக்கு வருத்தம் தெரிவித்தார். தமிழர்கள் ஒருவரோடு ஒருவர் பேசும்போது தமிழிலே பேச வேண்டும் என்பது

மகாகவி பாரதியாரின் பெருவிருப்பமாகும். மேலும் பிழையிருந்தாலும் தமிழிலேயே எழுத வேண்டும் என்பதும் அவரது எண்ணமாகும். இதனை மனைவி செல்லம்மாள், தம்பி விசுவநாதன் முதலியோர்க்கு எழுதிய கடிதங்கள் வாயிலாக உணரலாம்.

அவர் தம் மனைவி, தன் தம்பி, நண்பர் பரலி நெல்லையப்பர் முதலியோர்க்கு எழுதிய கடிதங்கள் வாயிலாக அவரது தமிழ் உணர்வு வெளிப்பட்டிருப்பதை நன்கறியலாம்.

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே. அதைத் தொழுது படித்திடடி பாப்பா" என்பதிலும், பண்டைத் தமிழ்ப்புலவர்களைப் போற்றியுள்ள பாடல்களிலும் அவரது பொங்கும் தமிழ் உணர்வு புலப்படும்.

"எனக்கு நாலைந்து பாஷையிலே பழக்கமுண்டு. அது பற்றியே தமிழைப்போல வலிமையும், திறமையும் உள்ள பாஷை வேறொன்றில்லை என்றேன். விரைவிலே தமிழின் ஒளி உலகம் முழுவதும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள்" என்றார் பாரதியார். பாரதியார் தமிழ்ப்பற்றும், தமிழுணர்வும் வழிந்தோடும் புதுவெள்ளளமாய்க் கரை புரள்கிறது.

20. கேள்வி : பாரதியாரின் இதழ்களைப் பற்றி விளக்குக ?

பதில் : பாரதியார் அரசியல் தொடர்பு, மொழித் தொடர்பு முதலியவற்றில் ஈடுபட்டுத் தீவிரமாகச் செயற்பட்டு வந்தார். அதைப் போலவே செய்தி இதழ்கள் தொடர்பும் பாரதியாருக்கு ஏராளம் உண்டு. கோபால கிருஷ்ணரின் நண்பர் சுப்பிரமணிய ஐயர் சென்னைக்கு அழைத்து வந்து சுப்பிரமணிய ஐயரிடம் அறிமுகப்படுத்தினார். அதனால் சுதேசமித்திரன் பத்திரிகையில் பாரதியாருக்குத் துணைஆசிரியர் பணி கிடைத்தது.

ஆங்கிலச் செய்திகளைத் தமிழாக்கம் செய்து அளிப்பதே அவரது பணியாகும். கூடுதலாக விடுதலை, சமுதாய விழிப்புணர்வு கட்டுரைகள் எழுதி மக்களிடையே விழிப்புணர்வு உண்டாக்கினார்.

எழுச்சியூட்டும் கவிதைகள் சுதேசமித்திரனில் வெளிவந்தன. வங்கப்பிரிவினையை எதிர்த்து 1905 இல் செப்டம்பரில் வாழ்க வங்காளம் என்ற பாடல் எழுதினார். சுப்பிரமணிய ஐயர் மிதவாதப் போக்குடையவர். பாரதியாரின் எழுச்சி, தீவிரம் முதலியன ஐயருக்கு ஏற்புடையவனவாக இல்லை. இதை உணர்ந்த பாரதியார் அதிலிருந்து விலகினார். பின் திருமலாச்சாரியார் தொடங்கிய இந்தியா வார இதழின் ஆசிரியர் பொறுப்பைப் பாரதியார் ஏற்றார். இவ்விதழில் பாரதியார் தம் கருத்துக்களைத் தங்கு தடையின்றி வெளியிட்டார். மதவாதிகளின் போக்கைக் கேலி செய்தார். தீவிரவாத தலைவர்களைப் பாராட்டினார். வீரமூட்டும் தலையங்கங்கள் பல்சுவைப் படங்கள் வெளியிட்டார். இந்தியா வார இதழ் வளர்ச்சிக்குப் பாரதியாரின் எழுத்தாற்றல் பெரிதும் துணையானது. மக்களின் அடிமைத்தனம், சமுதாய அவலங்கள், பெண்ணடிமை இவை பற்றியெல்லாம் எழுதினார். மேலும் வைத்தியநாதய்யர் தொடங்கிய சக்கரவர்த்தினி என்ற மாத இதழின் ஆசிரியரானார். தமிழகப் பெண்களின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு அவ்விதழ் வெளிவரலாயிற்று. வங்கப்பிரிவினையால் நாட்டில் பெருங்கொதிப்பு ஏற்பட்டது. இந்தியா இதழ் உரிமையாளர் கைது செய்யப்பட்டார். அந்நிலையில் பாரதியார் பிரெஞ்சு ஆட்சிக்குட்பட்ட புதுவைக்குச் சென்று விட்டார்.

புதுவையில் 1908 இல் இந்தியா இதழ் பாரதியாரை ஆசிரியராகக் கொண்டு மீண்டும் வெளி வந்தது. அங்குத்தான் பாரதியாரின் பல பாடற் செல்வங்கள் முகிழ்த்தன. ஞானரதம் முதலிய கதை வடிவக் கட்டுரைகள் பல வெளிவந்தன. பாமரரும் படித்துணரும் வகையில் புதிய சொற்களால் வெளிப்படுத்தினார். மேலும் பாரதியார் கர்மயோகி, விஜயா, தர்மம், ஞானபானு, இந்து, விவேகபானு, சர்வஜனமித்திரன், ஆரியா, நியூ இண்டியா, மெட்ராஸ் ஸ்டாண்டர்ட், சூரியோதயம் முதலிய இதழ்களில் எழுதிய கவிதை, கட்டுரை, வசனம், உரையாடல், கதை முதலியவை வெளிவந்தன. மீண்டும் சென்னை வந்த பாரதியார் 1920 இல் மீண்டும் சுதேசமித்திரனில் துணை ஆசிரியரானார். எப்போதும் போலவே தம் கருத்துகளைப் பல வடிவங்களில் எழுதி வந்தார். இங்ஙனம் பாரதியாரின்

இதழ்களின் தொடர்பு 1904 இல் தொடங்கி அவர் மறையும் வரை தொடர்ந்தது. செய்தித்தாள் உலகத்தில் பாரதியாரின் பணிகள் மிகச் சிறந்தவையாகும்.

21. கேள்வி : தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதரைப் பாரதியார் எங்ஙனம் பாராட்டினார் ?

பதில் : தமிழ் கவனிப்பாரற்றுப் பல இலக்கியங்கள் மறைந்து கொண்டு வந்தன. அவற்றைத் தேடித் தேடி, ஊர் ஊராக ஓடி, ஓடி உ.வே. சா. அவர்கள் கால்கள் தேய்ந்தன. எழுதி எழுதிக் கைகள் சிவந்தன. பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடியெடுத்துப் பதிப்பித்த தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதய்யரின் பணி அளவிடற்கரியது. இவரது அரும்பெரும் தமிழ்ப்பணிகளைப் பாராட்டி ஆங்கில அரசு அவருக்கு 1906 இல் மகாமகோபாத்தியாய எனப்பட்டம் வழங்கியது. இதற்கு முதுபெரும் பேராசிரியர் என்று பொருள். அப்போது ஐயர் சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகப் பணிபுரிந்து வந்தார். அங்கே அவருக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. அழைப்பிதழில் பாரதியார் பெயர் இடம் பெறவில்லை. அழைப்பும் இல்லை. நாவலர் சோமசுந்தர பாரதியார் மற்றும் மாணவர் பலரின் வேண்டுகோளால் பாரதியார் விழாவிற்குச் சென்றார். அவசரத்தில் அவரைப்பாராட்டி ஒரு கவிதை எழுதி வைத்திருந்தார். எப்படியோ மேடையில் அக்கவிதை வாசிக்க வாய்ப்பு கிடைத்தது. வாசித்துப் பாராட்டினார்.

"உதயசூரியன் ஒளி பெற்றுத் திகழ்வது இயற்கையே!
தேன்தித்திப்பதும் !
தேவர்கள் இறவாது என்றும் வாழ்வதும் இயல்பே
இதனை ஒப்பஅகத்தியர் போல் அருந்தமிழ்த் தொண்டாற்றி
வரும் சாமிநாதரும் குறைவில்லாத
நிறைபுகழ் உறுதலும் இயற்கையே ! "

எனப் பாராட்டினார்.

விருது எவர் கொடுத்தார் என்பதை விட, விருது யார் பெற்றார் என்பதை நினைவில் கொண்டே பாரதியார் அவ்விழாவில் பங்கேற்றார்.

“பழங்காலத்தில் நூல் பிரசுரிக்க சாமிநாதய்யர் பட்ட சிரமத்திலே எட்டில் ஒரு பங்கு ஆங்கிலப் பாதிரியார் ஜி.யூ. போப் பட்டிருப்பாரானால் பிரிட்டிஷ் கவர்மெண்ட்டார் அவரைக் குபேரனாக்கி விட்டிருப்பார்கள் அல்லவா!” (பாரதியார் கட்டுரை ஒன்றிலுள்ளது இவ்வாசகம்) மேலும் பாரதியார். “வெள்ளைநிறம் கொண்ட கலைமகளின் அனுக்கிரகம் சாமிநாத ஐயருக்குப் பரிபூரணமாக இருக்கிறதே ஒழிய, வெள்ளை நிறம் கொண்ட ஐரோப்பியர் கிருபை போப் பாதிரியாரிடம் அல்லவா நிரம்ப இருக்கிறது? ஜி.யூ. போப்பிற்குக் கவர்மெண்டார் காட்டுகிற கருணையைச் சாமிநாத ஐயருக்குக் காட்டவில்லையே” எனத் தம் கட்டுரையில் எழுதினார்.

“நிதியறியோம் இவ்வுலகத்தொரு கொடி
இன்பவகைநித்தம் துய்க்கும்
கதியறியோம் என்று மனம் வருந்தற்க!
குடந்தைநகர்க் கலைஞர் கோவே”
என பாரதியார் மனம் நெகிழ்ந்து பாராட்டியுள்ளார். மேலும்.

“பொதிகைமலை பிறந்தமொழி வாழ்வறியும்
காலமெல்லாம் புலவோர் வாயில் துதி அறிவாய்!
அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய்!”

என பாரதியார் வாழ்த்தினார். இவ்வாழ்த்து தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதய்யர் அவர்களுக்குப் பொருத்தமானது. தமிழ் உள்ளளவும் இவரது புகழ் நிலைத்திருக்கும்.

22. கேள்வி : பாரதியாரின் வந்தேமாதரம் பாடல் பற்றிக் குறிப்பு வரைக ?

பதில் : வந்தேமாதரம் என்ற தலைப்பில் இரண்டு பாடல்கள் பாடியுள்ளார். பாரதியார் பாடல்களில் இவையே முதலில் இடம்பெற்றுள்ளன.

தமிழ்நாட்டில் முதன்முதலில் பட்டிதொட்டியெல்லாம் வந்தேமாதரம் என முழங்கியவர் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம் ஆவார். மக்களையும் எதிரொளிக்கச் செய்தார். அக்காலத்தில் வ.உ.சியை மக்கள் வந்தேமாதரம் பிள்ளை என்றே அழைப்பர். பங்கிம் சந்திரா் வங்கமொழியில் வந்தேமாதரம் என்றபாடலை எழுதியவராவார். இப்பாடல் பாரதம் எங்கும் பரவியது. ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற சுதந்திரக் கனலை மூட்டியது. தேசபக்தியை வளர்த்தது.

" வந்தேமாதரம் என்போம் – எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் என்போம் "

வடநாட்டில் போலோ வந்தேமாதரம் என்பர்.

போலோ என்றால் சொல்லு எனப்பொருளாகும். வந்தேமாதரம் என்றால் தாயை வணங்குவோம் என்பது பொருளாகும். இங்கே தாய் என்றது பாரதமாதாவைக் குறிக்கும். தாய் நாடென்று சொல்வது மரபாகும்.

வந்தேமாதரம் என்று சொல்வதை ஆங்கில அரசு வெறுத்தது. அதற்குத் தடைவிதித்தது. மீறிச்சொல்பவரைத் தண்டித்தது. ஆனால் தேசபக்தர்கள் அஞ்சாமல் வந்தேமாதரம் என்ற தாரக மந்திரத்தை ஓங்கி ஒலித்தார்கள். சிவனடியார்களுக்கு ஓம் நமசிவாய என்பது தாரக மந்திரம். திருமாலடியார்களுக்கு ஓம் நமோநாராயணா என்பது தாரக மந்திரம். தேச பக்தர்களுக்கோ வந்தே மாதரம் என்பதே தாரக மந்திரமாகும்.

நண்பர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்தால் வணக்கம் என்பர். அதைப்போல தேசபக்தர்கள் சந்திக்கும்போதே வந்தேமாதரம் என்றேகூறுவர். கடிதம் எழுதும்போதும் பிள்ளையார் சுழிபோட்டுத் தொடங்குவோம். தேசபக்தர் வந்தேமாதரம் என்று தொடங்கியே

மற்றவற்றை எழுதுவர். தேசபக்தர்கள் சட்டத்தை மீறி ஊர்வலம் செல்லும்போது அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பது இல்லையே! என வீரதீரத்துடன் பாடிச்செல்வர். அப்போது காவலர்கள் அடித்து வதைத்ததோடு உறை காலணி அணிந்திருந்த காலால் மிதித்தும் துன்புறுத்னார். மருத்துவர் அறுவைச் சிகிச்சை செய்யும்போது நோயாளிக்கு வலி தெரியாமலிருக்க மயக்க ஊசி போடுவர். அதைப்போலக் காவலர் அடிக்கும்போது தேசபக்தர்கள் வலியை மறக்க வந்தேமாதரம் என்ற ஆவேச மருந்து பயன்பட்டது.

"ஜாதி மதங்களைப் பாரோம் –உயர்
ஜன்மம் இத்தேசத்தில் எய்தினராயின்
வேதியராயினும் ஒன்றே–அன்றி
வேறு குலத்தவ ராயினும் ஒன்றே
"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – நம்மில்
ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் – இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்"

என்று தம் பாடல் வீச்சுக்களால் உணர்த்தினார்.

வந்தேமாதரப் பாடல் வாயிலாக நாட்டுப்பற்றை வெள்ளப் பெருக்காக ஊட்டினார். சாதி வேறுபாடுகள் கூடாதென உணர்த்தினார். ஒற்றுமையே உயர்வுக்கு வழி என வழிகாட்டினார். இவரது வந்தேமாதரம் என்ற முதற் பாடலே ஏற்றத் தாழ்வற்ற மனித சமுதாயத்தைக் காண நம் பாரதியார் விழைந்தார் என்பதைப் புலப்படுத்துகிறது.

23. கேள்வி : பாரத மக்களின் தற்கால நிலைமை குறித்து எள்ளி நகையாடக் காரணம் யாது ?

பதில் : பாரதமக்கள் தங்களின் அடிமைத்தனத்தின் கொடுமையை, இழிவை, அழிவை உணராமல் இருந்தனர். ஏழ்மைக்கு என்ன காரணம் என அறியாமல் திகைத்தனர். அவர்களிடத்தே அச்ச உணர்வு மேலோங்கி இருந்தது. சாதி, மதவேற்றுமைகளால் பிரிந்து வாழ்ந்தனர். இவற்றைக்

கண்டு பாரதியார் வேதனைப்பட்டார். இவற்றைப் பாரதநாடு என்ற தலைப்பில் பாரத ஜனங்களின் தற்கால நிலைமை என்று பாடலில் பாரதியார் மனம் வெந்து வேதனைப் படுவதைக் காணலாம்.

"நெஞ்சு பொறுக்குதில்லையே– இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்
அஞ்சி அஞ்சிச் சாவார் – இவர்
அஞ்சாத பொருளில்லைஅவனியிலே
வஞ்சனைப் பேய்கள் என்பார் –
மரத்தில் என்பார். அந்தக் குளத்தில் என்பார்.
துஞ்சுது முகட்டில் என்பார் – மிகத்
துயர்ப்படுவார் எண்ணிப் பயப்படுவார் "

திருவள்ளுவர். 'அச்சமே கீழ்களது ஆசாரம்' அஞ்சாமை அல்லால் துணை வேண்டா என்றார். எதற்கெடுத்தாலும் –அஞ்சுபவர் கீழ்மக்களாவார். பாரதியார் காலத்தில் மக்கள் வெறும் காவலரைக் கண்டு அஞ்சினர். யாரைக் கண்டாலும் பூனைகள் போல் ஓடியோடி ஒளிவார்கள் எனக் குத்தலாகக் குறிப்பிட்டுள்ளார்.

"கொஞ்சமோ பிரிவினைகள் – ஒரு
கோடி என்றால் அது பெரிதாமோ"

என்று மக்களிடையே காணப்பட்ட சாதி, மதப் பிரிவினைகளைச் சுட்டிக்காட்டினார்.

"ஆத்திரம் கொண்டே இவன் சைவன் –
அரிபக்தன் என்று பெரும் சண்டையிடுவார்"
என்றும்,

"கஞ்சி குடிப்பதற்கிலார் –அதன்
காரணங்கள் இவை என்னும் அறிவுமிலார்"
என்றும்

"கண்ணிலாக் குழந்தைகள் போல் பிறர்
காட்டிய வழியில் சென்று மாட்டிக் கொள்வார்
புண்ணிய நாட்டினிலே– இவர்
பொறியற்ற விலங்குகள் போல வாழ்வார்"

என்றும் நாட்டு மக்களின் நிலைமைய உள்ளபடி உணர்த்தினார். மேலும், இந்திய விடுதலை பெற்று எழுபது ஆண்டுகளுக்கு மேலாகியும் நாட்டு மக்களின் போக்கு சில நிலைகளில் அப்படியே சீர்குலைந்துள்ளதே என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

24. கேள்வி : தேசபக்தி என்ற நாட்டுபற்று என்பதை நவீன மார்க்கம் என்று பறைசாற்றும் பாரதியார் பாடல்கள் யாவை ?

பதில் : இந்தியாவில் தேசியக் கவிஞர்கள் இருந்தனர். அவர்களுள் எவரும் பாரதியாருடன் ஒப்பிடத்தக்க தேசியக் கவிஞராகத் திகழவில்லை. இந்தியாவில் மகாகவியாகவும், தேசியக் கவிஞராகவும் விளங்கிய ஒருவர் பாரதியார் மட்டுமேயாவார்.

பாரதியார் முப்பெரும்பாடல்கள், சிற்றிலக்கியங்கள், தோத்திரப்பாடல்கள், வேதாந்தப்பாடல்கள், பல்சுவைப்பாடல்கள் பல இயற்றியவர். பாரதியார் என்றவுடன் சட்டென்று நம் நினைவிற்கு வருவது அவரது தேசபக்திப்பாடல்கள்தாம். பாரதியாரால் தேசபக்தியும், தேசபக்தியால் பாரதியாரும் பெருமை பெற்றனர்.

"தேச பக்திக்குப் பாரதியார் பாடல்கள் ஊற்றாயமைந்தன. பாரதியார் பாடல்கள் வாயிலாகத் தேசபக்தி இத்தகைத்து என்று உணர்தல் கூடும்" என்றார் தமிழ்த்தென்றல் திரு.வி.க. நாடி நரம்பெல்லாம் நாட்டுப்பற்றை ஊட்டியதால் சோம்பிக் கிடந்தவர்கள் வாழித்தெழுந்து எங்கள் பாரதம், எங்கள் தமிழ்நாடு எங்கள் தமிழ் மொழி என்று திரண்டு ஊக்கம் பெற்றனர்.

தேசிய கீதங்கள் என்ற நூலின் இரண்டாம் பாகத்தில் பாரதியார் எழுதிய முகவுரை பின்வருமாறு. "நாட்டிலே ஓர் புதிய ஆதர்சம். ஓர்

கிளர்ச்சி, ஓர் தர்மம், ஓர் மார்க்கம் தோன்றுமேயானால், மேன்மக்களின் நெஞ்சமனைத்தும், இரவியை நோக்கித் திரும்புகின்றன. சென்ற சுபகிருது வருடத்திலே பாரதநாட்டில் சுபங்களுக்கு மூலதாரமாகிய தேசபக்தி என்ற நவீனமார்க்கம் தோன்றியது. நல்லோர்களின் சிந்தையெல்லாம் உடனே புளகிதமாயின. நல்லோருடைய குணங்களிலே குறையுடையவனாகிய யானும் தேவியினது கிருபையால் அப்புதிய சுடரிடத்து அன்பு பூண்டேன். அவ்வன்பு காரணமாகச் சென்ற வருடம் சில கவிதைமலர் புனைந்து மாதாவின் திருவடிக்குப் புனைந்தேன்''. இந்த முகவுரையால் பாரதியாரின் தேசபக்தி என்னும் நவீனமார்க்கம், அவர் மூட்டிய நல்வழி பற்றிய கருத்து நமக்கு விளங்குகிறது. செந்தமிழ் இதழில் அறிஞர் மு. இராகவ அய்யங்கார் வீரத்தாய்மார்கள் என்ற கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். அக்கட்டுரை சங்க இலக்கியத்தின் சாறாகவும் பெண்களின் வீரப் பெருமிதத்தைக் காட்டுவதாகவும் அமைந்தது. அதைப் பாராட்டிப் பாரதியார். 'தங்களுடைய பரிசுத்த நெஞ்சிலே எழுந்திருக்கும் தவ தேசபக்தி என்ற புது நெருப்பு தான் வணக்கம் செய்கிறேன்' என எழுதினார்.

தேசபக்தியைப் புதிய சுடர் என்றும், புதிய நெருப்பு என்றும் நவீனமார்க்கம் என்றும் குறிப்பிட்ட தொடர்கள் வரலாற்றுச் சாசனங்களாகும்.

25. கேள்வி : பாரதநாடு என்ற தலைப்பில் பாரதியார் படைத்துள்ள தேசபக்திப் பாடல்கள் யாவை ?

பதில் : பேசும் மொழியை, பிறந்த நாட்டைப் பெற்ற தாயாகப் பாராட்டுவது மரபாகும். அவ்வகையில் பாரதியார் பாரதநாட்டைத் தாயாகப் போற்றுகிறார்.

“வந்தேமாதரம் என்போம் – எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் என்போம்''

இந்தப்பழம் மரபிலிருந்து. ஒரு புது மரபு ஒரு புதிய போக்கினை

"எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே" என்றும்,

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே"

என்றும் தந்தையைக் குறிப்பிட்டார்.

"பாருக்குள்ளே நல்லநாடு – எங்கள்
பாரத நாடு" என்றும்,

"பாரத தேசமென்று பெயர்சொல்லுவார். மிடிப்
பயங்கொல்லுவார், பகைவெல்லுவார்" என்றும்

"மன்னும் இமயமலை எங்கள் மலையே
மாநிலமீதிதுபோல் பிறிதிலையே" என்றும்

"தொன்று நிகழ்ந்ததனைத்தும் உணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும் இவள்
என்று பிறந்தவள் என்றுணராத
இயல்பினளாம் எங்கள் தாய்"

மேற்கண்ட பாடல்கள் பாரதியாரின் தேசபக்திப் பாடல்களாகும். மேலும், பாரதமாதா பள்ளிஎழுச்சி, பாரதமாதா நவரத்தினமாலை, பாரததேவியின் திருச்தசாங்கம், தாயின் மணிக்கொடி பாரீர் முதலிய தலைப்பிலுள்ள பாடல்கள் யாவும் தேசபக்தி தெறிக்கும் தீப்பொறிகளாகும்.

26. கேள்வி : விடுதலை வேட்கையைப் பாரதியார் எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்?

பதில் : பாரதியாரின் நோக்கங்களுள் பாரதநாடு விரைவில் விடுதலை பெற வேண்டும் என்பதாகும். அவருடைய வேட்கை சுதந்திரமேயாகும். அப்பயிரைச் சுதந்திரத்தைத் தாயாக, தேவியாக, கடவுளாகக் கண்டார்.

"இதந்தரு மனையின்நீங்கி இடர்மிகு சிறைப்பட்டாலும்
பதந்திரு இரண்டும் மாறி பழிமிகுந்த இழிவுற்றாலும்
விதந்தரு கோடி இன்னல் விளைந்தெனை அழித்திட்டாலும்
சுதந்திர தேவி நின்னைத் தொழுதிடல் மறக்கிலேனே"

என்றும்,

"விடுதலை" என்ற தலைப்பில் பாரதியார்.

"ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதர் என்பது இந்தியாவில் இல்லையே!"

என்றும் ஏற்றத்தாழ்வு நீங்க வேண்டுமென்றும் விரும்பினார். இது மக்களின் சமுதாய விடுதலையாகும். சுதந்திரப்பள்ளு என்பதில் நாடு விடுதலைக்கு முன்பே, அடைந்து விட்டதாக தொலை நோக்கோடு கண்டுகளித்து ஆடிப்பாடச் செய்தார்.

"ஆடுவோமே! பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று
ஆடுவோமே! பள்ளுப் பாடுவோமே
பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம் – பரி
பூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்"

என்றார். இதனால் உலகில் இனி எந்த நாட்டுக்கும் அடிமையாக இருக்க மாட்டோம். எந்த மனிதரிடமும் தான் பணிந்து கிடக்க மாட்டோம் என்றார். இப்பாடலில் நாட்டு விடுதலை, சாதிக் கட்டுக்களிலிருந்து விடுதலை என்ற இரண்டையும் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரம் என்ற தலைப்பில் ஆறு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. சுதந்திரம் பெற்றபிறகு என்ன செய்ய வேண்டும் என்பதைத் திறமை கொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும் தேர்ந்தகல்வி ஞானம் எய்தி வாழ்வம் இந்த நாட்டிலே என்று தெளிவு படுத்தினார்.

“உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யவேண்டும்.”

எனவும் விரும்பினார். எனவே விடுதலை விரும்பிய அதே வேளையில் நல்ல தொழில்கள் செய்து நலமுடன் ஓங்கி வாழ வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

27. கேள்வி : தேசிய இயக்கப் பாடல்களில் பாரதியார் கூற விழைவதை எடுத்துக் காட்டுக ?

பதில் : பாரதியார் தேச விடுதலை, சமுதாய விடுதலையை விரும்பிப்பாடிய பாடல்கள் பல. அவற்றுள்சில நெஞ்சைக் கொள்ளை கொள்வன. கொள்ளையின்பம் குலவுவன சில நெஞ்சை உருக்குவன. மராத்திய மன்னன் மாவீரன் சிவாஜி தொடங்கி நடிப்புச் சுதேசிகள் முடிய ஒன்பது பாடல்கள் தேசிய இயக்கப்பாடல்களாகும்.

மராத்திய மாவீரராகிய சிவாஜி தன் படைவீரர்க்கு கூறியது என்றதலைப்பில் நாட்டின் பெருமையை உணர்த்தியுள்ளார்.

“பாரத பூமி பழம்பெரும் பூமி
நீரதன்புதல்வர் இந்நினைவு அகற்றாதீர்
பாரதநாடு பாருக்கெலாம் திலகம்
நீரதன்புதல்வர் இந்நினைவு அகற்றாதீர்
வானக முட்டும் இமயமாம் வரையும்
ஏனைய திசைகளில் இருந்திரைக்கடலும்
காத்திடும் நாடு! கங்கையும் சிந்துவும்
தூத்திரை யமுனையும் சுனைகளும் புனல்களும்
இன்னறு பொழில்களும் இணையிலா வளங்களும்
உன்னத மலைகளும் ஒளிர்தரும் நாடு”

“தாய்த்திருநாட்டைத் தறுகண் மிலேச்சர்
பேய்த்தகை கொண்டோர் பெருமையும் வன்மையும்
ஞானமும் அறியா நவைபுரி பகைவர்
வானகம் அடக்க வந்திடும் அரக்கர்போல்”

என்று நாட்டைக் காக்கப்படை வீரர்களைப் பார்த்து வீர சிவாஜி சூளுரை முழங்கினார். இப்போர் வரிகள் ஆங்கில ஆட்சியை அகற்ற எழுந்த இடி முழக்கமென்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

"நெஞ்சக்குருதியை நிலத்திடை வடித்து
வஞ்சகம் அழிக்கும் மாதவம்புரிவம், யாம்
வேள்வியால், இதுபோல் வேள்வி ஒன்றில்லை
தவத்தினுள் இதுபோல் தவம் பிறிதில்லை"

என்று நாட்டைக் காக்க, மீட்கக் கண்ணீரும், செந்நீரும் சிந்துவதே உண்மையான வேள்வியும் தவமுமாகும் என சிவாஜி வாயிலாக பாரதியார் விடுதலை முழக்கம் செய்தார்.

கோக்கலே சாமியார் பாடல் என்ற தலைப்பில் வள்ளலாரின் "களக்கமறப் பொதுநடம் நான் கண்டு கொண்ட தருணம்" என்று பாடிய பாட்டை மாற்றித் தெய்வ பக்தியையும் தேசபக்தியையும் இணைக்கிறார்.

"தொண்டு செய்யும் அடிமை" என்ற தலைப்பில்

"ஜாதிச் சண்டை போச்சோ—உங்கள்
சமயச் சண்டை போச்சோ" என்றும்

"தொண்டு செய்யும் அடிமை—உனக்குச்
சுதந்திரம் நினைப்போடா !" என்றும்

சுயராஜ்யம் வேண்டுமென்ற பாரதவாசிக்கு ஆங்கிலேய உத்தியோகஸ்தர் கூறுவது எனத் தலைப்பிட்டுள்ளார்.

நம்ம ஜாதிக்கு அடுக்குமோ என்ற தலைப்பில் புதிய கட்சித் தலைவரை நோக்கி நிதானக் கட்சியாளர் சொல்வது போலப் பாடியுள்ளார்.

"அந்நியர் தமக்கடிமை யல்லவே – நான்
அந்நியர் தமக்கு அடிமை"

என்ற பாரத தேவியின் அடிமை என்ற தலைப்பில் பாடியுள்ளார்.

"நாட்டில் எங்கும் சுதந்திர வாஞ்சையை
நாட்டினாய் கனல் மூட்டினாய்
வாட்டி உன்னைமடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டுவேன் வரை காட்டுவேன்"

என்று பாலகங்காதர திலகரை நோக்கி வெள்ளைக்கார விஞ்சு துரை கூறுவதாகப் பாடியுள்ளார்.

"சொந்த நாட்டில் பிறர்க்கு அடிமை வெய்தே
துஞ்சிடோம்– இனி–அஞ்சிடோம்
எந்த நாட்டிலும் இந்த அநீதிகள்
ஏற்குமோ? தெய்வம் – பார்க்குமோ"

என்று ஆங்கிலேயரைப் பார்த்து தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை மறுமொழி கூறுவதாகப் பாரதியார் பாடியுள்ளார்.

"நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை செய்வாரடி – கிளியே
அவர் வாய்ச்சொல்லில் வீரரடி"

என்று "நடிப்புச் சுதேசிகள்" என்ற தலைப்பில் பாடியுள்ளார். இங்ஙனம் பாடப்பட்டுள்ள தேசிய கீதங்களில் பாரதியாரின் சுதந்திரவேட்கை பளிங்கெனப் புலப்படும். இதனைச் சில பாடல்களில் தம் வாயிலாகவும், சிலவற்றைப் பிறர் கூறுவதாகவும் வெளிப்படுத்தியுள்ளார்.

28. கேள்வி : பாரத நாட்டு ஒற்றுமையைப் பாரதியார் எங்ஙனம் வலியுறுத்தியுள்ளார் ?

பதில் : இந்தியா வேற்றுமைகள் நிறைந்த நாடு. மொழி வேற்றுமை, இனவேற்றுமை, சாதி வேற்றுமை, சமய வேற்றுமை என வேற்றுமைகள் பல உள்ள நாடு. வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டும் என விரும்பினார். ஆகவேதான்,

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – நம்மில்
ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் – இந்த
ஞானம் வந்தால்பின் நமக்கெது வேண்டும்"

என்று ஒற்றுமையின் மேன்மையை விளக்கினார்.

"முப்பது கோடி முகமுடையாள் –அவள்
சிந்தனை ஒன்றுடையாள்"

என வேற்றுமையில் ஒற்றுமையைக் கண்டார்.

"முப்பது கோடியும் வாழ்வோம் – வீழில்
முப்பது கோடியும் வீழ்வோம்"

என வாழ்விலும், தாழ்விலும் ஒற்றுமையே வேண்டும் என்றார். ஒற்றுமையின் முதன்மையை வெள்ளை நிறத்தொரு பூனை என்ற பகுதியில்,

"வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் –அதில்
மானுடர் வேற்றுமை இல்லை
எண்ணங்கள் செய்கைகள் எல்லாம் – இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்"

என பாடினார்.

ஒற்றுமைக்கான பாரதியார் கூறும் வழிகள் சில :

வங்கத்தில் ஓடிவரும் கங்கையின் மிகைநீரைக் கொண்டு மையத்து நாடுகளில் பயிர் செய்ய வேண்டும். சிந்து நதியில் சேரநாட்டுப் பெண்களுடன், தெலுங்கில் பாட்டிசைத்துத் தோணிகள் ஓட்டி மகிழ வேண்டும். கங்கைச் சமவெளியில் விளையும் கோதுமைக்குக் காவிரி வெற்றிலை தந்து பண்டமாற்று செய்து கொள்ள வேண்டும். மராட்டியர் கவிதைக்குச் சேரநாட்டுத் தந்தத்தைப் பரிசாக அளிக்கலாம். காசியில் பேசும் புலவர் பேச்சைக் காஞ்சியில் உள்ளோர் கேட்க ஒரு கருவி

செய்வோம். இராசபுதனத்து வீரர்கட்கு, கன்னடநாட்டுத் தங்கம் அளிக்கலாம். இங்ஙனம் பாரதியார் பாரததேச ஒற்றுமைக்குச் சொன்ன வழிகளுக்கு ஈடில்லை. எந்தக் கவிஞருக்கும் இப்படித் தோன்றவில்லை.

29. கேள்வி : பாரதத் தலைவர்கள் பற்றிப் பாரதியார் பாடியவை யாவை ?

பதில் : வ.உ.சிதம்பரனார், காந்தியடிகள், திலகர், லாலாலஜபதிராய், தாதாபாய் நவுரோஜி, குருகோவிந்தர், பூபேந்திரர் முதலியோரைப் பற்றிப் பாடியுள்ளார்.

தேசத்தலைவர் என்னும் தலைப்பில் ஒன்பது பாடல்களைப் பாடியுள்ளார்.

"வேளாளன் சிறைபுகுந்தான் தமிழகத்தார்
மன்னனென மீண்டான் என்றே
கேளாத கதைவிரைவிற் கேட்பாய் நீ
வருந்தலை என்கேண்மைக்கோவே"

எனக் கப்பலோட்டிய தமிழன் சிதம்பரனார் மீது பாடியுள்ளார்.

"வாழ்கநீ எம்மான் இந்த வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை நீங்கி விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசம் தன்னை
வாழ்விக்க வந்த மகான் மகாத்மா நீ"

என்று அண்ணல் காந்தி அடிகளைப் பாராட்டியுள்ளார்.

குருகோவிந்தரைப்பற்றி,

"ஞானப் பெருங்கடல் நல்லிசைக் கவிஞன்
வானம் வீழ்ந்து திரினும் வாள்கொடு தடுக்கும்
வீரநாயகன்"

எனப் புகழ்ந்துள்ளார்.

“செவ்வியுறத் தனதுடலம் பொருள் ஆவி
யான்உழைப்பும் தீர்தல் இல்லான்”

எனத் தாதாபாய் நவுரோஜி அவர்களைப் பற்றிப் பாடியுள்ளார்.

“பாவேந்திரியம் வந்த எங்கள் விவேகானந்தர் பரமஞான
பூபேந்திரன் தனக்குப்பின் வந்தோன்”

எனப் பூபேந்திர விஜயம் என்ற தலைப்பில் பூபேந்திரரை வாழ்த்தியுள்ளார். வாழ்க திலகர் நாமம், திலகர் முனி கோன் என்ற இரண்டு தலைப்புகளில் இவரைப் பாரதியார் பாராட்டியுள்ளார்.

“துன்பமென்னும் கடலைக் கடக்கும் தோணியவன்பெயர்
சோர்வென்னும் பேயை ஓட்டும் சூழ்ச்சியவன்பெயர்
அன்பெனும் தேன்ஊறித் ததும்பும் புதுமலர் அவன்பேர்
அண்மையென்னும் பொருளைக் காட்டும் அறிமுனியவன்பேர்”

லாலாலஜபதி பற்றியும் பாரதியார் இரண்டு பாடல்கள் பாடியுள்ளார்.

“மண்ணகத்தே வாழாது புறஞ்செய்தும் யாங் களெலாம் மறக்கொணாதெம்
எண்ணகத்தே லஜபதி இடையின்றி நீ வளர்தற் கெனசெய்வாரே”

என்று பாடியுள்ளார். இங்ஙனம் பாரதத் தலைவர்களின் தொண்டு, நாட்டுப்பற்று, வீரம், பண்புநலன்கள் முதலியன குறித்துப் பாரதியார் பாடியுள்ளார். இப்பாடல்கள் இக்காலப் பள்ளிப் பிள்ளைகள் ஊன்றி படித்தறிய வேண்டியவை.

30. கேள்வி : பிற உலக நாடுகள் குறித்துப் பாரதியார் வெளிப்படுத்தியிருக்கும் கருத்துக்கள் யாவை ?

பதில் : பாரதியார் நான்கு பாடல்களில் பிறநாடுகள் குறித்துப் பாடியுள்ளார்.

“தீயன புரிதல், முறைதவி ருடைமை
செம்மைதீர் அரசியல், அநீதி
ஆயவற் றென்னெஞ் சியற்கையி னெய்தும்
அரும்பகை யதன்மிசை யானை,

தேயமொன் றற்றேன், நற்குடிக் குரிய
உரிமைகள் சிறிதெனு மில்லேன்,
தூயசீ ருடைத்தாம் சுதந்திரத் துவசம்
துளங்கிலா நாட்டிடைப் பிறந்தேன்"

என்று மாஜினியின் அந்நாளைய வழக்குச் சொற்படி பிரதிக்கினை என்ற தலைப்பில் வீரச் சூளுரையை பாடியுள்ளார்.

"பெல்ஜியத்திற்கு வாழ்த்து" என்ற தலைப்பில்

"அறத்தினால் வீழ்ந்துவிட்டாய் – அன்னியன் வலியனாகி
மறத்தினால் வந்து செய்த வன்மையைப் பொறுத்தல் செய்வாய் "

என்று வாழ்த்துக் கூறினார்.

ஜார் ஆட்சி வீழ்ந்து புதிய ரஷ்யா உருவானது. அதற்கு லெனின் போன்றோரின் புரட்சியே காரணம். ஆனால். பாரதியார் பராசக்தியின் கடைக்கண்ணால் விளைந்தது என்றார். பராசக்தி என்பதில் மக்கள் வலிமை எனப்பொருள் கொள்ள வேண்டும். எந்த ஆற்றலும் மகாசக்தியின் ஆற்றல் என்று கருதினார்.

"மாகாளி பராசக்தி உருசிய நாட்டினில்
கடைக்கண் வைத்தாள்–அங்கே
ஆகாவென்று எழுந்தது பார்
யுகப்புரட்சி கொடுங்கோலன் ஆலறிவீழ்ந்தான்".

பிஜித் தீவில் பிழைக்கச் சென்ற இந்தியப் பெண்கள் படும் பாட்டை,

"கரும்புத் தோட்டத்திலே–அவர்
கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி
வருந்து கின்றனரே. இந்து
மாதர்தன் நெஞ்சு கொதித்துக் கொதித்துமெய்
சுருங்கு கின்றனரே – அவர்
துன்பத்தை நீக்க வழியில்லை யோவொரு
மருந்திதற் கிலையோ – செக்கு
மாடுகள் போலுழைத் தேங்குகின் றாரே"

என்று நெஞ்சுருகப் பாடியுள்ளார்.

இங்ஙனம் இத்தாலி, பெல்ஜியம்., ருஷ்யா, பிஜித்தீவு முதலிய பிற நாடுகளைப் பற்றிப்பாடியுள்ளார்.

பாரதியாரின் தேசியம் தமிழ்நாடு என்னும் அடித்தளத்தில் தொடங்கி இந்தியா, உலகம் என்று விரிந்து பரந்து நிற்கின்றது. ஆகவேதான் பாரதியாரின் தேசிய கீதங்கள் குறுகிய எல்லையில் நிற்காமல் எல்லா நாடுகளையும், உயிர்களையும் ஒன்றாக அணைத்து நிற்கும் சர்வ தேசியப் பார்வையை அனைத்துலக மனித நேய ஒருமைப் பாட்டினை உணர்த்துகின்றன. பாரதியாரின் பார்வை உலகம் தழுவியது. சுதந்திரம், விடுதலை உணர்ச்சி என்ற பாரதியாரின் பார்வை நம்நாட்டுடன் நின்றுவிடாமல் உலகப்பார்வையாக நீண்டது.

31. கேள்வி : பாரதியாரின் பாடலைக்கேட்டுக் கொண்டே உயிர்ற நீத்த சுதந்திரப் போராட்டத் தலைவர் யார்?

பதில் : ஔவையாரும் கபிலரும், பிசிராந்தையாரும் கோப்பெருஞ்சோழனும், கபிலரும் பாரியைப்போல வ.உ. சிதம்பரனாரும் பாரதியாரும் நட்பு பூண்டவர்கள். தமிழ்ப்பற்றாலும், விடுதலை உணர்வாலும் ஒரே சிந்தனையுடையவர்கள். இத்தகைய உள்ளம் ஒன்றிய நண்பர்களைக் காண்பது அரிது. சிதம்பரனார் முதன்முதலில் பாரதியாரை இந்தியா இதழ் அலுவலகத்தில் சந்தித்தார். அது குறித்துச் சிதம்பரனார் கூறியன நம்மைக் கவர்வன.

'இந்த முதல் சந்திப்பும் பேச்சுமே என்னைச் சோழனாகவும், அவரைக் கம்பனாகவும் நான் நினைக்கும்படிச் செய்தது. பாரதியார் என்னைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்றார். அங்கு வெகுநேரம் அரசியல் விஷயங்களைப் பற்றிப் பரஸ்பரம் பேசிக் கொண்டிருந்தோம்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

அப்போது சிதம்பரனார் தன் உள்ளத்தில் தேசாபிமான ஒளி பிரகாசித்தவிதம் பற்றிக் கூறினார். அப்போது கடற்கரை மின் விளக்குகள் பளிச்சென எரியத் தொடங்கின. அப்போது பாரதியார், “பிள்ளைவாள்!

சக்திதுணை செய்வாள். நம் உள்ள ஒளி பிரகாசிக்கும்போது மின்னொளியும் பிரகாசிக்கச் செய்தது. எடுத்ததெல்லாம் வெற்றி என்பதற்கான சுபசகுனம் இதுதான்" பாரதியார் என்றார்.

சிதம்பரனார் தமது இறுதிக் காலத்தில் பாரதியாரின் "என்று தணியும் இந்தச் சுதந்திரத் தாகம்" என்ற பாடலைக் கேட்டுக் கொண்டே உயிர் நீத்தார், என்று சிலம்புச் செல்வர் ம.பொ.சி. வரலாற்றுப் புதையல் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தேச பக்தர் சிதம்பரனார் பிறவிச் சைவர். சைவ சித்தாந்த சாத்திரமான சிவஞானபோதத்துக்கு உரை எழுதிய உத்தமர். ஆனால் உயிர் விடுங்கால், அவர் சிவாயநம என்று சொல்லவில்லை, வந்தேமாதரம் என்று சொல்லித்தான் உயிர்விட்டார். மரணம் நெருங்கிய போது மணிவாசகரின் திருவாசகம் பாடலைக் கேட்க விரும்பவில்லை. தேசபக்த மதத்தாரின் திருவாசகமான பாரதியாரின் தேசிய பாடலைக் கேட்கவே விரும்பினார்.

"என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்
என்று மடியும் அடிமையின் மோகம்"

என்ற பாடல் தேசபக்தர் ஒருவர் பாட, அதைக் கேட்டுக் கொண்டே, அந்த மாவீரர் மரணத்தைத் தழுவினார். அப்படி உயிர் விடும்போதும் தேசபக்தர் கேட்க விரும்பிய உருக்கமான பெருமை படைத்தது பாரதியாரின் தேசியப் பாடல். இங்குப் பாரதியார் சிதம்பரனார் பற்றிப்பாடிய பாடல்கள் பாகாய் நெகிழ்வூட்டுவன. ஒப்பற்ற தியாகியான சிதம்பரனாரைத் தமிழ்கூறும் நல்லுலகம் நாளும் நினைவு கூற வேண்டும். காலம் மாற மாற கருத்துக்களில் புதுமைகள் தோன்றுகின்றன. அதனால் முறையான நாடு, மொழி, இனம், வரலாற்றை எழுதி நாட்டுத் தலைவர்களைப் போற்றிப் புகழும் திறம் அமைய வேண்டு என்பதை பாரதியார் பல இடங்களில் வலியுறுத்தியுள்ளார். "பூர்வீக மகான்களின் ஞாபகத்தைத் தீவிரமான பக்தியுடன் வளர்க்காத நாட்டில் புதிய மகான்கள் பிறக்க வழியில்லை" என்ற பாரதியார் கூற்று இங்கு ஆழ்ந்து எண்ணத்தக்கதாகும்.

32. கேள்வி : பாரதியார் சிவசக்தியை எவ்வாறு அழைக்கிறார் ?

பதில் : பாரதியார் உணர்ச்சியும், வீராவேசமும் மிக்கவர். அவரது கவிதைகளைப் படிப்போர் உணர்ச்சியும், எழுச்சியும் பெறுவர். அடா, அடி முதலியன உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் சொற்களாகும்.

"தொண்டு செய்யும் அடிமை–உனக்கு
சுதந்திரம் நினைவோடா"

என்பதிலும்,

"வீடுகாக்கப் போடா –அடிமை
வேலை செய்யப்போடா"

என்பதிலும்,

"சாதிகள் இல்லையடி பாப்பா"

என்பதிலும், உணர்ச்சி மிக்க சொல்லாட்சிகளைக் காணலாம். அதைப்போலவே சொல்லடி சிவசக்தி என்ற பாடலில் இரண்டுமுறை அடி என்ற சொல்லாட்சி இடம் பெற்றுள்ளது. இங்ஙனம் அடி, அடி எனப்பாடுவதில் பாரதியாருக்கு விருப்பமுண்டு. இதில் அன்பும், பாசமும் இழையோடும், நண்பர்கள் ஒருவரையொருவர் வாடா, போடா என்றும், தோழியர் வாடி, போடி என்றும் அழைத்துக் கொள்வதில் அன்பின் நெருக்கம் அதிகம். என்றாலும் அவர் இவர் என அழைப்பது பொருத்தமாகும். கண்ணகியார், காரைக்கால் அம்மையார் நாச்சியார் என்று பழங்காலத்தில் கூறுவர். ஈழத்தில் இளம்பிள்ளைகளைக் கூட அவர், இவர் என்றே குறிப்பிடுவது நமக்குப் பாடமாகும். என்னடி என்று மனைவியை அழைத்து என்னடா என்று கணவனைத் திருப்பி அழைத்தால் எப்படியிருக்கும். பாரதியார் சக்தி மீது கொண்ட அன்பால் அங்ஙனம் அழைத்தார். பராசக்தி, மகாசக்தி. சிவசக்தி, ஓம்சக்தி, காளி எனப்பல பெயர்களில் விளித்து உள்ளம் மகிழ்ந்தார். அன்பு, பாசம் இவற்றுடன் பாரதியார் அறிவிற்கும் முக்கியத்துவம் தருவார். இதனை அறிவொதொன்றே தெய்வம். நன்மையும் அறிவும் எத்திசைத்து எனினும்

யாவறே காட்டினும் மற்றவை தழுவி வாழ்வீராயின் அச்சமொன்றில்லை. சுடர்மிகு அறிவுடன் என்னைப் படைத்து விட்டாய் என்ற தொடர்களால் அறியலாம். அன்பு, அறிவு இவற்றுடன் வல்லமை இருந்தால்தான் நாட்டிற்குத் தொண்டு செய்ய முடியும். ஆகவேதான் வல்லமை தாராயோ என வேண்டினார்.

33. கேள்வி : பாரதியார் சிவக்தியிடம் வேண்டுவது என்ன ?

பதில் : ஒவ்வொருவரும் நல்லவராகவும், வல்லவராகவும் வாழவேண்டும். ஒன்றிருந்து, மற்றொன்று இல்லையானால் வாழ்வில் பயனில்லை. சிவசக்தியிடம் என்னைச் சுடர்மிகு அறிவுடன் படைத்து விட்டாய் என்று சொல்லி சிவசக்தியைப் பாராட்டுகிறார். அடுத்து,

"வல்லமைதாராயோ – இந்த
மாநிலம் வாழ்வற்கே"

எனவேண்டுகிறார். உலகில் தொண்டு செய்ய அறிவு மட்டும் போதாது. வலிமை வேண்டும். ஆகவேதான் வல்லமைதாராயோ எனவேண்டினார். மேலும்.

"விசையுறு பந்தினைப்போல் –உள்ளம்
வேண்டியபடி செல்லும் உடல்கேட்டேன்"

என்றார். அதாவது உடல்நலமும், ஊக்கமுள்ள உள்ளமும் வேண்டும் என்றார். பந்துபோல ஊக்கம் என்றார்.

குற்றமற்ற மனம், உள்ளொளியுள்ள உயிர், துயரிலும் உன்னைப்பாடும் மனம் வேண்டும். தளர்ச்சியில்லாத நல்லறிவு வேண்டும் என்றெல்லாம் சிவசக்தியிடம் கேட்டார். இவற்றைக் கொடுப்பதில் உனக்கென்ன தடை எனச் சக்தியிடம் வினவுகின்றார். செல்வம் வேண்டும், நலமாய்வாழ வேண்டும் என்று கேட்காமல் நாட்டிற்கு உழைக்க எவை வேண்டுமோ அவற்றைமட்டுமே கேட்டார். நல்லதோர் வீணை பாடலில் நவம், சுடர், மதி, அகம் முதலிய சொற்கள் நுட்பமானவை. 'நவம் – புதுமை. சுடர் ஜோதி, இப்பொருண்மையைச் சுவை புதிது, பொருள் புதிது,

வளம் புதிது, சொற் புதிது, சோதி மிக்க நவ கவிதை' என்றெல்லாம் குறிப்பிடுவார். மதி–அறிவு, அது மயக்கமில்லாத, தெளிவான அறிவு வேண்டும் என்பதை அசைவறுமதி என்பதில் குறிப்பிட்டுள்ளார். உடலாகிய தசையைத் தீச் சுட்டாலும் கலங்காத சக்தியை எந்நாளும் நினைத்துப் பாடும் மனம் வேண்டினார். நசையறு மனம் – குற்றமில்லாதமனம். அதாவது அழுக்காறு, அவா, வெகுளி முதலியன இல்லாத மனம். இங்ஙனம் பாரதியார் கேட்ட வரங்களும் கையாண்ட சொற்களின் நுட்பமும் பொருளும் உணரத்தக்கன. இவ்வாறு பெரும் பேராசிரியர் மோகன் ஒருமுறை பாரதியார் பற்றிய விரிவுரையில் கூறியதை நான் பதிவு செய்திருந்தேன்.

34. கேள்வி : பாரதியார் சக்திதாசன் எனப் புனைபெயர் பூண்டதேன் ?

பதில் : பாரதியார் பொதுவாக முருகன், சக்தி, திருமால், சரசுவதி, விநாயகர் முதலிய தெய்வங்கள் மீது பாடல்கள் பலவாகப் பாடியுள்ளார். அவற்றுள் சக்தி மீது பாரதியார்க்கு பக்தியும், ஈடுபாடும் அதிகம். ஆகவே தான் தமக்குச் சக்திதாசன் எனப்புனைப் பெயரைத் தாமே சூட்டிக் கொண்டார். இது கவிஞர் உலகில் புது மரபாய் மலர்ந்தது. இந்த மரபைப் பின் பற்றித் தான், பாரதிதாசன், கம்பதாசன், வாணிதாசன், கண்ணதாசன் முதலிய புனைபெயர் மரபு உண்டானது. தாசன் என்னும் பொது உறவு நெருக்கமாகிறது. சக்திதாசன், தமிழ்தாசன் சுப்புரத்தின தாசன், சுரதா எனக் காணலாம்.

"அவை அருள்வதில் உன்கென்ன தடையுள்ளதோ"
என்றும்,
"நின்னைச்சில வரங்கள்கேட்பேன் – அவை
நேரேஇன்று எனக்குத் தருவாய்"

என்றும் சக்தியிடம் உரிமையோடு வேண்டுகிறார். இதில் பாரதியாரின் கனிவும், குழைவும், பணிவும் காணலாம். பாரதியார் தம்மை ஷெல்லிதாசன் என்றும் அழைத்துக் கொண்டார். வெள்ளையர் ஆட்சியை வெறுத்தாரேயன்றி வெள்ளையர் புலவர்களை வெறுக்கவே இல்லை.

35. கேள்வி : மணக்குள விநாயகர் கோயில் இருப்பிடம், விநாயகர் நான்மணிமாலையில் எவ்வாறு அழைக்கப்படுகிறது ?

பதில் : புதுவையில் ஆளுநர் மாளிகைக்கும், அரவிந்தர் ஆசிரமத்திற்கும் இடையே தெருவோடு தெருவாக வீடுகளுக்கு நடுவே மணக்குள விநாயகர் கோயில் அமைந்துள்ளது. மனக்குள விநாயகன் மணக்குல விநாயகர், மனக்குள விநாயகர் என்றெல்லாம் அழைக்கப்படுகிறார்.

"ஏழையர்க்கெல்லாம் இரங்கும் பிள்ளை
வாழும் மணக்குளப் பெருமான்"

என்று மனமுருகிப் பாடிக் கொண்டே பாரதியார் கோயிலை வலம் வருவார். மணக்குள விநாயகர், மணக்குளப்பிள்ளை மணக்குள கணபதி, புதுவை விநாயகனே, புதுவை மணக்குளத்து வள்ளல் என்று ஐந்து பாடல்களில் பாரதியார் விநாயகரை விளித்துள்ளார்.

விநாயகர் நான்மணிமாலை பாரதியார் பாடிய சீரிய சிற்றிலக்கியம் எனலாம். தெய்வப்பாடல் என்ற தலைப்பில் தோத்திரப்பாடல்களில் முதன்மையானதாக இந்நூல் கருதப்படுகிறது. விநாயகர் மீது வெண்பா, விருத்தம், கலித்துறை, அகவல் என்னும் நான்கு யாப்புகள் கொண்டது. அந்தநான்கு யாப்பு வகைகள் வரிசையாகத் திரும்பத் திரும்ப வருமாறு அந்தாதித் தொடையில் நாற்பது பாடல்களைக் கொண்டது. இதில் ஆலயத்தின் மாண்புகள், விநாயகரின் விளிப்புகள், தனக்காக வேண்டுவது, மக்களுக்காக வேண்டுவது, விநாயகர் மீது பாரதியாரின் ஆர்வம், உருக்கம், வழிபாடு, நெஞ்சுக்கு உரைப்பன, கிருதயுக வரவேற்பு முதலிய செய்திகளைக் காணலாம்.

36. கேள்வி : விநாயகர் மீது பாரதியாரின் பத்திமையையும் அவர் வழிபாட்டின் பயனும் பற்றி விளக்குக ?

பதில் : கண்ணன், சிவபெருமான், சக்தி, திருமகள், கலைமகள், முருகன் என்று பாடும் பாரதியின் பற்று விநாயகரிடத்தே அதிகமாகும். அதனால்தான் ஒரு சிற்றிலக்கியத்தையே மரபுக் கவிதையில் படைத்தார்.

"துணையே! எனதுயிருள்ளே இருந்து சுடர் விடுக்கும்
மணியே! எனதுயிர் மன்னவனே! என்றன் வாழ்வினுக்கோர்
அணியே! என் உள்ளத்தின் ஆரமுதே! அற்புதமே
இணையேது உனக்குரைப்பின்கடைவானில் எழும் சுடரே"

என்ற பாடலால் பாரதியாரின் விநாயகர் பக்தி புலப்படும்.

"கணபதி தாளைக் கருத்தினில் வைத்தால் வித்தைவளரும். வேள்வி
ஓங்கும். மண்ணிலே விண்ணகத் தன்மை எய்தலாம்
இயம்பு மொழிகள் புகழ்மறையாகும். எடுத்தவினை
பயன்படும். தேவர் இருபோதும் வந்து பதந்தருவார் "

என்று விநாயகர் வழிபாட்டால் உண்டாகும் பயன்களை அடுக்கியுள்ளார்.

37. கேள்வி : விநாயகர் நான்மணிமாலையில் பாரதியார் தம் நெஞ்சினுக்கு உரைத்தவை யாவை ?

பதில் : ஒருவன் வாழ்வில் உயர முதலில் உள்ளம் மாசற்று இருக்க வேண்டும். அதனால் சொல்தூய்மையும், செயல் தூய்மையும் உண்டாகும். மனம், வாக்கு, உடல், தூய்மையடைய வேண்டும் என்பது தோத்திரத்தின் சிறப்பாகும்.

"மூட நெஞ்சே! முப்பது கோடி
முறையுனக்கு உரைத்தேன். இன்னும் மொழிவேன்
தலையில் இடி விழுந்தால் சஞ்சலப் படாதே!
எது நிகழினும் நமக்கேன் என்றிரு
பராசக்தி உளத்தின் படியுலகம் நிகழும்"

என்று நம் நெஞ்சுக்கு அறிவுறுத்தினார்.

"மக்கள் அனைவரிடமும் எளியனாய், வலியனாய், அன்பனாய், இடையனாய் வாழ்ந்திட விரும்பினேன். தேறித்தேறி நான் சித்தி பெறவேண்டும்".

"நின்னால் இயன்ற வனபுரிவாயேல்
பொன்னால் உனக்கொரு கோயில் புனைவேன்
மனமே! எனை நீ வாழ்வித் திடுவாய்
வீணேஉழலுதல் வேண்டா!
சக்தி குமரன்சரண்புகழ்வாயே"

எனத் தன் மனத்திடம் வேண்டுகிறார். உள்ளம் உடைமை உடைமை என்றும், உள்ளத் தனையது உயர்வு என்றும் திருவள்ளுவர் உரைத்தவையே நம் நினைவுக்கு வருகின்றன.

38. கேள்வி : பாரதியார் மணக்குள விநாயகரிடம் வேண்டுவன யாவை?

பதில் : பாரதியார் மணக்குள விநாயகரிடம் வேண்டுவனவற்றை இரண்டு வகைகளில் காணலாம். ஒன்று தனக்காக வேண்டுவது, மற்றொன்று மக்களுக்காக வேண்டுவன.

களங்கமில்லா உள்ளம், மயக்கமில்லாத அறிவு, விநாயகரைப் போன்ற மனோ நிலை, நிறைவான செல்வம், நூற்றாண்டு வாழ்வு, இடரில்லா நிலை முதலியன வேண்டியுள்ளார். புதுவை விநாயகனே! நீ என் சிறுமைகளைப் போக்கி, என் நாவால்தெள்ளிய தமிழ்ப்பாக்கள் ஒரு கோடி பாட அருள் செய்க என வேண்டுகிறார்.

"நீண்டபுகழ் வாணாள் நிறைசெல்வம் பேரழகு
வேண்டுமட்டும் ஈவாய் விரைந்து"

"என்துயர்கள் தொலைந்திடுக!
தொலையா இன்பம் விளைந்திடுக"

என்றும் தனக்காச் சில வரங்கள் வேண்டியுள்ளார்.

பாரதியார் தமக்காக மட்டுமின்றி, மக்களுக்காக விநாயகரிடம் வேண்டியுள்ளார். பொதுமக்கள் நலமுடன், வளமுடன் வாழ அருள்புரிக! எனக் கேட்டார்.

"மண்மீதுள்ள மக்கள் பறவைகள்
விலங்குகள் பூச்சிகள் புல்பூண்டு மரங்கள்
யாவுமென்வினையால் இடும்பைதீர்ந்தே
இன்புற்று அன்புடன் இணங்கி வாழ்ந்திடவே
செய்தல் வேண்டும் தேவதேவா"

என்றும் உலகிலுள்ள உயிர்கள் அனைத்தும் இடர்நீங்கி இன்புற்று வாழ அருள்புரிய வேண்டுமென விநாயகரிடம் வேண்டியுள்ளார். எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க! என்ற வள்ளலார் வேண்டுகையும் நினைவில் நிற்கிறது.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே"

என்ற தாயுமானவரின் பாடலைப் போலவே பாரதியாரின் உலக மக்களுக்கான வேண்டுதல் அமைந்துள்ளது.

39. கேள்வி : விநாயகர் நான்மணிமாலையில் பாரதியாரின் சொற்செறிவு, பொருட் பொலிவு கவிதை நயம் வெளிப்படும் வகையைக் கூறுக ?

பதில் : பாரதியாரின் பாடல்களில் சொற்செறிவு, பொருள் ஆழம், கற்பனைநயம், கலை வளம் முதலியன எங்கும் களிநடம் புரியும். மேலும் பாரதியாரின் சொல்நுட்பங்கள் கற்று உணரத்தக்கன. அன்பு, ஞானம் என்ற சொற்களுக்குப் பாரதியார் தரும் விளக்கம் வியக்க வைக்கிறது.

"அன்பிற் சிறந்த தவமில்லை அன்புடையார்
இன்புற்று வாழ்தல் இயல்பு"

என்று தவமென்பது அன்பேயாகும் எனப் புதுவிளக்கம் தந்துள்ளார். சடைமுடி வளர்த்தல். காவியுடை முதலியன தவமல்ல எனப் புறக்கணித்தார். மேலும், ஞானம் என்பதென்ன முக்தி என்பதென்ன என்பதற்கு,

"கவலைப் படுதலே கடுநரகு அம்மா!
கவலையற் றிருத்தலே முத்தி"

நுட்பமான விளக்கம் தந்துள்ளார்.

"நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்கு உழைத்தல்
இமைப் பொழுதும் சோரா திருத்தல்"

என்பது இந்நூலின் முத்து மொழிகளாகும்.

"கடமையாவன தன்னைக் கட்டுதல்
பிறர் துயர் தீர்த்தல் பிறர்நலம் வேண்டுதல்"

"பக்தி உடையார் காரியத்தில் பதறார் மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்கும் தன்மை போல் மெல்லச் செய்து பயனடைவார்"

என்ற பாடல் வரிகள் சொல்லழகும், கவிதை நயமும் உடையன. பொறுமைக்குத் திருவள்ளுவர் நிலத்தை உவமையாகக் கையாண்டார். அகழ்வாரைத் தாங்கும் நிலம் என்பது திருக்குறள். வித்தானது பொறுமையாகத்தான் முளைவிடும். அதைப்போல பொறுமையுடையவர் வாழ்க்கையில் நிதானமாக, மெதுவாகச் செயல்புரிந்து பெரும்பயனை அடைவார்கள். இந்த உவமை புதுமையானது, பொருத்தமானது, கவிதை நயம்மிக்கது. "பொறுத்தார் பூமியாள்வார்" என்ற பழமொழி இங்கு ஒப்புநோக்கத்தக்கது. தம் கவியானது 'தீயே நிகர்த்து ஒளிவீசும் தமிழ்க்கவி' என்றும், மின்னொளிக் கவிதை என்றும் கூறியன அழகிய இடங்களாகும். பாரதியாரின் கவிதை நயம் என்றே பலர் எழுதினர். ஏறத்தாழ 800 க்கு மேலான நூல்கள் பாரதியார் வெளிவந்திருப்பது திறனாய்வின் எழுச்சியையும் பாரதியாரின் பெருமையையும் காட்டும்.

40. கேள்வி : பாரதியாரின் பக்திப் பாங்கைச் சுருக்கி வரைக?

பதில் : பாரதியார் தெய்வப்பாடல்கள் என்பதில் விநாயகர், முருகன், வள்ளி, சிவசக்தி, இராமன், கண்ணன், திருமகள், கலைமகள், ஏசு, அல்லா என்று கடவுளர் பலரைப் போற்றிப் பாடியுள்ளார். இருப்பினும் அவரின் இறைக்கொள்கையின் அடிப்படை கடவுள் ஒருவரே என்பதாகும். அவ்வொருவரை உண்மையென்றும், அறிவென்றும், ஞானமென்றும் பேசியுள்ளார்.

"மெல்லப் பல தெய்வம் கூட்டி வளர்த்து வெறும் கதைகள்சேர்த்துப்– பல
கள்ளமதங்கள் பரப்புதற்கோர் மறைகாட்ட வல்லீரோ?
ஒன்று பிரமம் உளது உண்மை அஃதுன் உணர்வினுள் கொள்வாயே "

என்பதில் ஓரிறைக் கொள்கையை உணர்த்தினார்.

ஒன்றே குலமும், ஒருவனே தேவன் என்றே உயரிய கோட்பாட்டைக் கைக்கொண்டு பாரதியார் வாழ்ந்தார்.

இன்னும் தெளிவாக ஆத்திசூடி காப்பு – பரம்பொருள் வாழ்த்தில் காணலாம்.

"ஆத்திசூடி இளம்பிறை அணிந்து
மோனத் திருக்கும் முழுவெண்மேனியான்
கருநிறம் கொண்டு பாற்கடல்மிசைக் கிடப்போன்
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின்தந்தை, எனப்பலமதத்தினர்
உருவகத்தாலேஉணர்ந்துணராது
பல்வகையாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறும் அறிவாம்
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்
அதனருள் வாழ்த்தி அமர வாழ்வு எய்துவோம்"

இறைவனை அடைவதற்கு,

"காவித்துணி வேண்டா. கற்றைச் சடைவேண்டா
சாத்திரங்கள் வேத மறைகள் ஏதுமில்லை
தோத்திரங்கள் இல்லைஉளம்தொட்டு நின்றால் போதுமடா
பாவித்தல் போதும் பரமநிலை எய்துதற்கே"

இருக்கிற இடத்தில் இருந்து கொண்டே மன இதயத் தூய்மையுடன் இருந்தால் இறையின்பத்தை அனுபவிக்கலாம். 'உள்ளமே பெருங்கோயில்' என்கிறது திருமந்திரம். மலர்மிசை ஏகினான் என்பது திருக்குறள். உள்ளத்தில் இருப்பானடி என்ற கவிமணியின் கவிதையும், நாம் வெள்ளை மலருமல்ல, வேறெந்த மலரும் அல்ல, உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது என்பது விபுலானந்தரின் இறை வணக்கம்.

"ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையு மறிவிலிகாள்
ஆயிரம் வேத மறிவவொன்றே தெய்வமுண்டாம்
எனல் கேளீரோ !"

எனவும் உணர்த்தினார்.

ஒன்றே மெய்ப்பொருள். உயிர்கள் எல்லாம் அதன் வடிவாம் எனத் தெளிவுபடுத்தினார். எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கிறான் என்பதை உணர்ந்து உயிராக்கம் ஓர் இறைக் கொண்டு வாழ வலியுறுத்தினார். பாரதியாரின் உண்மையான உலகம் இறைக் கொள்கையை உணர்ந்து ஒழுக வேண்டும் என்பதாகும். சமயத் தலைவர்களின் கொள்கைகளைச் சரியாக அறிந்து சாறு பிழிந்ததைப் போல விளக்கியது பாரதியாரின் பெருமையைக் காட்டும்.

41. கேள்வி : கலியுகம், கிருதயுகம் பற்றி பாரதியார் கூறுவன யாவை?

பதில் : மக்களுக்குத் தீங்கு தருவது கலியுகம், நன்மை தருவது கிருதயுகம் என்பது மக்கள் நம்பிக்கையாகும். அந்த நம்பிக்கையின் ஆழம் எதுவாக இருந்தாலும் அப்படிச் சொல்வது பாரதியார் காலத்தில் இருந்துள்ள அந்த அடிப்படையில் பாரதியார் கலியுகம் ஒழிந்து, கிருதயுகம் வரவேண்டுமெனப் பாடியுள்ளார். "வீழ்க கலியின் வலியெல்லாம் கிருதயுகந்தான் மேவுகவே". "பொய்க்கும் கலியைநான் கொன்று பூலோகத்தார் கண்முன்னேமெய்க்கும் கிருதயுகத்தினையே கொணர்வேன்"

"பாரிடைமக்களே !
கிருத யுகத்தினைக் கேடின்றி நிகழ்த்த
விரதம் நான் கொண்டனன். வெற்றி
தருஞ்சுடர் விநாயகர் தாளிணை வாழியே "

என்றெல்லாம் பாடியுள்ளார். விநாயகர் அருளால் கலியுகம் ஒழியும். திரேதாயுகம் பிறக்கும். அப்போது மக்கள் மற்றும் உயிரினங்கள் நலமுடன் வாழ்வர் என்றார்.

42. கேள்வி : சமூகம் என்ற தலைப்பில் மகளிர் பற்றிப் பாரதியார் பாடியன, பாரதியாரின் முற்போக்கை உணர்த்தும் வகையை விளக்குக,?

பதில் : புதுமைப்பெண், பெண்மை வாழ்க, பெண்கள் விடுதலைக் கும்மி, பெண் விடுதலை என்ற நான்கு சிறுதலைப்புகள் சமூகம் என்ற தலைப்பில் உள்ளன. இந்நான்கும் பாரதியாரின் உள்ளத் துடிப்பையும், பெண்களைப் போற்றும் பெருந்தகவையும் வெளிப்படுத்துகின்றன. நாட்டு விடுதலை, சாதி ஒழிப்பு, பெண்கள் சரிநிகர், பொருளாதார முன்னேற்றம் இவற்றைப் பல இடங்களில் உணர்த்தியுள்ளார். அவற்றுள் பெண்கள் சமத்துவம் பெண்கள் முன்னேற்றம் என்பதில் அதிக ஆர்வம் காட்டினார். பெண் சமத்துவமின்றி வீடோ, நாடோ முன்னேற முடியாது என்பது அவரின் அசைக்கமுடியாத எண்ணமாகும்.

"அறிவு கொண்டமனித உயிர்களை
அடிமையாக்கமுயல்பவர் பித்தராம் "

என்றும்,

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலெங்கும் இவ்வையகம் தழைக்கும் "

என்றும்,

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்குமஞ் சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மைமாதர் திறம்புவது இல்லையாம் "

என்றும் சமூகம், புதுமைப்பெண் தலைப்புக்களைப் பாடியுள்ளார்.

"வலிமைசேர்ப்பது தாய்முலைப் பாலடா!
மானம் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்
கலியழிப்பது பெண்கள் அறமடா!
கைகள் கோர்த்துக் களித்து நின்றாடுவோம்"

என்று பெண்மை வாழ்க என்ற தலைப்பில் பாராட்டினார்.

"எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கேபெண்
இளைப்பில்லைகாண் என்று கும்மியடி
சாதம் படைக்கவும் செய்வோம் – தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடுவோம்"

என்று பெண்கள் விடுதலைக் கும்மியில் பாடிப் புகிழ்கின்றார்.

"விடுத லைக்கு மகளிரெல் லோரும்
வேட்கை கொண்டனம் – வெல்லுவ மென்றே"

என்றார்.

இங்ஙனம் பாரதியார் பெண்கள் விடுதலை, முன்னேற்றம், கல்வி முதலியன பற்றிப்பாடியன பலவாகும். மேலும், கட்டுரை, கதை, பேச்சு முதலியவற்றில் எல்லாம் அவரது பெண் முன்னேற்றம் பற்றிய சீர்திருத்தப் போக்கை உணரலாம்.

43. கேள்வி : பாரதியார் கூறியுள்ள பெண் விடுதலைக்கான திட்டங்களை விளக்குக ?

பதில் : பாரதியார் விரும்பிய இலட்சியக் கனவு பெண் விடுதலையாகும். மகளிர் முன்னேற்றத்தில் தீவிரம் காட்டினார். ஆண்களோடு பெண்களும் சரிநிகர்சமானமாக வாழ வேண்டுமென விரும்பினார். சரி நிகர் சமானம் மூன்றுமே ஒரே பொருள் கொண்ட சொற்கள். சமநிலையை அழுத்தமாகக் காட்ட அடுக்கிக் காட்டும் பாரதியாரின் புலமை பொங்குகிறது. "சகோதரிகளே! ஆறிலும் சாவு நூறிலும் சாவு, தர்மத்துக்காக மடிகிறவர்களும் மடியத்தான் செய்கிறார்கள். சாமான்ய ஜனங்களும் மடியத்தான் செய்கிறார்கள். ஆதலால் சகோதரிகளே ! பெண் விடுதலைக்காக இந்தக் கணத்திலே தர்மயுத்தம் தொடங்குங்கள். நாம் வெற்றி பெறுவோம். நமக்கு மகாசக்தி துணை செய்வாள்" என எழுச்சியூட்டினார். பாரதியார் பெண் விடுதலை என்ற கட்டுரையில் பெண் விடுதலைக்கானத் திட்டங்களைப் பட்டியலிட்டுள்ளார்.

"பெண்களுக்கு விடுதலை கொடுப்பதில் இன்னும் முக்கியமான ஆரம்பப்படிகள் எவையென்றால்

பெண்கள் ருதுவாகு முன்பு விவாகம் செய்து கொடுக்கக் கூடாது.

அவர்களுக்கு இஷ்டமில்லாத புருஷனை விவாகம் செய்து கொள்ளும் படி வற்புறுத்தக் கூடாது.

விவாகம் செய்து கொண்ட பிறகு அவள் புருஷனை விட்டு நீங்க இடம் கொடுக்க வேண்டும். அதன் பொருட்டு அவளைஅவமானப்படுத்தக் கூடாது.

பிதுராஜ்ஜியத்தில் குடும்பச் சொத்தில் பெண் குழந்தைகளுக்குச் சமபாகம் கொடுக்க வேண்டும்.

புருஷன் இறந்தபிறகு ஸ்திரீ மறுபடி விவாகம் செய்து கொள்ளத் தடுக்கக் கூடாது.

விவாகமே இல்லாமல், தனியாக இருந்து வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றால் கவுரமாக ஜீவிக்க விரும்பும் ஸ்திரீகளை யதேச்சையான தொழில் செய்து ஜீவிக்க இடம் கொடுக்கவேண்டும்.

பெண்கள் கணவனைத் தவிர வேறு புருஷனுடன் பேசாக் கூடாதென்றும், பழகக் கூடாதென்றும் பயத்தாலும், பொறாமையாலும் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனையை ஒழித்து விடவேண்டும்.

பெண்களுக்கு ஆண்களைப் போலவே உயர்தரக் கல்வியின் எல்லாக் கிளைகளிலும் பழக்கம் ஏற்படுத்த வேண்டும்.

தகுதியுடன் அவர்கள் அரசாட்சியில் எவ்வித உத்தியோகம் பெறவிரும்பினாலும் அதைச் சட்டம் தடுக்கக் கூடாது.

தமிழ்நாட்டில் ஆண் மக்களுக்கு அரசிலும், நாட்டிலும் சுதந்திரம் இல்லாமல் இருக்கையிலே அது பெண்களுக்கு வேண்டுமென்று கூறுதல் பயனில்லை. எனினும் சீக்கிரத்தில் தமிழருக்கு சுயராஜ்ஜியம் கிடைத்தால் அப்போது பெண்களுக்கு ராஜாங்க உரிமைகளிலே அவசியம் பங்கு கொடுக்க வேண்டும். சென்ற வருஷத்து காங்கிரஸ் சபையில் தலைமை வகித்தவர் மிஸஸ் அன்னிபெசன்ட் என்ற ஆங்கிலேய ஸ்திரீ என்பதை மறந்து விடக்கூடாது"

இங்ஙனம் பெண் விடுதலைக்கான அருமையான திட்டங்களை நூறு வருடங்களுக்கு முன்பே பாரதியார் கூறியுள்ளார். காதல் மணம், கலப்புமணம், மணவிலக்கு, மறுமணம், விதவை மணம் என்ற சீர்த்திருத்தக் கருத்துக்கள் அனைத்தும் இந்த உரையில் உள்ளடங்கிடக் காணலாம். இவற்றை நடைமுறைப்படுத்தினால் பெண் விடுதலை நூறு விழுக்காடு நிறைவேறும். இங்கே ஒரு கருத்தைக் குறிப்பிடவேண்டும். பாரதியார் உணர்வு வெள்ளமாகப் பாடியது போலவே உரைநடையையும் தன் மனம் சென்ற நிலையில் பேச்சு வழக்கில் அன்றைய நடைமுறைச் சொற்களில் எழுதியிருக்கிறார். மேலும் ஸ்தீரி, புருஷன், சுயராஜ்யம், ருது,

விவாகம் முதலிய சொற்கள் பாரதியார் பாடலில் காணமுடியாதவை. பாடலையும் உரைநடையையும் பார்த்து இந்த உரைநடையா பாரதியாருடையது என்று சிலர் அறியாது மருண்டதுண்டு. வள்ளலாருக்கும் இதைப்போல பாடலும் உரைநடைப் போக்குகள் வேறாக இருக்கும்.

44. கேள்வி : தமிழ்நாட்டுப் பெண்களுக்குப் பாரதியார் கூறிய அறிவுரைகள் யாவை?

பதில் : பாரதியார் தேசிய விடுதலை, சமுதாய மாற்றம் என்ற இரண்டையும் காண விரும்பினார். நாட்டு விடுதலை மட்டும் போதாது, சமுதாயத்தில் பல மாற்றங்கள் விளைய விரும்பினார். பெண்கள் உயர்வு, தேசியக் கல்வி, பொருளாதார ஏற்றம் முதலிய சமுதாயப் புதுமைகளைக் காண விரும்பினார். இவற்றைத் தம் பாடல்கள், உரைநடை, கதை, கட்டுரை முதலியவற்றில் குறிப்பிட்டுள்ளார். பெண்கள் கல்வி பெறவேண்டும். ஆண்களுக்கு நிகரான சமத்துவம் பெறவேண்டுமென அவர் சொன்ன அறிவுரைகள் பலப்பல.

மண்டையம் சீனிவாச்சராரியார் பாரதியாருக்கு அவ்வப்போது உதவிகள் பல செய்து வந்தவர் யதுகிரி அம்மையார் அவரது குடும்பத்தினராவார். அந்த அம்மையாருக்குப் பாரதியார் அடிக்கடி தனிப்பட்ட முறையில் அறிவுரைகள்சில கூறுவாராம். அவர் கூறியன அந்த அம்மையாருக்கு மட்டுமன்றி, பெண்கள் உலகத்திற்கே என்பதைக் காண்போம்.

"யதுகிரி! நான் சில புத்திமதிகள் சொல்கிறேன். மறக்காதே! பெண்களுக்கு மிக முக்கியமானது கற்பு, அதை உயிரைக்காட்டிலும் ஜாக்கிரதையாகக் காப்பாற்றுவது முதல்கடமை. அதற்காகக் கூண்டுக்கிளி போல அடைபட்டுக் கிடக்க வேண்டாம். உலகத்தில் கணவன் ஒருவனைத் தவிர, பாக்கியுள்ள புருஷர்கள் எல்லாம் அண்ணன் தம்பிமார்கள். எல்லோருக்கும் பதுங்கி அஞ்ச வேண்டியதில்லை. முக்கியமாகக் கூச்சம், வெட்கம் இரண்டும் அநாவசியமான சரக்குகள். நீ பேஷாக எல்லோருடன் பேசலாம். கணவனிடம் முதல்முதல் வெட்கம் வரும் பழகப்பழக அதுவும்

வேண்டியதில்லை. நீங்கள் தைரியமாக இருந்தால்தான் உங்கள் வயிற்றில் பிறக்கும் குழந்தைகள் தைரியமாக இருக்கும். கோழைத்தனம் இந்தியாவின் மேன்மையை நாசம் செய்துவிட்டது. அதோடு காலமும் உதவி செய்தது.

நீ புக்ககத்திற்குப் போனாலும் தைரியமாக இரு. பயப்படாதே! ஒட்டுக் கேட்காதே! பிறர் கடிதங்களை உடைத்துப்பார்க்காதே! மனத்தில் உள்ளதை நேரில் சொல்லிவிடு. மனத்தில் வைத்து உருகுவதைவிட, வாயினால் சொல்லி விடுவது நல்லது. பணம் காசு விஷயங்களில் தலையிடாதே! அதைப்பெரியவர்களுக்கு விட்டுவிடு. வேலை செய்யப்பின் வாங்காதே! சக்தி மீறிச் செய்யாதே! செய்வதை உன் மனம் ஒப்பச் செய்" மேற்கண்ட பாரதியாரின் அறிவுரைகள் உலகிலுள்ள பெண்கள் அனைவருக்கும் பொருத்தமானவையாகும். மேலும், அவரது பாடல்களில் காணும் ஒரு சிந்தனைச் சுடரைச் சுட்டிக் காட்டலாம். சிங்கக் குட்டிகளோடு விளையாடிக் கொண்டிருந்த சிறுவனாகிய பரதனை, மனைவியை மறந்த துஷ்யந்தனின் மகன் என்று அப்பாவின் பெயர் கூறாது, சகுந்தலை பெற்ற பிள்ளை என்று எழுத பாரதியார் தவிர வேறெவரால் சிந்திக்க முடியும் என்று பெண்கள் கொண்டாட வேண்டும்.

45. கேள்வி : மதுப்பழக்கம் பற்றிப் பாரதியார் கண்டித்த முறைமையை வரைக ?

பதில் : பாரதியார் மதுப் பழக்கத்தைக் கண்டித்துள்ளார். திருக்குறள் முதலிய அறநூல்களிலும் சிலம்பு, மேகலை முதலிய காப்பியங்களிலும் அந்நாளிலேயே கள்ளுண்ணாமை வலியுறுத்தியிருப்பதை கட்டுரையிலும், கவிரையிலும் என இரு இடங்களில் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவில் மதுபானம் என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் கள்ளருந்துவதைக், குடிப்பழக்கத்தைத் தவிர்க்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். 'இவ்வளவு அருமையாக நமக்கு சுவாமி கொடுத்த தென்னை மரத்தினின்று நமக்குக் கிடைக்கக் கூடிய நன்மையை அந்நியர்கள் செவ்வன் அறிந்து அதை நாம் அடையாமல் இருக்கவும், அவர்களுக்காக வருமானமாகப் படியாகவும் தென்னை மரத்திலிருந்து கள் இறக்கி, அதை

நாம் அருந்தி நாசமடைந்து கடவுளின் உபகாரத்தை மறந்து விடும்படியாகவும், அந்நியர்கள் அந்தரங்கமாக யோசனைகள் செய்து மதுப் பழக்கத்தால் நாசமாக எண்ணம் கொண்ட துஷ்டர்களுக்குக் கடவுள் என்ன தீவினை விளைவிப்பாரோ நமக்குத் தெரியாது. இப்பவும் தற்காலம் இதன் உண்மையைச் சகோதரர்கள் யாவரும் அறிந்து இதை வர்ஜனம் செய்ய வேண்டுமென்பது நம்முடைய நோக்கமாகும்.' பாரதியின் இக்கருத்தை அரசும், மக்களும் எண்ணிப்பார்த்து மனம் மாறவேண்டும்.

"வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ ?" என்றும்

"ஆரமுது உண்ணுதற்கு ஆசைகொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்து வாரோ"

என்றும் பாடியுள்ளார். அதாவது, சுதந்திரம் என்ற அமுதத்தை விடுத்து அடிமைத்தனம் என்ற மதுப்பழக்கத்துக்கு ஆளாகலாமோ? எனச் சிந்திக்க வைத்துள்ளார். இனி வருங்காலத்திலாவது.

"ஆடுவோமே! பள்ளுப் பாடுவோமே –
அழிவைத் தரும் கள்ளை
அகற்றி விட்டோமென்று ஆடுவோமே"

என அவர் கருத்திலேயே நாம் பாட வேண்டும்.

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்"

எனத் திருவள்ளுவர் கள்ளுண்ணலின் தீமையை நஞ்சு உண்பதாகக் கடுமையாக வலியுறுத்தினார். கள்குடித்தல் ஐம்பெரும் பாவங்களுள் ஒன்றாகும்.

46. கேள்வி : சாதி ஒழிப்பு குறித்த பாரதியாரின் சிந்தனைகள் யாவை?

பதில் : பாரதம் அடிமைப்பட்டதற்குச் சாதிக் கொடுமைம் ஒரு காரணம் ஏற்றத்தாழ்வை பிறப்பிலே கூறிய கொடுமை வெறெந்த நாட்டிலும் இல்லை. சாதி இரண்டொழிய வேறில்லை. ஆடவர் மகளிர் என்று ஔவையார் பாடினார். அப்படியும் பிரிக்க கூடாது. ஆணும், பெண்ணும் நிகர் என்ற நிலையில் ஒன்றே குலம் என்று உணர வேண்டும். சாதியிழிவு. பாரத சமுதாயத்தைப் பிடித்துள்ள மாபெரும் சாபக்கேடு. புரையோடிய புற்று நோயினும் கொடியது. இதனை முதல்முதலில் எதிர்த்தவர் திருவள்ளுவரே! 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' எனச் சாதிக் கொடுமைக்கு எதிர்ப்புக் குரல் கொடுத்தார். அதனைவழி மொழிந்த திருமூலர் 'ஒன்றேகுலம், ஒருவனே தேவன்' என்றார். "சாதி இரண்டொழிய வேறில்லை" என்றார் ஔவையார். இட்டார் மேலோர், இடாதார் இழிகுலத்தார் எனப்புதிய விளக்கமளித்தார். இவர்களைத் தொடர்ந்து தம் பாட்டாலும் பேச்சாலும். வாழ்க்கையாலும் சாதியை எல்லாவிடங்களிலும் எதிர்த்தவர் பாரதியார்.

நாட்டில் படரும் சாதிப்படைக்கு மருந்து என்ற பாவேந்தர் பாட்டால் பாரதியாரின் சாதி எதிர்ப்பை உணரலாம். அந்தணராகப் பூணூல் அணிவித்து மாற்றப்பட்ட கனகலிங்கம் "சாதி வித்தியாசங்களை அடியோடு தொலைத்து விட வேண்டும் என்ற புரட்சிகரமான லட்சியம் பாரதியாருக்கு அந்நாளிலே உண்டு. அரசியல் துறையில் மட்டுமல்ல. சமூகத் துறையிலும் இவர் பெரும்புரட்சிக்காரர். வாய்ச்சொல் வீரரல்லர். செயல்திறமை வாய்ந்த வீரர் என்றன் குருநாதர்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

"சாதிகள் இல்லையடி பாப்பா– குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் "

என்றார்.

எது பாவம் என்பதற்கு இவரது புதிய விளக்கம் ஊன்றி உணரத்தக்கது.

"ஜாதி மதங்களைப் பாரோம்"

"சாதி இரண்டொழிய வேறில்லையென்றே
தமிழ்மகள் சொல்லிய சொல் அமிழ்தம் என்போம்
நீதி நெறியினின்று பிறர்க்கு உதவும்
நேர்மையவர் மேலவர். கீழவர் மற்றோர்"

என்ற வரிகள் உள்ளங்கொள்ளத்தக்கன. ஔவையைத் தமிழ்மகள் என்று போற்றியதும், அவர் தமிழ்ச் சொல் அமிழ்தம் என்ற பெருமையும் உணரத்தக்கது.

'ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே! ஜாதி இரண்டொழிய வேறில்லை' என்ற பழம் தமிழ்வாக்கியத்தை வேதமாகக் கொள் என்று எழுதினார்.

இனக்கொடுமையால் தாழ்த்தப்பட்டவரான கனகலிங்கத்திற்குத் தம் வீட்டிலேயே பூணூல் அணிவித்ததும், முகமதியர் கடையில் பலரறியத் தேநீர் குடிப்பதும் தமக்கு எந்த வேறுபாடுமில்லை என்ற உணர்வு பலருக்கு வழிகாட்டின. பாரதியார் சொன்னபடி நடந்து காட்டியவராவார். தம் மாணவரான பாவேந்தரிடம் அடிக்கடி சாதிவேரைச் சுட்டுப் பொசுக்குங்கள் என்று கூறுவாராம். இதனை அடிப்படையாக வைத்தே பாவேந்தர்,

"சாதி ஒழித்தல் ஒன்று
தமிழ்வளர்த்தல் மற்றொன்று"

என்று பாடினாராம்.

"இந்தியாவில் சாதி வித்தியாசத்திலே ஒரு விநோதம் என்னவென்றால் எந்த மூலையில் போய்ச் சாதியை எடுத்துப் பார்த்தாலும் அதற்குள் நாலு உட்கிளையில்லாமல் இருப்பதில்லை" என்றார். ஒவ்வொரு சாதியிலும் உள்ள கிளைகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

'ஹிந்துஸ்தானம் என்பது ஹிந்துக்களின் ஸ்தானம். இது நமது தேசத்திற்கும், தேசத்திலுள்ள ஜனக்கூட்டத்திற்கும் பெயர், இந்தஜனக் கூட்டத்திற்குப் பாரதி ஜாதி என்று பெயர் சொல்வதுண்டு'. இந்தப்புதிய ஒருமைப்பாட்டுணர்வை முதன்முதலில் பாரதியாரே வலியுறுத்தினார்.

"சாதிக்கொடுமைகள் வேண்டாம் –அன்பு
தன்னில் செழித்திடும் வையம்".

'நான் இந்தியாவில் இசுலாமியரைக் கண்டேன், கிறித்தவரைக் கண்டேன், சீக்கியரைக் கண்டேன், பார்சியைக் கண்டேன், ஆனால் ஓர் இந்தியனைக் கூடக் காணவில்லை' என்ற கூற்று இந்தியாவின் வேற்றுமை நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. இதன் அடிப்படையில் தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்தால் கள்ளர், வன்னியர், முதலியார், தேவர், யாதவர், செட்டியார், நாடார், பிள்ளைமார், நாயுடு இப்படி சாதிப் பிரிவுகளைத்தான் காணமுடியும். ஒரு தமிழரைக் காணமுடியாது என்பதே நடைமுறை உண்மை.

திருவள்ளுவர், திருமூலர், ஔவையார், சைவ வைணவ அருளாளர்கள், பாரதியார், பாரதிதாசன் முதலியோர் எவ்வளவோ உணர்த்தியும்,

"இருட்டறையில் உள்ளதடா உலகம் – சாதி
இருக்கின்றதென்பானும் இருக்கின்றானே"

என்ற பாவேந்தரின் பாடலடிகள்தான் நினைவிற்கு வருகின்றன.

47. கேள்வி : ஒற்றுமை குறித்த பாரதியாரின் சிந்தனைகள் யாவை ?

பதில் : இந்தியா பொதுவாக மதங்களாலும், சாதிகளாலும், வேறுபட்டுப் பிளவுபட்டுக் கிடக்கிறது. பாரதியார் பாரதநாட்டு மக்கள் வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டுமென்று விரும்பினார். வேற்றுமைகளைச் சுட்டிக்காட்டி, ஒற்றுமையின் இன்றியமையாமையை உணர்த்தியுள்ளார்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே– நம்மில்
ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் – இந்த
ஞானம் வந்தால்பின் நமக்கெது வேண்டும்"

என்று நாட்டு நடப்பையும் கூறி, அனைவரும் உடன் பிறப்புகளே என்ற ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டினையும் நெறிப்படுத்தினார்.

"முப்பது கோடியும் வாழ்வோம் – வீழில்
முப்பது கோடியும் வீழ்வோம்"

என்று வாழ்விலும், தாழ்விலும் ஒற்றுமையாக விளங்க வேண்டுமென்றார்.

“சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத்
தோணிக ளோட்டிவிளை யாடிவருவோம்.
கங்கைநதிப் புறத்துக்கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம்
சிங்கமராட்டியர் கவிதைகொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்.”

என்ற வரிகள் பாரத தேச ஒற்றுமைக்கு வழிகாட்டும் மகத்தான மாணிக்க வாசகமாகும்.

“ஒன்று பரம்பொருள் – நாம் அதன் மக்கள்”

எனச் சுருங்கச் சொல்லி ஒற்றுமையை உணரவைத்தார்.

“எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரு மோர்நிறை எல்லாரு மோர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர் ! – நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் – ஆம்!
எல்லாரும் இந்நாட்டு மன்னர் !”

என்ற பாடல் அனைவரும் அறிந்தது.

“வெள்ளை நிறத்தொரு பூனை – எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றதந்தப் பூனை – அவை
பேருக் கொருகிற மாகும்.
வண்ணங்கள் வேற்றுமைபட்டால் –அதில்
மானுடர் வேற்றுமை இல்லை
எண்ணங்கள் செய்கைகள் எல்லாம் – இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்”

இங்ஙனம் பாரதியார் இந்திய தேசிய ஒற்றுமையைப் பற்றிப் பல பாடல்கள் வழி உணர்த்தியுள்ளார்.

48. கேள்வி : தம் கால ஆங்கிலக்கல்வி குறித்த பாரதியாரின் கருத்து யாது ?

பதில் : ஒரு மனிதனின் பண்பையும் ஆளுமையும் உயர்த்துவதாகக் கல்வி விளங்கவேண்டும். ஆங்கிலக் கல்வி தாய்மொழிப்பற்றைத் தாய்நாட்டுப்பற்றைக் குறைவாக மதிப்பிடச் செய்தது. ஆங்கில மொழி வாயிலாகக் கற்பதால் மாணவர்கள் மனப்பாட எந்திரமாக மாற்றப்பட்டனர். நாட்டு வரலாறு, பண்பாடு, இலக்கியங்கள் முதலிய சுதேச உடைமைகள் மீது புறக்கணிப்பூட்டியது. ஆங்கிலக் கல்வியின் குறைபாட்டை பாரதியார் குணமது கைவிடேல் என்ற கட்டுரையில் விளக்கியுள்ளார்.

"எனது குழந்தைகள் எனது மூதாதையர்களைப் பற்றியும், எனது தேச சரித்திரத்தைப் பற்றியும் ஒன்றுமே தெரியாமல், நான் நம்பும் வேதங்கள், சாத்திரங்கள் முதலியவற்றின் பெருமையை அறியாமல், சாதீயப் பாடசாலைகளுக்கு அனுப்பி ஐரோப்பியக் கல்வியிலே பிரயோசமான அம்சத்தை மட்டும் கற்றுக்கொள்ளும்படிச் செய்து, எனது தேசத்து ஞானமும் என் குழந்தைகளுக்கு ஏற்படும்படிச் செய்வேன்" என எழுதியுள்ளார். ஆங்கிலக் கல்வியை நாசகாரக் கல்வி என்று குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். எல்லா நாட்டுக் கல்வியிலும் பயனுள்ளவற்றைப் படிப்பதில் தவறில்லை என்ற வரிகள் அவரது பரந்தநோக்கையும் வேறிடத்தில் பார்க்க முடிகிறது.

ஆங்கிலேயர் கொண்டு வந்துள்ள கல்வியைப் பேடிக்கல்வி என்று ஏளனம் செய்துள்ளார். பாரதியார் தம் சுய சரிதையில் தம்கால ஆங்கிலக் கல்வியின் நிலையைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

"*கணிதம் பன்னிரண்டு ஆண்டு பயில் வார் பின்*
கார்கொள் வானிலோர் மீனிலை தேர்ந்திலார் "

என்றும்,

"வணிகமும் பொருள் நூலும் பிதற்றுவார்
வாழும் நாட்டில் பொருள் கெடல் கேட்டிலார்"

என்றும்,

*"பின்னர் நாடுறும் பெற்றியும் தேர்கிலார்
பேடிக்கல்வி பயின்று பித்தர்கள்
என்னகூறி மற்றெங்கென் உணர்த்துவேன்
இங்கிவர்க்கு எனதுள்ளம் எரிவதே"*

ஆங்கிலக் கல்வி பற்றி நினைக்கையில் உள்ளம் எரிகிறது என்கிறார். "அல்லல் மிக்க தோர் மண்படு கல்வி அற்பற் கல்வி, ஏதிலர் தரும் கல்விப் படுகுழி" என்றும் வசை பாடியுள்ளார். இதிலிருந்து அக்காலக் கல்வியின் அவலத்தைப் புலப்படுத்துகிறார்.

*"செலவு தந்தைக்கோர் ஆயிரம் சென்றது
தீதெனக்குப் பல்லாயிரம் சேர்ந்தன
நலம் ஓர் எட்டுணையம் கண்டிலேன்
இதை நாற்பதாயிரம் கோயிலிலும் சொல்லுவேன்"*

இவ்வாறு ஆங்கிலக் கல்வியால் ஏற்பட்ட தீய விளைவுகளைச் சுட்டிக் காட்டியுள்ளார். உண்மையான கல்வி தாய்மொழிக் கல்வியே என நமக்கு உணர்ச்சி காட்டினார். தாய்மொழிக் கல்வியால் தரணியை நன்கு அறிந்து எட்டுத்திக்கும் சென்று வென்று வரலாம் என்றார். திரை கடல் ஒடித் திறமையோடு திரும்பு என்பது அவர் நோக்கம்.

49. கேள்வி : பாரதியார் வலியுறுத்திய தேசியக் கல்விக் கொள்கை யாது ?

பதில் : ஒவ்வொரு நாட்டாரும் அவரவர் தாய்மொழியில் கற்பதே உண்மையான கல்விக் கொள்கையாகும். இதுதான் இயற்கையுமாகும். காந்தியடிகள், தாகூர் முதலியோர் விருப்பம் அதுவேயாகும். தாய்மொழிக் கல்வியே தேசியக் கல்விக் கொள்கை என்பது பாரதியாரின் கல்வி பற்றிய முழுச் சிந்தனையாகும்.

"தேச பாஷையின் மூலமாகப் பயிற்றப்படாத கல்விக்குத் தேசியக் கல்வி என்று பெயர் சொல்லுதல் சிறிதளவும் பொருந்தாது போய்விடுமன்றோ" என்று வினவினார். இத்தகைய தாய்மொழிக்கல்வி தேசத்தின் வாழ்வுக்கும், மேன்மைக்கும் இன்றியமையாதது எனப்பல இடங்களில் வலியுறுத்தியுள்ளார்.

"தமிழ்நாட்டில் தேசியக் கல்வி கற்பிக்க வேண்டுமானால். அதற்குத் தமிழே தனிக் கருவியாக ஏற்படுத்த வேண்டும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ". தமிழ்நாட்டில் தேசியக் கல்வி நடைபெற வேண்டுமானால் அதற்கு அகரமுதல் னகரப்புள்ளி இறுதியாக எல்லாச் செய்திகளும் தமிழ்பாஷையில் நடத்தவேண்டும்.

"*வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ*
வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ'

என்பதைக் கடிந்து கூறினார். அந்த நாளில் மொழி என்ற சொல்லிலிருந்தும், பாஷை என்ற வடமொழிச் சொல் நடைமுறையில் புலவர்களாலும் கையாளப்பட்டது. எனவே வீட்டு மொழியான, தாய்மொழியில் கற்பதை இங்கே எதிர்மறை உத்தியில் உணர்த்திய பாங்கு உணரத்தக்கது.

"*சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே–அதைத்*
தொழுது படித்திடடி பாப்பா'

என்று தாய்மொழியாம் தமிழின் மேன்மையை குழந்தைப் பருவத்திலிருந்து அமைய வேண்டுமென பாப்பா பாட்டில் உணர்த்தியுள்ளார்.

இவற்றால் தேசியக் கல்வி என்பது தாய்மொழிக் கல்வியே என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

தாய்மொழி வழிக் கல்வி, நாட்டுப்பற்றுக் கல்வி, வாழ்வுக்குரிய ஏதேனும் ஒரு கைத்தொழில் கற்பது என்னும் மூன்றையும் அடிப்படையாகக் கொண்டதே பாரதியார் வகுத்த தேசியக் கல்விக்கொள்கையாகும். "மேலை நாடுகளில் சில குழந்தைகளிடம் தேசாபிமான வித்து பலமாக

ஊன்றப்படுகிறது. நம் நாட்டில் இக்கல்வி கற்பிக்கப்படுவதில்லை" என்றார். "ஹே! பாரத புத்திரர்களே ! இனியாவது நம் தாயாகிய பாரதமாதாவை இரட்சிக்கும் பொருட்டு நவீனகட்சியார் போதித்துவரும் ஏற்பாட்டின்படி தேசியக் கல்வியில் கைத்தொழில்களையும் கற்பித்து, கற்றுணர்ந்து சிறப்பாக வாழக் கடவோமாக!" என்று மக்களின் மாட்சிமை என்ற கட்டுரையில் கூறியுள்ளார். மேற்கண்டவற்றிலிருந்து இந்த அடிப்படையில் அமைந்ததுதான் காந்தியடிகளின் ஆதாரக் கல்விக் கொள்கையாகும்.

50. கேள்வி : பாரதியார் எதனை ஒப்பில்லாத சமுதாயம் என்றார் ?

பதில் : பாரதியார் உலக நாடுகளில் என்ன நடக்கிறது என்பதை அறிவார். பிறநாடுகள் என்ற தலைப்பில் அவர் எழுதிய பாடல்களால் இதனை உணரலாம். உருசிய நாட்டில் பராசக்தி கடைக்கண் வைத்ததால் அங்கே யுகப்புரட்சி நடந்தது என்றார். அதாவது ஜார்ஆட்சி ஒழிந்து பொதுவுடைமை ஆட்சி மலர்ந்ததை வரவேற்றுள்ளார்.

"ஏழையென்றும் அடிமையென்றும்
எவனும் இல்லை சாதியில்"

என மக்கள் சமத்துவம் பற்றிப் பாடியவர். மேலும்.

"வயிற்றுக்குச்சோறிட வேண்டும் – இங்கு
வாழும் மனிதர்க்கெல்லாம்"

என ஒருவரும் பசியால் வாடக்கூடாது என விரும்பியவர். அதற்கு அனைத்தையும் பொதுநலமாக்கும் நல்லாட்சி நாட்டில் வர வேண்டும் என்பதை,

"முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொதுவுடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக்கு ஒரு புதுமை
இனி ஒரு விதி செய்வோம் – அதை
எந்தநாளும் காப்போம்

தனியொருவனுக்கு உணவிலை – எனில்
ஜகத்தினை அழித்திடுவோம்
வாழ்க வாழ்க பாரத சமுதாயம் வாழ்கவே"

என முழங்கினார் உடைமைகள் பொதுவாய் இருக்கும் பொதுவுடைமை ஆட்சியை வரவேற்றார். அஃது உலகில் புதுமையும். புரட்சியும் மிக்கதாகும். இதைத்தான் நம் நாட்டில் சமதர்ம சமநிலைச் சமுதாயம் என்றனர். இன்றும் எல்லார்க்கும் எல்லாம் என்பது இன்னும் கனவாகவே உள்ளது. எல்லார்க்கும் எல்லாம் என்ற இடம் நோக்கி நகர்கின்றது இந்த வையம் என்பது பாவேந்தரின் முரசொலியாகும்.

"பயிற்றுப் பலகல்வி தந்து – இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்
அன்பென்று கொட்டு முரசே–அதில்
யாருக்கும் விடுதலை உண்டு"

இங்ஙனம் பாரதியார் பொதுமைச் சமுதாயத்தை, உயர்வு தாழ்வற்ற சமுதாயத்தைப் படைக்க விரும்பினார். பொதுவுடைமைச் சமுதாயத்தில்தான் அனைவரும் இன்புற்று வாழ முடியும் என்பது அவரது அசைக்க முடியாத கொள்கையாகும்.

51. கேள்வி : வாழ்வாங்கு வாழ, பாரதியாரின் பத்துக் கட்டளைகள் யாவை ?

பதில் : திருவள்ளுவர், வள்ளலார், ஔவையார், பாரதியார் முதலியோர் மனிதன் மனிதனாக வாழவும், மாமனிதனாக உயரவும், தெய்வமாக விளங்கவும் வழிகாட்டியுள்ளனர். அவர்களின் கருத்துகள்சில கட்டளைகளாக இருக்கும். இவற்றைத் தவறாமல் பின்பற்றினால் வாழ்வாங்கு வாழலாம். பாரதியாரின் பத்துக்கட்டளைகள் பற்றிச் சுருக்கமாகக் காணலாம்.

"1.கவலையற்றிரு

கவலைப்படுதலே" கடு நரகமம்மா

கவலை யற்று இருத்தலே முக்தி"

2. அச்சம் தவிர்

அச்சமே மக்களை அடிமைப்படுத்தும் முதல் ஆயுதமாகும். துணிவே வாழ்வுக்குத் துணை.

"அஞ்சி அஞ்சிச் சாவார் இவர்

அஞ்சாத பொருளில்லைஅவனியிலே"

எனப் பாரதியார் தம் கால மக்களின் பயத்தைப் படம் பிடித்துக் காட்டினார். புதிய ஆத்திசூடியில் அச்சம் தவிர் என்று இளைஞர்க்குக் கட்டளையிட்டார்.

3. சஞ்சலமின்றி இரு

மனம் ஒரு குரங்கு என்பர். மேலும் குழப்பமும் சஞ்சலமும் மனத்தில் இருக்கும்.

"தலையில் இடி விழுந்தாலும் சஞ்சலப்படாதே

எது நிகழினும் நமக்கேன்என்றிரு !

பராசக்தி உளத்தின்படி உலகம் நிகழும்"

எனத் தம் நெஞ்சிற்கு உணர்த்தினார்.

இது எல்லோருக்கான ஒரு கட்டளையே!. அஞ்சுவதுமில்லை அஞ்சவருவதுமில்லை என்பது திருநாவுக்கரசர் அருள்மொழி.

4. "செல்வதைக் கண்டு வருந்துதல் வேண்டா

சென்றது இனி மீளாது. மூடரே! நீர்

எப்போதும் சென்றதையே சிந்தைசெய்து

குமையாதீர் சென்றதனைக் குறித்தல் வேண்டா"

என்றார். சென்றதை மறக்க வேண்டும். சென்றது முடிந்தது. இறந்த காலம் என்ற சொல்லே ஆழமானது. வருங்காலம் பற்றி எண்ணக் கூடாது. நிகழ்காலமே நம் கையில் எனப் பணிபுரிய வேண்டும்.

5. கோபத்தை வென்றிடு

அழுக்காற்றைப் பாவி என்ற வள்ளுவர், சினத்தைச் சேர்ந்தாரைக் கொல்லி என்றார். ஔவையாரும் ஆறுவது சினம் என்றார்.

பாரதியார்,

"சினம் கொள்வார் தம்மைத் தாமே தீயால் சுட்டுச்
செத்திடுவார்"

என்றும்,

"கோபத்தை வென்றிடலே பிறவற்றைத்தான்
கொல்வதற்கு வழியெனநான் குறித்திட்டேனே"

என்றும் கூறியன நல்லுரையாகும்.

6. அன்புசெய்

அன்பே உயிர் நிலை. மலரில் மணம் போல மனிதன் அன்புடையவனாய் இயல்பாக இருக்க வேண்டும். அன்பே கடவுள் எனப் போற்றினார்.

"மானுடரே நீவிர்
என்மதத்தைக் கைக்கொண்மின்
உங்களுக்குத் தொழில் இங்கே அன்பு செய்தல் கண்டீர்"
எனப்பாடினார்.

7. "தன்னைவென்று ஆளுகின்றதிறமை பெறு!"

பிறரைவெல்வது வீரம். தன்னைவெல்வதே மகாவீரம்.

"என்னவரங்கள் பெருமைகள் வெற்றிகள்
எத்தனை மேன்மைகளோ
வென்றால் அவையாவும் பெறுவது சாத்தியமாகும்"

என ஒவ்வொருவரும் தம்மை வெல்லக் கட்டளையிட்டார்.

8. நல்லமனம் பெறு

மனம் தூயதானால் சொல்லும் செயலும் தூய்மையாகும். ஒருவன் உயர்வுக்கும் தாழ்விற்கும் மனமே அடிப்படை.

"முன்றிலில் ஓடுமோர் வண்டியைப் போலன்று
மூன்றுலகம் சூழ்ந்தே
நன்று திரியும் விமானத்தைப் போல் ஒரு
நல்லமனம் படைத்தோம்"

என்றார். எனவே அழுக்காறு, அவா, வெகுளி இல்லாததே நல்லமனம். மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாமென்றார் திருமூலர். எனவே நல்மனமே வாழ்க்கை உயர்விற்குக் காரணமாகும்.

9. தெய்வம் காக்கும் என நம்பு

பாரதியார் கடவுள்பக்தி உடையவர்.
கடவுளர் பலரைப் பற்றிப்பாடியுள்ளார்.

"ஆதிப்பரம்பொருளின் ஊக்கம் –அதை
அன்னைஎனப் பணிதல் ஆக்கம்
நண்ணிய தேவிதனை எங்கள் நாவிலும்
மனத்திலும் நாட்டிடுவோம்"

எனத் திருமகளைச் சரண் அடைய வேண்டும் என்றார். திருவள்ளுவரும் இறைவனடி சேர்தல். தாள்சேர்தல் எனக் குறிப்பதைக் காணலாம்.

10. அமரத்தன்மை எய்து

அறம்,பொருள், இன்பம், வீடு அடைதல் என்பது நூற்பயனாகும். வாழ்வாங்கு வாழ்ந்து இறுதியில் வீடு பெறுவதே நம் குறிக்கோளாக இருக்க வேண்டும். அதைத்தான் பாரதியார் அமரத்தன்மை என்றார்.

"அமரத் தன்மையும் எய்தவும்
இங்கு நாம் பெறலாம் இஃது உணர்வீரே!"

மேலேகூறிய பாரதியாரின் கட்டளைகளை உணர்வோம்! கடைப்பிடிப்போம். அமரத்தன்மை எய்துவோமாக!.

"பொய் புகலேன் புனைந்துரையேன் சத்தியம் சொல்கின்றேன்,
மரணமில்லா பெருவாழ்வு வாழ்ந்திடலாம் கண்டீர்"

என்ற வள்ளலார் வாக்கும் ஒப்பிட்டு நோக்கத்தக்கது.

52. கேள்வி : பாரதியாரின் புதிய ஆத்திசூடி - குறிப்பு வரைக ?

பதில் : தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆத்திசூடி என்னும் குறும்பாவகையில் முதன்முதலில் நீதியை எடுத்துச் சொன்னவர் ஔவைப்பெருமாட்டி ஆவார். தமிழில் சொல்லில் முதலில் வரும் எழுத்தைக் கொண்டு இரண்டே சொற்களில் நீதி சொன்ன புதுமையும், புரட்சியும் தமிழில்தான் உண்டு. அவ்வகையில் ஔவையார் 108 நீதிகளைச் சொல்லியுள்ளார்.

அவரைப் பின்பற்றி பாரதியாரும், பாவேந்தரும், அறிஞர் பலரும் ஆத்திசூடிப் பாடியுள்ளனர். இங்குப் பாரதியாரின் புதிய ஆத்திசூடி பற்றிக் காண்போம். இதில் முதலில்காப்பு என்ற தலைப்பில் பரம்பொருள் வாழ்த்து பாடப்பட்டுள்ளது. கடவுள் ஒருவரே என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். இதில் 110 நீதிமொழிகள் உள்ளன. பெரும்பாலனவை, கட்டளைப் பொருளில் அமைந்துள்ளன. பல உடன்பாட்டிலும், சில எதிர்மறையிலும் கூறப்பட்டுள்ளன.

நாடு அடிமைப்பட்டிருந்த காலம். மக்களுக்கு ஊக்கமூட்ட பாரதியார் பாடியவை பல. காலத்திற்கேற்ப மக்களைத் தட்டியெழுப்ப ஆத்திசூடியாகிய இந்த நூலிலும் பல நீதிகள் புதியனவாய் கூறியுள்ளார்.

அச்சம் தவிர், ஆண்மை தவறேல், உடலினை உறுதி செய், ஒற்றுமை வலிமையாம், கீழோர்க்கு அஞ்சேல், குன்றென நிமிர்ந்து நில், கேட்டினும் துணிந்து நில், கொடுமையை எதிர்த்து நில், சூரரைப்போற்று, தாழ்ந்து நடவேல், தேசத்தைக் காத்தல்செய், தோல்வியில் கலங்கேல், நையப்புடை, போர்த் தொழில்பழகு, மிடிமையில் அழிந்திடேல், ராஜஸம் பயில், ரௌத்திரம் பழகு, வீரியம் பெருக்கு, வெடிப்புறப்பேசு, வையத் தலைமை கொள் முதலியன நாட்டு மக்களுக்கு விழிப்புணர்ச்சியூட்டின.

சோதிடம்தனை இகழ், பேய்களுக்கு அஞ்சேல் என்பன மூடநம்பிக்கையை உணர்த்தி, பகுத்தறிவின் வழி நடக்குமாறு கூறியுள்ளார். கூடித் தொழில்செய், கைத்தொழில் போற்று, நாளெல்லாம் வினைசெய், மேழி போற்று, விதையினைத் தேர்ந்தெடு முதலியனவற்றில் ஒவ்வொருவரும் ஏதேனும் தொழில் செய்து பிழைக்க வழிகாட்டியுள்ளார்.

எண்ணுவது உயர்வு, கல்வியதைக் கைவிடேல், சரித்திரத் தேர்ச்சி கொள், நீதி நூல்பயில், நூலினைப் பகுத்துணர், பாட்டினில் அன்பு செய், பெரிதினும் பெரிது கேள், வானநூல் பயிற்சி கொள், வேதம் புதுமை செய் என்றெல்லாம் கல்வித் தொடர்பான நீதிகளை எடுத்துரைத்துள்ளார்.

ஔவையார் மீதூண் விரும்பேல் என்றார். ஆனால் பாரதியார் "ஊண் மிக விரும்பு" என்றார். தையல்சொல் கேளேல் என்றார் ஔவையார். "தையலை உயர்வு செய்" என்றார் பாரதியார். இங்ஙனம் பாரதியார் காலத்திற்கேற்ப நீதிகளை வலியுறுத்தினார். பாரதியாரின் புதிய ஆத்திசூடியில் பழைய நீதி நூல்கள் கருத்துகளுக்கு முரண்படச் சில கூறப்பட்டுள்ளன. இவை காலமாற்றத்திற்கு ஏற்ப உரைத்தவை. ஒவ்வொருவரும் பாரதியாரின் புதிய ஆத்திசூடி, பாப்பாப்பாட்டு படித்து ஒழுகினாலே போதும்; மனிதன் மாமனிதனாக வாழ முடியும்.

53. கேள்வி : பாரதியாரைப் பற்றிப் பாடி நெகிழ்ந்த பரம்பரையினர் பாடல்களை நினைவூட்டுக ?

பதில் : கவியோகி சுத்தானந்த பாரதியார் நாமக்கல் கவிஞர், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பாவேந்தர் முதலியார் பாரதியாரின் சமகால கவிஞர்கள் ஆவர். "தவம் செய்த தவமாக வந்த தேசிய சிகரம்" என்று கவியோகி எண்ணற்ற பாடல்களைப் பாடியுள்ளார்.

"படிப்பறியா மிக ஏழைக் கிழவ னேனும்
பாரதியின்பாட்டிசைக்கக் கேட்பானாகில்
துடித் தெழுந்து தன்மெலிந்த தோளைத்தட்டி
தொளை மிகுந்த கந்தலாடைசுருக்கிக் கட்டி
எடுத்தெறிய வேணுமிந்தஅடிமைவாழ்வை
இப்பொழுதேஇக்கணமேஎன்றெழுந்து ஆர்த்திட்டு
அடித்துரைத்தே ஆவேசம் கொள்வானென்றால்
தம்பாட்டின்பெருமைசொலயாரேவல்லார்"

என்று நாமக்கல் கவிஞர் பாரதியார் பாட்டின் ஆற்றலைப் பெரிதும் பாராட்டினார்.

"பாட்டுக்கொரு புலவன் பாரதியடா –அவன்
பாட்டைப் பண்ணோடு ஒருவன்பாடினான்அடா!
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேன்அடா–அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாய் அடா!"

என்று கவிமணி அவர்கள் பாரதியார் பாட்டைப் படிப்பறியாத பட்டிக்காட்டான் பாடக்கேட்டுக் கிறுகிறுத்து மகிழ்ந்ததாகப் பாடியுள்ளார்.

பாரதியாருடன் ஒன்பதாண்டுகள் புதுவையில் நெருங்கிப்பழகியவர் பாவேந்தர். தம் பெயரைப் பாரதிதாசன் என வைத்துக் கொண்டவர். சங்ககால மன்னர்கள் அந்நியர் படையெடுப்பிலிருந்து தமிழைச் சங்கம் வைத்தும் வாளேந்தியும் காப்பாற்றினார்கள். புலவர்கள் தமிழைத் தம் இருகரங்களாலும் ஏந்தி வளர்த்தார்கள். ஆனால், இருபதாம் நூற்றாண்டில் யார் காப்பாற்றினார்கள் என்பதற்குப் பாவேந்தர்,

"வாளேந்தும் மன்னர்களும் மானியங்கொள் புலவர்களும் மகிழ்வாய்
அந்நாள்
தோளேந்திக் காத்தநறுந் தமிழ்மொழியைத் தாய்மொழியைஉயிரைஇந்த
நாளேந்தி காக்குநர் யார்? நன்றுளர் யார் எனஅயலார் நகைக்கும்
போழ்தில்
தோளேந்திக் காத்த எழில் சுப்பிரமணிய பாரதியார் நாமம் வாழ்க"

எனப்பாடினார்.

இதிலிருந்து இருபதாம் நூற்றாண்டில் தமிழைக் காத்தவருள் பாரதியார் முதன்மையானவர் என்பது விளங்கும். பிறிதோர் பாடலில் பாவேந்தர்,

"தமிழால் பாரதி தகுதி பெற்றதும்.
பாரதியால் தமிழ் தகுதி பெற்றதும்
என்னென்று சொல்வேன்"

எனப் பாராட்டியுள்ளார்.

இங்ஙனம் சமகாலத்துப் புலவர்களால் பாராட்டப்பட்ட பெருமை பாரதியாருக்கு மட்டுமே கிடைத்தது.

புலவர் பெருமக்களால் பாராட்டிப் பாடப்பெற்றவர்கள் புகழ்மிக்க அமர உலகில் பிறரால் இயக்கப்பெறாது தாமே செல்லும் வானவூர்தியில் அழைத்துச் செல்லும் பெருமையுடையவர்களைப் போன்று உயர்ந்து விளங்குவார்கள். இதனைப் புலவர் உறையூர் முதுகண்ணன் சாத்தனார்,

"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன்ஏவா வானஊர்தி எய்தும் என்ப"

என்று வியந்து பாடியுள்ளார்.

இத்தகைய பெருஞ்சிறப்பு திருவள்ளுவருக்கு உள்ளது போலவே பாரதியாருக்கும் வாய்த்ததாகும்.

54. கேள்வி : பாரதியாரின் புகழைப் பாவேந்தர் எங்ஙனம் பரப்பினார் ?

பதில் : பாவேந்தர் பாரதியாரை நேரில் பார்ப்பதற்கு முன்பே, பாரதியாரின் தேசியப்பாடல்களிலும், இந்தியா இதழிலும் மனத்தைப் பறிகொடுத்தவர். பாவேந்தர் பிறந்தது 1891இல். புதுவையில் பாரதியாரைக் கண்டது 1909 இல், அவருடன் பன்னிரண்டாண்டுகள் பழகியவர். பாரதியார் மறைந்து ஓராண்டிற்குப் பின் தன் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார். தாம் அப்பெயர் கொண்டமைக்கு அவர் கூறியது அயலே வருகிறது.

"நான் பாரதிதாசன் எனப் புனைபெயர் வைத்துக் கொண்டுள்ளேன். அதற்குள்ள காரணம் அப்போது அவர் என் உள்ளத்தில் முதலிடம் பெற்றிருந்ததுதான். சாதிக் கொள்கையை நன்றாக, உண்மையாக எதிர்த்தவர் பாரதியார்தாம், சென்றகாலத்தில் அவரைப்போலச் சாதியை எதிர்த்தவர் எவரையும் நான் கண்டதில்லை. பாரதியார் சாதியை எதிர்த்துப் பணி புரியத் தொடங்கிய பன்னாட்களுக்குப் பின்னரே பெரியார் இயக்கம் தோன்றியது"

திராவிட இயக்கத்தில் பட்டுக்கோட்டை அழகிரிசாமி தோற்றத்திலும், மன உறுதியிலும், இயக்கச் செல்வாக்கிலும் முன்னின்றவர். அவர் பாவேந்தரிடம் பாரதிதாசன் என்னும் பெயரைக் கைவிடுமாறு கேட்டுக்கொண்டும் பாவேந்தர் சற்றும் அசைந்து கொடுத்தாரில்லை.

ஒருமுறை சென்னையில் நாரண.துரைக்கண்ணன் பாவேந்தரைக் கண்டு உரையாடினார். “உங்களுக்கும் பாரதியாருக்கும் உண்டான தொடர்பு உங்களை எப்படிப் பாதித்தது ?" என துரைக்கண்ணன் வினவினார்.

அதற்குப் பாவேந்தர்.

“விபூதி நாமங்களைப் போட்டுக் கொண்டு, பஜனை மடங்களில் பாடியும், ஆடியும் அவலமாகக் காலம் போக்கிக் கொண்டிருந்த என்னை இன்றுள்ள நிலைக்குக் கொண்டு வந்தவர் பாரதியார்தான். பாரதியார் அன்றுள்ள நிலையில் தேச விடுதலையை முதன்மையாகக் கருதினார். இன்று அவர் இருப்பாரேயானால் என்னைப் போலவே முழுக்கச் சமூகச் சீர்திருத்தம் குறித்த கவிதைகளேயே இயற்றியிருப்பார்”

என்றாராம்.

“தமிழரின் உயிர்நிகர் தமிழ்நிலை தாழ்ந்ததால்
இமைதிறவாமல் இருந்தநிலையில்
தமிழகம் தமிழுக்கு தகும்உயர் வளிக்கும்
தலைவனை எண்ணித்தவம் கிடக்கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினான்
செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை,
குவிக்கும் கவிதைக்குயில் இந்நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு
நீடுதுயில் நீக்கப் பாடிவந்தநிலா
காடுகமழும் கற்பூரச்சொற்கோ
கற்பனை ஊற்றாம் கவிதையின் புதையல்
திறம்பாட வந்தமறவன்; புதிய
அறம்பாட வந்தஅறிஞன்; நாட்டிற்
படரும் சாதிப்படைக்கு மருந்து!
மண்டு மதங்கள் அண்டா நெருப்பவன்
அயலார் எதிர்ப்புக்கு அணையா விளக்கு

என்னென்று சொல்வேன்! என்னென்று சொல்வேன்!

தமிழால் பாரதி தகுதி பெற்றதும்

தமிழ் பாரதியால் தகுதி பெற்றதும்''

என்ற வைர வரிகளைப் பாடிப் பாரதியார் புகழைப் பரப்பியதில் முன் நின்றார். இங்ஙனம் பாடப்பட்ட இப்பாடலுக்கு நிகரான பாரதி புகழ்ப்பாடல் வேறெதுவும் இல்லையெனலாம்.

"அந்த நாளில் புதுவையில் தமிழ்ப் பண்டிதர்கள் அமைத்திருந்த கலைக் கழகத்தில் சேர்ந்து தமிழில் எழுதி நான் தீவிரமாகத் தொண்டாற்றிக் கொண்டிருந்தேன். பாரதியாருடைய தொடர்பு என்னுடைய பாநெறியில் ஒரு புதிய போக்கை ஏற்படுத்தியது. நம் கண்ணெதிரில் காணப்படும் மக்களின் தேவைகளை அவர் பாடினார். அது என்னுடைய மனத்தைக் கவர்ந்தது. பிறகே என்னுடைய பாக்கள்அரசியல், சமுதாயம், மொழி ஆகிய பல்வேறு துறைகளில்உள்ள குறைகளை உருப்படியாக எடுத்துக்காட்டத் தலைப்பட்டன. இவ்வகையில் யான் பாரதியாருக்கு மிகவும் கடமைப்பட்டவன்" என்று பாவேந்தர் கூறியிருப்பதை எவரும் மறக்கவியலாது. இங்ஙனம் பாரதியார் தொடர்பில் தன்னிலைமை மாறியது என்பதன் வழியாக பாரதியார் பாடலின் புகழை முழங்கினார்.

55. கேள்வி : பாரதிதாசனைப் பற்றிப் பாரதியார் கூறுவன யாவை ?

பதில் : பாரதியார் தம் நண்பர் வேணுநாயக்கர் வீட்டுத் திருமணத்திற்குச் சென்றார். வேணுநாயக்கர் பாரதிதாசனின் உடற்கல்வி ஆசிரியர். ஆகவே பாரதிதாசனும் அத்திருமணத்திற்குச் சென்றார். அங்கு வீரசுதந்திரம் வேண்டி நின்றார், தொன்று நிகழ்ந்ததனைத்தும் என்னும் பாரதியார் பாடல்களை முழங்கினார். பாரதிதாசன், வெடிக்குரலில் பாடினார். பாரதியாரைப் பாரதிதாசனோ அதுவரை நேரில்பார்த்தில்லை. பாரதியார், பாரதிதாசனை அருகில் அழைத்துத் தோளைத் தட்டிப்பாராட்டினார். அப்போதுதான் பாரதியாரை முதல்முதலாகக் கண்டு நெகிழ்ந்தார். பாரதியார், பாரதிதாசன் சந்திப்புப்பற்றித் தராசு என்ற பகுதியில் உரையாடல் வாயிலாக நயமாக எடுத்துரைத்துள்ளார்.

“தராசு : கவிராயரே ! என்ன விஷயம் கேட்கவந்தீர்?

பாரதிதாசன் : கவிராயராகத் தகுதி பெறமுயற்சி செய்து வருகிறேன்

தராசு : இதுவரை பாடிய பாட்டுண்டானால் சொல்லும்

பாரதிதாசன் : எங்கெங்கு காணினும் சக்தியடா !

தராசு : புலவரே ! தமிழ் யாரிடம் படித்தீர் ?

பாரதிதாசன் : இன்னும் படிக்கவில்லை. இப்போதுதான் ஆரம்பம் செய்கிறேன்.

தராசு : விடாமுயற்சியும், அறிவிலே விடுதலையும், தெய்வபக்தியும் ஏறினால் கவிதையிலே வலிமையேறும்

பாரதிதாசன் : நீரே எமக்குக் குரு

தராசு : எழுக ! நீ புலவன் என்றது

பாரதிதாசனின் சக்திப்பாடலைக் கேட்ட சக்திதாசனாகிய பாரதியார் இதனைப்பலரும் கேட்டு மகிழ விரும்பினார். சுதேசமித்திரன் இதழுக்கு சுப்பிரமணிய பாரதியாரின் கவிதாமண்டலத்தைச் சேர்ந்த கனக சுப்புரத்தினம் எழுதியது என்ற தலைப்பிலே அனுப்பி வைத்தார். இது அந்த இதழில் வெளிவந்தது. இங்ஙனம் பாரதியார், பாரதிதாசன் முதல் சந்திப்பு நடந்தது.

56. கேள்வி : கவிமணியின் கவிதைகளில் பாரதியார் கவிதைகள் ஏற்படுத்திய தாக்கம் என்ன ?

பதில் : திருவள்ளுவரின் பின்வந்த புலவர்களின் படைப்புகளில் திருக்குறளின் பெருமிதத்தைக் காணலாம். அதைப்போலப் பாரதியாரின் சமகாலப் புலவர்களின் பாடல்களிலும், பின்வந்த புலவர் கவிதைகளிலும் பாரதியாரின் விளைவு மாற்றங்கள் உண்டு.

“*ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே– நம்மில்*
ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே”

என்று ஒற்றுமையின் இன்றியமையாமையைப் பாரதியார் வலியுறுத்தினார்.

"ஒற்றுமையாக உழைத்திடுவோம் – நாட்டில்
உற்றதுணைவராய் வாழ்ந்திடுவோம்"

என்பது ஒப்புமையாக விளங்குகிறது.

"கண்ணுக்கு இனியகண்டு – மனத்தைக்
காட்டில் அலையவிட்டு
பண்ணிடும் பூசையாலே–தோழி
பயன் ஒன்றில்லையடி"

என்ற கவிமணியின் பாடல்,

"சிந்தையில் கள்விரும்பிச் சிவசிவ என்பது போல் வந்மேமாதரம்
என்பார் – கிளியே
மனதில் அதனைக்கொள்ளார்"

என்ற பாரதியாரின் கவிதையை நினைவூட்டுகிறது.

"தமிழ்மகள் சொல்லிய சொல் அமிழ்தம் என்போம் என்பதின் எதிரொலியாக "ஔவைக் கிழவி நம் கிழவி அமுதின் இனிய சொற் கிழவி" என்ற கவிமணியின் தொடரில் காணலாம்.

"உடலின் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்

என்பது பாரதியாரின் புதிய ஆத்திசூடியில் வரும் உடலினை உறுதிசெய் என்பதின் சார்பொலியாகும்.

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று
பள்ளுப் பாடுவோமே"

என்று பாரதியார் விடுதலை கிடைக்கும் முன்னரே தொலைநோக்கோடு பாடியுள்ளார்.

இதைப்போலவே கவிமணியும்,

"குடியரசு வேண்டும் சுதந்திரக் கொடி பறக்கவேண்டும்
அடிமைவாழ்வும் இனி உலகில் அறவே ஒழிய வேண்டும்"

என்று பாடினார்.

பாரதியாரின் பாடல்களில் கவிமணி நெஞ்சைப் பறிகொடுத்தவர். பாரதியார் மகாசக்தி பஞ்சகம் பாட, கவிமணி மகாத்மாஞ்சகம் பாடியுள்ளார். பிஜித் தீவில் இந்து ஸ்தீரிகள் என்பது போலக் கவிமணி பிஜித்தீவுத் தமிழருக்கு என்று படைத்துள்ளார். கவிமணியின் நவமணி மாலை என்ற பாடல் பாரதியாரின் பாரதமாதா ரத்தினமாலை என்பதை நினைவுபடுத்துகிறது. இங்ஙனம் பாரதியார் பாடல்களின் தாக்கத்தைக் கவிமணியின் பாடல்களில் படித்து இன்புறலாம். சொற்கள், தொடர்கள் வேறாயினும் இருவரின் கருத்தொற்றுமை காணப்படுகிறது.

கவிமணி உடல் மெலிந்தவர். நலிந்தவர். அமைதியே வடிவானவர். குழந்தைகளைக் கூட அப்பா அம்மா என்று பரிவுடன் பணிந்து அழைப்பார். அடா, அடி, ஏய், என்ற சொற்களைச் சொல்லப் பயந்தவர். ஆனால் என்ன நடந்ததென்றால் பாரதியாரைப் படித்ததும் அவருக்கு ஆவேசம் கரைபுரண்டது. பாட்டுக்கொரு புலவன் பாரதியடா, பாடினானடா, போனேனேயடா, பொறுப்பாயடா என்று பொரிந்து தள்ளிவிட்டார்.

பாரதியார் வழியில் இன்றைய கவிஞர்கள் திகழும் திறத்தை கவியரசர் அனைவரிடமும் ஊறித்ததும்புவதைக் காணலாம்.

"எனக்கு அவனே குரு
அவர் எழுத்தே வேதம்
வார்த்தைகள் சட்டம்
கவிதை சத்தியம்"

என்று கவியரசர் சிற்பி தன் உள்ளம் திறந்து ஓவியமாக வடித்திருக்கிறார். பாரதி தைதி எண். 253" என்ற நெடுங்கவிதை பாரியாரின் அருமையையும் சிற்பி அவர்களின் பெருமையையும் ஒருசேர இணைத்துக் காட்டுவன.

இன்றைய கவிதைகளில் உருவம், உள்ளடக்கம், உத்தி, மொழிநடை, புதுச்சொற்கள், புரட்சிக்கருத்து என்ற நிலைகளில் பாரதியாரின் வெளிச்சம் இன்றைய கவிஞர்களிடம் பளிச்சிடக் காணலாம்.

“பாரதியாம் வாழை பயந்த அடி வாழை பாரதி தாசனென்று பார் உரைக்கும்; இவ்வாழை எண்ணில் அடங்கா இளம்வாழை பெற்றதுண்டு நண்ணி வளர்வாழை தோட்டத்துள் நான் ஒருவன்” என்று கவியரசர் முடியரசன் பாரதியார் பரம்பரைக்கு கோடிட்டுக் காட்டுகின்றார்.

57. கேள்வி : பாரதியாரின் கவிதைத் தாக்கம் நாமக்கல் கவிஞரிடம் எங்ஙனம் விளங்குகிறது ?

பதில் : நாமக்கல் கவிஞர் பாரதியாரைக் காணப் பலமுறை முயன்றார். ஒரு முறைதான் அவ்வாய்ப்பு கிடைத்தது. நாமக்கல் கவிஞரைப் பாடச்சொல்லி பாரதியார் கேட்டு, 'பலே! பாண்டியா நீ கவிஞன்தான்' எனப் பாராட்டினார். இதனை நாமக்கல்கவிஞர் 'என் சரிதை' என்றநூலில் குறிப்பிட்டுள்ளார். பாரதியார் திலகரின் வழிவந்த தீவிரவாதி. நாமக்கல்லார் காந்திய வழிவந்த மிதவாதி. இருப்பினும் கருத்தொற்றுமை இருவர் பாடல்களிலும் உண்டு.

“பாழ்பட்டு நின்றதாமோர் பாரததேசம் தன்னை வாழ்விக்க வந்த மகான் காந்தி”

என்றும்.

“காந்தி சொற்கேட்டார் காண்பார் விடுதலை கணத்தினுள்ளே”

என்றும் பாரதியார், காந்தியடிகளை மாணிக்க வரிகளால் பாராட்டியுள்ளார்.

“காந்திக்கு நிகர்வேறும் உண்டோ– மக்கள்
கண்கண்ட ஒரு தெய்வம் அன்றோ”

என்று நாமக்கல்லார் பாராட்டியுள்ளார்.

“வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ”

என்பது சுதந்திரம் என்ற தலைப்பிலான பாரதியார் பாடல்.

"பொன்னையும் சுகத்தையும் செலவழித் தேனும்
பூரணசுதந்திரம் அடைந்திட வேணும்" என்று நாமக்கல்லார் வழிமொழிந்துள்ளார்.

"சுதந்திரம் சுதந்திரம் சுதந்திரம் ஒன்றே
சுகம் தரும் சுகம் தரும் சுகம் தரும்"

நாமக்கல்லாரின் இப்பாடல் பாரதியாரின்

"என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்"

என்ற பாரதியார் பாட்டிலும் உள்ள கருத்தொற்றுமை காணலாம்.

"வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா
மானம் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்"

என்பதை அடியொற்றி நாமக்கல் கவிஞர்.

"தாயாய் நின்று தரணியைத் தாங்கும்
தாரமாய் வந்து தளர்வைப் போக்கும்
உடன்பிறப் பாதி உறுதுணைபுரியும்
மகளாய்ப் பிறந்து சேவையில் மதிமுகம்"

என்று வழிமொழிந்துள்ளார். பாரதியார் சீட்டுக்கவி எழுதியுள்ளார். நாமக்கல் கவிஞரும் சீட்டுக்கவி பாடியுள்ளார். இங்ஙனம் பாரதியார் கவிதைகளின் செல்வாக்கு நாமக்கல்லார் கவிதைகளில் ஆட்சிசெய்தது.

"சுப்பிரமணிய பாரதியை நினைத்திட்டாலும்
சுதந்திரத்தின் ஆவேசம் சுருக்கென்று ஏறும்
ஒப்பரிய தமிழன்எனும் உவகையூறும்
உள்ளமெல்லாம் துள்ளியெழும் ஊக்கம் உண்டாம்"

என்பது பாரதியாரைப் பற்றிய நாமக்கல் கவிஞரின் வணக்கவுரையாகும்.

58. கேள்வி : புலவர்களில் பாரதியார் புதுமை பூண்டவர் என்ற கருத்தை விரிவாக்குக ?

பதில் : பாரதியார் தம் சமகாலப்புலவர்களிடமிருந்து பல வகைகளில் வேறுபட்டவர். அக்காலப்புலவர்கள் பலர் தாமுண்டு, தம் குடும்பம் உண்டு, தம் வேலையுண்டு என்றே இருந்தனர். பாரதியார் ஒருவர்தாம் நாட்டு விடுதலை, பெண்கள் முன்னேற்றம். சாதி ஒழிப்பு, சமூக சமநிலை முதலியவற்றில் பங்கு கொண்டார். தம் குடும்பத்தை விட நாட்டிடமே பாசம் காட்டினார். அவரைப்போல வறுமையில் வாடிய புலவர் ஒருவருமிலர். பலரின் வேண்டுதலுக்காகவே எட்டையபுரம் அரண்மனையில் சில காலம் இருந்தார். அரண்மனை வாழ்க்கைப் பாரதியார்க்கு அறவே பிடிக்கவில்லை. ஆனால் சில புலவர்களோ அரசனை அண்டிப்பிழைப்பதே தம் மேலான வாழ்வு என எண்ணி வந்தனர். தம் அரசவை அனுபவத்தைக் கவிதாதேவி அருள்வேண்டல் என்ற தலைப்பில் அவர் பின்வருமாறு பாடியுள்ளார்.

“மிடிமைநோய் தீர்ப்பான்வீணர்தம் உலகப்
புன்தொழில் ஒன்றுபோற்றுதும் என்பான்
தென்திசைக் கண்ணொடு சிற்றூர்க்கு இறைவனாம்
திமிங்கில உடலும் சிறிய நாய் அறிவும்
ஓரேழ்பெண்டிரும் உடையதோர் அறிவிலி மகன்
பொருந்திய ஒருவனைத் துணையெனப் புகுந்து
அவன்பணி செய்ய இசைந்தேன்”

இக்கவிதையில் பாரதியாரின் வேதனையும், மனத்தாழ்வும், தன்மான உணர்வும் ததும்பின.

எட்டையபுர மன்னர் அற்பப்பிச்சைக் காசுக்காகத் தம் கவிதைப்புலமையை அடகு வைத்துவிட்டனர். மன்னரை மகிழ்விக்கச் சிற்றின்ப ரசம் ததும்பிய தூது, உலா, யமகம் முதலிய சிற்றின்பக் கவிதைகள் பாடினர். விழலுக்கும் நிழலுக்கும் கவிதைநீரை இரைத்து வீணாக்கினர் எனவருந்தினார். உலக மொழிகளுள் தமிழே உயர்தனிச்

செம்மொழி. இம்மொழியால் காலத்தை வெல்லும் கவிதைபாடாமல் இங்ஙனம் சிற்றின்பக் கவிதை பாடி வீணாவது கண்டு மனம் நொந்தார். இதனைச் சின்ன சங்கரன் கதைவாயிலாக வெளிப்படுத்தியுள்ளார்.

"சாற்றுவதும் காம கலை
சாதிப்பதும் போற்றுவதும் காமன் அடிப்போது"

என்று அவர் காலப்புலவரை எள்ளி நகையாடினார். ஆனால் பாரதியார் மேற்கண்ட புலவர்களைப் போலக் காசுக்காக அண்டி வாழவில்லை. அவருடைய நோக்கமெல்லாம் நாட்டு விடுதலை. மகளிர் முன்னேற்றம், சாதி ஒழிப்பு, தமிழ் மறுமலர்ச்சி என்ற உயர்ந்த குறிக்கோள் கொண்டது. இங்ஙனம் பாரதியார் தம் காலப் புலவர்களிடமிருந்து வேறுபட்ட தன்மான வீறு கொண்ட தேசியக் கவிஞராகத் திகழ்ந்தார்.

59. கேள்வி : பாவேந்தர் பாடல்களில் பாரதியாரின் பாடல்களின் தாக்கம் குறித்து விளக்குக ?

பதில் : பாவேந்தர் 10–11–1930 முதல் பதினாறு மாதங்கள் புதுவைமுரசு என்ற இதழை நடத்தி வந்தார். அதில் பாரதியார் பாடலையே இதழில் முகப்புப்பாடலாக அமைத்தார்.

"ஏழையென்றும் அடிமையென்றும் எவனும் இல்லை சாதியில்
இழிவுகொண்டமனிதர் என்பது இந்தியாவில் இல்லையே
வாழி கல்வி செல்வம் எய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒருநிகர் சமானமாக வாழ்வமே!"

இப்பாடலின் மாற்றொலியைப் பின்வரும் பாவேந்தரின் பாடலில் காணலாம்.

"சாதி ஒழித்திடல்ஒன்று– நல்ல
தமிழ்வளர்த்தல் மற்றொன்று
பாதியைநாடு மறந்தால்– மற்றப்
பாதி துலங்குவது இல்லை
சாதி களைந்திட்டஏரி– நல்ல
தண்டமிழ்நீரினை ஏற்கும்
சாதிப்பிணிப்பற்ற தோளே

நல்லவாளினைத் தூக்கும்

என்றுரைப்பார் என்னிடத்தில்– அவர் தந்த

இன்பவுரைகள் என் காதில்

இன்றும் மறைந்திடவில்லை–நான்

இன்றும் இருப்பதனாலே"

என்பது பாவேந்தரின் உருக்கமாகும்.

பாரதியார் காலத்தில் பாரதியார் கவிதாமண்டலம் என்ற பெயரில் புலவர்கள் பலர் இடம்பெற்றனர். இடம் பெற்ற பிறரை விடப் பாரதியாரின் சொல்லழகு, புதுமை வேட்கை, சீர்திருத்தம் முதலியன பாவேந்தரிடமே மிகுதியாகக் காணப்பட்டது. இதனை,

"பாடலில் பலமுறை பழநடை என்பதோர்

காடு முழுதும் கண்டபின் கடைசியாய்

சுப்பிரமணிய பாரதி தோன்றி என்

பாட்டுக்குப் புதுமுறை

புதுநடை காட்டினார் "

"சாதியில்லை தம்பி – மக்கள்

தாழ்வுஉயர்வும் இல்லை"

என்ற ஏற்றப்பாட்டிலும்

"வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத்

தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி"

என்ற பெண் குழந்தை தாலாட்டிலும் பாடப்பட்ட கருத்துகள்

"சாதிகள் இல்லையடி பாப்பா–குலத்

தாழ்ச்சிஉயர்ச்சி சொலல் பாவம்"

என்ற பாரதியார் பாடலின் எதிரொலியாகும்.

பாரதியார் பெண்மை என்ற தலைப்பில்

"நூற்றிரண்டு மலைகளைச் சாடுவோம்
நுண்ணிடைப் பெண்ணொருத்தி பார்வையாலே"
என்று பாடியுள்ளார்.
இக்கருத்தாக்கம்

"கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர் கடுகாம்"

என்ற புரட்சிக் கவிஞரின் வரிகளில் காணலாம்.

பாரதிதாசன் ஏற்றப்பாட்டில் பெண்ணுக்குக் கூறியிருக்கும் அறிவுரையில்

"தனித்து வரும்போது– கெட்ட
தறுதலை கண்வைத்தால்
இனிக்க நலம்கூறு பெண்ணே
இல்லாவிடில் தாக்கு" என்றார்.

இப்பாடல் கருத்து

"பாதகம் செய்பவரைக் கண்டால்– நாம்
பயங்கொள்ளல் ஆகாது பாப்பா
மோதி மிதித்துவிடு –அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா "

என்பதை வழிமொழிந்துள்ளது.

மேலும் பாரதியாரின் புதிய ஆத்திசூடியில் "அச்சம் தவிர்" என்பது ஒன்றாகும்.

இதனை மனத்தில் கொண்ட பாவேந்தர்.

"அச்சம் தவிர்ந்தது வாழ்வு– நல்
லன்பில் விளைவது வாழ்வு"

என்று விளக்கிப்பாடியுள்ளார்.

"தமிழுக்கும் அமுதென்று பேர்"
– என்றார் பாவேந்தர்.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"

என்றார் பாரதியார்.

இங்ஙனம் பாரதியாரின் பாடல் நிலவொளி வீசி மிளிர்வதைக் கதிரொளியாகப் பாவேந்தரின் பாடல்கள் பலவற்றில் காணலாம்.

பாவேந்தரின் பொதுவுடைமை ஈர்ப்புக்குப் பாரதியாரின் பாடல்களே காரணம் என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

"பாரதி பாட்டில் பற்றிய பொதுவுடைமைத் தீ
என்றன்பாட்டு நெய்யில் வார்த்துக்
கொழுந்து விட்டெரிந்து தொழிலாளரிடத்தும்
உழைப்பாளரிடத்தும் உணர்வில் உணர்ச்சியில்
மலர்ந்து படர்ந்ததை மறுப்பவர் யாரே?"

என்ற பாவேந்தரின் வாக்குமூலமே இதற்குச் சான்றாகும். இங்ஙனம் பாரதியாரின் தொடர்பு. பாடல்கள் ஆகியன பாவேந்தரிடத்தே பெரும் மாற்றத்தையும், ஏற்றத்தையும் உண்டாக்கின.

60. கேள்வி : பழங்காலப் புலவர்கள் பற்றிப் பாரதியார் கூறியன யாவை ?

பதில் : பாரதியார் பழங்காலப் புலவர்கள் மீது அளவற்ற பற்றுக்கொண்டவர். திருவள்ளுவர், இளங்கோ, கம்பர் முதலியோரைப் பெரிதும் மதித்தவர். அந்த மாபெரும் புலவர்களின் நூல்களைப் பற்றியும் பல்வேறு இடங்களில் புகழ்ந்து போற்றிப் பாராட்டியுள்ளார்.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை"

இப்பாடலை, யாமறிந்த புலவரிலே திருவள்ளுவர்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை. உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை என்று தனித்தனியே இளங்கோவடிகளுக்கும் கம்பருக்கும் பிரித்துப் பாட வேண்டும்.

"கல்வி சிறந்த தமிழ்நாடு – புகழ்க்கம்பன் பிறந்த தமிழ்நாடு"

என்றும்,

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்றும்

"நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு"

என்றும் பாராட்டியுள்ளார்

"சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்,
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்"
சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும்
திருக்குறள் உறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்
எல்லையொன்றின்மைஎனும் பொருள் அதனைக்
கம்பன்குறிகளால் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும் முன்பு நான்தமிழ்ச்
சாதியை அமரத் தன்மைவாய்ந்தது என்று
உறுதிகொண்டிருந்தேன்"

என்பது பாரதியார் உறுதிமொழி.

இதனால் மேற்கண்ட மூவராலும், அவர்களின் நூல்களாலும் என்றும் அழியாத மொழியாகத் தமிழ் விளங்கும் என்பது பாரதியாரின் நம்பிக்கையாகும். அவரது நம்பிக்கை முற்றிலும் உண்மை. பிறநாட்டார் வணக்கம் செய்தமைக்குத் திருக்குறள் சான்று. இறவாத புதுப்புது நூல் படைக்க வேண்டும் என்பதற்குச் சிலப்பதிகாரம் சான்று. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழில் மொழி பெயர்த்திடுதல் வேண்டும் என்பதற்குக் கம்பராமாயணம் சான்று.

"கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்
சேரன்தம்பி சிலம்பை இசைத்ததும்
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்"

என்று போற்றிப்பாடியன நம் மரபு காக்கும் மாண்புடையன.

"வசிட்டருக்கும் இராமருக்கும் பின்னொரு
வள்ளுவர்க்கும் முன்வாய்த்திட்ட மாதர்போல்
பசித்தொராயிரம் ஆண்டு தவம் செய்து
பார்க்கினும் பெறல் சாலஅரிது காண்"

என்றொரு பாடலும் உண்டு. அதாவது அருந்ததி, சீதை, வாசுகி முதலியோரைப் பாராட்டி[illegible] நல்ல மனைவி அமைவது அரிது எனப் புலப்படுத்தினார்.

"பொருளிலார்க்கு இவ்வுலகில்லை"

என்ற நம் புலவர் தம் மொழி, பொய்ம்மொழியன்று காண் என்பதும் காணலாம்.

1909 இல் பாரதியின் தேசிய கீதங்கள் என்பது வெளியிடப்பட்டது. அந்நூலின் முகவரி இறுதியில் பாரதியார்,

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்"

என்பது வேதமாகலின் எனத் திருக்குறளை மேன்மைப் படுத்தினார். இம்மூவரைப் போலவே ஔவையாரையும் பாரதியார் பெரிதும் மதித்துப் பாராட்டியுள்ளார்.

"சாதி இரண்டொழிய வேறில்லை என்றே
தமிழ்மகள் சொல்லிய சொல் அமிழ்தம் என்போம்"

என்று ஔவையாரைத் தமிழ்மகள் எனப் பாராட்டினார்.

இங்ஙனம் பண்டைப் புலவர்களைப் பாரதியார் பல்வேறு இடங்களில் நினைந்து நினைந்து நெகிழ்ந்து பாராட்டியுள்ளார்.

61. கேள்வி : திருவள்ளுவரின் தெளிவு சிந்தனை குறித்துப் பாரதியார் எங்ஙனம் விளக்குகிறார் ?

பதில் : ஒரு கருத்தை வெளியிடும் முன்னர், சொல்பவர்க்கு அக்கருத்தில் தெளிவு வேண்டும். அப்போதுதான் படிப்பவர்க்கும், கேட்பவர்க்கும் தெளிவு பிறக்கும். பொதுவாக வேடிக்கையாக ஒன்று சொல்வார்கள். கேட்பதற்கு விளங்க வில்லையானால் அது தத்துவம். பேசுபவர்க்கு விளங்கவில்லையானால் அது மகாதத்துவம். திருவள்ளுவரின் திருக்குறளில் மயக்கமோ, குழப்பமோ காண இயலாது. ஒவ்வொரு கருத்தும் தெளிவான சிந்தனையிலிருந்து பிறந்ததாகும்.

திருக்குறட்பாக்கள் திருவள்ளுவரின் தெளிவான, திட்டவட்டமான சிந்தனையை எண்ணவோட்டத்தை உணர்த்துகின்றன. புலவரின் உள்ளத்தில் ஒளியாகிய தெளிவு இருந்தால்தான், வெளிப்படுத்தும் கருத்தும் தெளிவாக இருக்கும்

இதனை,

“உள்ளத்தில் உண்மை ஒளி உண்டயாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்”

என்றார் பாரதியார். திருக்குறளின் தெளிவை உணர்ந்தே பாரதியார் இங்ஙனம் பாடினார் எனலாம்.

“நல்லன எண்ணல் வேண்டும்
எண்ணிய முடிதல் வேண்டும்”

“உலகத்தார்க்குப் பொருள் விளங்காதபடி இலக்கியம் செய்வோன் அந்தச் சக்தியைக் கரித்துணியாலே மூடுகிறான். இலக்கியத்திற்குத் தெளிவும் உண்மையுமே உயிரெனலாம். இவ்வுயிருடைய வாக்கே அருள்வாக்கென்று சொல்லப்படும்”

என்று பாரதியார் தெளிவு பற்றிக் கூறியன நெஞ்சில் நிறுத்த வேண்டும்.

"தெளிவுறவே அறிந்திடுதல்! தெளிவுறவே மொழிந்திடுதல் சிந்திப்பார்க்கே என்றும் எதுகை மோனைகளுக்காகச் சொல்லவந்த பொருளை மாற்றிச் சொல்லும் பண்டிதன் சரசுவதி கடாட்சத்தை இழந்து விடுகிறான்"

என்றும் கூறியுள்ளார்.

"திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்"

என பாரதியார் வேண்டினார்.

62. கேள்வி : திருவள்ளுவரின் உறுதி குறித்த பாரதியார் பார்வை யாது ?

பதில் : பாவலர் ஒருவரின் பண்புகள் பல. அவற்றுள் திண்மை என்னும் உறுதிப்பாடு மிக அவசியம். தாம் உணர்த்தவரும் செய்தியைத் திட்டவட்டாக அறுதியிட்டுக் கூறவேண்டும். அப்போது அக்கருத்து வலிமையும், பொலிவையும் பெறும். இவ்வகையில் உறுதி வகையில் உரைத்த கருத்துகள் பல.

63. கேள்வி : வள்ளலாரின் சன்மார்க்க நெறி பற்றிப் பாரதியாரின் எண்ணம் யாது?

பதில் : தன்னைப் போல் பிறரை நேசித்தல் சன்மார்க்கமாகும். ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான் என்பார் திருவள்ளுவர். ஒத்தது அறிந்து ஒப்புரவு செய்பவன் சன்மார்க்கியாவான். எல்லா உயிர்களையும் நேசிப்பவன் சன்மார்க்கியாவான்.

இந்தியா, சாதி வேறுபாடற்ற, சமயப் பகையற்ற, வர்க்கக் கொடுமையற்ற ஒரு புதிய உலகிற்கு இந்தியா தலைமை தாங்கும். அதற்குத் தமிழகம் வழிகாட்டும் என்று பாரதியார் திடமாக நம்பினார். அதற்கு அவர் கூறியன பின்வருமாறு :

"சிதம்பரம் கோயிலுக்குள்ளே நடராஜாவுக்கு ஒரு சந்நதி, பெருமாளுக்கு ஒரு சந்நதி, ஸ்ரீரங்கத்திலே பெருமாளுக்குத் துருக்கப் பெண்ணைத் தேவியாக்கி, துலுக்க நாச்சியார் என்று பெயர் கூறி வணங்குகிறார்கள். எம்மதமும் சம்மதம் என்றார் இராமலிங்கசுவாமி. உலகத்திலுள்ள மதபேதங்களையெல்லாம் வேருடன் களைந்து, சர்வ சமயக் கொள்கையை நிலைநாட்ட வேண்டுமானால் அதற்குத் தமிழ்நாடே சரியான களம்" என்றார்.

"இராமலிங்க சுவாமிகளும், சுதேசமித்தரன் சுப்பிரமணி அய்யரும் இவர்களைப் போன்ற வேறு சில மகான்களும் தமிழ்நாட்டில் புதிய விழிப்புக்கு ஆதிகர்த்தாக்களாக விளங்கினர்" என்று பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் தான் இத்தகைய புரட்சி தொடங்க வேண்டும். அதற்கு நம் முன்னோர் வழி காட்டியுள்ளனர் எனப் பாரதியார் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். ஏற்றத்தாழ்வற்றநிலை சமத்துவமாகும். எல்லோருக்கும் எல்லாம் என்பது சம தருமமாகும். இதுதான் சன்மார்க்கம். இதனைப் பொதுவுடைமை என்ற புதிய சொல்லாட்சியிலே பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.

வள்ளலாரின் எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையை அடியொற்றியே, ஏசு, அல்லா, புத்தர் என எல்லாச் சமயத்தையும் போற்றிப் பாடினார். முன்னோர் மொழி பொருளைப் பொன்னே போல் போற்றுதல் என்பது பாரதியாரின் கொள்கைகளுள் தலைமையானதாகும்.

"களக்கமறப் பொது நடனம் நான் கண்டுகொண்ட தருணம்" என்ற வள்ளலார் பாடலில் ஒரு சில சொற்களைத் திருத்தித் தம் கால நடைமுறைக்காக அரசியல் வாழ்வுக்குப் பயன்படுத்திக் கொண்டார். பாரதியாரின் கொஞ்சம் திருத்திய வள்ளலார் பாடல்:

"களக்கமுறும் மார்லிநடம் கண்டு கொண்டதருணம்
கடைச் சிறியேன் உளம்பூத்துக் காய்த்ததொரு கனிதான்
விளக்கமுறப் பழுத்திடுமோ? வெம்பி விழுந்திடுமோ!
வெம்பாது வீழினும் என்றன் கரத்தில் அகப்படுமோ!

வளர்த்தபழம் கர்சனென்றகுரங்கு கவர்ந்திடுமோ!

மற்றிங்கன் ஆட்சிசெயும் அணில் கடித்திடுமோ!'

அணிலைப் புதிய பாத்திரமாகப் படைத்து விட்டார். வள்ளலார் கருத்தை மட்டும் அப்படியே பின்பற்றினார். இங்ஙனம் பாரதியார், வள்ளலாரின் பாடல்களுக்குத் தன்மனத்தைப் பறிகொடுத்தார்.

"களக்கமுறயான்பெற்றிங் குண்ணுவேனோ? அல்லால்

தொண்டைவிக்குமோ! எதும் சொல்லரிய தாமோ!"

இப்பாரதியார் பாடலில் பொது நடம் என்பதை மார்லிநடம் எனவும் களக்கமற என்பதை களக்கமுற எனவும் மாற்றி அமைத்துள்ளார். வள்ளலார் வைத்த தெய்வத்தைப் பாரதியார் மந்திரியான மார்லி வைத்தார். மாயை வைத்த இடத்தில் கொடுங்கோலனான இராசனான வைசிராயை வைத்தார்.

64. கேள்வி : ஆழ்வார் பாடல்களில் பாரதியார் ஆர்வம் எத்தகையது ?

பதில் : ஆழ்வார்கள் இறை உண்மையை நன்குணர்ந்தவர்கள். இவர்கள் எம்பெருமானின் மங்கல குணங்களில் ஆழங்கால் பட்டவர்கள். பாரதியார் முன்னோர் மொழி பொருளைப் பொன்னே போல் போற்றியவர். ஆழ்வார் பாடல்களின் செல்வாக்கு இவரிடத்தே உண்டு.

கண்ணாலம் என்பது மக்களின் வழக்குச் சொல். பெரியாழ்வார் யசோதை கண்ணனிடம் கூறுவதாக, "உனக்குக் கண்ணாலம் செய்ய" என்று பாடியுள்ளார்.

இவ்வழக்குச் சொல்லைப் பெரியாழ்வாரைப் போலவே பாரதியாரும்,

"பிறன் கண்ணாலம் செய்து விட்ட பெண்ணை

நீ கண்ணால் பார்ப்பதும் தகுமோ?"

எனக் கையாண்டுள்ளார்.

"மற்றுமோர் தெய்வமுண்டோ?
மதியிலா மானிடர்கள்
உற்றபோதன்றி நீங்கள்
ஒருவன் என்று உணரமாட்டீர்"

என்று தொண்டரடிப் பொடியாழ்வார் கண்ணன் ஒருவனே தெய்வம் என்றார்.

இப்பாடலின் மாற்றொலியாக

"ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்"

என்றும்,

"மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கும் மதியிலிகாள்"

என்றும் பாடியுள்ளார்.

"கண்ணன் திருவடி எண்ணுக மனமே
திண்ணம் அழியா – வண்ணம் தருமே"

என்ற பாரதியார் பாடல்

"கண்ணன் கழலினை – நண்ணும் மனமுடையீர்
எண்ணும் திருநாமம் – திண்ணம் நாரணனே"

என்னும் நம்மாழ்வார் பாசுரத்தை எதிரொலிக்கிறது.

"பிறந்தது மறக்குலத்தில் – அவன்
பேதமற வளர்ந்தது இடைக்குலத்தில்"

என்று கண்ணன் பாட்டில் "என் தந்தை கண்ணன்" என்ற தலைப்பில் பாடியுள்ளார்.

இது,

"ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓர் இரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்துவளர"

என்றும் ஆண்டாள் பாடலை வழிமொழிந்துள்ளது.

இங்ஙனம் பாரதியார் ஆழ்வார் பாடல்களில் ஆழங்கால்பட்டவர் என்பதையும், அப்பாசுரங்களின் எண்ணம் இவரின் பாடல்களில் எதிரொலிக்கின்றன என்பதையும் அறியலாம்.

65. கேள்வி : பாரதியார் குறித்து நாவலர் சோமசுந்தர பாரதியார் நினைவு கூர்வது யாது ?

பதில் : "பாரதியைப் பற்றி நண்பர்கள்" என்ற நூலில் பாரதியாரின் நண்பர்கள் பற்றியும் அவர்கள் மொழிந்தவை பற்றியும் அறியலாம். இதனைத் தொகுத்து வெளியிட்டவர் பாரதியறிஞர் ரா.அ.பத்மநாபன் ஆவார். அந்நூலில் பத்மநாபன் அவர்கள் பாரதியாரைப் பற்றி நாவலர் சோமசுந்தர பாரதியார் நினைவு கூறும் ஒரு நிகழ்ச்சியை இடம்பெறச் செய்துள்ளார்.

"பாரதியார் புதுவையில் இருந்த காலம். இந்து பத்திரிகையில் நான் **"Bharathi greatest living poet"** வாழும் கவிஞர்களுள் தலைமையானவர் வரகவி பாரதியார் என்ற பொருளில் ஒரு கடிதம் எழுதியிருந்தேன். 1910 என்று ஞாபகம். பாரதியார் புதுவையிலிருந்து திரும்பியதும் நேரே கடையம் போகிறவழியில் மதுரை வந்தார். உடையளித்து உணவளித்தேன். உண்டபின் பாரதியார் மதுரையைச் சுற்றிப் பார்த்து வரச் சென்றார். திரும்பி வந்தபோது ஜரிகை மேல் வேட்டி இருக்கவில்லை. இதைப்பற்றிக் கேட்டபோது. போடா! போ! உன் வீட்டுக்கு வெளியேவந்து பார். அவன் கிடப்பதை என்றார்.

உயிருள்ள கவிகளில் முதல்வன் என்று நீ ஒருத்தன் தானே எழுதினாய் என்று சொல்லி என்னைப் பாராட்டினார். என்னடா ஒரு கவிதை கூட பாட மாட்டேன் என்கிறாய் என்று என்னைச் சீண்டினார்.

என் அகம்பாவம் உனக்குத் தெரியுமே! நான் ஒருபோதும் இரண்டாவது இடம் பெறவிரும்பமாட்டேன். நீ இருக்கும் வரையில் கவிதையில் எனக்கு முதலிடம் கிடைக்காது என்றேன்.

எட்டையபுரத்தில் பாரதியாரின் இளமைக் கால நண்பராக விளங்கியவர் நாவலர் சோமசுந்தர பாரதியாவார். இந்த இரு நண்பர்களும் உள்ளங்களைத் திறந்து காட்டும் அரிய நினைவு நிகழ்ச்சியாகும்.

66. கேள்வி : பாரதியாரின் முதல் திறனாய்வாளர் யார் ? பாரதியாரை முதன் முதலில் மகாகவி என அழைத்தது யார் ?

பதில் : பாரதியாரை முதன்முதலில் மகாகவி என அழைத்தவர் சுவாமி விபுலானந்தர். அவரே பாரதியாரின் முதல் திறனாய்வாளர் ஆவார். பேரறிவுப் பெட்டகமாகத் திகழ்ந்த மயில்வாகனன் இராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்த பின் சுவாமி விபுலானந்தர் ஆனார். இவரின் யாழ்நூல் தன்னிகரற்றது.

1925 இல் திருகோணமலையில் இராமகிருஷ்ண மிஷின் மடம் நிறுவப்பட்டது. அங்குள்ள இந்துக்கல்லூரியில் மாணவர்களைப் பாரதியார் பாடல்களைப் படிக்கச் செய்தார். ஆழ்வார் பாடல்களைப் புகழ்பெறும் படிச் செய்த எம்பெருமானார் போல் பாரதியார் கவிதைகளை எடுத்துக்காட்ட மனிதர்கள் இல்லையே என வ.வே.சு. ஐயர் புதுச்சேரி வாழ்க்கையில் (1910–1918) வேதனைப்பட்டார். அவ்வேதனையைப் போக்கியவர் சிலர் உண்டு.

சுவாமி விபுலானந்தர் பாரத மாதா, கண்ணன், பராசக்தி, பாரதவீரன், பாமரமக்கள், குமரவேள் என்று ஆறு நோக்கில் பாரதியார் பாடல்களைத் திறனாய்வு செய்துள்ளார். 1925 இல் மறுமலர்ச்சிக்குப் பூபாளம் பாடிய மகாகவி பாரதியார் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றி இலங்கையில் பாரதியார் புகழ் பரப்பியுள்ளார். இலங்கையில் வெளிவந்த விவேகானந்தன் என்ற இதழில் பாரதியார் கவிதைகள் பற்றி ஆய்வுக் கட்டுரைகள் எழுதினார். 1926 இல் இவரது திறனாய்வுக் கட்டுரைகள் இரண்டு தொகுதிகளாக வெளி வந்துள்ளன. இதில் பாரதியாரைத் தமிழ்

செய்த தவப்பயனாய் வந்தவர் என்று பாராட்டினார். 04.10. 1931 இல் வெளி வந்த இந்தியா என்ற வாரப் பதிப்பில் பாரதியார் கவிநயம் என்னும் கட்டுரையில் தமிழ் செய்த ஓராயிர வருடத் தவம் எனப் பரவினார். 'இளங்கோவடிகள், கம்பர் என்னும் மலர்களைத் தந்த தெய்வத்திரு ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர் வாராது வந்த செல்வத்தைப் போலப் பாரதியார் என்ற மலரை அளித்தார்' எனக் குறிப்பிட்டுள்ளார். இவரது பாரதியார் பற்றிய கட்டுரைகள் 56 ஆண்டுகளுக்குப்பின் 1982 இல் அறிஞர்கள் பார்வையில் பாரதியார் என்னும் தொகுப்பு நூலாக வெளிவந்தது.

'கண்ணன் பாட்டை' நெஞ்சினை உருக்கும் சீர்மைசான்ற கண்ணன் பாட்டு' எனக் குறிப்பிட்டதோடு 'கற்றறிந்தார் ஏத்துவது கலித்தொகை மாத்திரமன்று கண்ணன் பாட்டும்' என்று துணிந்து கூறியவர் விபுலானந்த அடிகள்.

காணி நிலம் வேண்டும் என்ற பாடலோடு ஐரிஷ் கவிஞர் ஈட்சு, ஆங்கில எழுத்தாளர் எச்.பெல்லாக் எழுதிய கவிதைகளை ஒப்பீடு செய்து தூணில் ? அழகியதாய் என்ற பகுதியைச் சிந்தனை உள்ளுறை உணர்ச்சிக்கு முதலியன ஒத்துள்ளதாக விபுலானந்தர் அடிகள் எழுதினார்.

தமிழ் மொழிக்குப் புத்தெழுச்சி, புதிய நடை, புதிய வழி, புதிய நோக்கு முதலானவற்றை வழங்கிய மகாகவி பாரதியார், தமிழ்ப் புலவர் மரபை ஏற்றிப் போற்றியவர்.

மகாகவியை விடிவெள்ளியாக, அடிப்படையிலே ஒரு சமயநெறிக் கவிஞராக, ஏழைகளிடம் – தாழ்த்தப்பட்டவர்களிடம் எல்லையற்ற அன்பு கொண்டவராக வருணிக்கின்றார். பழந்தமிழ் இனிய இலக்கியத்தின் உள்ளங் கவரும் பாடல்களைப் போன்றவற்றைக் கண்ணன் பாட்டிலே காண்கிறோம் என்று நினைவுறுத்துகின்றார். பழந்தமிழ் இலக்கியத்தில், உள்ள கொற்றவைத் துதிப் பாடல்களைக் காட்டிலும் பாரதியாரின் சக்திப் பாடல்கள் சிறந்தன எனச் சாற்றுகின்றார். பாரதியின் நெஞ்சையள்ளும் இன்னிசைப் பாடல்களும், தேசபக்திப் பாடல்களின் கம்பீரத் தொனியும் மக்களைக் கவர்ந்தன என்றும் உணர்த்துகின்றார். பாரதி, மானுடம்

முழுவதையும் ஒரு காட்சியாகக் காண்பவர். வடக்கு–தெற்கு, பிராமணர்–தாழ்த்தப்பட்டவர், படித்தவர்–படிக்காதவர் ஆகியோரை ஆரத்தழுவும் உலகக் கவிஞர் பாரதி. வாழ்க்கையைப் பற்றிய அவருடைய ஆரோக்கியமான பார்வை உலகம் தழுவியது என்றும் விளக்குகிறார் விபுலாநந்தர்.

பழமையில் வேரூன்றிப் புதுவையில் பூத்துக் குலுங்கும் தரு மகாகவி பாரதியார் என சுவாமிகள் அடிக்கடிக் கூறி வருவாராம்.

'தமிழ் மக்கள் பாரதியார் கண்களைக் கொண்டு உலகத்தைப் பார்க்கட்டும், குறுகிய உட்குழு மனப்பான்மையிலிருந்தும், அற்பச் சமூகச் சம்பிரதாயங்களிருந்தும் விடுபட்டு மேனோக்கி எழட்டும், ஒழுக்கம், அழகு, உண்மை முதலான அனைத்திற்கும் மூலதனமான தெய்வீக உணர்விற்கு அழைத்துச் செல்லும் பாதையில் முன்னேறட்டும்' என்று பாரதியாரைப் பின்பற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழக 1932 ஆம் ஆண்டைய ஆய்விதழில் அழைப்பு விடுத்தார். சுவாமி விபுலானந்தர் பாரதியார் புகழ் பரப்பியவருள் முதலாமவர் என்பதையும், அவர்தாம் முதன்முதலில் பாரதியாரை மகாகவி என அழைத்த பெருமைக்குரியவர் என்பதையும் வலியுறுத்துவது நமது பொறுப்பாகும்.

67. கேள்வி : பாரதியார் குறித்து வ.ரா. அவர்கள் நினைவு கூறும் நிகழ்ச்சி யாது ?

பதில் : வ.ரா. அவர்கள் மகாகவி பாரதியார் என்றோர் அருமையான நூல் எழுதியுள்ளார். அதில் பாரதியாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், அவருடன் பழகிய நாள்களில் உண்டான நிகழ்ச்சிகள் முதலியவற்றைத் தம் நூலில் பதிவு செய்துள்ளார். ஒரு சமயம் பாரதியாரும், வ.ரா. அவர்களும் சீனிவாசச்சாரியாரின் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். போகிற வழியில் ஒரு பையன் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு ஔவையாரின் 'இளமையில் கல்' என்ற வரியைப் படிப்பது கேட்டது. உடனே பாரதியார், முதுமையில் மண் என்றார். இதைக் கேட்ட வ.ரா. வியந்து போனார். திகைத்து நின்ற வ.ரா. விடம் பாரதியார் விளக்கம் கூறினார்.

"ஓய்! உமக்குத் தர்க்கசாத்திரப் பயிற்சி இல்லை போலிருக்கிறது. இளமையிலே கல்லாயிருப்பவன், முதுமையில் கவனிப்பாரற்ற மண்ணாவது நிச்சயம். நமது மூதாதைகள் இளமையில் கல்லாகவும், முதுமையில் மண்ணாகவும் இருந்திருந்து போய் விட்டார்கள். இளமையிலேயே நமது குழந்தைகள் கற்றிருந்தால் முதுமையில் மண்ணாக மாட்டார்கள். உலகத்தார் அவர்களை மதிப்பார்கள். பின் சந்ததியார்கள் போற்றுவார்கள். இல்லாவிட்டால் பின் சந்ததியார்கள் தூற்றுவார்கள்"

இங்ஙனம் பாரதியார் தர்க்கநெறி வழியிலாக இளமையில் கல், முதுமையில் மண் என்பதை விளக்கியது கேட்ட வ.ரா. இவரல்லவோ மேதை என எண்ணி வியந்தாராம். காரண காரியத் தொடர்புடன் உடனுக்குடன் பேசுவதில் பாரதியார் தலைசிறந்தவர் என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஓர் எடுத்துக்காட்டாகும்.

68. கேள்வி : பாரதியாரின் தமிழ்க்கொடை பற்றிய அறிஞர் வையாபுரிப் பிள்ளையின் மதிப்பீடு யாது?

பதில் : தமிழறிஞருள் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை குறிப்பிடத்தகுந்தவர். அவருடைய தமிழ்ச்சுடர்மணிகள் என்ற நூல் ஒப்பற்றதாகும். அதில் பாரதியாரின் தமிழ் பற்றி ஆராய்ந்து குறிப்பிட்டுள்ளார்.

"பாரதியார் தமிழ் தற்காலத் தமிழ், தினந்தோறும் நாம் பேசும் தமிழ், உயிராற்றல் நிரம்பியிருக்கும் தமிழ், நெருநல், இஞ்ஞான்றும், பிறாண்டு, அற்றேல், அஃதாக, முதலிய பண்டைக் காலத்துச் சொற்களும் தொடர்களும் இவர் வசனத்தில் இல்லை. பாடல்களிலும் இல்லை. வழக்கொழிந்த சொற்களை இவர் அறியாதவரல்லர். ஆனால் அவைகளைத் தம் நூலில் இவர் வழங்கியதே இல்லை. தற்காலத்துச் சொற்களையே இவர் எடுத்தாளுவார். இச்சொற்கள் எளியவையாயிருக்கும். எளிமையோடும் நேர்மையும் இவர் தமிழிலே காணப்படுகின்றது. தாம் சொல்லக் கருதியவற்றைச் சொல்லாகிய திரையிட்டு மறைத்து விடாது நேர்படக் கூறுவதே இவரது இயல்பு. இவர் கருதும் பொருளுக்கும் கற்பவர் மனத்திற்கும் பாய்ந்து விடுகின்றது.

புதுமைப் பெண்ணைப்பற்றிக் கூறும்போது. 'நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வையும் உடையவள் அவள் என்கிறார். இச்செய்யுளின் அடி இவரது தமிழின் இயல்பையும் நன்கு தெரிவிக்கின்றது". பாரதியார் நூல்களைப் படிக்க அகராதி தேவையில்லை. மற்றவர் விளக்கமும் வேண்டியதில்லை. சுவை புதிது, பொருள்புதிது, வளம் புதிது, சொல்புதிது, சோதிமிக்கக் கவிதை. எந்நாளும் அழியாத மாக்கவிதை என்று உலகோர் பாராட்டும் வகையில் பாரதியார் பாடியுள்ளார்.

69. கேள்வி : பாரதியாரின் இறுதி நாள் குறித்து பரலி.சு.நெல்லையப்பர் கலங்கிக் கூறியதைச் சுட்டுக ?

பதில் : பாரதியாரால் தம்பி என்று அன்புடன் அழைக்கப்பட்டவர் பரலி.சு.நெல்லையப்பர், பாரதியார் அவருக்கு எழுதிய கடிதங்கள் வாயிலாக அறியலாம். பரலி.சு.நெல்லையப்பர் பாரதியாரின் இறுதி நாள்கள் குறித்து எழுதியவை நெஞ்சை உருக்குவனவாகும்.

"பாரதியார் பாயும் படுக்கையுமாய் இருந்த செய்தி சிந்தாதிரிப்பேட்டையில் இருந்த எனக்குக் கடைசி நாளில்தான் தெரிய வந்தது. நான், இலட்சுமண ஐயர் என்ற எனது நண்பர் ஒருவருடன் அவரைப் பார்க்கச் சென்றேன். பாரதியார் நிலை கவலைக்கிடமாய் இருந்தது. அவர் மயக்க நிலையில் கிடந்தார். திருவல்லிக்கேணி மாடவீதியில் குடியிருந்த டாக்டர் ஜானகிராம் என்கிற வைத்தியரை அழைத்து வந்து காட்டினோம். அவர் கொடுத்த மருந்தை அருந்த மறுத்து விட்டார். அருந்துமாறு வாதாடிய போது, எனக்கு எந்த மருந்தும் வேண்டாம் எனக் கோபமாகக் கண்டிப்புடன் சொல்லிவிட்டார். இரவெல்லாம் மயங்கிய நிலையிலேயே இருந்தார்.

பாரதியார் நிலையை அறிந்த நானும் நண்பர் இலட்சுமண ஐயரும் அவ்விடத்திலேயே இரவில் தங்கினோம். எங்களுக்குத் தூக்கம் வரவில்லை. அடிக்கடி எழுந்து எமனுடன் போராடிக் கொண்டிருந்த பாரதியாரைக் கவனித்துக் கொண்டிருந்தோம். பின்னிரவில் சுமார் 2 மணியிருக்கும் பாரதியாரின் மூச்சு அடங்கியது. உலகத்தாருக்கு அமரத்துவம் உபதேசம் செய்த பாரதியார் மரணமடைந்தார்.

"காலா என்கண் முன்னே வாடா உன்னைக்

காலால் உதைக்கிறேன்"

என்று பாடிய பாரதியார் காலனுக்கு இரையானார்.

பாரதியார் உடலை மறுநாள் காலை எட்டு மணிக்கு திருவல்லிக்கேணி மயானத்திற்குத் தூக்கிக் கொண்டு போனோம். நானும் இலட்சுமண ஐயரும் வேலூர் கிருஷ்ணமாச்சாரி, ஹரிஹர சர்மா, ஆரியா முதலியவர்களும் பாரதியார் பொன்னுடலை இறுதியாகத் தூக்கிச் செல்லும் பாக்கியம் பெற்றோம்.

"அவன் உடலில் மொய்த்த ஈக்களின் எண்ணிக்கையில் கூட ஆட்கள் இல்லையே"

எனக் கவிஞர் வைரமுத்து கண்கலங்க எழுதினார்.

70. கேள்வி : பாரதியார் குறித்து ஆய்வறிஞர் கைலாசபதியின் கருத்து ஆய்வு நோக்கத்தை விளக்குக ?

பதில் : வரலாற்றில் தனிநபர் வசிக்கும் பாத்திரம் தொடர்பாக மார்க்சிய அறிஞர் பிளெகானவ் முன் வைத்த சிந்தனைகளைச் சுட்டி விளக்கிய கைலாசபதியவர்கள், பிளெகானவல்லால் மகாபுருஷன் பற்றி முன் வைக்கப்பட்ட வரைவிலக்கணங்களுக்கு பாரதியாரின் பண்புகள் பொருந்தியவையாகும்.

கறாராகச் சொன்னால் மகாபுருஷன் எனப்படுபவன் துவக்கி வைப்பவன்தான். ஏனெனில் மற்றவர்களைவிட அவன் அதிகதூரம் பார்க்கிறான். மற்றவர்களைவிட அவன் உலகியலை அதிக ஆர்வத்துடன் விரும்புகிறான். சமுதாயத்தின் அறிவு வளர்ச்சியின் முந்திய நோக்கினால் முன் வைக்கப்படுகிற விஞ்ஞானப் பிரச்சினைகளுக்கு அவன் விடையளிக்கிறான். சமுதாய உறவுகளின் முந்திய வளர்ச்சியால் சிருஷ்டிக்கப்பட்ட புதிய சமுதாயத் தேவைகளை அவன் சுட்டிக் காட்டுகிறான்..."

“பாரதியாரைப் பொறுத்த வரையில் இக்கருத்து சிறப்பாகப் பொருந்தும். பொதுவில் தேசிய முதலாளித்துவ வளர்ச்சியையே அவர் தவிர்க்க முடியாதபடி பிரதிபலிக்கிறார். சுரேந்திரநாத் பானர்ஜி, திலகர் முதலியோர் அவரது வழிகாட்டிகள். அதனாலேயே பிரதிபலித்தனர். செயல்பட்டனர். ஆனால் மற்றவர்களைவிட அதிக தூரம் பார்க்கிறவர் என்ற வகையில் முதலாளித்துவத்திற்கும் அப்பால் சோசலிசப் புரட்சியையும், வரலாற்றைப் படைக்கும் பிரம்மாக்களானத் தொழிலாளர்களையும் இனங்கண்டு பாட அவரால் முடிந்தது. செல்வத்தைப் பற்றி ஆழமாகச் சிந்திக்க முடிந்தது. முதலாளித்துவத்தையே மறுதலிக்கும் எதிர்ச்சக்தியையும் ஓரளவிற்கு எண்ணிப் பார்க்க முடிந்தது. அதைப் போலவே இராம்மோகன் ராய், விவேகானந்தர், திலகர், அரவிந்தர், காந்தியடிகள் முதலியோரையெல்லாம் விமர்சிக்கும் திறனையும் துணிவையும் பெற்றிருந்தார். சீர்திருத்தங்களையும் சமூக மாற்றங்களையும் மற்றவர்களைவிட அதிக ஆர்வத்துடன் விரும்பியவர் என்றவகையில் தனது வழிகாட்டிகளாகவும், முன்னோடிகளாகவும், மூத்த சகபாடிகளாகவும் விளங்கியவர்கள் தயங்கி நின்றபடிகளைத் தாண்டி அவர் அடியெடுத்து வைத்தார். அதைப் போலவே பழைய பண்டிதர்களின் தமிழிலக்கிய இலக்கண அறிவைப் போற்றித் தலை வணங்கிய அதே வேளையில், அன்மொழித்தொகை பற்றிய வாதப் பிரதிவாதங்களிலும் பார்க்க நெல்விளைச்சல் பற்றிய ஆராய்ச்சி அதிக பயனுடையது என்று அடக்கத்துடன் அறிவுரை கூற அவரால் முடிந்தது.

இவ்வாறு பாரதியாரை, பிளெகானவ் சுட்டும் மகா புருஷனாக இனங்கண்டு காட்டியுள்ள பேராசிரியர் கைலாசபதி, அத்தகு தகுதிப்பாடு பாரதியாரிடம் அமைந்திருந்தமைக்கான முக்கியக்காரணி வரலாற்று ஓட்டத்தைப் பற்றி அவருக்கு இருந்த ஞானம் என்ற காலத்தின் தேவைகளை அறிவாலும் உள்ளுணர்வாலும் தனதாக்கிக் கொண்டமையே இவரின் வெற்றிக்குக் காரணம் என்பது ஆய்வறிஞரின் கணிப்பு.

71. கேள்வி : செல்லம்மாள் பாரதியார் தம் கணவரைப் பற்றி நினைவு கூர்ந்த திறத்தை வரைக ?

பதில் : பாரதியாரின் வாழ்க்கைத் துணைவியார் செல்லம்மாள் ஆவார். அவர் தம் கணவர் பாரதியாரைப் பற்றி நாமும் நினைவு கூர்வோம். நினைவு கூர்ந்த நிகழ்ச்சிகள் சில பின்வருபவை:

"ஒரு நாள் என் மகள் தங்கம்மாள் மனம் வருந்தி, "அப்பா! எல்லோரும் உங்களுக்குப் பித்தம் பிடித்து விட்டதென்று சொல்கிறார்களே" என்றாள். அவர் சிரித்து, "ரொம்ப சபாஷ்! பித்தன் என்பது சிவபெருமான் நாமமல்லவா? இதற்கேன் வருந்த வேண்டும்?" என்று கூறினார். நீ பயப்படாதே அம்மா என்று கூறிவிட்டு, ஆர்மோனியம் எடுத்து வைத்துக்கொண்டு.

"திருவைப்பணிந்து [illegible] செம்மைத் தொழில்புரிந்து

வருக வருக வென்றே கிளியே! மகிழ்வுற்று இருப்போமடி"

எனப் பாடினார்.

பாரதியார் சில காலம் கடையத்தில் வாழ்ந்திருக்கிறார். இவ்வீட்டின் தோட்டத்தில் வேப்பமரம், புளியமரம், மாமரம் வேறு சில மரங்களும் உண்டு. ஏழைப்பிள்ளைகள் நாள்தோறும் காலையில் வந்து வேப்பம்பழம், புளியம்பழம், அடுப்பெரிக்கக் கீழே விழுந்துள்ள குச்சிகள், இலைகள் இவற்றை எடுத்துச் செல்வது வழக்கம்.

ஒரு நாள் பாரதியார் அவர்களைப் பார்த்து. "பிள்ளைகளே! எதற்காக வேப்பம் பழம் பொறுக்குகிறீர்கள்?" எனக் கேட்டார். அதற்கு அவர்கள், "சாமி! வயிற்றுக்கு இல்லாததால் வேப்பம்பழத்தை எடுத்துத் தின்கிறோம்" என்றார்கள். உடனே பாரதியாரும் வேப்பம்பழம், புளியம் பழம் எடுத்துத் தாமும் தின்றார். "பகவானது படைப்புப் பொருள்கள் யாவும் அமிர்தம் நிறைந்தவை. வேப்பங்காய் கசக்கும் என்று மனத்தில் எண்ணுவதனால்தான் கசக்கிறது. அமுதம் என்று நினைத்தால் தித்திக்கிறது" என்று சொன்னார். அன்று முதல்தம் நாச்சுவையை மறந்தார். துறந்தார்.

72. கேள்வி : காந்தியடிகள் பாரதியாரின் சந்திப்பு எவ்வாறு நடந்தது ?

பதில் : காந்தியடிகள் 1920 இல் சென்னை வந்திருந்தார். அவரைப் பார்க்கப் பாரதியார் சென்றார். அடிகள் தங்கியிருந்த நுழைவாயிலில் வருவோரைப்பார்த்து உள்ளே அனுப்பக் காவல் போடப்பட்டிருந்தது. பாரதியார் விறுவிறுவென நடந்து, காவலில் நின்றிருந்தோரின் தோளைத் தட்டி பலே! பாண்டியா! எனக் கூறிவிட்டு உள்ளே போய்விட்டார். காவலில் நின்றிருந்தோர் வேறு வழியின்றித் திகைப்புற்று நின்றனர்.

உள்ளே காந்தியடிகள் ஒரு கட்டிலில் அமர்ந்திருந்தார். இராஜாஜியும், தீரர் சத்திய மூர்த்தியும் நாற்காலிகளில் அமர்ந்திருந்தனர். எவரையும் பொருட்படுத்தாமல் பாரதியார் காந்தியடிகள் பக்கத்தில் கட்டிலில் அமர்ந்தார். இதைக் கண்ட சத்தியமூர்த்தி முகத்தைத் திருப்பிக் கொண்டார். இராஜாஜி மௌனமானார்.

“மிஸ்டர் காந்தி! இன்று மாலை ஒரு பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளேன். நீங்கள் அவசியம் வந்து கலந்துகொள்ள வேண்டும்" எனக் கேட்டார். காந்தியடிகள் தம் அருகே நின்று கொண்டிருந்த தம் உதவியாளர் மகாதேவ தேசாயிடம் இன்று அக்கூட்டத்திற்குப் போக முடியுமா? எனக் கேட்டார். குறிப்பேட்டைப் பார்த்த தேசாய் இன்று தங்களுக்கு வேறு நிகழ்ச்சிகள் உள்ளன. நாளை வேண்டுமானால் போகலாம் என்றார். உடனே சட்டென்று பாரதியார் “நாளை நமக்கு வசதிப்படாது. மிஸ்டர் காந்தி நீங்கள் எடுக்கும் காரியங்கள் வெற்றி பெற நல்வாழ்த்துகள். யாம் வருகிறோம்" எனக் கூறிவிட்டுப் புயல் போல் புறப்பட்டுப் போய்விட்டார்.

பின்னர் காந்தியடிகள் இவர் யார்? எனக் கேட்க சத்தியமூர்த்தி ஒன்றும் பேசவில்லை. இராஜாஜி மட்டும் “இவர் எங்கள் தமிழ்நாட்டுக் கவி" என்றார். அதற்குக் காந்தியடிகள் “இவரை நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள்" என்றார்.

தமிழக அரசியல்வாதிகள் எவரும் காந்தியடிகளிடம் வ.உ. சிதம்பரனாரையோ, மகாகவி பாரதியாரையோ முறையாக அறிமுகப் படுத்தவில்லை. காந்தியடிகள், தாகூர் முதலியோர் கூடப் பாரா முகமாகவே

இருந்தனர். உண்மைக் காரணம் யாதெனில் பாரதியாரும், சிதம்பரனாரும் விடுதலைப்போரில் திலகர் வழி நின்று தீவிரவாதமாக ஈடுபட்டதுதான் என்று கருதுவோர் உள்ளனர்.

73. கேள்வி : பாரதியாருடைய தொடர்பு குறித்து இராஜாஜி கூறியன யாவை ?

பதில் : 1906 ஆம் வருஷம் நாற்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன் பாரதியாரை முதன்முதலில் சந்தித்தேன். சென்னையில் தம்புசெட்டித் தெருவில் இச்சந்திப்பு நடந்தது. கல்கத்தா காங்கிரசுக்குப் போகப் பாரதியாரும் ஆயத்தமாக இருந்தார். என் வக்கீல் தோழர் சேலத்து நரசிம்மய்யரும் நானும் பாரதியாரோடு சேர்ந்து மூவருமாகக் கல்கத்தா போக ஏற்பாடு செய்து கொண்டிருந்தோம்' என்று இராஜாஜி தம் முதல் சந்திப்புப்பற்றிக் குறிப்பிடுகிறார்.

'தேஜஸ் பொருந்திய முகம், உருமாலையும் இல்லை, கையில் தடியுமில்லை, அழகும் ஒளியும் சிரிப்பும் வீசிய முகம் பளிச்சென்று இப்போதும் கண்முன் வந்து நிற்கிறது. பிறகு புதுச்சேரியிலும் அந்த முகத்தைக் கண்டேன். குதித்துக் குதித்துப் பாடுவதையும் கேட்டேன். நல்ல சாப்பாடு போட்டார். சேலத்து வக்கீல் நரசிம்மய்யருக்கும் சாப்பாடு போட்டுப் பாடல் பாடினார். பிறகு சென்னையில் பல தடவை சந்தித்திருக்கிறோம்' என்று இராஜாஜி பாரதியார் சந்திப்பைக் குறிப்பிட்டுள்ளார். இச்சந்திப்புகளைப் பாரதியாரின் ஆய்வாளர் பாரதியறிஞர் பத்மநாபன் எழுதியுள்ள பாரதியார் கவிநயம் என்ற தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பாரதியார் பாடல்கள் வந்தேமாதரம் முதலாக ஏறத்தாழ பதினாறு பாடல்களை இராஜாஜி ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். அவை பல இதழ்களில் வெளியிடப்பட்டன. இந்தியா இதழில் 13.03.1909இல் துடிக்கின்ற இதயம் (பாரத ஜனங்களின் தற்கால நிலை) என்னும் பாடல் வெளி வந்தது. இராஜாஜி ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து 17.01.1928இல் My heart aches என்ற தலைப்பில் இது வெளியிடப்பட்டது. இது குஜராத்தி மொழியிலும் வெளிவந்தது. 1936 ஆம் ஆண்டு அகில இந்திய

காங்கிரசின் பொன்விழாவாகும். அப்போது இராஜாஜி, தமிழ்த்தாத்தா உ.வே.சா அவர்களைக் கொண்டு பாரதியார் படம் திறக்க ஏற்பாடு செய்தார். வசிட்டர் வாயால் பிரம்மரிஷி எனப் பாரதியார் பாராட்டப் பெற்றார் என இராஜாஜி குறிப்பிட்டு மகிழ்ந்தார்.

74. கேள்வி : காலவெள்ளத்தில் கரையேறி வென்ற கவிதை பற்றிக் குறிப்பிடுக ?

பதில் : காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. உலகில் 99 விழுக்காட்டினர் காலத்திற்குள் கரைந்து போகிறவர்களே!. சிலரே காலனையும் வென்று காலத்தைக் கடந்து வாழ்கின்றனர். இந்த வரிசையில் அழியாப் புகழ்பெற்ற பாரதியாரைக் குறிப்பிடலாம். உலகில் ஈசல் போல் மின்னித் தோன்றி மறையும் படைப்புகள் பல. காலமென்னும் காட்டாற்றில் அடித்துச் செல்லாமல் கரையேறி காலத்தை வென்று நின்ற நூல்கள் உலகில் மிகச் சிலவே. காலத்தை வென்றதோடு தாமே காலத்தை உருவாக்கும் அற்புதத்தையும் சில நூல்கள் அடைந்தன.

தமிழகத்துச் சென்னையில் ஒரு கவிதைப் போட்டி அறிவிக்கப்பட்டது. ஓர் இலக்கியத் தமிழ்மன்றத்தார் இப்போட்டியை அறிவித்திருந்தனர். முதற்பரிசு ரூபாய் 300, இரண்டாம் பரிசு ரூபாய் 200, மூன்றாம் பரிசு ரூபாய் 100 என விளம்பரம் வெளியானது. இதைக் கேள்விப்பட்ட பாரதியார் நண்பர்கள் சிலர் இப்போட்டியில் கலந்து கொள்ளுமாறு பாரதியாரை வேண்டினர். பாரதியார் போட்டியில் கலந்து கொள்ள விரும்பவில்லை. நண்பர்களின் வேண்டுகோளாலும், பன்முறை வற்புறுத்தலாலும் கவிதை எழுத சம்மதித்தார்.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"

இப்பாடலைத்தான் அக்கவிதைப் போட்டிக்குப் பாரதியார் எழுதியனுப்பினார். போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டன. பாரதியாரின் கவிதை மூன்றாவது இடம் என அறிவித்தார்கள். கவிதைப் போட்டியில் பரிசு பெற்ற கவிதைகளும், போட்டிக்கு வந்த கவிதைகளும் ஒரு தொகுப்பாக வெளியிடப்பட்டது. புதுவை நண்பர்கள் முதலாவது,

இரண்டாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவற்றில் சிறந்த கருத்தோ, நயமோ, சிறப்போ இல்லை எனக் கொதித்து வெகுண்டு பேசினர். அப்போது பாரதியார் அவர்களிடம் போட்டி நடத்திய மன்றத்தார் யாருக்கோ பரிசு கொடுக்கத் தீர்மானித்துப் போட்டி என வைத்துக் கொடுத்துள்ளனர். ஏன் இதற்கு வருத்தப்படுகிறீர்கள் எனச் சமாதனம் கூறித் தேற்றினார்.

காலம் கடந்து காட்சிகள் மாறின. காலவெள்ளத்தில் முதல், இரண்டாம் இடம் பெற்றகவிதைகள் அடித்துச் செல்லப்பட்டன. எங்கே என்று தேடினாலும் எவர் கண்ணிலும் நினைவிலும் நிற்கவில்லை. அவை தற்போது எங்கே உள்ளன என யாருக்கும் தெரியாது. எழுதியவர் யார் எனத் தற்போது எவருக்கும் நினைவில்லை. ஆனால் மூன்றாம் பரிசு பெற்ற பாரதியார் கவிதை கால வெள்ளைக் கடந்து, கரையேறி காலத்தை வென்று தலை நிமிர்ந்து நிற்கிறது. இதுதான் மகாகவியின் மாட்சியாகும்.

75. கேள்வி : சகோதரி நிவேதிதா அம்மையார், பாரதியார் சந்திப்புக் குறித்து எழுதுக ?

பதில் : சகோதரி நிவேதிதா இங்கிலாந்து அருகே உள்ள ஐரிஷ் நாட்டவர். விவேகானந்தரின் ஆன்மீகத்தில் தம்மை முழுமையாக ஆட்படுத்திக் கொண்டவர். நம் நாட்டுக்கு வந்து நம் பாரதநாட்டைத் தம் தாய்நாடாக ஏற்றுக்கொண்டவர். நம் நாட்டின் முன்னேற்றத்திற்காகத் தம்மை முழுமையாகக் கரைத்துக் கொண்டார்.

1905 இல் காசியில் காங்கிரசு மாநாடு நடைபெற்றது. அங்குச் சென்று கலந்து கொண்டு திரும்புகையில் சகோதரி நிவேதிதாவைச் சந்தித்தார். அவரது பேச்சில் பெண்கல்வி, பெண் முன்னேற்றம் பற்றி கருத்துக்களே பளிச்சிட்டன. அவை பாரதியாரைப் பெரிதும் ஈர்த்தன. சகோதரி நிவேதிதா அம்மையாரைத் தம் ஞானகுருவாக ஏற்றுக்கொண்டார்.

24.11.1906 இல் வெளிவந்த இந்தியா இதழில் சகோதரி நிவேதிதாவைப் பற்றிப் பாரதியார் எழுதியது பின்வருமாறு:

"இந்தியாவிலே தோன்றிப் புது எழுச்சிக்கு எத்தனையோ பேர் எத்தனையோ விதமான காரணங்களாக விளங்குகிறார்கள். சுவாமி விவேகானந்தர் மதாச்சாரியராகவே நாள்களைக் கழித்தாலும், தேச பக்தி எழுச்சிக்கு அவர் பெரியதோர் மூலாதாரமாக நின்றவர். இவர் காலம் சென்றதற்கப்பாலும் தத்துவம் செழிப்பதற்கு இவருடைய சிஷ்யர்களில் பலர் பேருதவி செய்து வந்திருக்கிறார்கள். இங்ஙனம் விளங்கும் சிஷ்ய ரத்தினங்களிலே சிறப்பு வாய்ந்தவர் சகோதரி நிவேதிதையே ஆவார். இம்மாதரசி வெள்ளைக்காரர் குலத்திலே தோன்றிய போதிலும் நம்மவர்களுக்கு மிகுந்த உபகாரியாக இருந்தார். இராட்சச குலத்திலே தோன்றிய போதிலும் வீடணர் சற்குண மூர்த்தியாகிய ஆரிய வேந்தனுக்குப் பெரும் துணையாக நிற்கவில்லையா? இம்மாதரசி இப்போது சிறிது காலமாக மிகுந்த நோய் கொண்டிருக்கிறார் என்று கேட்டு, அளவிறந்த வருத்தமடைகிறோம். இவர் விரைவிலே நல்ல நிலை அடைந்து நெடுங்காலம் உலகத்திற்கு நன்மை செய்து வரும்படியாக அருள்புரிய வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறோம்" என்று குறிப்பிடுகிறார். மேலும், ஆங்கிலேயர் பலர் நமக்குப் பகைவர்களாகவும், துன்பம் செய்கின்றவர்களாகவும் உள்ளனர். அந்நிலையில் சகோதரி நம்மவர்க்கு உதவிகள் பல புரிந்து வருகிறார். இதை உணர்ந்த பாரதியார் ஆங்கிலேயரை அரக்கர் குலத்திற்கும், அதிலும் நல்லவனான வீடணனை நிவேதிதா அவர்களுக்கும் உவமை கூறிய நுட்பம் உணரத்தக்கது.

சகோதரி நிவேதிதா அவர்கள்மீது கொண்ட பக்தி காரணமாகப் பாரதியார் தம் சுதேச கீதங்கள் இரண்டாம் பாகத்தை அவருக்குப் படையலாக்கினார். "எனக்கு ஒரு கடிகையிலே மாதாவினது மெய்த்தொண்டின் தன்மையும் துறவுப் பெருமையும். சொல்லாமல் உணர்த்திய குருமணியும், பகவான் விவேகானந்தருடைய தர்மபுத்திரியும் ஆகிய செல்வி நிவேதிதாதேவிக்கு இந்நூலைச் சமர்ப்பிக்கின்றேன்" என்று குறிப்பிட்டுள்ளார். மேற்கண்டவற்றால் பாரதியார், நிவேதிதாவைச் சந்தித்த நிகழ்ச்சியும், அவரைப்பற்றி எழுதியுள்ள விளக்கமும் தம் நூலை அவருக்கு அர்ப்பணித்ததையும் காணலாம்.

76. கேள்வி : எண்ணம் என்பது பற்றி பாரதியார் தெரிவித்துள்ளன யாவை ?

பதில் : எண்ணம்தான் மனம். எண்ணம் தூயதானால் சொல்லும் செயலும் தூயனவாகும். எண்ணம் தீதானால் சொல்லும் செயலும் தீயனவாகும். ஆகவேதான் திருவள்ளுவர் உள்ளத் தனையது உயர்வு என்றார். மனம் போன போக்கிலே போகக் கூடாது;

ஒவ்வொருவரும் தம் உடம்பை உழைப்பால், சுறுசுறுப்பாய் வைத்திருக்க வேண்டும். மனத்தை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டும். எந்த நிலையிலும் கவலை கொள்ளக்கூடாது என்ற அடிப்படையில்,

"வாடி நில்லாதே! – மனமே வாடி – வெறும்
பேடியர் ஞானப் பிதற்றல் சொல்லாதே"

என்றார்.

பாரதியார் ஞானத்தில் மனம் பற்றிக் கூறியிருப்பன அருமை வாய்ந்தன.

கவலைகளாகிய அசுரர்களை இடைவிடாது பெற்றுத் தள்ளிக் கொண்டே இருக்கும் தாய் மனமேயாகும். மனமே! உன்னை அறிந்து விட்டேன். எனது நன்மைக்கெல்லாம் கேடு சூழ்வாய். எனக்கு வரும் தீமைகளுக்கெல்லாம் நீ உபகாரம் செய்வாய். மனத்தினுள்ளே பழம் பொய்கள் வளர்ப்பதாலே, இன்னலுற்று மாந்தரெல்லாம் மடிவார் வீணே! இருதயத்தில் விடுதலையை இசைத்தல் வேண்டும்.

மனம்தான் சத்துரு நமக்கு. நமக்கு வேறு பகையே கிடையாது. மனம்தான் நமக்குள்ளே உட்பகையாய் இருந்துகொண்டு வெறுக்கிறது; அடுத்துக் கெடுக்கிறது" என்று கூறியுள்ளார். திருவள்ளுவரும் அழுக்காறு, அவா, வெகுளி முதலியன மனத்திலிருந்து நீக்கப்பட வேண்டுமென்றார்.

"மனமே எனை நீ வாழ்வித்திடுவாய்
பொன்னால் உனக்கொரு கோயில் புனைவேன்"

என்று விநாயகர் நான்மணிமாலையில் கூறியன நினைவில் கொள்ள வேண்டும்.

“நாயைக் குளிப்பாட்டி நல்ல உணவளித்து நடுவீட்டில் வைத்தாலும் அது மறுபடியும் அசுத்த உணவையே விரும்பி வாலைக் குழைத்துக் கொண்டு ஓடத்தான் செய்கிறது. எத்தனை புதிய இன்பங்களைக் காட்டிய போதிலும் மனம் அவற்றில் நிலைபெறாமல் மீண்டும் ஏதேனும் ஒரு துன்பக் குழியிலே கண்ணைத் திறந்து கொண்டு போய் விழுந்து தத்தளிக்கத் தொடங்குகிறது. மனம் கலங்கிய மாத்திரத்தில் புத்தி கலங்கிப் போய் விடுகிறது. மனத்தைக் கலங்க விடாமல் பயிற்சி செய்வதே எல்லா யோகங்களிலும் சிறந்த யோகமாகும்" என்றார்.

77. கேள்வி : மக்களின் நடத்தை வேறுபாடுகளைப் பாரதியார் எங்ஙனம் வகைப்படுத்துகிறார் ?

பதில் : மக்கள் வடிவால் ஒத்திருக்கின்றனர். ஆனால் எண்ணத்தால், சொல்லால், செயலால் வேறுபட்டுள்ளனர். கல்வி கல்லாதவன் விலங்கென்றும், கண்ணோட்டம் இல்லாதவன் மரமென்றும் திருவள்ளுவர் வகைப்படுத்தியுள்ளார்.

பாரதியார் மக்களின் நடையுடை பாவனைகளை நன்குணர்ந்துள்ளார். அவற்றின் அடிப்படையில் மக்களை எங்ஙனமெல்லாம் வகைப்படுத்தியுள்ளார் என்றும் காணலாம்.

“நம்மை நாம் கவனிக்குமிடத்து எத்தனை விதமான மிருகங்களாய் இருந்திருக்கிறோம் என்பது தெரியும். வஞ்சனையாலும், சூத்திரத்தாலும் சமயத்திற்கேற்பப் பலவித கபடங்கள் செய்து ஜீவிப்பவன் நரிதானே? ஊக்கமில்லாமல் ஏதேனும் ஒன்றைநினைத்துக் கொண்டு மனம் சோர்ந்து தலைகவிழ்ந்து உட்கார்ந்திருப்பவன் தேவாங்கு. மறைந்திருந்து பிறருக்குத் தீங்கு செய்பவன் பாம்பு. தாமதத்திலும் புகழிலும் விருப்பமில்லாமல் அற்ப சுகத்திலே மூழ்கிக் கிடப்பவன் பன்றி! சுயாதீனத்திலே இச்சையில்லாமல் பிறர்க்குப் பிரியமாக நடந்து கொண்டு, அவர்கள் கொடுத்ததை வாங்கி வயிறு வளர்ப்பவன் நாய். கண்ட விஷயங்களில் எல்லாம் திடீர் திடீர் என்று கோபமடைகிறவன் வேட்டை நாய். காங்கிரஸ் சபையிலேயும் சேர்ந்து

கொண்டு, ஆங்கிலேய அதிகாரிகளுக்கும் இதமாக நடக்க வேண்டுமென்ற விருப்பமுடைய மேத்தாகட்சியைச் சேர்ந்தவன் வௌவால். அறிவுத் துணிவால் பொருள்களைத் தேர்ந்து கொள்ளாமல் முன்னோர் சாத்திரங்களைத் திரும்பத் திரும்ப வாயினால் சொல்லிக் கொண்டிருப்பவன் கிளிப்பிள்ளை. பிறர் தன்னை எவ்வளவு அவமதிப்பாக நடத்திய போதிலும் அவன் அக்கிரமத்தை நிறுத்த முயலாமல் தனது மந்த குணத்தால் பொறுத்துக் கொண்டிருப்பவன் கழுதை. வீண் மினுக்கி மினுக்கி டம்பம் பாராட்டுகிறவன் வான்கோழி. கல்வியறிவில்லாதவனை மிருகக் கூட்டத்திலேயும் சேர்க்கலாகாது; அவன் தூண். தான் சிரமப்படாமல் பிறர் சொத்தை அபகரித்து உண்ணுபவன் கழுகு. ஒரு நவீன உண்மை வரும்போது அதை ஆவலோடு அங்கீகரித்துக் கொள்ளாமல் வெறுப்படைகிறவன் ஆந்தை".

78. கேள்வி : அன்றாட வாழ்வில் ஏவும் பணி செய்பவர்களால் நேரும் துன்பங்கள் குறித்துப் பாரதியார் குறிப்பிடுவது பற்றி விளக்கி வரைக?

பதில் : பாரதியாரின் முப்பெரும் படைப்புகளுள் கண்ணன் பாட்டு ஒன்றாகும். இதில் கண்ணனைப் பாரதியார் தோழன், தாய், தந்தை, சேவகன், அரசன், சீடன், சற்குரு, குழந்தை, விளையாட்டுப்பிள்ளை, காதலன், காதலி, ஆண்டான், குலதெய்வம் எனப் பல்வேறு நிலைகளில் வைத்துப் பாடியுள்ளார். சேவகரால் படும் துயரங்களை எள்ளல் சுவையில் பாடியுள்ளார். தற்காலத்தில் குடும்பங்கள், அலுவலகங்கள் முதலியவற்றில் பணியாற்றும் சேவர்களால் படும் துன்பங்கள் பற்பல. சேவகர்களின் இயல்புகள், அவர்கள் சொல்வது, நடந்து கொள்வது முதலியவற்றை அன்றாட இயல்பைக் கொண்டு உணர்த்தியுள்ளார். அவர்களின் பொய்யுரைகள், புரட்டுகள், அவர்களின் சாக்குப்போக்கு முதலியவற்றைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

"கூலி மிகக் கேட்பார், கொடுத்ததெல்லாம் தாம் மறப்பார்
வேலை மிக வைத்திருந்தால் வீட்டிலே தங்கிடுவார்
ஏனடா நீ நேற்றைக்கு இங்கு வரவில்லை என்றால் பானையிலே தேள்
இருந்து பல்லால் கடித்தது என்பார் வீட்டிலே பெண்டாட்டி மேல் பூதம்

வந்தது என்பார் பாட்டியார் செத்து விட்ட பன்னிரண்டாம் நாள் என்பார்
ஓயாமல் பொய் உரைப்பார் ஒன்று உரைக்கவேறு செய்வார்
தாயாதி யோடு தனியிடத்தே பேசிடுவார்
உள்வீட்டுச் செய்தியெலாம் ஊர் அம்பலத்து உரைப்பார் எள்வீட்டில்
இல்லையென்றால் எங்கும் முரசறைவார் சேவகரால் பட்டசிரமம் மிக
உண்டு கண்டீர்சேவகர் இல்லாவிடிலோ செய்கை நடக்கவில்லை''

என்று சேவகரால் படும் துன்பங்களைக் கசப்பான நடப்புகளை நகைச்சுவையில் கலந்து தந்து படிப்போரை மகிழ வைத்துள்ளார். இந்நிலையில் கண்ணன் சேவகனாக வந்து உதவி புரிந்ததை உள்ளம் திறந்து பாராட்டியதை மறக்கவே முடியாது.

“இங்கிதனால் யானும் இடர்மிகுந்து வாடுகையில்
எங்கிருந்தோ வந்தான் இடைச் சாதி நான்என்றான்
நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய்
பண்பிலே தெய்வமாய்ப் பார்வையில் சேவகனாய்
இடைச்சாதியென்று சொன்னான்
இங்கிவனை யான்பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்''

என்று நல்ல சேவகனானக் கண்ணனால் தாம் பெற்ற மகிழ்வை வெளிப்படுத்தினார். இதனால் பணியாளரைப் பழித்தார் என்று கருதக்கூடாது. பணியாற்றுவோர் துன்பங்களையும் நன்குணர்ந்து கண்ணீர் வடிப்பவரும் பாரதியாராவார்.

79. கேள்வி : ஏழை எளிய மக்களிடம் பாரதியார் எங்ஙனம் பழகினார் ?

பதில் : பாரதியார் மனிதநேயம் மிக்கவர். ஏழைமக்கள் படும்பாட்டைக் கண்டு மனம் கனிந்தவர். சாதி வேறுபாடு காட்டாதவர். கனகலிங்கம் என்பவர் சாதிக்கொடுமையால் வஞ்சமாகத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர். அவருக்குத் தம் வீட்டில் வ.வே.சு.ஐயர் முதலியோர் முன்னிலையில் பூணூல் அணிவித்தார். மந்திரங்களைச் சொல்லிக் கொடுத்தார். “இனி உன் சாதி என்ன என்று கேட்டால் நீ பிராமணன் என்று கூறு" என வாழ்த்தி அனுப்பினார்.

ஒரு முறை கனகலிங்கம் பாரதியாரிடம், "சுவாமி! உங்கள் தேசியகீதங்களை நல்ல இராகங்களில் பாடாமல் கும்மி, காவடிச்சிந்து, நொண்டிச்சிந்து முதலிய நாட்டுப்புறமெட்டுக்களில் ஏன் பாடுகிறீர்கள்? என நான் கேட்டேன். அதற்கு பாரதியார், என் பாட்டு தேசிய கீதமானதால் மூட்டைதூக்கும் ஆள் முதற் கொண்டு பாகவதர் வரையில் சுலபமாகப் பாட வேண்டும்" என்றார் என்றெழுதியுள்ளார் கனகலிங்கம்.

கனகலிங்கம் என் குருநாதர் என்று பாரதியாரைப் பற்றி உண்மை உணர்வோடு நூலொன்றைப் படைத்துள்ளார். அதில் பாரதியார் ஏழை எளிய மக்கள் மீது பரிவு கொண்ட நிகழ்ச்சிகள் பலவற்றைப் பதிவு செய்துள்ளார்.

மதுரையில் நாவலர் சோமசுந்தர பாரதியார் அளித்த உயர்ந்த ஆடையைத் தெருவில் படுத்துக் கொண்டிருந்த ஏழைக்குப் பாரதியார் போர்த்தி விட்டார். இதனை நாவலர் சோமசுந்தர பாரதியாரே குறிப்பிட்டுள்ளார்.

"பாரதியாருக்குச் சங்கீதக் கச்சேரிகளைக் காட்டிலும், பாம்பாட்டி, வண்ணான், நெல்குத்தும் பெண்கள், செம்படவர், உழவர் இவர்களின் நாட்டுப்புறப்பாடல்கள் என்றால் மிகவும் விருப்பம். ஒரு நாள் மாலை செம்படவர்கள் கரையேறி பாடிக் கொண்டு வந்தனர். எங்களோடு பேசிக் கொண்டிருந்த பாரதியார் அருமை எனப் பாராட்டினார்" என யதுகிரி அம்மாள் கூறியுள்ளார்.

"காக்கை குருவி எங்கள் சாதி" என்று பாடிய பாரதியார் ஏழை எளிய மக்கள் மீது கொண்ட பரிவு கண்டு வியப்பதற்கு இல்லை.

"சமய அநுபூதியுடன் ஏழைகளிடத்திலும் தாழ்த்தப் பட்டவரிடத்திலும் தமக்குள்ள எல்லையற்ற அன்பை இணைத்தார்" என விபுலானந்த அடிகள் தாம் எழுதிய ஆங்கிலக் கட்டுரையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

80. கேள்வி : பாஞ்சாலி சபதம் என்ற தலைப்பின் நுட்பத்தை விளக்குக ?

பதில் : பாரதியாரின் முப்பெரும் படைப்புகளில் பாஞ்சாலி சபதம் அரசியல் விழிப்புணர்ச்சிக்காகப் படைக்கப்பட்டது. பாரதம் பாடியவர் வியாசர் அவையில் பாஞ்சாலி வாதிடும் நிகழ்ச்சிக்கு வியாசர் திரௌபதியின் துயரம் என்றுதான் பெயரிட்டுள்ளார்.

பாரதத்தைத் தமிழில் பாடிய வில்லிபுத்தூரார் அந்நிகழ்ச்சியை சூதுபோர்ச் சருக்கம் என்றார். வைணவச் சொற்பொழிவாளர்கள் திரௌபதை மான சம்ரட்சணம் என்று கூறுகின்றனர். தெருக்கூத்து நடத்துவோர் இதனை, சூது, துகிலுரிதல் என்றபெயரில் கூத்தாடுகின்றனர். பாரதியார்தாம் இதற்குப் பாஞ்சாலி சபதம் எனத் தலைப்பிட்டார். அவர் உள்ளத்தில் பாரத மாதா, சொல்லில் எழுத்தில் பாஞ்சாலி, பாஞ்சாலியின் வீரப்பேச்சு அவர் நெஞ்சைக் கவர்ந்தது. ஆகவே மக்களிடையே விடுதலை உணர்ச்சியை ஊட்ட பாரதத்தின் இப்பகுதியைப் பாரதியார் தேர்ந்தெடுத்தார். அதற்குப் பாஞ்சாலி சபதம் எனப் பெயரிட்டார். அதைப்போல நாமும் ஆங்கிலேயரை எதிர்த்து விடுதலை பெறுவோம் எனச் சபதம் கொள்ள வேண்டும் என்று சூளுரைப்பாராம்.

பாஞ்சாலி சபதம் இந்திய விடுதலைப் போருக்கு ஊக்கமூட்டும் என எண்ணியே படைத்தார். பாஞ்சாலி சபதம் பற்றிக் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை,

"அன்னை பாஞ்சாலி சபதம்
அறைதல் கேட்டேனடா!
முன்னைக் கதையெல்லாம் – கண்ணின்
முன்நடந்ததடா!"

எனவியந்து பாராட்டினார். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்,

"புதியநெறி பாஞ்சாலி சபதம் போலே
தேனினிப்பில் தருபவர் யார்?" என வினவியுள்ளார்.

"தமிழ்ச் சாதிக்குப் புதிய வாழ்வு தரவேண்டுமென்று கங்கணம் கட்டி நிற்கும் பராசக்தியே வாழ்வு தரவேண்டுமென்று என்னை இத்தொழிலிலே தூண்டினாள். ஆதலின் இந்நடை நம்மவர்க்குப் பிரியம் தருவதாகும் என நம்புகிறேன்" என நூலின் முன்னுரையில் பாரதியார் குறிப்பிட்டுள்ளார். அதாவது விடுதலை உணர்வின்றி உள்ள மக்களைத் தட்டி எழுப்ப முனைந்தார். அதன் விளைவே இந்நூல்.

இந்நூல் குறித்து தம் நண்பர் குவளைக்கண்ணனுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். "நான் என்னுடைய மொழியில் என் முழு மூளையையும் கசக்கிப் பிழிந்து பாஞ்சாலி சபதம் எழுதியிருக்கிறேன். அது நன்றாயிருக்கிறதென்று ஒருவரும் எனக்கு ஒரு கடிதம் எழுதவில்லை. அந்தப் புத்தகத்தை நீ ஒருவன்தான் வாசிக்கிறாய். ஆங்கிலத்தில் எழுதிய இந்தப் பொன்வால் நரிக்கு ஐந்நூறு பிரதிகள் வேண்டும்" எனச் சினந்து எழுதியுள்ளார். அதாவது பாரதியார் ஆங்கிலத்தில் எழுதிய பொன்வால் நரி என்ற சிறுகதைக்கு அவ்வளவு மதிப்பு. ஆனால் குறுங்காப்பியமான பாஞ்சாலி சபதத்துக்கோ தமிழ்நாட்டில் வரவேற்பில்லையே என்று வெகுண்டுரைத்தார்.

81. கேள்வி : பாரதியார் புழுதியில் புரண்டதைப் பற்றி கல்கி எழுதியதைக் குறிப்பிடுக ?

பதில் : பாரதியார் புழுதியில் புரண்டார் என்பது பாரதியார் பிறந்தார் என்ற நூலின் முகப்புக் கட்டுரையில் காணப்படுகிறது. இந்தநிகழ்ச்சி பற்றி கல்கி ஆழ்ந்து எழுதியுள்ளார். அது படித்துச் சிரிப்பதற்கும், சிந்திப்பதற்கும் உரியது.

கடையத்தில் பாரதியார் சில ஆண்டுகள் வசித்தார். அவர் எங்கேயோ போகத் தொடர்வண்டி நிலையத்திற்கு வந்தார். இரயிலில் ஏறும்போது தவறி கீழே விழுந்து விட்டார். நடைமேடையில் தடால் என விழுந்தது கண்டு அவரைத் தூக்க அருகிலிருந்தோர் ஓடி வந்தனர். "கிட்ட வராதே. தூக்காதே என ஓங்கிக் குரல் கொடுத்தார். வந்தவர்கள் திகைத்துப் போய் அகன்றனர். அப்போது பாரதியார். "ஆகா! இந்தப் புண்ணிய பூமியிலே படுப்பதற்கு, இந்தப்பாரத நாட்டின் புழுதியிலே

புரள்வதற்குக் கொடுத்து வைக்க வேண்டாமா? எத்தனைப் பெரியோர்கள், எத்தனை மகான்கள், எவ்வளவு கற்புக்கரசிகள், எவ்வளவு மகாகவிகள், கலைஞர்கள், அவதார புருஷர்கள் வாழ்ந்த தேசம் இது. இப்பேர்ப்பட்ட தமிழ்நாட்டின் மண்ணில் இன்னும் கொஞ்சம் புரண்டு விட்டு வருகிறேன். எல்லோரும் எட்ட நில்லுங்கள்" என்றார். எல்லோரும் வேடிக்கை பார்க்க நடைமேடையில் பலமுறை புரண்டாராம். பின்னர் இவர் வண்டியில் ஏறிய பிறகுதான் வண்டி புறப்பட்டதாம்.

இந்த நிகழ்ச்சியைக் கல்கி அவர்கள் குறிப்பிட்டதுடன் நில்லாமல் அதன் கீழே அடிக்குறிப்பு ஒன்றை எழுதியுள்ளார். "இந்தச் சம்பவம் உண்மையாக நடந்ததா என்று என்னைச் சத்தியம் செய்யச் சொன்னால் செய்ய முடியாது. ஆனாலும் பாரதியார் பாடல்களில் அடங்கியுள்ள தேசபக்தி வெறியைப் பார்க்கும்போது, சம்பவம் நடந்திருக்கக் கூடியதுதான் என்று தோன்றுகிறது" எனக் கல்கி குறிப்பிட்டுள்ளார்.

82. கேள்வி : புறநானூற்றுத் தாயும், ஜப்பான் தாயும் எனப் பாரதியார் ஒப்பிட்டுக் கூறிய நிகழ்ச்சி யாது ?

பதில் : பாரதியார் பல மொழிகளும் நன்கறிந்தவர். அதனால், பிறநாட்டு நிகழ்ச்சிகள், கவிதைகள், கதைகள் முதலியவற்றை நன்கறிவார். மேலும் சிலவற்றை இந்தியா இதழில் ஒப்பீடு செய்தும் எழுதியுள்ளார்.

'மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள் உரையாற்றிய புறநானூற்றில் இடம்பெற்ற வீரத்தாய்மாரின் உணர்வினை எடுத்துக் காட்டிப் பேசினார். அப்போது அதனைப் பாரதியார் கேட்டுள்ளார். 1906 ஆம் ஆண்டு இந்தியா இதழில் "அழியாப் புகழ் கொண்ட பழங்கால மாது" என்ற தலைப்பில் தலையங்கம் தீட்டினார். அதன் இறுதியில் ஒரு ஜப்பானியத் தாயின் வீரத்தை உணர்த்தும் ஒரு நிகழ்ச்சியை "ஓர் ஒப்பு" என்ற தலைப்பில் எழுதினார்.

"மேலே கூறப்பட்ட தமிழ் மாதைப் பற்றிப் பேசுமிடத்து, சென்ற ரஷ்ய–ஜப்பான் யுத்தத்தின்போது நிகழ்ந்த ஒரு செய்தி ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு ஜப்பானியத் தாய் தனது பல குமாரர்களைப் போர்க்களத்தில் இறக்கக் கொடுத்து விட்டுப் பிறகு ஒருநாள் அழுது

கொண்டிருந்தார். அவரிடம் சென்று ஒருவர் அம்மா! ஏன் அழுகிறீர்கள்? உமது பிள்ளைகள் மகாகீர்த்திகரமான மரணத்தையல்லவா அடைந்திருக்கிறார்கள் ? என்று ஆறுதல் கூறினார். அதற்கு அந்தத்தாய் "நான் இறந்து போன மக்களின் பொருட்டாக அழவில்லையே. எனது தாய்நாட்டிற்குக் கீர்த்தி வரும் பொருட்டாகப் பலியிடுவதற்கு இன்னும் பிள்ளைகள் இல்லாமல் போய்விட்டதென்று வருத்தமடைகிறேன்" என்று மறுமொழி தந்தாளாம்.

83. கேள்வி : காதலைப் பற்றிப் பாரதியாரின் கருத்துகள் யாவை ?

பதில் : காதல் மணம், கற்பு மணம் இவற்றை உணர்த்தவே காமத்துப்பால் படைக்கப்பட்டது. "நீத்தார் பெருமையின் விளக்கம் காமத்துப்பால் என்பது என் ஆய்வின் முடிவு" என்றார் தமிழ்த்தென்றல் திரு.வி.க. உலகில் பொதுவாகக் காதலைப் பாடாத கவிஞர் இல்லை. இருப்பினும் பாரதியாரின் காதல் சிந்தனைகள் நயமும் பொலிவும் உடையன.

"காதல் காதல் காதல்
காதல் போயின் காதல் போயின்
சாதல் சாதல் சாதல்"

என்பது குயில்பாட்டின் தொடக்கமாகும். குயில்பாட்டில் வரும் காதல் பற்றிய தொடர்கள் படித்து இன்புறத்தக்கன.

பல பாடல்களில் வரும் காதல் செய்திகள் பல.

"காதலினால் மானுடர்க்குக் கலவி உண்டாம்
கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்
மானுடர்க்குக் கவிதை உண்டாம்
கானம் உண்டாம் சிற்பம் முதல் கலைகள் உண்டாம்"

என்று காதலின் நன்மை, சிறப்பு, வனப்பு, உயர்வு, மேன்மை சிறப்புகளை உணர்த்தினார்.

"ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே !
அஃதன்றோ இவ்வுலகத்து தலைமை இன்பம்
காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்
கவலையாம் அதனாலே மரணம் பொய்யாம்"

"காதல் செயும் மனைவியே சக்திகண்டீர்
கடவுள் நிலை அவளாலே எய்தவேண்டும்" என்றார்.

"நாடகத்தில் காவியத்தில் காதல் என்றால்
நாட்டினர் தாம் வியப்பெய்தி நன்றாம் என்பர்
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்று ஓரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமு கின்றார்
பாடைகட்டி அதைக் கொல்லவழி செய்கின்றார்
பாரினிலேனும் பயிரை மாய்க்க
மூடரெல்லாம் பொறாமையினால் விதிகள் செய்து
முறைதவறி இடர்எய்திக் கெடுகின்றாரே"

என்ற காட்சியுரை இன்றும் ஒழியவில்லை. அநியாய அவலங்களைக் கொண்ட நிலையில் நம்மைப் பிறநாட்டினர் எள்ளி நகையாடுவார்கள்.

"காதலெனும் தீவினிலே ராதே ராதே!
கண்டெடுத்த பெண்மணியே ராதே ராதே!
காதலெனும் சோலையிலே ராதே ராதே !
கற்பகமாம் ராதே ராதே!"

"காற்று வெளியிடைக் கண்ணம்மா – நின்றன்
காதலை எண்ணிக் களிக்கின்றேன்"

என்று தொடங்கும் பாடலடிகள் காதலின் சுகத்தைப் புலப்படுத்துகின்றன. கண்ணம்மாவின் எழில், திருக்காதல் முதலிய தலைப்பிலுள்ள பாடல்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்வன.

கண்ணம்மா என் காதலி என்ற தலைப்பிலுள்ள ஆறு பாடல்கள் இன்பச்சாறு சொட்டும் பாடல்களாகும்.

முத்தாய்ப்பாக "காதல் இன்பத்தால் கடவுள் நிலைபெற்றேன்" என்ற வரி ஒப்பற்றது.

காதல் பாடிய கவிமாமன்னர் என்றே பாரதியாரைக் குறிப்பிடலாம்.

84. கேள்வி : கவிதை பற்றிப் பாரதியார் கருத்துகள் யாவை ?

பதில் : கவிதை அல்லது பாட்டு குறித்துப் புலவர் பலர் பலவிதக் கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். கவிச்சக்கரவர்த்தி கம்பர், புவியினுக்கு அணிகலனாக, பொருள் தந்து, புலத்திற்றாகி, அகத்துறைகளுடன், திணைநெறி கூறி, தெளிவுடன் ஒழுக்கத்தைக் கூறுவது கவிதை என்றார்.

கவிமணி தேசிக விநாயகம். "உள்ளத்து உள்ளது கவிதை" என்றார். உலகில் பேரதிசயம் எது என்பதற்குப் பாரதியார் பாட்டாகிய கவிதையே மிகப்பெரிய அதிசயம் என்றார்.

"*அதிசயங்கள் யாவினுமே*
கானாமுதம் படைத்த காட்சி மிக விந்தையடா
காட்டு நெடுவானம் கடலெல்லாம் விந்தையெனில்
பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின் மிசை
இல்லையடா" என்றும்,

"*கானப் பறவை கலகல எனும் ஓசையிலும்*
நாட்டிலினும் காட்டிலினும் நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்" என்றும்,

"*காட்டில் விலங்கறியும் கைக்குழந்தை தானறியும்*
பாட்டின் சுவையதனைப் பாரறியும் என்றுரைப்பார்
பாட்டு முடியும் வரை பாரறியேன் விண்ணறியேன்"

என்றும் கவிதை இன்பம் எத்தகையது என்பதை இதைவிட எப்படிச் சொல்ல முடியும்.

கண்ணன் பாட்டில் "கவிதையின் இனிமையோர் கணக்கில்லை" என்று குறிப்பிட்டுள்ளார்.

"நின்ற மரத்திடையே சிறிதோர் நிழலில் இருந்தேன்
என்றும் கவிதையிலே நிலையாக
இன்பம் அறிந்து கொண்டேன்"

என்று கவிதை இன்பத்தையே நிலையான இன்பமென உணர்ந்து உணர்த்தியுள்ளார்.

*"தெய்வீகச் சாகுந்தலம் எனும் நாடகம்
செய்தது எவர்கவிதை? – அயன்
சவத்தின்குறிப்புணர் பாரத
தேவி அருட்கவிதை "*

என்றும்,

*"தெள்ளு தமிழ்ப்புலவோர்கள் பல
தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார் "*

என்றும்,

"விண்ணளவு உயர்ந்த கீர்த்தி வெங்கடேசு ரெட்டப்ப மன்னா
பண்ணளவு உயர்ந்தது என்பா பாவளவு உயர்ந்தது என்பார்"

கொள்ளை இன்பம் குலவு கவிதை என்றும்,

"சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொற்புதிது சோதி மிக்க
நவகவிதை எந்நாளும் அழியாத மகா கவிதை"

என்றும் பாரதியார் தம் கவிதையின் அமைப்பு. நுட்பம் இவ்வற்றைப் புலப்படுத்தியுள்ளார். கவிதை, பாட்டு காவியம் என்பன போன்றசொற்களைக் கையாண்டுள்ளார்.

உலக வாழ்க்கையும், உண்மையான கவிதையும், ஆத்ம ஞானமும் ஒரே தர்மத்தில் நிற்பன எனக் குறிப்பிட்டுள்ளார். கவிதையைக் கொண்டு என்ன செய்ய முடியும் எனப் பாரதியாரிடம் நாம் கேட்டால். "பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்" என விடை பகர்வார். இதிலிருந்து பாட்டு அல்லது கவிதையின் நோக்கம் மக்களை நல்வழிப் படுத்துவதாக இருக்க வேண்டும் என்ற அரும்பெரும் கருத்தை உணர வைத்தார்.

பாரதியார் எழுதியுள்ள கட்டுரைகளில் பல இடங்களில் கவிதை பற்றிக் குறிப்பிட்ட கருத்துகள் சீரியன.

"கவிதைகளில் ஒளி, தெளிவு, முதிர்ந்த நடை மூன்றும் இருக்க வேண்டும் என்பது கம்பனுடைய மதமாகும். இதுவே நியாயமான கொள்கை".

"பிறர் துன்பத்தைக் காணும்போது, தனது துன்பம்போல் எண்ணி வருந்தும் இயல்புடைய ஒருவனும், பிறர் துன்பத்தைக் கருதாத ஒருவனும் யாப்பிலக்கணம் படித்துக் கவிதை செய்ய வருவாராயின் முந்தையவன் உண்மையான கவிதை எழுதுவான். பிந்தியவன் பதங்களைப் பின்னுவான். இவனுடைய தொழிலிலே கவிதை இராது"

என்றார்.

"உண்மையான கவிதை அருமையான திரவியம். அதனால் உலகம் சேமத்தை அடைகிறது. எந்த நாட்டில் புதிய மகாகவி தோன்றுகின்றானோ அந்நாடு மகா பாக்கியமுடையது" "கூடைகூடையாயப் பாட்டெழுதி அச்சிட வேண்டும் என்ற ஒரே ஆவலுடன் எப்போதும் துடித்துக் கொண்டேயிருப்பவன் புலவனாக மாட்டான். கவிதை எழுதுபவன் கவியன்று. கவிதையே வாழ்க்கையாக உடையோன் கவிஞன்" என்றார். கவிஞனுக்குரிய இலக்கணம் யாது எனத் தெளிவுபடுத்தினார்.

85. கேள்வி : குயில் பாட்டின் தத்துவம் யாது ?

பதில் : பாரதியாரின் முப்பெரும் படைப்புகளுள் குயில் பாட்டு ஒப்பற்ற காப்பியமாகும். இப்பாட்டின் இறுதியில்,

"வேதாந்தமாக விரித்துப் பொருள் உரைக்க
யாதானும் சற்றே இடமிருந்தால் கூறீரோ!"

என வினவுகின்றார்.

சீவாத்துமா, பரமாத்துமாவுடன் இணையத் துடிக்கிறது. அதை அடைய முடியாமல் சீவனின் இயல்பான மாயை, கன்மம், ஆணவம் என்பன தடையாகவுள்ளன. இப்பாட்டில் குயில்தான் சீவாத்துமா. மனிதன் தான் பரம்பொருள் என்பதைக் குறிப்பால் பாரதியார் உணர்த்துகிறார். இன்னும் இவற்றை விளக்கமாகப் பின்வருமாறு கூறலாம்.

குயில்—சீவாத்துமா, கவிஞர் பரமாத்துமா, குரங்கு – மனம். மாடு —புத்தி, சோலை—உலகு, குயில் கவிஞருடன் இணைய அவாவுகிறது. இடையிடையே உலக மாயைகளில் சிக்குண்டு தவிக்கிறது. மாட்டை, அறிவிலியாகவும், குரங்கை மனமாகவும் உருவகம். குயில் மாட்டின் மீது, குரங்கின் மீதும் மனம் செலுத்தி உழல்கிறது. முடிவாக குயிலானது மயக்கம் தெளிந்து. அதிலிருந்து விலகுகிறது. இறுதியில் கவிஞராம் பரமாத்துமாவுடன் இரண்டறக் கலந்து ஒன்றி விடுகிறது.

பரம்பொருளுடன் சேர முடியாமல் மாயைகளால் தடுக்கப்படுவதால் குயில் மறுபிறவி எடுக்கிறது. இறுதியில் கவிஞனாகிய மனிதன் கைப்பட்டதால் குயில் பிறவியிலிருந்து மனிதப் பெண்ணாகி உயர்வடைகிறது. பரமாத்துவாவின் அருளின்றிச் சீவாத்மா நற்பேற்றை அடைய முடியாது.

"அன்புடனே யானும் அருங்குயிலைக் கைக்கொண்டு
முன்பு வைத்து நோக்கிய பின்மூண்டும் இன்பநெறி
கொண்டு அதனை முத்தமிட்டேன்" என்று பாடியுள்ளார்.

இதனால் குயில்பாட்டு பாரதியாரின் கற்பனைப்பாட்டு என்பதை அவரே தெளிவாக்கியுள்ளார். இக்கற்பனையில் ஏதேனும் வேதாந்தமாக கருத்திருப்பின் ஆன்ற தமிழ்ப்புலவீர் ! விரித்துக் கூறுங்கள் என்ற வேண்டுகோளுடன் இப்பாட்டை முடித்துள்ளார். இந்த வேதாந்தத்தைப் பேராசிரியர் மோகன் அவர்களின் கருத்தை தொடக்கத்தில் கண்டோம்.

86. கேள்வி : எமர்சன் வாழ்வின் ஒரு நிகழ்ச்சி பாரதியாரை எங்ஙனம் நினைவுபடுத்துகிறது ?

பதில் : உலகச் சிந்தனையாளருள் எமர்சன் முதன்மையானவர். அவர் வாழ்ந்தது அறுபது அகவை மட்டுமே. எமர்சனைப் பார்த்து ஒருவர் தங்கள் அகவை என்ன என வினவினார். அதற்கு எமர்சன் 360 ஆண்டுகள் என்றார். இதை யார் நம்புவார்கள்? என்றார் கேட்டவர். உலகில் இயலாதது ஆயிற்றே எனக் கேட்டார். அப்போது எமர்சன் 360 ஆண்டுகளில் எங்ஙனம் வாழ முடியுமோ அங்ஙனம் இந்த 60 அகவையைப் பயன்படுத்தி வாழ்ந்துள்ளேன் என்றார்.

பாரதியாரும் இம்மண்ணுலகில் முப்பத்தொன்பது ஆண்டுகளே உயிர் வாழ்ந்தார். அந்த முப்பத்தொன்பது ஆண்டுகளில் ஒரு பொழுதும் வீணாள் ஆக்காமல் நன்னாளாக்கி வாழ்ந்து காட்டியுள்ளார்.

"எள்ளத்தனைப் பொழுதும் பயனின்றி
இராதென்றன் நாவினிலே" என்பதால் இவர் எள்ளளவும் பொழுதை வீணாக்கவில்லை என்பதறியலாம்.

"தேடிச் சோறு நிதம் தின்று–பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி–மனம்
வாடித் துன்பமிக உழன்று– பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து– நரை
கூடிக் கிழப்பருவம் எய்திக்– கொடுங்
கூற்றுக்கு இரையெனப் பின்மாயும்– பல
வேடிக்கை மனிதரைப் போல்– நான்
வீழ்வேன் என்று நினைத்தாயோ?"

மேற்கண்ட பாடலால் பாரதியாரின் வாழ்வு பயனுள்ள வாழ்வு என்பது விளங்கும். அவர் ஒவ்வொரு நொடியும் பயனுள்ள வாழ்க்கை வாழ்ந்து காட்டியுள்ளார். ஒரு மனிதனின் ஆயுட்காலம் நூறு என்றால் கூட பாரதியார் 39 ஆண்டுகளில் எமர்சன் கூறியவாறு ஆறு மடங்கு பயனுள்ள வாழ்வு வாழ்ந்துள்ளார். அப்படிப் பார்த்தால் 39x6=234 ஆண்டுகள் வாழ்ந்தார் எனலாம்.

"எனைச் சுடர் மிகும் அறிவுடன் படைத்து விட்டாய்
வல்லமை தாராயோ – இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே"
என சக்தியைப் பாடியுள்ளார்.

இதனால் தனக்காக மட்டுமன்றி இவ்வுலகம் நலமுடன் வாழ பல பணிகள் செய்ய வல்லமை தாராயோ என வேண்டினார்.

87. கேள்வி : பாரதியார் தம்மை ஒரு சித்தர் என அழைத்துக் கொண்டதேன் ?

பதில் : தமிழகத்தில் பதினெண் சித்தர்கள் வாழ்ந்துள்ளனர். திருமூலர், வள்ளல் பெருமான் முதலியோர் சித்தரேயாவர். சித்தர்கள் பொதுவாக உருவ வழிபாடு மறுத்தவர்கள். சாதி வேறுபாடுகளைக் கண்டித்துள்ளனர். தம் பேராற்றலைப் பிறரும் பெறவேண்டுமென்ற எண்ணமுடையவர்.

"முத்திநிலை பெற்றேன் அம்முத்தியினால் ஞான
சித்தியை உற்றேன் சித்தனு மானேன்"

என்றார் வள்ளலார் பெருமான்.

பொதுவாக பற்றற்ற உயர்நிலையில் ஞானம் கைவரப் பெற்றவரே சித்தராவர்.

"காக்கைக் குருவி எங்கள் சாதி – நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்"

என்ற பொதுநல உணர்வால் பாரதியார் ஞானம் பெற்ற சித்தருமாவர். ஆன்மநேய ஒருமைப்பாடு உடையவரே சித்தர். "தன்னைவென்றால் அவையாவும் பெறுவது சாத்தியமாகும்"

என ஆத்மஜயம் என்ற தலைப்பில் பாடியுள்ளார்.

எனவே பிறரை வெல்வது வீரமாகும். தன்னை வெல்வது மாபெரும் வீரமாகும். இது சித்தர் நிலை. இதனை உணர்த்தி, தன்னை வென்று பாரதியார் விளங்கினார். புலன்களை வென்றான்தன் வீரமே வீரம். சமண சமயத் தலைவர் மகாவீரர் எனக் கூறப்பட்டிருப்பதை அனைவரும் அறிவர்.

"இத்தரை மீதினிலே இந்த நாளினில்
இப்பொழுதே முத்திச் சேர்ந்திட நாடிச்
சுத்த அருவ நிலையில் களிப்பவர்
தூயவராம் என்றிங்கு ஊதடா சங்கம்"

என்பது பாரதியாரின் ஞானவுரை.

அறிவே தெய்வம், பரசிவ வெள்ளம், நான், சித்தாந்தச் சாமி கோயில், பக்தி முதலிய ஞானப்பாடல்களில் அவரது சித்தர் நெறியைக் காணலாம்.

“சித்தின் இயல்பு அதன்பெரும் சக்தியின்
செய்கையும் நீ தேர்ந்துவிட்டால் மனமே!
எத்தனை கோடி இடர்வந்து சூழினும்
எண்ணம் சிறிதும் உண்டோ"

தன்னை அறியும் அறிவே ஞானம் என உணர்த்தியவர்கள் சித்தர்கள். அதனைப் பாரதியார் அடைந்து விட்டார். வானில் செல்லல், நீரில் நடத்தல், இரசவாதம், கூடு விட்டுக் கூடு பாய்தல், காய சித்தி போன்றவற்றை அட்டமாசித்திகள் என்றாலும் அச்செயல்களே முதன்மையானவை அல்ல, அவை தேவையற்றவை என்பது பாரதியார் கருத்தாகும்.

“அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி
அகத்திலோர் அன்பினோர் வெள்ளம்
குறிகுண மேதும் மில்லதாய்
அனைத்தாய்க் குலவிடும் தனிப்பரம்பொருளே"

என்பது பாரதியார் பாடல்.

“எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தாரப்பா
யானும் வந்தேன்ஒரு சித்தன் இந்தநாட்டில்"

என்று பாரதியார் அறுபத்தாறு என்ற தலைப்பில் பாடப்பட்டது பாரதியார் வாய்மொழியாகும். இதனால் அவர் ஒரு சித்தர் என்ற பரிமாணமும் பெற்றவர்.

88. கேள்வி : பாரதியாரை முதன் முதலாகத் தாம் கண்டது பற்றி அறிஞர் வெ. சாமிநாதசர்மா கூறுவதென்ன ?

பதில் : தமிழறிஞர் வெ. சாமிநாத சர்மா உலகச் சிந்தனைச் செல்வங்களைத் தமிழில் எழுதிக் குவித்தவர் பன்முகப் பார்வையாளர். தமிழ்மறுமலர்ச்சிச் சிந்தனையாளர். அவர் முதன்முதலாகப் பாரதியாரைக் கண்ட அனுபவம் பற்றி 'நான்கண்ட நால்வர்' என்ற நூலிலே குறிப்பிட்டுள்ளார்.

"1915ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் பாரதியார் காலை 10 மணிக்குத் தேசபக்தன் காரியாலயத்திற்கு வந்தார். அப்பொழுதுதான் நான் முதன்முதலாகப் பார்த்தது. அங்குத் தலைப்பாகை, நெற்றியில் குங்குமப்பொட்டு, நறுக்கு மீசை, ஒப்பன் கோட், கழுத்தில் நெக்டை. காலருக்குப் பதிலாக நீலநிறத் துண்டு, குழிந்த கன்னங்கள், ஆனால் ஒளிவீசும் கண்கள், வாயில் நீண்ட சுருட்டு, இந்தக் கோலத்துடன் அவர் இருந்தார்." இங்ஙனம் பாரதியார் தோற்றம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

"திரு.வி.க. உதவி ஆசிரியர்களைப் பாரதியாருக்கு அறிமுகப்படுத்தினார். இவர்தாம் சாமிநாதசர்மா என என்னை அவருக்கு அறிமுகப் படுத்தினார்." "ஓ! இவர்தான் போர் வீரரோ?" என உரக்கச் சிரித்தார். பின் சிறிது நேரம் இருந்து விட்டுப் பாரதியார் போய் விட்டார்.

தேசபக்தன் இதழில் சாமிநாத சர்மா "சுயராஜ்யப்போர் முனையிலிருந்து" என்ற தலைப்பின் கீழ் தான் ஒரு போர் வீரனாகக் கற்பனைச் செய்து எழுதிக் கொண்டிருந்தார். அதைப் பாரதியார் படித்துள்ளார். ஆகவேதான் அவரைப் பார்த்து அங்ஙனம் குறிப்பிட்டுச் சிரித்தார் என பரலி சு. நெல்லையப்பர் சொல்ல, சர்மா தெரிந்து கொண்டார். சர்மா மெலிந்த உடலமைவு உடையவர். உடலை நன்கு பேணி வளர்க்க வேண்டுமெனப் பாரதியார் தம் சிரிப்பின் மூலம் உணர்த்தியதாக நெல்லையப்பர் சர்மாவுக்கு ஆறுதல் கூறினாராம்.

1920 முதல் 1921 செப்டம்பர் மாதம்வரை சுதேசமித்திரன் இதழில் உதவி ஆசிரியராக இருந்தார். அப்போது சர்மா அவர்கள் ஒரிரு முறை சந்தித்துள்ளார். "அப்போது பாரதியாரின் மேதாவிலாசம் எனக்குப்

புலப்படவில்லை. அவருடைய அருமை பெருமைகள் அக்காலத்தில் பலருக்குப் புலப்படாமல் தான் இருந்தன. அவர் மறைந்த பிறகுதான் அவர் ஒரு சாதாரண மனிதர் அல்லர் என்பதை உணரத் தலைப்பட்டேன். என் மதிப்பிலே படிப்படியாக உயர்ந்தார். அவர் மதிப்பிட வேண்டிய வைரமென உணர்ந்தேன். அவரிடம் பக்தியே கொண்டேன். இப்பொழுது அவரை ஒரு மகாகவியாகவே வழிபடுகின்றேன்" என சாமிநாதசர்மா குறிப்பிட்டுள்ளார்.

89. கேள்வி : உழைப்பையும் தொழிலையும் பாரதியார் எவ்வாறு மதித்தார் ?

பதில் : பாரதியார் உழைப்பையும், அனைத்துத் தொழில்களையும் உயர்வாகப் பெரிதும் மதித்தார். உழைக்காத சோம்பேறிகளைக் கண்டனம் செய்துள்ளார். வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம் என்றார். உழுதுண்டு வாழ்வீர் என்றும், உழைக்காமல் "பிறர் பங்கைத் திருடுதல் வேண்டா" என அறிவுறுத்தியுள்ளார்.

"பயிற்றிப்பல கல்வி தந்து பாரை உயர்த்திடவேணும்" எனவிரும்பினார்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் – வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்"

என்றார். தொழில்களைப் பாரதியார் இரண்டாகப் பிரித்தார். ஒன்று உழவு. மற்றவை தொழில்கள். உழவு இன்றி உயிர்கள் உயிர்வாழ முடியாது. ஏர் நடக்கா விட்டால் நாட்டில் பசி பெருகும். உயிர்த் தொழிலாகவும், உயர் தொழிலாகவும் உழவு விளங்குவதால், அதனைத் தனியே பிரித்துக் கூறினார். பிறதொழில்கள் பற்றியும் போற்றினார்.

"பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்
ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்
குடைகள் செய்வோம் உழு படைகள் செய்வோம்
கோணிகள் செய்வோம் இருப்பாணிகள் செய்வோம்
காவியம் செய்வோம் காடு வளர்ப்போம்
ஓவியம் செய்வோம் நல்ல ஊசிகள் செய்வோம்
உலகத் தொழில் அனைத்தும் உவந்து செய்வோம்"

இப்பாடலில் தொழில்கள் சிலவற்றைக் கூறினார். உலகில் என்னென்ன தொழில்கள் உள்ளனவோ அனைத்தையும் மகிழ்ச்சியுடன் செய்வோம் என்றார். ஒவ்வொருவரும் தத்தமக்குப் பிடித்த ஏதேனும் ஒரு வேலை செய்து பிழைக்கவேண்டும். தொழில்களில் உயர்வு தாழ்வில்லை என்பது பாரதியார் கருத்து. இன்றைய அறிவியல் முன்னேற்றத்தால் உடலுழைப்பு குறைந்துள்ளது. சிந்தனையுழைப்போடு உடல் உழைப்போடு சேர்வதை வலியுறுத்த வேண்டும்.

"ஒயுதல் செய்யோம் தலை சாயுதல் செய்யோம்" என்பதால் சோம்பியிருக்கக் கூடாது என்பதையும் உணர்த்தினார். தொழில்கள் செய்தால்தான் வீடும், நாடும், உலகமும் உயரும்.

90. கேள்வி : பாரதியாரின் சமயோசித நகைச்சுவைக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக ?

பதில் : காசியிலிருந்த தமிழகம் வந்த பாரதியார் சில காலம் கடையத்தில் தங்கியிருந்தார். அக்காலத்தில் கிராமங்களில் தெருக்கூத்து, பிரசங்கம் இவையெல்லாம் நடக்கும். கடையத்தில் ஒரு பிரசங்கம். வள்ளித் திருமணம் பற்றி ஒரு பிரசங்கி கதையைப் பாட்டாக, பேச்சாக நடத்திக் கொண்டிருந்தார். அதில் ஒரு பகுதி வேடர்கள் காட்டில் பூசை விழா நடத்துகிறார்கள். அப்பூசையில் பாக்கு வைச்சான், வெத்தலை வைச்சான், புகையிலை வைச்சான், பழம் வைச்சான், ஒன்னு வைக்க மறந்து விட்டான் என்று ஒரு வேடன் ஆவேசம் வந்து பாடுகிறான். இறுதியில் அவ்வேடன் சுண்ணாம்பில்லே, சுண்ணாம்பில்லே என்று கூறியதாகப் பாகவதர் கதையை வேடிக்கையாக, மிக ரசமாகப்பாடி நடத்திக் கொண்டிருந்தார். அதைக் கேட்ட பாரதியார், பக்கெனச் சிரித்துவிட்டார்.

இதைப்பின்னர் நண்பர்களிடம் கூறி நகைத்துள்ளார். அப்போது பாரதியார் நண்பர்களிடம் இப்பாட்டு ஒருவாறு நம் நாட்டு மக்களுக்கு மிகவும் பொருந்தும் என்றார். நண்பர்கள் எப்படி என்று கேட்டனர். அதற்குப் பாரதியார். "கடவுள் நம் மக்களுக்கு நிலம் வைச்சான், வளமும் வைச்சான், பலமும் வைச்சான், ஒன்று வைக்க மறந்துட்டான். அது புத்தியில்லே, புத்தியில்லே" என்றாராம். உடனே அங்கிருந்த அனைவரும் கொல்லெனச்

சிரித்தனர். இங்ஙனம் பாரதியார் நகைச்சுவையைப் பொருத்தமாகக் கூறுவதில் வல்லவர். பாரதியார் பண்பு நலங்களுள் நகைச்சுவையும் சிறப்பான இடத்தைப் பெறும்.

91. கேள்வி : பாரதியார் கவிதை, உரைநடையில் காணப்படும் அணிகளை விளக்குக ?

பதில் : அணிகள் கவிதைக்கு மேலும் அழகூட்டுவன. "அணியில்லாக் கவிதை பணியில்லா வனிதை" என்பது பழமொழி. உவமையணியே அணிகளுக்கெல்லாம் தாயாகும். பாரதியார் பாடல்களில் காணப்படும் உவமைகள் அளவிறந்தன.

"பால் போலும் தேன்போலும் இனிய சொல்வோர்
இடும்பைக்கு வழிசொல்வார் நன்மைக் காண்பார் "

என்று விதுரன் கூற்றில் உவமையணி அமைந்துள்ளது.

இனிய சொல்லுக்குப் பாரதியார் பாலையும், தேனையும் உவமையாகக் கூறியுள்ளார்.

தருமன் சூதில் நாட்டை வைத்து இழந்தான். இந்தச் செயலுக்குப் பாரதியார் இரண்டு உவமைகளைக் கையாண்டுள்ளார்.

"கோயில் பூசைசெய்வோர் சிலையைக் கொண்டு விற்றல் போலும்
வாயில் காத்து நிற்போன் வீட்டை வைத்திழத்தல் போலும்
ஆயிரங்களான நீதி அவை உணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான் சீச்சீ சிறியர் செய்கை செய்தான்"

இதைவிடப் பொருத்தமான உவமைகளை வேறு எவரும் இதற்கு ஈடாகப் பாட முடியாது. மேலும் சீச்சீ என்ற ஒரே சொல்லில் நாட்டை வைத்து இழந்ததை இகழ்கிறார்.

"சுட்டும் விழிச்சுடர்தான்– கண்ணம்மா சூரிய சந்திரரோ
வட்டக் கரியவிழி – வானக் கருமைகொல்லோ
சோலை மலரொளியோ – உனது சுந்தரப் புன்னகைதான்"

என்றெல்லாம் உவமைகள் இயல்பாக, அருமையாக இடம்பெற்றுள்ளன.

"வெள்ளை நிறத்தொரு பூனை – எங்கள் வீட்டில் வளருது கண்டீர்
சாம்பல் நிறம் ஒரு குட்டி, கருஞ்சாந்து நிறமொரு குட்டி
பாம்பு நிறமொரு குட்டி, வெள்ளைப் பாலின் நிறமொரு குட்டி"

என்பதில் நிறத்திற்கான உவமைகள் இயல்பாய், புரண்டு வந்தமைந்துள்ளன.

காலையில் கடலில் சூரியன் தோன்றுவதை.

"காலை இளம் பரிதி வீசும் கதிர்களிலே
நீலக் கடலோர் நெருப்பெதிரே சேர்மணிபோல்"

என்று குயில்பாட்டுத் தொடக்கத்தில் அருமையான உவமையைக் கையாண்டுள்ளார்.

92. கேள்வி : பாரதியாரின் மொழிபெயர்ப்பு வளத்தினை விளக்குக ?

பதில் : பாரதியார் ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம், உருது முதலிய பல மொழிகள் தெரிந்தவர். இவரின் மொழிபெயர்ப்புப்பணி இருவகையானது. ஒன்று பிறமொழிகளிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தது. தம் பாடல்களைப் பிறமொழிகளில் மொழிபெயர்த்தது மற்றொன்று. பிறமொழியிலிருந்து தமிழ் மொழிபெயர்ப்புச் செய்யும் போது, வரிக்கு வரி என்று மொழிபெயர்க்கவில்லை. சாரத்தை மட்டும் மொழிபெயர்ப்பார். எந்த மொழியிலிருந்து, எந்த நூலிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது என்பதை பாரதியாரே குறிப்பிட்டுள்ளார். "பாரதியார் இந்தப் பகுதியை மொழி பெயர்த்துள்ளேன் என்று கூறாமல் இருந்திருந்தால் இவரது மொழி பெயர்ப்புத்தான் மூலமொழி என நினைக்கும் அளவுக்கு அமைந்திருக்கும்" என நாவலர் சோமசுந்தர பாரதியார் நயந்து கூறியது எண்ணத்தக்கது.

இந்துஸ்தான் ரெவ்யூ பத்திரிகையில் ஸ்ரீவாடியா எழுதிய ஒழுக்கம் பற்றிய மொழிபெயர்ப்பு, சுவாமி விவேகானந்தர், எமர்சன் கட்டுரைகள் மொழிபெயர்ப்பு, பாலகங்காரதர திலகர் சொல்லியவை இரவீந்திரநாத் தாகூரின் பாடல்தமிழாக்கம் இவையன்றி தெலுங்கு, வங்க மொழி முதலியவற்றிலிருந்தும் சிலவற்றைத் தமிழிலே மொழிபெயர்த்துள்ளார்.

ஸ்ரீமான் அரவிந்தகோஷின் கட்டுரை மொழிபெயர்ப்பில் சில பிழைகள் குறித்துப் பாரதியார் தம் கருத்தை கூறினார். "இம்மொழி பெயர்ப்பைச் சகல மக்களுக்கும் தெளிவாகும்படி மிக எளிய நடையிலே அமைக்க வேண்டுமென்று சிரமப்பட்டிருக்கிறேன். என்னை அறியாமல் அகராதிப் பண்டிதர்களுடைய சில கறகறமொழிகள் விழுந்திருக்கின்றன". பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழில் மொழிபெயர்த்திடுதல் வேண்டும் என்பதற்கு அவரே ஒரு சான்றாவார்.

பாரதியார் தம் கவிதைகள் சிலவற்றைஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். கண்ணன் என் தாய், கண்ணம்மா என் காதலி, திருமகளைச் சரண்புகுதல், பகைவனுக்கு அருள்வாய், பெண்கள்விடுதலைக் கும்மி, சிவசக்தி வேள்விப்பாட்டு, நெருப்புக்கு வணக்கம் முதலியனவாகும். மேலும் ஆண்டாள் பாடல்கள் சில, நம்மாழ்வார் பாடல்கள் சிலவற்றையும் மொழி பெயர்த்துள்ளார். மேலும் தம் உரைநடை, கதைகள் சிலவற்றையும் ஆங்கில மொழிபெயர்ப்பாக்கினார். இவரின் ஆங்கில மொழிபெயர்ப்புத் திறனைப் பலர் பாராட்டினர். அரிய சொற்களை உரிய வகையில் எழுதிய இவருடைய ஆங்கில புலமை சிறப்புடையது.

"கண்ணம்மா என் காதலி" என்பதை மற்றவர்கள் "Kannamma my lady Love" என்று மொழிபெயர்ப்பர், ஆனால் பாரதியோ, In each other arms (ஆரத்தழுவிய காதல் நிலை) என மொழி பெயர்த்துள்ளார். பாரதியார் ஆங்கிலம் முதலிய மொழிகளிலிருந்து தமிழிலும், பிரெஞ்சு தமிழிலிருந்து ஆங்கிலத்திலும் மொழியாக்கம் செய்துள்ளார்.

தம்மை ஷெல்லிதாசன் என்று அழைத்தது போல, வால்ட் விட்மனின் வசன கவிதையைப் போற்றியதும் ஆங்கிலத்திலேயே நூல் எழுதியதும் பாரதியாரின் தனிப்பெருமையாகும். கீதை மொழி பெயர்ப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

93. கேள்வி : பாரதியாரின் ஆளுமை பற்றி நாம் அறிவதென்ன ?

பதில் : பாரதியார் பல்வகைப் பாடல்களைப் பாடியுள்ளார் பாரதநாடு, தமிழ்நாடு, இந்திய விடுதலை, தேசிய இயக்கப்பாடல்கள், தேசியத் தலைவர்கள், பிறநாடுகள், தெய்வப்பாடல்கள், தோத்திரப்பாடல்கள், வேதாந்தம், ஞானப்பாடல்கள், பல்வகைப் பாடல்கள், சுயசரிதை, வசனகவிதை முதலியவற்றின் வாயிலாகவும், முப்பெரும் பாடல்களான கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு முதலியவற்றின் வாயிலாகவும் அவரது பன்முகப் புலமைப் பல்வகை ஆற்றல் புலனாகின்றன.

"கவிதைக்குரிய பொருளாகப் புது விஷயங்களைப் பாரதியார் கொண்டவர். பழம் பொருள்களைக் கூறுமிடத்தும் புதுமுறையில் கலைநயம் தோன்ற கவித்துவ ஆற்றலோடும், உணர்ச்சி வேகத்தோடும் பாடியுள்ளார்" அறிஞர் வையாபுரிப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். இதனால் பாரதியாரின் வெளிப்படுத்தும் ஆளுமைப்பண்பு விளங்கும். மூன்று காப்பியங்கள், சிற்றிலக்கியமான விநாயகர் நான்மணிமாலை, பாரதமாதா திருப்பள்ளிஎழுச்சி, புதிய ஆத்திசூடி ஆகியவற்றில் பாரதியாரின் புலமை ஆற்றல் நன்கு புலப்படும். இங்ஙனம், பாரதியார் பாடல்களில் அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி, அகத்திலே அன்பினோர் வெள்ளம் முதலிய அரிய திறமைகள் எங்கும் பரவியிருப்பதைக் காணலாம்.

"நாட்டினைத் துயரின்றி நன்கமைத்திடுவதும்
உள்ளமெனும் நாட்டை யொருப்பிழையின்றி
ஆள்வதும், பேரொளி ஞாயிறேஅனைய
சுடர்தரு மதியோடு துயரின்றி வாழ்தலும்
நோக்கமாக் கொண்டு நின்பாதம் நோக்கினேன்"

என்பதில் பாரதியார் தம் குறிக்கோளும் கோட்பாடும் அமைந்த பாங்கைப் பாடினார்.

புதிய ருஷ்யாவை போற்றிப்பாடிய பாரதியாருக்கு சோவியத் நாட்டில் கவிஞர்கள் பலர் அஞ்சலி செலுத்தியுள்ளனர். பாரதியார் நூற்றாண்டு விழாவினை மாஸ்கோவில் கொண்டாடினர். அவர்களுள் ஒருவர்

அனட்டலி பார்ப்பரா என்ற ரஷ்ய மொழிக் கவிஞர். அவர் "பாரதியார் ரஷ்யப்புரட்சி நிகழ்வுகளை நன்குணர்ந்தவர், புரட்சியின் சித்தாந்த உண்மையை முதன் முதலில் இந்தியாவில் பரப்பியவர். ரஷ்யாவின் அந்த நாள் உண்மை நிலைகளை 'சுரேசமித்திரன்' மூலம் பரப்பியவர். புரட்சிப் பெருந்தத்துவத்தின் சாளரத்தைத் திறந்து காட்டிய காந்தியை மகாத்மா என்று வாழ்த்தியவர். "ஜெகம் அனைத்தும் எமது நாடு போல் சிறந்தவைதான் என்பதை உணர்த்தியவர்" என்று இலங்கை திறனாய்வாளர் கே.எஸ்.சிவகுமாரன் குறித்தது நினைக்கத் தக்கது.

94. கேள்வி : கோயில் யானையால் தனக்கு நேர்ந்ததை குறிப்பிட்ட விதம் வரைக ?

பதில் : பாரதியார் நன்னெஞ்சம் படைத்தவர். உயிர்கள் மீது இரக்கம் கொண்டவர். தீமை செய்தோருக்கும் நன்மை செய்ய விரும்புவார். இதனைப் "பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே, பகைவனுக்கு அருள்வாய்" என்பதில் காணலாம். மேலும் அவர்,

"தின்னவரும் புலி தன்னையும் அன்போடு
சிந்தையில் போற்றுவாய் நன்னெஞ்சே"

என்றும் பாடியுள்ளார்.

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானை பாரதியாரைக் கீழே தள்ளி விட்டது. அது குறித்து பாரதியார், "யாரென இன்னாரெனத் தெரியாமல் தள்ளி விட்டது. தெரிந்திருந்தால் தள்ளியிருக்காது. துன்புறுத்தும் எண்ணம் இருந்திருந்தால் கீழே விழுந்ததும் தூக்கி எறிந்திருக்காதா? அல்லது கால்களால் துவைத்திருக்காதா? அப்படியே நின்றதன் அர்த்தம் என்ன? என்னிடம் அதற்குள்ள அன்பே காரணம்", இச்செய்தியை தமிழகம் தந்த மகாகவி என்ற நூலின் பதிப்பாசிரியர் சீனி.விசுவநாதன் குறிப்பிட்டதை படிக்கும்போது மனம் உருகும்.

பகைவருக்கும் அருள வேண்டும். தின்னவரும் புலி தன்னையும் அன்புடன் போற்றவேண்டும் என்ற பாரதியார் யானை மீது கோபம் கொள்வாரா? அதனையும் பொங்கிய பரிவுடன் பாராட்டியுள்ளார்.

95. கேள்வி : பாரதியாரின் இயற்கை நேயத்தை விவரிக்கவும் ?

பதில் : உண்மையைச் சொல்லப்போனால் மனிதரிடமிருந்து கற்றுக்கொள்ள ஒன்றுமில்லை. இயற்கையே நமக்குத் தாய், தந்தை, குரு என்பதெல்லாமாகும். திருவள்ளுவர் பொறுமைக்கு நிலத்தைக் காட்டினார். ஊக்கத்திற்குப் புலியைச் சொன்னார். மானத்திற்கு மானைச் சுட்டினார். மென்மைக்கு அனிச்சம், முக அழகுக்கு மதி, கண்ணுக்குக் குவளை என இயற்கையையே சான்று காட்டினார். பஞ்சதந்திரக் கதைகளிலே எல்லாமே உயிரினங்களே காட்டப்பட்டுள்ளன.

பாரதியார் இயற்கையைக் கண்டு மகிழ்வார், இரசிப்பார். அவர் சென்னையில் இருந்தபோதும், புதுவையில் இருந்தபோதும் தவறாமல் கடற்கரைக்குச் சென்று நீலக்கடலின் அலைகளை, வண்ணக்கோலங்களைக் கண்டு களிப்பார். மாந்தோப்பு, மடுவுகள், ஆறுகள், ஞாயிறு, திங்கள், காற்று, தீ, விலங்குகள், பறவைகள், மாஞ்செடி, கொடிகள், மலர்கள் இவற்றைக் காண்பதில் பேரார்வம் உடையவர்.

"பறப்பதிலே உண்டாகும் இன்பம் கொஞ்சமன்று,
ஓடும் தண்ணீரிலே நீந்துவது சிறிது நேரம் இன்பமாயிருக்கும்,
ஆனால் வானத்தில் நீந்திச் செல்வது சதா இன்பம்"

எனக் கூறியுள்ளார்,

"சின்னஞ்சிறு குருவி போலே –
நீ திரிந்து பறந்துவா பாப்பா!
வண்ணப் பறவைகளைக் கண்டு –
நீ மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா!"

"வாராய் நிலவே வையத் திருவே
வெள்ளைத் தீயில் விளையும் கடலே
வானப் பெண்ணின் முகமே ஒளியே
வாராய் வா"

என நிலவை அருமையாக உணர்ந்துள்ளார்.

"காற்றே வா! மகரந்தத் தூளைச் சுமந்துகொண்டு
மனத்தை மயலுறுத்துகின்றஇனிய வாசனையுடன் வா"

இவ்வுலகம் இனியது, இதிலுள்ள வான் இனிமையுடையது,

"காற்றும் இனிது, தீ இனிது, நீர் இனிது, நிலம் இனிது
ஞாயிறு நன்று, திங்களும் நன்று
வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன
மழை இனிது மின்னல் இனிது இடி இனிது"

என இயற்கையின் படைப்புகள் எல்லாம் இனியன என்றார்.

96. கேள்வி : பாரதியாரின் சமயப் பொதுமையை, நல்லிணக்கத்தை விளக்குக ?

பதில் : பாரதியார் பிறப்பால், வாழ்வால் இந்து சமயத்தவர், இந்துக் கடவுளர் பலரை வணங்கிப் பாடியுள்ளார். இந்து சமய மூடநம்பிக்கைகள் சிலவற்றை வன்மையாகக் கண்டித்துள்ளார். பாரதியார் சாதி, சமயங்களுக்கு அப்பாற்பட்டவர். எந்தச் சமயத்தையும் வெறுத்தாரில்லை. பிற புறச் சமயங்களைப் பாராட்டியே பாடியுள்ளார். இதனைத் தெய்வப் பாடல்களில் புத்த தரிசனம் என்ற தலைப்பில் கீழே காணலாம்.

"பொன்மரத்தின்கீழ்– அந்தப் பொன்மரத்தின்கீழ் வெறும்
சின்மய மானதோர் தேவன் இருந்தனன்
புத்தபகவான்– எங்கள் புத்தபகவான்
சுத்தமெய்ஞ்ஞானச் சுடர் முகம் கண்டேன்"
என்று புத்தர் பெருமானைப் போற்றியுள்ளார்

"உண்மை என்ற சிலுவையிற் கட்டி
உணர்வை ஆணித்தவம் கொண்டடித்தால்
வண்மைப் பேருயிர் யேசு கிறிஸ்து
வான மேனியில் அங்கு விளங்கும்
பெண்மை காண் மரியா மக்தலே– நா
பேணும் நல்லறம் யேசு கிறிஸ்து
நுண்மை கொண்ட பொருளிது கண்டீர்
நொடியில் இஃது பயின்றிடலாகும்"

என்று ஏசு நாதரையும், அன்னை மரியாளையும் போற்றியுள்ளார். மேலும், அல்லா, அல்லா, அல்லா என்ற தலைப்பில்,

"கல்லாதவ ராயினும் உண்மை சொல்லாதவ ராயினும்
பொல்லாதவ ராயினும் தவமில்லாதவ ராயினும்
நல்லாருரை நீதியின்படி நில்லாவேராயினும்
எல்லாரும் வந்தேத்தும் அளவில் யமபயங்கெடச் செய்பவன் அல்லா"

எனப் போற்றினார்.

இப்பாடல் கடையத்தில் ஒரு பள்ளி வாசலில் சென்று பாரதியார் பாடினார் என்பர்.

"தீயினைக் கும்மிடும் பார்ப்பார் – நித்தம்
திக்கை வணங்கும் துருக்கர்
கோயில் சிலுவையின் முன்னே– நின்று
கும்பிடும் யேசு மதத்தார்"

என்று ஒவ்வொரு சமயத்தாரின் வழிபாட்டு முறையைச் சுட்டிக் காட்டியுள்ளார். பாரதியார் எல்லாச் சமயங்களையும் இணையாகப் போற்றினார்.

"பூமியிலே கண்டமைந்து, மதங்கள் கோடி
புத்தமதம், சமணமதம், பார்சி மதம்
சாமியென யேசுமதம் போற்றும் மார்க்கம்
சனாதனமாம் இந்துமதம் இஸ்லாம் யூதம்
நாமமுயர் சீனத்துத் "தாவு" மார்க்கம்
நல்லகண் பூசி மதம் முதலாப் பார்மேல்
யாமறிந்த மதங்கள் பல உளவா மன்றே
யாவினுக்கும் உள் புதைந்த கருத்து இங்கொன்றே"

என்பதால் மதங்கள் பல வாயினும் எல்லாம் தங்களின் தொடக்கம் ஒன்றேயாக உருவாயின வேண்டும். "பொங்குபல சமயமென்ற நதிகள் எல்லாம் புகுந்து கலந்து விளங்கும் கடலே" என்ற வள்ளலார் வாசகம் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

97. கேள்வி : பாரதியாரின் கனவுகள் என்னென்ன ?

பதில் : பொதுவாக நிறைவேறாத விருப்பங்கள் கனவில் வருகின்றன. என்றும் "நம்முடைய மனத்தில் தோன்றுவதுதான் கனவாக வருகிறது" என்பதும், அறிஞர் கருத்து. பாரதியாருக்குப் பல கனவுகள் உண்டு. அவற்றுள் பொது நலமே மிகுதி. சாதிகள்ஒழிய வேண்டும், தமிழ், தமிழ்மக்கள் உயர வேண்டும், பெண்மக்கள் முன்னேற்றம், நாம் விடுதலை பெறவேண்டும் முதலியன அவரது கனவுகளாகும். இவற்றை நிறைவேற்றித் தருமாறு கடவுளிடம் முறையிட்டும் உள்ளார்.

"சாதி மதங்களைப் பாரோம் – உயர்
ஜன்மம் இத் தேசத்தில் எய்தியராயின்
வேதியராயினும் ஒன்றே– அன்றி
வேறு குலத் தவராயினும் ஒன்றே"

என்பது முதற்கனவு.

அதாவது மக்களிடையே உயர்வு தாழ்வு கூடாது என்பது அவரது இலட்சியமாகும்.

"எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கமுண்டு, இவற்றிலே தமிழைப் போல் வலிமையும், திறமையும், உள்ளத் தொடர்பும் உடைய மொழி வேறொன்றுமேயில்லை"

எனத் தமிழின் சிறப்பை உணர்த்தினார். ஆனால் தமிழர் தாய்மொழியைக் கைவிட்டு வேறு மொழிகள் கற்பது கண்டு வேதனைப்பட்டார். தமிழ்நாட்டில் வீதிதோறும், ஊர்தோறும் தமிழ்ப்பள்ளிக்கூடங்கள் நிறுவி எல்லாக் கலைகளையும் தமிழில் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று கூறினார். இது தாய்மொழி பற்றிய வருங்காலக் கனவாகும்.

மூன்றாவது கனவு, நாடு விடுதலை பெறவேண்டும் என்பதாகும். ஆகவேதான்,

“ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்தசுதந்திரம் அடைந்துவிட்டோமென்று
ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே!”

என்ற தொலைநோக்கோடு கனவு கண்டு பாடினார்.

பாரதியார் கண்ட மூன்று கனவுகளுள் விடுதலைக் கனவு நனவாகி விட்டது. ஆனாலும் சமுதாய முன்னேற்றக் கனவு இன்னும் நனவாகவில்லை. தாய்மொழி குறித்த பாரதியார் கனவும் நிறைவேறி வருகிறது என்று ஆறுதல் அடையலாம். சாதி ஒழிய வேண்டும் என்ற கனவும் பெரிய பகற் கனவாகவே உள்ளது. அரசும் மக்களும் திருந்தி ஓரினமாக எந்த வேறுபாடுமின்றி ஏற்றத்தாழ்வில்லாமல் வாழும் காலம் அமைய வேண்டும்.

பாரதியாரின் கனவுகள் நனவாவது எப்போது? காலம்தான் பதில் சொல்ல வேண்டும். பாரதியார் தனக்கென கண்ட கனவுகள் உடல்நலம், நூறு ஆண்டு வாழ்க்கை, அவையும் நிறைவேறவில்லை.

98. கேள்வி : பாரதியார் வெளிப்படுத்தும் வாழ்க்கை நெறியை ஆராய்க ?

பதில் : பாரதியார் தம் தமது வாழ்வு நோக்கத்தைச் சில இடங்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

“நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராது இருத்தல் சிந்தையே! இம் மூன்றும் நவில்” என்றார்.

இம் மூன்றையும் பாரதியார் தம் வாழ்நெறியாக வெளிப்படுத்தியுள்ளார். மேலும் கடமைகள் யாவை எனக் குறிப்பிட்டுள்ளார்.

“கடமையாவன தன்னைக் கட்டுதல்
பிறர் துயர் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல்”

அவருடைய வாழ்நெறியில் வசதியும், உறுதியும், தன்நம்பிக்கையும், மனஉறுதியும் நிரந்தரமாயுள்ளன.

“நமது பாட்டு மின்னலுடைத் தாகுக
நமது வாக்கு மின்போல் அடித்திடுக" என்றும்

“தீயே நிகர்த்து ஒளி வீசும் தமிழ்க்கவி" என்றும்

தம்பாடல்கள் மின்னல்போல, தீயைப் போல ஒளி வீசக் கூடியவை என துணிவோடு மொழிந்தார்.

எட்டையபுரம் அரசர் வெங்கடேச ரெட்டப்பபூபதிக்குப் பாரதியார் எழுதிய நீட்டோலையில் இவரின் அறிமுகம் தன்னிகரற்றதாகும்.

“புவிய னைத்தும் போற்றிட வான்புகழ்படைத்துத்
தமிழ்மொழியைப் புகழில் ஏற்றும்
கவிரயசர் தமிழ்நாட்டுக்கு இல்லையெனும்
வசைஎன்னால் ஒழிந்ததன்றே!" என்பது எண்ணத்தக்கது.

“தமிழகம் தமிழுக்கு தரும் உயர் வளிக்கும்
தலைவனை எண்ணித் தவம்கிடக் கையில்
இலகு பாரதி புலவன் தோன்றினான்"

என்ற பாவேந்தரின் பாடல் இதனை வழிமொழிந்து வணக்கம் செய்கிறது.

“என்றன் பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேணும்" என்றார்.

கவிதை வாயிலாக இவ்வையத்தை உயர்த்திடப் பாரதியார் எந்நாளும் விரும்பினார்.

99. கேள்வி : நல்லதோர் வீணை செய்தே என்னும் சொற்றொடரின் நயம் பிரித்து விளக்குக ?

பதில் : திருவள்ளுவர் முதற்குறளில் உலகு என்ற சொல்லைக் கையாண்டுள்ளார். கம்பர் உலகம் யாவையும் எனத் தொடங்கினார். சேக்கிழார் பெருமான் உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன் எனத் தொடங்கிப்பாடினார். இங்ஙனம் உலகு என்பதை முதலில் வைத்துப் பாடுவது ஒரு மங்கல மரபாகும். அதைப்போல பாரதியாரும் நல்லதோர் என்ற மங்கலச் சொல்லால் பாடலைத் தொடங்கியுள்ளார். இஃது

அமைப்பின் மங்கல மரபின் நயமாகும். ஞானசம்பந்தரும் நல்லநல்ல அவை என்று மங்கலச் சொல்லால் குறிப்பிட்டுள்ளார்.

இசைமீது பாரதியாரின் பற்றும் ஈடுபாடும் அளவிட முடியாதவை. அவருடைய பாடல் பல இசையோடும், பண்ணோடும் பாடத்தக்கவை. அவரது பாடல்களில் இராகம், தாளம் முதலியன குறிக்கப்பட்டுள்ளதை அறியலாம்.

“நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்”

என்பதால் அவரது இசையார்வம் நிகரற்றது.

“காட்டு நெடுவானம் கடலெல்லாம் விந்தையெனில்
பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின் மிசை இல்லையடா”

மேலும் அவருக்கு இசைக்கருவிகள் மீது பேரார்வம் உண்டு.

இதனை

“வேயின்குழலோடு வீணை முதலா மனிதர்
வாயினும் கையாலும் வாசிக்கும் பல்கருவி”

என்பதில் காணலாம்.

பாரதியாருக்குப் பாடும் திறமையும் இசைக்கருவிகளை மீட்டும் திறமும் உண்டு. நல்லதோர் வீணை என்பது ஒரு குறியீட்டை உணர்த்தும் உருவகம். நல்லதோர் வீணை என்பது அழகு, நல்லுடல், நல்லுள்ளம் கொண்ட நல்ல தலையாய மாமனிதனைக் குறிப்பிடுகிறது. வீணையை நலமுறமீட்டி தான் மகிழாமல், பிறரை மகிழச் செய்யாமல் அதன் நன்மை கெடப் புழுதியில் யாரேனும் வீசியெறிவாரோ? அதைப்போலத் தன்னையும் மற்றவரையும் நலம் பெறச் செய்ய வேண்டும். அதை விடுத்து மனிதப் பிறவியை வீணாக்கக் கூடாது என்றார்.

பராசக்தியிடம், வல்லமை வேண்டும், ஊக்கமுள்ள உள்ளம் வேண்டும், நசையறு மனம் வேண்டும், சுடர் தரும் உயிர் வேண்டும், இடரிலும் தளராத மனம் வேண்டும், அசைவறு மதி வேண்டும் என

வேண்டியுள்ளார். இவை இல்லையேல் அழகாகப் படைக்கப் பெற்றான் நல்லதோர் வீணையை புழுதியில் எறிந்தது போலாகும் என்றார். “நல்லதோர் வீணை” என்ற தொடரில் தலைப்பும், நயமும், குறிப்பு நுட்பமும் படித்து இன்புறத்தக்கன என்று பேராசிரியர் மோகன் உள்ளம் உருக உரையெழுதினார்.

100. கேள்வி : மாமனிதனாக விளங்க எண்ணிப் பாரதியார் செய்த சில உறுதிமொழிகள் யாவை ?

பதில் : பழங்காலத்தில் வஞ்சினம் கூறுதல் என்பதை தற்போது சபதம் என்கிறோம். அதனைச் சங்கற்பம் என்று கூறி, பாரதியார் சில சங்கற்பங்களைக் குறித்துள்ளார்.

அ) “இயன்றவரை தமிழே பேசுவேன், தமிழே எழுதுவேன், சிந்தனை செய்வது தமிழிலேயே செய்வேன், எப்போதும் பராசக்தியே முழு உலகின் முதற்பொருள். அதனையே தியானம் செய்து கொண்டிருக்க முயல்வேன். அதனைக் குறித்தே ஓயாமல் எழுதிக்கொண்டிருப்பேன்.

ஆ) பொழுது வீணே கழிய இடம் கொடேன். லௌகீக காரியங்களை ஊக்கத்துடனும், மகிழ்ச்சியுடனும் அவை தோன்றும் போதே பிழையறச் செய்து முடிக்கப் பழகுவேன்.

இ) உடலை நல்ல காற்றாலும், இயன்றவரை உழைப்பதாலும் தூய்மையுறச் செய்வேன்.

ஈ) மறந்தும், மறைத்தும் தற்புகழ்ச்சி பாராட்டுதல் விரும்பேன்.

உ) மூடரின் உள்ளத்தில் என்னைப் பற்றிய பொய் மதிப்புண்டாக இடம் கொடேன்.

ஊ) சர்வசக்தியுடைய பரம்பொருளைத் தியானத்தால் என்னுள்ளே புகச்செய்து எனது தொழில்களையெல்லாம் தேவர்களின் தொழில்போல் இயலுமாறு சூழ்வேன்.

எ) பொய் பேசுதல், இரட்டுறமொழிதல், நயவஞ்சனை, நடிப்பு இவற்றால் பொருளீட்டிப் பிழைத்தல் நாய் பிழைப்பென்று கொள்வேன்.

ஏ) இடையறாது தொழில் புரிந்து இவ்வுலகப் பெருமைகள் பெறமுயல்வேன். இல்லாவிடின் விதிவசமென்று மகிழ்ச்சியோடிருப்பேன்.

ஐ) எப்போதும் மலர்ந்த முகம், இனிய சொல், தெளிந்த சித்தம் இவற்றோடு இருப்பேன். ஓம்''.

மேற்கண்ட உறுதியுரைகள், சூளுரைகள் சங்கற்பங்கள் சி.சுப்பிரமணிய பாரதியார், தராசு, சித்தக்கூடல் 5, பல்வேறு எண்ணங்கள் என்ற பகுதியில் இடம் பெற்றுள்ளது.

ஒருவன் வாழ்க்கையில் வரிசையாகக் குறிப்பிட நல்லுரைகளைப் பின்பற்றி வாழ்ந்தால் மண்ணிலே விண்ணின்பம் அடையலாம். இதனையே பாரதியார் அமரத்தன்மை என்றார். வாழ்வாங்கு வாழவைக்கும் உயரிய குறிக்கோள்களாக என்றும் நிலையாக ஒளிரும்.

101. கேள்வி : வாழ்க்கையைப் பற்றிப் பாரதியார் கருதியவற்றைத் தொகுத்துக் கூறுக ?

பதில் : எங்கிருந்தோ வந்து இவ்வுலகத்தில் சில நாள் வாழ்கிறோம். பிறகு நம்முடைய கதி என்ன ஆகுமோ? கடவுளுக்குத்தான் தெரியும். மூன்று முக்கால் நாழிகை உயிர் வாழ்வது மகிழ்ச்சியாக இருந்து விட்டுப்போகக் கூடாதா? அடடா இந்தப் பூமியில் மனித உயிருக்கு எத்தனை துன்பம் ? எத்தனை பயம் ? எத்தனை இடையூறு ? எத்தனை கொலை ? எத்தனை துரோகம் ? எத்தனைபொய் ? எத்தனை கொடுமை ? எத்தனை அநியாயம் ? ஐயோ பாவம் !

பாரதியார் தாம் வாழ்ந்த காலத்தில் சமுதாயத்தில் மக்கள் எப்படி உழன்று அல்லலுற்று வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்பதைத் தாம் கண்டவண்ணம் எழுதியுள்ளார்.

மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதை "ஒருவருக்கொருவர் மனத்தாலும் தீங்கு நினைப்பதில்லை, ஒருவர்க்கொருவர் பயப்படல் இல்லை, மானிடரே இந்த விரதம் எடுத்துக் கொள்ளுங்கள், இதுவே நன்கு பிழைக்கும் வழி" என்று வழிகாட்டியுள்ளார்.

நோக்கம் இன்னதென்று அறியாமல் உண்டு, உடுத்து, இறந்து போகின்றனர். அவர்கள் எல்லாம் ஏதோ நல்லதோ, கெட்டதோ கொள்கைகளைக் கடைப்பிடித்துக் கருமங்களை அவற்றிற்குரியபடி செய்து ஜீவிக்கும் மனிதர்கள் அல்லர். ஆகையால் கொள்கை என்பது என்ன? ஒரு கொள்கையாவது பகுத்தறிவின் துணையால் செய்யத் தக்கது இது, செய்யத் தகாதது இது என்று ஒருவன் அறிந்து, முன்பின் யோசித்துத் தன் வாழ்நாளில் நீடித்துச் செய்ய, மனத்தால் ஒப்புக்கொள்ளும் கருமத் தொடரின் அஸ்திவாரமாகிய கருத்தாம். "குவலய மீதினில் வெற்று வாழ்க்கை விரும்பி அழிகிலேம்" என்பது பாரதிவாசகம்.

கற்புடைய மனைவியுடன் காதலுற்று, அறம் பிழையாமல் வாழ்தலே இவ்வுலகத்தில் சுவர்க்க வாழ்க்கை ஒத்ததாகும். நமக்கு இவ்வுலகத்தில் வேண்டியவை நீண்ட வயது, நோயில்லாமை, அறிவு, செல்வம் என்ற நான்கும். இவற்றைத் தரும்படி தத்தம் குல தெய்வங்களை மன்றாடிக் கேட்க வேண்டும். உயிர்த்தலுக்கு அனுகூலமான குணங்கள் பொறுமை, அன்பு, துணிவு முதலியன. சாவுக்கு அனுகூலமான குணங்கள் பொறாமை, பகைமை, பயம் முதலியன. எல்லாம் கடவுள் மயம் என்றுணர்ந்தவன், உலகில் எதற்கும் பயப்பட மாட்டான். எக்காலத்திலும் மாறாத ஆனந்தத்துடன் தேவர்களைப் போல இவ்வுலகில் நீடு வாழ்வான்.

"பொய்ம்மை, இரட்டுறமொழிதல், நயவஞ்சனை, நடிப்பு இவற்றால் பொருளீட்டிப் பிழைத்தல் நாய்ப்பிழைப்பென்று கொள்வேன்" என எப்படி வாழ வேண்டும், எப்படி வாழக்கூடாது, கொள்ளத்தக்கன எவை, தள்ளத் தக்கன எவை என உணர வேண்டும் என உணர்த்தியுள்ளார். முத்தாய்ப்பாக,

"இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று நெஞ்சில்
எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு
தின்று விளையாடி இன்புற்று வாழ்வீர்"

என்று நன்கு வாழ, வாழ்த்தும் கூறியுள்ளார். இவற்றையெல்லாம் எழுத்தெண்ணி உணர்ந்து மனிதனாக வாழ முயல வேண்டும்.

102. கேள்வி : பாரதியாரின் நேர்வழி பற்றிய நிகழ்ச்சியைக் குறிப்பிடுக?

பதில் : சென்னை கடற்கரையில் திலகர் திடலில் சத்தியாகிரகம் சம்பந்தமாக ஒரு கூட்டம் நடந்தது. இந்து இதழ் ஆசிரியர் எஸ். கஸ்தூரிரங்க ஐய்யங்கார் தலைமை தாங்கிப் பேசிக்கொண்டிருந்தார். அப்போது பாரதியார் அங்கே வந்தார். பொதுவாகக் கூட்டத்திற்குத் தாமதமாக வருவோர், கூட்டத்தைச் சுற்றிக் கொண்டு, மேடையின் பின்புறமாக வருவார்கள்.

ஆனால் பாரதியாரோ, மக்கள்கூட்டத்தை ஊடுருவிக் கொண்டு தள்ளிக் கொண்டு மேடைக்கு முன்னே வந்தார். இப்படி நடுவில் புகுந்து அமர்ந்த நிலையால், பேச்சைக் கேட்டவர்களுக்குச் சங்கடமும் வருத்தமும் ஏற்பட்டது. எவரும் வாய் திறக்கவில்லை.

அக்கூட்டத்தில் மேடைக்குப் பக்கவாட்டில் நிருபர்கள், தலைவர் பேச்சைக் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தனர். அவர்களுள் தேசபக்தன் பத்திரிகை பிரதிநிதியான அறிஞர் சாமிநாத சர்மாவும் ஒருவர். அன்று மக்கள்கூட்டம் மிக அதிகம். அதனால் பிரதிநிதிகள் அனைவரும் மிக நெருக்கமாக அமர்ந்திருந்தனர். அங்கே வந்த பாரதியார், சாமிநாத சர்மாவையும், இந்து பத்திரிகைப் பிரதிநிதியாக வந்த வாசுதேவ நாயரையும் சிறிது தள்ளிவிட்டு, இவ்விருவர் இடையே அமர்ந்துவிட்டார். சாமிநாத சர்மாவுக்கு ஒரே கோபம். பாரதியாரை முறைத்துப் பார்த்தார். என்ன முறைத்துப் பார்க்கிறீர்கள் எனப் பாரதியார் கேட்டார். அதற்குச் சர்மா, "கூட்டத்தைக் கிழித்துக்கொண்டு குறுக்காக வந்தீர்களே ! சுற்றிக் கொண்டு வரக் கூடாதா?" எனக் கேட்டார்,

அதற்குப் பாரதியார், "நாம் சுற்று வழியில் வரமாட்டோம். நேர் வழிதான் செல்வோம்" என உரக்கக் கூறினார். சர்மா வாய் திறக்கவில்லை.

சிறிது காலத்திற்குப் பிறகு சர்மா, பாரதியார் அன்று சொன்னதை எண்ணிப்பார்த்தார். பாரதியார் சொன்ன அந்த இரண்டு வாக்கியங்களை மனிதர்கள் தங்கள் சொந்த விவகாரங்களில், பொது விவகாரங்களில் நடைமுறையில் கொண்டுவந்துவிட்டால், கடவுள் ஆட்சி என்பது இந்தப்பூவுலகில் வந்து இறங்கி விடும் என்பதில் சந்தேகமென்ன? எனச் சர்மா குறிப்பிட்டுள்ளார்.

நாடு, மொழி, இனம், உலக ஒற்றுமை, மக்களில் வேறுபாடில்லாத ஒருமைப்பாடு, பெண்களின் சமயப் பொதுமை, நல்லுணர்வு என வாழ்வின் அனைத்து நீதிகளையும் ஆறிலிருந்து அறுபது வரை அனைத்து மக்களுக்கும், அழியாக் கவிதை எழுதித் தமிழ் மக்கள் உள்ளத்தில் ஒப்பற்ற மகாகவியாக மிளிரும் பாரதியாரை இந்த வினா விடை போல எத்தனை வகையான இலக்கிய வடிவங்களிலும் நாம் வரைந்தாலும், வடித்தாலும், எண்ணினாலும், எழுதினாலும் நிறைவு காண முடியாத பாரதியாரின் புகழ் நமக்கு ஊக்கமும் ஆக்கமும் வழங்கியபடியே இருக்கும்.

103. கேள்வி : காலத்தின் அருமை பற்றிப் பாரதியார் கூறுவது யாது?

“காலம் பண லாபம் உடையது” என்ற குறிப்புடைய இங்கிலீஷ் பழமொழி ஒன்று இருக்கிறது. இந்தச் சமாச்சாரம் நம்மவருக்குத் தெரிவதே கிடையாது. பொழுது வீணே கழிக்கப்படுமாயின், அதனால் பணலாபம் கிடையாமல் போகும். இன்று செய்யக்கூடிய காரியத்தை நாளைக்குச் செய்யலாமென்று தாமதப்படுத்தி வைப்பதனால், அந்தக் காரியம் பலமாகச் சேதமடைந்து போகும். எதையும் தோன்றிய மாத்திரத்திலே சூட்டோடு செய்யும் போது, அதில் வெற்றி பெரும்பாலும் நிச்சயமாகக் கிடைக்கும். அதைத் தூங்கப் போட்டுவிட்ட பிறகு செய்யப் போனால் அதில் ஆரம்பத்தில் இருந்த ரசம் குறைந்து போகும். அதற்குத் தக்கபடி பயனும் குறைவெய்தும் என்று, காலத்தின் அருமையினைப் பாரதியார் விளக்கியுள்ளார்.

104. கேள்வி : சொல் வேறு, செயல் வேறு என்பதைப் பற்றிய பாரதியார் சிந்தனையைச் சுட்டுக.

கல்லாதவர், மனச்சாட்சிக்கும், சொல்லுக்கும் பயந்து நடந்து கொள்கிறார்கள். ஆனால் படித்தவர்களிடையே சொல்லுக்கும் செயலுக்கும் அதிக தூரம். இதனைத் தற்காலக் கல்வி நிலையுடன் பாரதியார் புலப்படுத்தியுள்ளார். தற்காலப் பள்ளிகளில் சுதந்தரம், ஆண்மை, நேர்மை, உண்மை, வீரியம் இவை அத்தனையும் ஜாக்கிரதையாகக் கற்றுக் கொடுப்பதில்லை. அதிலும் ஒருவன் மனமறிந்த உண்மையின்படி ஒழுக வேண்டுமென்றும், அங்ஙனம் ஒழுகாதிருத்தல் மிகவும் அவமானமும், பாவமுமாகும் என்று கற்றுக்கொடுக்கும் வழக்கமே இல்லை. இந்த விஷயத்தைக்கூட வாய்ப்பாடமாய்ப் படிப்பித்துக் கொடுக்கிறார்கள். ஆனால் ஒழுக்கப் பயிற்சி இல்லை. புத்தகத்துக்கும் வாய்ப் பேச்சுக்கும் செய்கைக்கும் இடையே இலட்சம் யோசனை தூரமாக நடப்பவர்களுக்குச் சான்று காட்டுவதென்றால், நமது நாட்டில் இங்கிலீஷ் பள்ளிக் கூடங்களில் தேறி வரும் மனிதரைப் போல், இத்தனை சிறந்த எடுத்துக்காட்டு வேறெங்கும் கிடைப்பது மிகவும் துச்சமென்று தோன்றுகிறது.

"கனவிலும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு"

என்று, திருவள்ளுவர் பாடியிருக்கிறார். இதன்பொருள் – வாய்ப்பேச்சு ஒரு மாதிரியாகவும் செய்கை வேறொரு மாதிரியாகவும் உடையோரின் உறவு கனவிலும் தொடர்தல் தீது என்பதேயாம். இவ்வாறு சொல் வேறு, செயல் வேறு பட்டாரின் தீமையைக் குறளுடன் விளக்கியுள்ளார். இத்தகைய போக்கு உலகிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகம் என்பது உண்ணம்.

105. கேள்வி : இந்துக்கள் கொடுமை செய்வதாகப் பாரதியார் குறிப்பிடும் இடம் பற்றிக் குறிப்பிடுக :-

பொதுவாக இந்துக்கள் சாதி வேற்றுமை பாராட்டுவதில் கொடுமை காட்டுகிறார்கள் என்பது பாரதியார் கருத்து. அதனைப் பின்வருமாறு கூறுகிறார், "எல்லாச் சரீரங்களிலும் நானே ஜீவனாக இருக்கிறேன் என்று கண்ணன் கீதையில் உணர்த்திய உண்மையையும், எல்லா

உயிர்களிடத்தும் தன்னையும், தன்னிடத்தே எல்லா உயிர்களையும் காண்பவனே காட்சி உடையவன் என்று கண்ணபிரான் அதே கீதையில் சொல்லிய கொள்கைகளையும் வேதோபநிஷத்துக்களின் முடிவான தீர்மானம் என்று தெரிந்த இந்துக்கள், உலகிலுள்ள மற்றெல்லா ஜனங்களைக் காட்டிலும் சாதி வேற்றுமை பாராட்டுவதில் அதிகக் கொடுமை செலுத்துகிறார்கள்". இங்ஙனம் இந்துக்களின் கொடுஞ்செயலைக் குறிப்பிட்டுள்ளார்.

106. கேள்வி : இன்சொல் கூறலைப் பாரதியார் வலியுறுத்தும் பாங்கினைக் குறிக்கவும்.

"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது"

என்ற குறளின்படி இனிய சொற்கள் சொல்வதினின்றும் நன்மைகள் விளைவது கண்டும் மானிடர் ஒருவருக்கு ஒருவர் கொடுஞ்சொற்கள் வழங்குவது மடமை என்பது, உலகத்தில் சாதாரண அனுபவம் உடையவர்களுக்கெல்லாம் தெரியும். அங்ஙனம் தெரிந்தும், கொடுஞ்சொற்களும், கோபச் செயல்களும் நீங்கியவர்களை உலகத்தில் தேடிப் பார்த்தாலும் காண்பது அரிதாகவே இருக்கிறது என்கிறார்.

107. கேள்வி : பிச்சைக்காரன் பாட்டைக் கேட்ட பாரதியாரின் கருத்து யாது?

"தூங்கையிலே வாங்குகிற மூச்சு – அது
சுழிமாறிப் போனாலும் போச்சு"

என்ற பிச்சைக்காரன் பாட்டு வாஸ்தவமாகிவிட்டால் என்ன செய்வது! என்ன இம்சை இது! நூறு வயதுண்டு என்பதேனும் நல்ல நிச்சயமாக இருந்தால் குற்றமில்லை. நூறு வருடங்களில் எவ்வளவோ காரியம் முடித்துவிடலாம். அடுத்த நிமிஷம் நிச்சயமில்லை என்று தீர்ந்துவிட்டால் எதைக் கொண்டாடுவது? இது தட்டி வராது. எப்படியேனும் தேகத்தை உறுதி செய்து கொள்ள வேண்டும். நமது காரியம் முடிந்த பிறகுதான் சாவோம். அதுவரை நாம் சாகமாட்டோம். நம் இச்சைகள், நம்முடைய

தர்மங்கள் நிறைவேறும் வரை நமக்கு மரணமில்லை என்று, பிச்சைக்காரன் பாட்டைக் கேட்ட பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.

108. கேள்வி : பாரத தேசத்துக்கான பாரதியார் நடையைக் காட்டுக. யார் முன்வர வேண்டுமெனப் பாரதியார் விரும்புகிறார்?

பாரத தேசத்தை இப்பொழுது பிரம்மச்சாரிகளே ரட்சிக்க வேண்டும். ஆத்ம ஞானிகள் வேண்டும். தம் பொருட்டு உலக சுகங்களை விரும்பாத தீரர்கள் வேண்டும். இந்தச் சுதேசியம் கேவலம் ஒரு லௌகிகக் காரியமன்று. இது ஒரு தர்மம். இதில் பிரவேசிப்பவர்களுக்கு வீரியம், தேஜஸ், கர்மயோகித் தலைமை முதலிய அரிய குணங்கள் வேண்டும்.

109. கேள்வி : விதவையர் பற்றிக் காந்தியாரின் கருத்தைப் பாரதியார் மறுத்துக் கூறியதென்ன?

ஸ்திரி விதவைகளின் தொகையைக் குறைக்க வழிகேட்டால் ஸ்ரீமான் காந்தி புருஷ விதவைகளின் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்கிறார். பால்ய விதவைகள் புனர் விவாகம் செய்துகொள்ளலாமென்று ஸ்ரீமான் காந்தி சொல்கிறார். ஆனால் அதைக்கூட உறுதியாகச் சொல்ல அவருக்குத் தைரியம் இல்லை. மழுப்புகிறார். எல்லா விதவைகளும் மறுமணம் செய்துகொள்ள இடம் கொடுப்பதே, இந்தியாவில் மாதர்க்குச் செய்யப்படும் அநியாயங்கள் எல்லாவற்றிலும் பெரிதான இந்த அநியாயத்திற்குத் தகுந்த மாற்று. மற்றப் பேச்செல்லாம் வீண் கதை கருத்து என்று பாரதியார் வலியுறுத்தினார்.

110. கேள்வி : தம் கதையில் நேர்ந்துவிட்ட பிழை பற்றிப் பாரதியார் வருந்தும் நிகழ்வொன்றைக் காட்டுக.

மனைவி ஒருத்தியின் சகோதரிகளை மணம் புரியும் வழக்கம் இந்துக்களுக்குள்ளே உண்டாதலால், அதுபோல முகம்மதியர்க்குள்ளேயும் இருக்கலாமென்று நினைத்து அங்ஙனம் தவறாகக் கதையில் எழுதிவிட்டேன். பத்திராதிபரும், படிப்போரும் என்னைப் புரிந்து கொள்ளும்படி வேண்டுகிறேன். உலகமெல்லாம் மாதர்களுக்கு நியாயம் செய்ய வேண்டுமென்ற கருத்தில் முஸ்லிம்களும் ஏகபத்தினி விரதம், பெண் விடுதலை, ஆண் பெண் சமத்துவம் என்ற கொள்கைகளைப் பற்றி

மேன்மை அடைய வேண்டுமென்பதே என் கருத்து. இந்தக் கருத்து நிறைவேறும்படி, பரமாத்மாவான அல்லா ஹூத்தஆலா அருள்புரிவாராக என வேண்டி எழுதியுள்ளார்.

111. கேள்வி : அநாகரிகச் சாதியார் யார்?

ஜீலாய் குலக் என்ற சாதியார் தற்போது ஐரிஸ்லா தேசத்தில் இருக்கிறார்கள். இவர்கள் இலைகளையே ஆடையாக அணிந்து வருவர். அரசாங்கம் இலவயமாகத் துணி கொடுத்துக் கட்டுமாறு செய்து வருகிறார்கள். அவ்வாறு கட்டிக் கொள்பவர்க்கு வெகுமதி கொடுக்கிறார்கள். இவர்கள் பெண்களை மிருகங்கள் மாதிரியாக நடத்துகின்றனர். இத்தகையோரைப் பாரதியார் அநாகரிக சாதியார் என்று குறிப்பிட்டுள்ளார். பெண்களை இழிவாக நடத்துவோர் அனைவரும் அநாகரிக சாதியார் என்பது அவர் கருத்து.

112. கேள்வி : சியூசீன் என்ற சீனத்துப் பெண் செய்த சொற்பொழிவு யாது?

விவாகம் நடந்த பின்னர் நம்மைக் கணவர் அடிமைகளைப் போல நடத்துகிறார்கள். அவர்களுக்குத் துணிப்பெட்டி தைத்துக் கொடுக்கவும், சமையல் பண்ணவும், சோறு போடவும், தேயிலை காய்ச்சிக் கொடுக்கவும், வாயில் தெளிக்கவும், குப்பை பெருக்கவும், அவர்களுக்கு ஸ்நானம் செய்து வைக்கவும், பணி செய்யவும் மாத்திரமே நம்முடைய சக்திகள் எல்லாம் செலவாகின்றன. பாதங்களைக் கட்டும் வழக்கத்தை உடனே வேரோடு களைந்து எறிந்துவிட வேண்டும். இன்றும் பழைய கெட்ட பழக்கங்கள் எத்தனை உளவோ, அத்தனையும் ஒழித்தெறிவோம். ஆண் மக்களுக்கு இனி அடிமைகளாக வாழ மாட்டோம். தைரியத்துடன் எழுந்து நின்று தொழில் செய்து நம்முடைய சுதந்தரத்தை நிலைநிறுத்திக் கொள்வோம் என்று, சியூசீன் என்ற சீனத்துப் பெண்மணி, பெண்களின் சுதந்தரம் பற்றிச் சொற்பொழிவாற்றியுள்ளார்.

113. கேள்வி : திருவள்ளுவரின் நூற்பயன் குறித்துப் பாரதியார் கூறுவதென்ன?

ஒருவன் அடையக்கூடிய உயர்ந்த பயன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கில் வீடு என்று சொல்லப்படும் முக்தி வாக்குக்கும், மனத்துக்கும் எட்டாதாகையால் அதனை விரித்துக் கூற முயலாமல் அதற்குச் சாதனமாகிய தெய்வ பக்தியை மாத்திரம் முதல் அத்தியாயத்தில் கூறி நிறுத்திவிட்டு, மற்ற மூன்று புருஷார்த்தங்களையும் விளக்கி, திருவள்ளுவநாயனார், முப்பால் என்ற பெயருடைய திருக்குறள் செய்தருளினார். ஆயிரத்து முந்நூற்று முப்பது சிறிய குறட்பாக்களில் நாயனார் அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலையும் அடக்கிப் பாடியது மிகவும் அபூர்வ செய்கை எனக் கருதப்பட்டது. இங்ஙனம் பாரதியார் திருவள்ளுவர் என் வீடு பற்றிப் பாடவில்லை என்பதற்கு விளக்கமளித்துள்ளார்.

114. கேள்வி : புதிய ஆத்திசூடியிலுள்ள பரம்பொருள் வாழ்த்தின் பொருண்மையைக் காட்டுக.

"ஆத்தி சூடி இளம்பிறை அணிந்து
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்
கருநிறம் கொண்டு பாற்கடல் மிசைக்கிடப்போன்
முகம்மது நபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துணராது
பல்வகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே! அதனியல் ஒளியுறு அறிவாம்
அதனிலை கண்டார் அல்லவை அகற்றினார்
அதனருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவோம்"

இப்பாடலே பாரதியார் பாடிய புதிய ஆத்திசூடியின் பரம்பொருள் வாழ்த்தாகும்.

115. கேள்வி : பாரதியார் பாடிய பரம்பொருள் வாழ்த்தின் மையக்கருத்து யாது?

சிவனென்றும், திருமாலென்றும், முகம்மது நபிக்கு வேதம் சொன்னவன் என்றும், ஏசுவின் தந்தை என்றும் இறைவனைப் பல்வேறு சமயத்தவர் பலவிதமாகச் சொல்லுகின்ற பரம்பொருள் ஒன்றுதான். அது ஒளிமயமானது. மாசற்ற அறிவு வடிவாகும். அதை உணர்ந்தோர் நிலை கண்டோர் துன்பமற்றவர் பேரருளை வாழ்த்தி அமர வாழ்வைப் பெறுவோமாக! என்பதே அதன் பொருள். ஒருவனே தேவன் என்ற திருமூலர் வாக்கு இங்கே எண்ணத்தக்கது. பாரதியார் இப்பாடல் வாயிலாகச் சமய ஒற்றுமையைப் புலப்படுத்தியுள்ளார்.

116. கேள்வி : புதிய ஆத்திசூடியில் கட்டளைப் பொருளில் அமைந்தன யாவை?

அச்சம் தவிர், ஆண்மை தவறேல், உடலினை உறுதி செய், ஏறுபோல் நட, ஐம்பொறி ஆட்சிகொள், ஒய்தல் ஒழி, ஔதடம் குறை, கற்றது ஒழுகு, காலம் அழியேல், கிளைபல தாங்கேல், கீழோர்க்கு அஞ்சேல், குன்றென நிமிர்ந்து நில், கூடித்தொழில் செய், கேட்டினும் துணிந்து நில், கைத்தொழில் போற்று, கொடுமையை எதிர்த்து நில், கோல்கைக் கொண்டு வாழ், கவ்வியதை விடேல், சரித்திரத் தேர்ச்சி கொள், சாவதற்கு அஞ்சேல், சிதையா நெஞ்சு கொள், சுமையினுக்கு இளைத்திடேல், சூரரைப் போற்று, செய்வது துணிந்து செய், சேர்க்கை அழியேல், சொல்வது தெளிந்து சொல், சோதிடந்தனை இகழ், சவுரியம் தவறேல், ஞமலி போல் வாழேல், ஞாயிறு போற்று, ஞிமிரென இன்புறு, ஞேயம் காத்தல் செய், தன்மை இழவேல், தாழ்ந்து நடவேல், திருவினை வென்று வாழ், தீயோர்க்கு அஞ்சேல், துன்பம் மறந்திடு, தூற்றுதல் ஒழி, தெய்வம் நீயென்று உணர், தேசத்தைக் காத்தல் செய், தையலை உயர்வு செய், தொன்மைக்கு அஞ்சேல், தோல்வியில் கலங்கேல், தவத்தினை நிதம் புரி, நன்று கருது, நாளெல்லாம் வினைசெய், நுனியளவு செல், நூலினைப் பகுத்துணர், நெற்றி சுருக்கிடேல், நேர்படப் பேசு, நையப்புடை, நோற்பது கைவிடேல், பணத்தினைப் பெருக்கு, பாட்டினில் அன்பு செய், பிணத்தினைப் போற்றேல், பீழைக்கு இடம்

கொடேல், பேய்களுக்கு அஞ்சேல், புதியன விரும்பு, பூமி இகழ்ந்திடேல், பெரிதினும் பெரிது கேள், பொய்ம்மை இகழ், போர்த்தொழில் பழகு, மானம் போற்று, மிடிமையில் அழிந்திடேல், மீளுமாறு உணர்ந்து கொள், முனையிலே முகத்து நில், மூப்பினுக்கு இடம்கொடேல், மெல்லத் தெரிந்து சொல், மேழி போற்று, மொய்ம்புறத் தவம்செய், மோனம் போற்று, மௌட்டியம் தனைக் கொல், யவனர் போல் முயற்சி கொள், யாரையும் மதித்து வாழ், யெலிவளம் காத்தல் செய், ரஸத்திலே தேர்ச்சி கொள், ராஜசம் பயில், நீதி தவறேல், ருசி பல வென்றுணர், ரூபம் செம்மை செய், ரேகையில் கனிகொள், ரோதனம் தவிர், ரௌத்திரம் பழகு, லாவகப் பயிற்சி செய், உலுத்தரை இகழ், லோகநூல் கற்றுணர், லௌகிக மாற்று, வருவதை மகிழ்ந்துண், வானநூல் பயிற்சி கொள், விதையினைத் தெரிந்திடு, வீரியம் பெருக்கு, வெடிப்புறப் பேசு, வேதம் புதிது செய், வையத் தலைமை கொள், வௌவுதல் நீக்கு, மேற்குறித்தவை உடன்பாட்டுக் கட்டளையிலும் எதிர்மறைக் கட்டளையிலும் அமைந்தவையாகும். இவ்வாறு புதிய ஆத்திசூடியில் பாரதியார் கட்டளையாகவே நீதிகளைப் புலப்படுத்தியுள்ளார்.

117. கேள்வி : கேள்விச் செல்வம் பற்றிப் பாரதியார் ஆத்திசூடியில் கூறியதைக் குறிப்பிடுக.

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் என்றார் திருவள்ளுவர். நினைப்பன எல்லாம் உயர்வாக இருக்க வேண்டும். அதைப்போலவே கேட்பதும் நல்லனவாகவும், பெரிய கருத்துகளாகவும் இருக்க வேண்டும். இதனைப் பெரிதினும் பெரிது கேள் என்பதில் பாரதியார் உணர்த்தினார். இத்தொடர், மற்றொரு பொருளையும் கொண்டது. அதாவது இறைவனிடம் கேட்பது, வேண்டுவது கூடப் பெரிதாக இருக்க வேண்டும். பாரதியார் கடவுளிடம் தனக்கு நூறு வயது வேண்டும் என்றும், கோடிக்கணக்கானப் பாடல்கள் பாட வேண்டுமென்றும் வரம் கேட்டார். எனவே, காதால் கேட்பதும் பெரிதாக இருக்க வேண்டும், வாயால் கேட்பதும் பெரிதாக இருக்க வேண்டும்.

118. கேள்வி : பெண்ணின் பெருமை பற்றிப் பாரதியார் ஆத்திசூடியில் வலியுறுத்துவதை எழுதுக.

பாரதியார், பெண்ணின் பெருமை, உயர்வு குறித்துப் பாடியுள்ள பாடல்கள் பல. 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்று, பிறிதோரிடத்தில் பாரதியார் பாடியுள்ளார். ஆத்திசூடியில், "தையலை உயர்வு செய்" (ஆத்தி, 50) என்றார். எந்த வீட்டில், எந்த நாட்டில் பெண்கள் மதிக்கப்படுகிறார்களோ, அந்த நாடே மதிப்புமிக்க நாடாகும். திருவள்ளுவரும் பெண்ணின் பெருந்தக்க யாவுள எனச் சிறப்பித்துள்ளார். தாயாக, மகளாக, சகோதரியாக, மனைவியாக உள்ளனர் பெண்கள். எனவே, அவர்களை எல்லா நிலைகளிலும் மதித்து, உயர்வு செய்ய வேண்டும்.

119. கேள்வி : பாரதியார் பாடிய ஆத்திசூடியில் உள்ள நீதிகளை வகைப்படுத்துக !

பாரதியார் பாடிய ஆத்திசூடியில் 110 நீதிகள் கூறப்பட்டுள்ளன. உயிர் வரிசை 12, க வரிசை 12, ச வரிசை 12, எ வரிசை 5, த வரிசை 12, ந வரிசை 11, ப வரிசை 10, ம வரிசை 11, ய வரிசை 3, ர வரிசை 8, ல வரிசை 6, வ வரிசை

120. கேள்வி : தராசில் இடம்பெற்றுள்ள தர்ம சங்கட வைத்தியநாதர் கதையை பாரதியாரின் வழி நின்று விளக்குக?

"திருவாங்கூரிலே வைத்தியநாதையர் என்றொரு நியாயாதிபதி இருந்தார். அவருக்கு மக்கள் தர்ம சங்கட வைத்தியநாதையர் என்று பெயர் வைத்தார்கள். எந்த வழிக்கு வந்தாலும், பல தினங்கள் ஆலோசனை செய்த பிறகுதான் தீர்ப்புச் சொல்லுவார்.

அவர் ஒரு தீர்ப்புச் சொல்ல வேண்டியிருந்தது. பத்மநாத சுவாமி கோயிலில் ஓரிடத்தில் அமர்ந்து, "சுவாமி! நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும். ஒவ்வொரு வக்கீலும் சொல்வதைப் பார்த்தால், அக்கட்சியிலேதான் நியாயம் இருப்பதாகத் தோன்றுகிறது. இந்தத் தர்மசங்கடத்திலிருந்து நான் எப்படித் தீர்ப்புச் சொல்வேன்" எனப் புலம்பினார். அதைத் தற்செயலாக மறைவாகக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு பையன், ஊர் முழுவதும் பறையடித்துவிட்டான். அதன்பிறகுதான் இவருக்குத் தர்மசங்கடம் வைத்தியநாதையர் என்ற பட்டம் ஏற்பட்டது" என்று, தராசு இச்சிறிய கதையைக் கூறியது.

121. கேள்வி : யாரைத் தொழுவது என்பது பற்றிப் பாரதியார் குறிப்பிடுவதென்ன?

பல தேவரை வணங்காமல் ஒரே மூர்த்தியாகத் தெய்வத்தை உபாசனை செய்வதற்கும் இந்துமதம் இடம் கொடுக்கிறது. வேத புராணங்களில் சொல்லப்படும் மூர்த்திகள் எல்லாம் ஒரே பரமாத்மாவின் கலைகள் என்பதை இந்துக்கள் எப்போதும் மறக்கக்கூடாது. 'ஐக்கத் தொழுகிற்றாயின் கலியுகம் ஒன்றுமில்லை' என்று, நம்மாழ்வார் சொல்கிறார். இந்துக்கள் வேதப் பொருளை நன்றாகத் தெரிந்து கொண்டு கூடித் தொழுவார்களானால், கலியுகம் நீங்கிப் போய்விடும் என்கிறார் பாரதியார். எனவே, பரம்பொருள் ஒன்றுதான் என்பதைத் தெளிவாக உணர்த்தியுள்ளார்.

122. கேள்வி : தியானம் பற்றிப் பாரதியார் குறிப்பிடுவதென்ன?

தியானத்தின் சக்தியை எளிதில் நினைக்க வேண்டாம். மனிதன் தான் விரும்புகிறபடியே ஆகிறான். பரிபூர்ண விருப்பத்துடன் தியானம் செய். சோர்வும் அதைரியமும் விளைவிக்கத்தக்க எண்ணங்களுக்கு இடம்கொடாதே. ஊற்றிலிருந்து நீர் பெருகுவது போல, உனக்குள்ளிருந்து தெளிந்த அறிவும், தீரத்தன்மையும் சக்தியும் மேன்மேலும் பொங்கி வரும். உன் இஷ்ட சித்திகளெல்லாம் நிறைவேறும். இது சத்தியம். அனுபவத்திலே பார் என்று பாரதியார் தியானத்தின் பெருமையை நூறு ஆண்டுகளுக்கு முன்பே உணர்த்தியுள்ளார். உலகம் தற்போதுதான் அதன் பெருமையை உணரத் தொடங்கியுள்ளது.

123. கேள்வி : நம்பினார் கெடுவதில்லை என்பதில், பாரதியார் கூறுவன யாவை?

சிவாஜி நம்பிக்கையால், துணிவினால் இராஜ்ய சம்பத்தை அடைந்தான். நெப்போலியன் ராஜா பிரான்ஸ் தேசத்தைக் கட்டியாண்டு ஐரோப்பா முழுவதிலும் தன்னுடைய ஆதிக்கத்தை நிறுத்தினான். நம்முடைய முயற்சியின் ஆரம்பத்தில் நம்மைப் பிறர் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். பலர் துணை செய்ய மாட்டார்கள். ஆனால், நம்பிக்கையைக் கைவிடாமல் இருந்தால் காலக் கிரமத்தில் வெளி உதவிகள் தாமே வரும். ஆரம்பத்தில் நமக்குத் துணை நாமே! எத்தனை இடையூறுகள் எவ்வளவு பெரிதாகி வந்த போதிலும், எடுத்த காரியத்தை ஒரே உறுதியாக நடத்திக் கொண்டு போவதே ஆரியலட்சணம். அவ்வாறு செய்யக்கூடியவனே மனிதரில் சிறந்தவன்.

"நம்பினார் கெடுவதில்லை
நான்கு மறைத் தீர்ப்பு – இது
நான்கு மறைத் தீர்ப்பு."

இங்ஙனம் நம்பிக்கையின் இயல்பைப் பாரதியார் தக்க சான்றுகள் காட்டி விளக்கியுள்ளார். யானையின் பலம் எதிலே ? தும்பிக்கையிலே. மனிதனின் பலம் எதிலே ? நம்பிக்கையிலே என்பதை ஒருபோதும் மறக்கலாகாது.

124. கேள்வி : விக்டர் ஹியூகோ எழுதிய கவிஞன் பற்றிய கருத்தைக் கூறுக ?

கவிஞன் தெய்விக அருள் பெற்றவன். அவன் பார்வை, எதிர்காலத்தை ஊடுருவிச் செல்ல வல்லது. வருங்கால நிகழ்ச்சிகள், அவன் ஞானக்கண்களுக்குப் புலப்படும். அவன் அவற்றைத் தன் கவிதை வழியே முன்னறிவிக்க வல்லவன் என்பது, பிரான்சு எழுத்தாளர் விக்டர் ஹியூகோவின் கருத்தாகும். இதற்குப் பாரதியார் இலக்கியமாவார். சுதந்தரம் பெறுவதற்கு முன்பே,

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்தரம் அடைந்து விட்டோமென்று
ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே" என்ற பாடலே சான்றாகும்.

125. கேள்வி : உவமைக் கவிஞர் சுரதா, பாரதியாரை எங்ஙனம் பாராட்டியுள்ளார் ?

“தன்கரத்தைக் கண்ணீரில் கழுவிக் கொண்டு
தமிழ்வளர்த்த பாரதியார் ஒருநா ளேனும்
பொன்மோதி ரம்போட்டுக் கொண்ட தில்லை,
பொருள்சேர்க்கும் ஆசைஅவர்க்கிருந்த தில்லை,
தென்பொதிகைச் சந்தனத்தைப் பூசும் முன்னே
செத்துவிட்ட பாரதியின் எழுத்தும் பாட்டும்
இன்றைக்கோ நாளைக்கோ மட்டும் அல்ல
என்றைக்குமே திருக்குறள்போல் நிலைத்து நிற்கும்”.

என்று பாராட்டியுள்ளார்.

126. கேள்வி : பாரதியாரின் கண்ணன் பாட்டை, பல்வேறு நிலைகளில் காணலாம் என்பதைக் காட்டுக.

பாரதியார் பாடிய கண்ணன் பாட்டை, ஐந்து நிலைகளில் காணலாம். அவை பின்வருமாறு :

முதல் நிலை : கண்ணன் என் தாய், தந்தை, குழந்தை, விளையாட்டுப் பிள்ளை என்னும் ஐந்து தலைப்புகளில் உறவு நிலை.

இரண்டாம் நிலை : கண்ணன் என் தோழன், சீடன், குரு, ஆசான், ஆண்டவன், சேவகன் என்னும் ஆறு தலைப்புகளில் அன்பு நிலை.

மூன்றாம் நிலை : கண்ணன் என் காதலன், காதலி என்னும் காதல் நிலை.

நான்காம் நிலை : கண்ணன் என் குலதெய்வம் என்பது சமய நிலை.

ஐந்தாம் நிலை : மேற்கண்டவற்றை அடிப்படையாகக் கொண்ட சமுதாய நிலை.

இவ் ஐந்து நிலைகளில் கண்ணன் பாட்டைப் பகுத்து, படித்து, எழுதி மகிழலாம்.

127. கேள்வி : தாய்மொழிக்குப் புதிய உயிர் கொடுப்போன், என்று பாரதியார் குறிப்பிடுமாறு கூறுக.

பாஞ்சாலி சபதத்தின் முன்னுரையில் எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினிடையே காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகிறான். ஓரிரண்டு வருஷத்துப் பழக்கமுள்ள தமிழ்மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும் என்று மேலும் கூறியுள்ளார். எளிமை என்பது வெறும் சொல். எளிமை மட்டுமன்று, காவிய நயங்கள் குறைவுபடாமல் என்ற நுட்பம் சிந்திக்க வைக்கிறது. மேலே குறிப்பிட்டவர் தமிழ்மொழிக்குப் புதிய உயிர்கொடுப்பவர் என்று, பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.

பாரதியாரின் பாடல்கள் மிகமிக எளிமையானவை. அகராதியின்றி, ஓரளவு படித்தவர்கள் கூடப் படித்து இன்புறலாம். அதே வேளையில் நுட்பமும் இயல்பாகவே அமைந்திருக்கும்.

"தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா – நின்னைத்
தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா"

இப்பாடல், எளிய சொற்களால் அமைந்தது. இனி இதன் நுட்பம் காண்போம். தீக்குள் விரலை வைத்தால் இன்பம் தோன்றாது. அது சுடத்தான் செய்யும். இன்பம் தரும் என்றால் அது தொடுபுலன் உணர்வு சார்ந்ததாகாது. அத் தீ சாதாரணத் தீயன்று. அது பக்தித் தீ. எனவே, இது சமய ஆன்மிக உணர்வு சார்ந்தது. மொழியின் வரம்பிற்கு அப்பாற்பட்டதை மொழிக்குள் பாரதியார் அடைத்துவிடுகிறார். இங்ஙனம் எளிமையும், அதே வேளையில் நுட்பமும் மிகுந்தவையாகப் பாரதியார் கவிதைகள் விளங்குகின்றன.

128. கேள்வி : அமரநிலை எய்துவது பற்றிப் பாரதியார் கருத்தை எழுதுக.

"பொய், கயமை, சினம், சோம்பல், கவலை, மயல்
வீண்விருப்பம், புழுக்கம், அச்சம்
ஐயமெனும் பேயையெலாம் ஞானமெனும்
வாளாலே அறுத்துத் தள்ளி
எப்போது மானந்தச் சுடர்நிலையில்
வாழ்ந்துயிர்கட் கினிது செய்வோர்
தப்பாதே யிவ்வுலகில் அமரநிலை பெற்றிடுவார்" – என்கிறார் பாரதியார்

129. கேள்வி : கவிஞர் வைரமுத்துவின் வாழ்த்து யாது?

"மகா கவியே!
நரைத்துவிடும் முன்பே
மரித்துப் போனவனே!
ராஜ கனவு கண்ட
ஏழைக் கவிஞனே!
நீ எங்கள்
சரித்திரத்தின் சாறு,
உன் எழுத்து
இந்தப் பிரபஞ்சத்தின் பிழிவு"

என்று வாழ்த்தி வணங்குகிறார் கவிஞர் வைரமுத்து.

130. கேள்வி : எது வெல்லும், எது தோற்கும் என்ற உலக நிலையைப் பாரதியார் பாடல் கொண்டு சுட்டுக.

"தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்.
தருமம்மறு படிவெல்லும் எனுமியற்கை
மருமத்தை நம்மாலே யுலகங் கற்கும்
வழிதேடி விதியிந்தச் செய்கை செய்தான்
கருமத்தை மேன்மேலுங் காண்போம். இன்று
கட்டுண்டோம், பொறுத்திருப்போம். காலம் மாறும்.
தருமத்தை யப்போது வெல்லக் காண்போம்
தனுவுண்டு காண்டீவ மதன்பேர் என்றான்"

என்று பாரதியார் பாடுகிறார்.

131. கேள்வி : அறங்களில் எது பேரறம் எனப் பாரதியார் குறிப்பிடுகிறார்?

"எல்லாமாகிய கடவுளிடத்திலும், கடவுளாகிய எல்லாப் பொருள்கள், விசேஷமாக எல்லா உயிர்களிடத்திலும், இடையறாது நல்லன்பு செலுத்துவதும், அந்த அன்பின் கிரியைகளாகிய வழிபாடுகள் புரிவதுமே மிகச் சிறந்த தவம். அதுவே அறங்களனைத்திலும் பேரறம்." என்கிறார் பாரதியார்.

132. கேள்வி : பாரதியாரின் இயற்கை ஈடுபாட்டிற்கு ஒரு சான்று தருக?

"மிக்க நலமுடைய மரங்கள் – பல
விந்தைச் சுவையுடைய கனிகள் – எந்தப்
பக்கத்தையு மறைக்கும் வரைகள் – அங்குப்
பாடி நகர்ந்துவரு நதிகள்"

நெஞ்சிற் கனல்மணக்கும் பூக்கள் – எங்கும்
நீளக் கிடக்குமிடைக் கடல்கள் – மதி
வஞ்சித் திடுமகழிச் சுனைகள் – முட்கள்
மண்டித் துயர்கொடுக்கும் புதர்கள்"

எனக் காணுமிடமெல்லாம் திகைக்கிறார்.

133. கேள்வி : எதனால் வெற்றி உண்டென்று பாரதியார் குறிப்பிடுகிறார்?

இக்காலத்தில் பலர் நமது பாஷைகளை ஒலி மிகச் செய்து பூமண்டலத்தார் வியக்கும்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்கள். பலர் நமது பூர்வ சாத்திரங்களின் உண்மையை உலகம் முழுவதும் கேட்டு உஜ்ஜீவிக்கும்படிச் செய்ய வேண்டுமென்று பாடுபடுகின்றார்கள். பலர் நமது நாட்டுச் செல்வத்தை வெளியேறவொட்டாமல் தடுக்க வழி தேடுகிறார்கள். பலர் இந்து தேசத்துக்குத் தன்னாட்சி வேண்டுமென்று தொழில் செய்து வருகிறார்கள். பலர் ஆரிய வேதத்தைச் சரண்புகுந்து பூமண்டலம் வாழும்படிச் செய்ய வேண்டுமென்று தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

இவ்வனைவருக்கும் வெற்றி உண்டு. நம்பிக்கை உண்டானால் வெற்றி உண்டு". இவ்வாறு பாரதியார் நம்பிக்கையால்தான் வெற்றி கிடைக்கும் என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார். பாரதி வெற்றிக்கு முதலில் நம்பிக்கை வேண்டும், எண்ணியோர் திண்ணியராகப் பெற்றால் எண்ணியது கட்டாயம் வெற்றியைத் தரும்.

134. கேள்வி : பாரதியார், கடவுளிடம் கேட்ட வரங்கள் யாவை?

"விசையுறு பந்தினைப்போல் – உள்ளம்
வேண்டிய படிசெலும் உடல் கேட்டேன் ;
நசையறு மனங்கேட்டேன் – நித்தம்
நவமெனச் சுடர்தரும் உயிர்கேட்டேன்."

என்று இறைவனிடம் பாரதியார் வேண்டுகிறார்.

135. கேள்வி : பாரதியார், தம் நெஞ்சைப் பறிகொடுத்த நிலையைக் குறிப்பிடுக.

"கானப் பறவை கலகலெனு மோசையிலும்,
காற்று மரங்களிடை காட்டு மிசைகளிலும்
கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்,
வேயின் குழலோடு வீணைமுத லாமனிதர்
வாயினிலுங் கையாலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலுங் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும், நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்,'

136. கேள்வி : என் ஈசுவரன் ஆவான் என்பதை பாரதியார் வழி நின்று விளக்குக?

"கோவிலுக்குப் போனாலும் சரி, போகாவிட்டாலும் சரி. தெய்வத்தைக் கும்பிட்டாலும் சரி, கும்பிடாவிட்டாலும் சரி. பிறரை ஏமாற்றுவதை நிறுத்தினால் தெய்வம் அருள் புரியும். துளிகூட, ஓர் அணுக்கூட மற்றவர்களை ஏமாற்றுவதே கிடையாதென்று ஒருவன் பரிபூரண சக்தி அடைவானாகில், அவனே ஈசுவரன்." – என்றார்.

137. கேள்வி : பயன்படும் கல்வி பற்றிப் பாரதியார் வரைவது யாது?

"கற்பனையும் அலங்காரமும் எனக்குக்கூட மிகப் பிரியந்தான். ஆனால் நெல் எப்படி விளைகிறது என்பதைக் கற்றுக்கொடுக்காமல் அன்மொழித் தொகையாவது யாது என்று படிப்புச் சொல்லிக் கொடுப்பதை நினைக்கும் போது கொஞ்சம் சிரிப்புண்டாகிறது. அன்மொழித்தொகை சிலரைக் காப்பாற்றும். ஊர் முழுதையுங் காப்பாற்றாது ; நெல்தான் ஊர் முழுதையுங் காப்பாற்றும்."

138. கேள்வி : இன்புற்று வாழப் பாரதியார் கூறும் வழி யாது?

"சென்றதினி மீளாது. மூட ரேநீர்
எப்போதுஞ் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்குங் கவலையெனுங் குழியில் வீழ்ந்து
குமையாதீர். சென்றதனைக் குறித்தல் வேண்டா.
இன்றுபுதி தாய்பிறந்தோ மென்று நெஞ்சில்
எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு
தின்றுவிளை யாடியின்புற் றிருந்து வாழ்வீர்."

என்று இன்புற்று வாழ பாரதியார் நல்வழி காட்டுகிறார்.

139. கேள்வி : காலத்தின் அருமை பற்றிப் பாரதியார் உணர்த்தியது யாது?

"பொழுது வீணே கழிக்கப்படுமாயின், அதனால் பணலாபம் கிடையாமற் போகும். இன்று செய்யக்கூடிய காரியத்தை நாளைக்குச் செய்யலாமென்று தாமசப்படுத்தி வைப்பதனால், அந்தக் காரியம் பலமான சேதமடைந்து போகும். எதையும் தோன்றிய மாத்திரத்திலே சூட்டோடு செய்யும் போது அதில் வெற்றி பெரும்பாலும் நிச்சயமாகக் கிடைக்கும். அதைத் தூங்கப் போட்டுவிட்ட பிறகு செய்யப் போனால், அதில் ஆரம்பத்தில் இருந்த ரசம் குறைந்து போகும். அதற்குத் தக்கபடி பயனும் குறையும்."

140. கேள்வி : குடும்பச் சிறப்பைப் பாரதியார் எவ்வாறு பாராட்டுகிறார்?

"வீட்டுப் பழக்கந்தான் நாட்டிலும் தோன்றும். வீட்டில் யோக்கியன், நாட்டிலும் யோக்கியன். வீட்டில் பொறுமையுடையவன், நாட்டிலும் பொறுமையுடையவன். மனைவியின் பொருளைத் திருட மனந் துணிந்தோன், கோயிற் பணத்தைக் கையாடக் கூசமாட்டான். தான் பெற்ற குழந்தைகளுக்கிடையே பட்சபாதஞ் செய்பவன், ஊரில் நியாயாதிபதியாக நியமனம் பெறத்தக்கவன் ஆகமாட்டான். குடும்பம் நாகரிகமடையாவிட்டால், தேசம் நாகரிகமடையாது. குடும்பத்தில் விடுதலை இராவிடில் தேசத்தில் விடுதலை இராது."

141. கேள்வி : சின்ன சங்கரன் கதை எள்ளல் குறித்து வ.ரா, குறிப்பிட்டதென்ன?

சிரித்து சிரித்து வயிறு அறுந்து போவது மாதிரி இருக்கும். சிரிப்பினால் குடல் ஏற்றம் ஏற்பட்டு விடுமோ என்று பல காலம் பயந்ததுண்டு. கிண்டல் என்றால் சாதாரணத் தெருக் காட்டு கிண்டலா. நமது ஜனங்கள் இப்படியும் வாழத் தகுமோ என்றதுக்கம் தோய்ந்த கிண்டலாகத்தான் நாங்கள் அந்தப் புத்தகத்தில் கண்டோம் என்று வ.ரா. குறிப்பிட்டுள்ளார்.

142. கேள்வி : தமிழின் சிறப்பைப் பாரதியார் எங்ஙனம் பாராட்டுகிறார்?

"உலகத்துச் சாதியார்களிலே இந்து சாதி அறிவுத் திறமையில் மேம்பட்டது. இந்த இந்து சாதிக்குத் தமிழராகிய நாம், சிகரம் போல் விளங்குகிறோம். எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கமுண்டு. இவற்றிலே தமிழைப் போல் வலிமையும் திறமையும் உள்ளத் தொடர்பும் உடைய பாஷை வேறொன்றுமேயில்லை."

143. கேள்வி : குயில் பெண்ணின் கொஞ்சும் எழிலைப் பாரதியார் எவ்வாறு பாராட்டுகிறார்?

"கற்றவர்க்குச் சொல்வேன், கவிதைக் கனிபிழிந்த
சாற்றினிலே, பண்கூத் தெனுமிவற்றின் சாரமெலாம்
ஏற்றி, யதனோடே யின்னமுதைத் தான்கலந்து,
காதல் வெயிலிலே காயவைத்த கட்டியினால்
மாதவளின் மேனி வகுத்தான் பிரமனென்பேன்."

144. கேள்வி : எது சரியான யோகப் பயிற்சியெனப் பாரதியார் குறிப்பிட்டுள்ளார்?

"மனம் கலங்கிய மாத்திரத்தில் புத்தி கலங்கிப்போய்விடுகிறது. ஆகையால் புத்தியை நம்பி எவனும் மனத்தைக் கலங்கவிடாதிருக்கக் கடவன். மனத்தைக் கலங்கவிடாமல் பயிற்சி செய்வதே, எல்லாவித யோகங்களிலும் சிறந்த யோகமாகும். ஆதலால் மனம் துன்பத்தில் நழுவி விழத் தொடங்கும் போது, அதை உறுதி அல்லது தைரியம் என்ற கடிவாளத்தால் பிடித்து நிறுத்திப் பழகுவதே, சரியான யோகப் பயிற்சியாகும்."

145. கேள்வி : பாரதியார் வேண்டுவன யாவை?

"மனதி லுறுதி வேண்டும்
வாக்கினிலே யினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமு மின்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்"

என்று வேண்டுகிறார் பாரதியார்.

146. கேள்வி : பாரதியார், திருப்பள்ளி எழுச்சி பாட நேர்ந்த அந்தச் சூழல் யாது?

ஒருமுறை பாரதியார், குவளைக் கண்ணன் வீட்டிற்குக் காலையில் சென்றார். குவளைக் கண்ணன் தாயார், பாரதியாரை நோக்கிச் சுப்ரபாதம் பாடச் சொன்னார். பாரதியார் விழித்தார். அம்மையார் வடமொழிச் சுப்ரபாதம், தமிழில் திருப்பாவை முதலியவற்றைப் பாடிக் காட்டினார். இச்சூழலில் வைராக்கியம் கொண்ட பாரதியார், பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி பாடி, அம்மையாரிடம் படித்துக்காட்டித் தம் புலமையை நிரூபித்துக் காட்டினார்.

147. கேள்வி : விதவை மறுமணம் பற்றிய பாரதியார் கருத்து யாது?

"விதவைகள் மறுமணம் செய்து கொள்ள இடம் கொடுக்க வேண்டும். இது இந்தியாவில் மாதர்க்குச் செய்யப்படும் அநியாயங்கள் எல்லாவற்றிலும் பெரிதான இந்த அநியாயத்திற்குத் தகுந்த மாற்றமாகும். என்றாலும் நம்மவர்கள் ஸ்திரீகளுக்குப் புனர்விவாகம் கூடாது என்று சட்டம் போட்டார்கள். அதனால்தான் மனைவியில்லாத கிழவர்கள், சிறு பெண்களை மணம்புரிய நேரிடுகிறது. அதனால் இந்து தேசத்து விதவைகளின் வாழ்க்கை, நரக வாழ்க்கையினும் கொடியதாய் உள்ளது" என்று, மனம் வருந்தினர்.

148. கேள்வி : கல்வித்திட்டத்தில் கைத்தொழில்கள் இடம் பெறுவது பற்றிய கருத்தை எழுதுக.

"இயன்றவரை மாணாக்கர் எல்லோருக்கும் நெசவு முதலிய முக்கியமான கைத்தொழில்களிலும், நன்செய், புன்செய்ப் பயிர்த் தொழில்களும், பூ, கனி, காய், கிழங்குகள் விளைவிக்கும் தோட்டத் தொழில்களிலும் சிறுசிறு வியாபாரங்களிலும் தகுந்த ஞானமும் அனுபவமும் ஏற்படும்படி செய்தல் நன்று" என்றார். வெறும் புத்தகம், பேனா இரண்டை மட்டும் நம்பியிருந்தால், சமூக இயக்கம் சிதைந்து போகும் என்பதை உணர்த்தினார்.

149. கேள்வி : பாரதியார், ஒருமைப்பாட்டுணர்வை வெளிப்படுத்தும் நலச் சுட்டுக.

"வெள்ளிப் பனிமலையின் மீது லாவுவோம்
மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்
சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேர நன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிக ளோட்டி விளையாடி வருவோம்"

இப்பாடல், இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டிற்குச் சான்றாகும்.

150. கேள்வி : அகத்துறைப் பாடலில் தலைவியின் பெருமிதம் காட்டும் பாரதியார் பாடலில் யாது?

“எண்ணம் உரைத்துவிடில் பின்னர்
ஏதெனிலும் செய்வமடி
கன்னியாயிருந்து நாங்கள்
காலம் கழிப்போம்
அன்னிய மன்னர்கள் பூமியிலுண்டாம் – என்னும்
அதனையும் சொல்லிவிடடி”

என்று, தலைவி தோழியிடம் கண்ணனிடம் தூது அனுப்புகிறாள்.

151. கேள்வி : கோல்ட்மிஸ்த்தைப் புகழ்ந்த புகழுரையைப் பாரதியாருக்கும் பொருத்துக.

“கோல்ட்மிஸ்த் தொடாதது ஒன்றுமில்லை. தொட்டதை அழகுபடுத்தாமல் விட்டதில்லை” என எழுத்தாளர்கள் புகழ்வர். இப்புகழுரை பாரதியார்க்கும் மிகவும் பொருத்தமானதாகும்.

155. கேள்வி : பாரதியின் கவிதை பற்றி அறிஞர் வ.ரா. கூறியது யாது?

“பாரதியாரை நினைத்தால் எனக்குப் பயமாக இருக்கிறது. ஏன்? நேற்றைக்குப் படித்த கவிதையை இன்றைக்குப் படித்தால் எவ்வளவுக்கெவ்வளவு வளர்ந்துகொண்டு போகிறோமோ, அதற்குத் தகுந்தாற்போல் பாரதியின் கவிதை என்ற சங்கப் பலகை நீண்டுகொண்டே போய், நமக்குத் தங்குமிடம் கொடுக்கிறது. ஆகவே இது விசித்திரம்” என்று, பாரதியின் நெருங்கிய நண்பர் வ.ரா. கூறியுள்ளார்.

152. கேள்வி : தமிழ்ச்சாதி எவர் எவரால் நிலைபெற்றுள்ளது எனப் பாரதியார் கருதுகிறார்?

“சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும்
திருக்குறள் உறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்
எல்லை ஒன்றின்மை எனும் பொருள் அதனைக்

கம்பன் குறிகளால் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும்”

– எனக் காட்டும் அடிகளால், இளங்கோ, திருவருள்ளுவர், கம்பர் ஆகியோரால் நிலைபெற்றுள்ளது எனக்கருதுகிறார்.

153. கேள்வி : கண்ணன் பாட்டைப் பற்றிக் கவிமணியின் பாராட்டுரையை எழுதுக.

“கல்லும் கனிந்து கனியாகுமடா – பசுங்
கன்றும் பால் உண்டிடாது கேட்டிடுமேயடா
உள்ளம் தெரியுமொரு பாட்டி லேயடா – மிக்க
ஊக்கம் பிறக்குமொரு பாட்டிலே யடா
கண்ணன் காதலன் எனக்கொரு கனியமு தமடா
விண்ணமு தமுமே அதனை வெல்லமாட் டாதடா”

என்று, கண்ணன் பாட்டின் இசை இனிமை பற்றிக் கவிமணி பாராட்டியுள்ளார்.

154. கேள்வி : பாரதியார் இந்திய தேசத்தைப் பாரத மாதாவாக உருவகித்தது எவ்வாறு?

கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டிற்குச் சென்றபோது விவேகானந்தரின் சீடரான நிவேதிதாதேவியைச் சந்தித்தார். அவரைத் தம் குருவாக ஏற்றார். அவரால் தேவி உபாசகராக மாறினார். அதுபற்றி அவர் கூறியது, “ஸ்ரீகிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு விசுவரூபம் காட்டி ஆத்மநிலை விளக்கியதொப்ப, எனக்குப் பாரததேவியின் சம்பூர்ண ரூபத்தைக் காட்டி, ஸ்வதேச பத்தி உபதேசம் புரிந்தருளிய குருவின் சரணங்களில் இச்சிறு நூலைச் சமர்ப்பிக்கின்றேன்”. இது 1908–ஆம் ஆண்டில் சுதேச கீதங்கள் என்னும் பெயரில் முதன்முதலாக வெளிவந்த பாரதியாரின் கவிதை நூலுக்கு, அவரே எழுதிப் பிரசுரித்த முகவுரையாகும்.

இந்திய தேசத்தைப் பாரத மாதாவின் உருவத்தில் தமக்குக் காட்டியது நிவேதிதா என்பது, பாரதியின் நம்பிக்கையாகும்.

155. கேள்வி : பாரதியாரிடம் வங்காளியரின் செல்வாக்கு குறித்து ம.பொ.சி. கூறியது யாது?

பாரதியார் புதுவையில் இருந்த போது, அரவிந்தருடன் நாள்தோறும் பழகி வந்தார். வங்காளிகள் பலருடன் அங்குப் பழகியதால் சாக்தரானார். சக்தி உபாசகராக இருந்தமையால், பெண்ணுரிமைக் கிளர்ச்சியைத் தொடங்கிய முதல் கவிஞராவார்.

15.09.1905–இல் சென்னைக் கடற்கரையில் நடந்த கூட்டத்தில், "வங்கமே நீ வாழிய" என்ற தலைப்பில் கவிதை பாடினார்.

வங்கக் கவிஞரான பக்கிம் சந்திரரின் வந்தே மாதரம் என்ற நூலைப் பின்பற்றி, "வந்தே மாதரம் என்போம், எங்கள் மாநிலத் தாயை வணங்குது மென்போம்" எனப் பாடினார். வங்காளதேச பக்தரான விபின் சந்திரபாலரை அழைத்து வந்து, சென்னையில் கூட்டம் நடத்தினார்.

156. கேள்வி : பாரதியாருக்கும் விவேகானந்தருக்கும் இடையே இருந்த நட்பு க் குறித்து ம.பொ.சி. கூறுவதென்ன?

பாரதியார், சுவாமி விவேகானந்தர் தொடங்கிய வேதாந்த இயக்கத்திடம் பங்குகொண்டவர். அதனை ஆதரித்துத் தம் கட்டுரைகளில் கருத்துகள் பல வழங்கியுள்ளார்.

இராமகிருஷ்ணரின் சீடரான சுவாமி சுபேதானந்தர் சென்னை வந்தபோது, அவருக்களித்த வரவேற்பு, அவராற்றிய சொற்பொழிவு பற்றி இந்தியா இதழில் எழுதினார். அவர்மீது நான்கு கவிதைகள் பாடியுள்ளார்.

விவேகானந்தரின் சகோதரரான பூபேந்திரர் சென்னை வந்தபோது 'பூபேந்திர விஜயம்' என்ற தலைப்பில், நான்கு பாடல்கள் பாடியுள்ளார். இங்ஙனம் பாரதியாருக்கும் விவேகானந்தருக்கும் பல வகைகளில் நட்பு இருந்தது.

157. கேள்வி : இராஜாராம் மோகன்ராய் குறித்துப் பாரதியாரின் பார்வை யாது?

வங்காளத்தின் முதல் சமய, சமூகச் சீர்திருத்தவாதியான ராஜாராம் மோகனன்ராயைப் பெருமைப்படுத்தி, இந்தியா இதழில் பாரதியார், 1906–ஆம் ஆண்டிலேயே கட்டுரைகள் பல எழுதினார். ராஜாராம் உருவ வழிபாட்டில் நம்பிக்கையற்றவர். அக்கொள்கையில் பாரதியாருக்கு உடன்பாடில்லை. இருப்பினும், "அதுகூட ராஜாராம் மோகன்ராய்க்குப் பெருமை தருவதே" என்று எழுதியுள்ளார்.

158. கேள்வி : சுதேசமித்திரனில் வெளிவந்த பாரதியாரின் முதல் கவிதை, எதைப் பற்றிய கருத்தைக் கூறுக.

1905–இல் வைசிராய் லார்டு கர்சன் வங்கத்தைத் துண்டாடத் திட்டம் வகுத்தார். அதனை எதிர்த்து வங்காளிகள் அனைவரும் சமய வேறுபாடுகளை மறந்து, ஒன்றுபட்டுக் குரல் எழுப்பினர். இக்கிளர்ச்சி, பாரதியாரை மிகவும் கவர்ந்தது. அதற்கு வாழ்த்துக் கூறும் முகத்தான், "வங்கமே! நீ வாழிய!" என்ற கவிதை பாடினார். இதுதான் சுதேசமித்திரனில் வந்த பாரதியாரின் முதல் கவிதையாகும்.

159. கேள்வி : தாகூர் மீது பாரதியாருக்கு இருந்த ஈர்ப்பு எத்தகையது?

தாகூர், பாரதியார் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த வங்க மகாகவி. இருவரும் சந்தித்ததாகத் தகவல் இல்லை. இருப்பினும், பாரதியார் தாகூரை மனமார நேசித்தார். தாகூர் ஆசிய, ஐரோப்பாக் கண்டங்களில் பயணம் செய்தார். பாரதியார் அதனைத் "தாகூரின் திக்விஜயம்" என்ற தலைப்பில் கட்டுரையாக எழுதினார். தாகூரை 'ஐரோப்பா பூஜை புரிகிறது' எனப் பாராட்டி எழுதியுள்ளார்.

160. கேள்வி : தமிழின் தலைசிறந்த கவிஞரான பாரதியார் ஒருவகையில் வங்கத்தால் உருவாக்கப்பட்டார் என்பதை எவ்வாறு கருதலாம்?

வங்கப் பிரிவினை எதிர்ப்பு, பாரதியின் உள்ளத்தை ஈர்த்தது. நிவேதிதா தேவியால் சக்தி உபாசகர் ஆனார். விவேகானந்தரின் வேதாந்த

இயக்கத்தில் உள்ளத்தைப் பறிகொடுத்தார். பக்கிம் சந்திரரின் வந்தே மாதரப் பாடலைத் தழுவித் தமிழில் எழுதினார். வந்தே மாதரப் பாடலை விளக்கி, இந்தியா இதழில் கட்டுரை எழுதினார். சுபேதானந்தர், பூபேந்திரர் முதலியோர் மீது பாடல்கள் புனைந்துள்ளார். விபின் சந்திர பாலரை அழைத்து வந்து கூட்டம் நடத்தினார். மகாகவி தாகூரின் புகழைத் தமிழர் நடுவே பரப்பினார். அரவிந்தருடன் புதுவையில் நெருங்கிப் பழகினார்.

மேற்குறித்தவற்றால் தமிழின் தலைசிறந்த புலவரான பாரதியார் ஒருவகையில் வங்கத்தால் உருவாக்கப்பட்டார் எனலாம்.

161. கேள்வி : பாரதியாரின் கவிதைப் பாங்கினைக் குறித்துப் பாரதிதாசன் பாடல் வரிகளை வரைக.

“உய்வகை காட்டும் உயர் தமிழுக்குப்
புதுநெறி காட்டிய புலவன் பாரதி” என்றும்,
“தமிழரின் உயிர்நிகர் தமிழ்நிலை தாழ்ந்ததால்,
இமைதிற வாமல் இருந்த நிலையில்
தமிழகம், தமிழுக்குத் தரும் உயர்வளிக்கும்
தலைவனை எண்ணித் தவம்கிடக் கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினான்” என்று
பாரதிதாசன் பாரதியாரை புகழ்ந்துள்ளார்.

162. கேள்வி : பாரதியார், எங்ஙனம் ஒரு நல்ல கவிஞராகத் திகழ்கிறார்?

உயர்ந்த சிந்தனையிலிருந்து உயர்ந்த கவிதைகள் பிறக்கும். சிறந்த குறிக்கோள் உடையவன்தான் சிறந்த கவிஞனாகத் திகழ முடியும். தன் உயிர், மூச்சு, உழைப்பு, தொழில் எல்லாம் கவிதைதான் என்று எண்ணுவான். அவன் பழையன பார்ப்பான். இக்கால உண்மை உணர்வான். வருங்காலப் புதுமைகளை உணர்த்துவான். சொல்லுக்குச் சுவை ஊட்டுவான். பொருளுக்குப் பொருள் ஒளி கூட்டுவான். இவையெல்லாம் ஒருங்கே கைவரப் பெற்றவர்தாம் பாரதியார். ஆகவேதான் நல்ல கவிஞராகப் போற்றப்பட்டார்.

163. கேள்வி : பாரதியார், நெஞ்சம் பதைத்தது எதற்காக?

பாரதியார், மக்களின் அறிவைப் பெருக்க விரும்பினார். அறியாமை அகற்றப் பாடுபட்டார். தமிழ் மக்கள் பாமரராய், விலங்குகளாய்ப் பிறர் இகழப் பான்மை கெட்ட நிலைகண்டு நெஞ்சம் பதைபதைத்தார்.

"நெஞ்சு பொறுக்கு திலையே – இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்
நண்ணிய பெருங்கலைகள் – பத்து
நாலாயிரம் கோடி நயந்து நின்ற
புண்ணிய நாட்டினிலே – இவர்
பொறியற்ற விலங்குகள்போல் வாழ்வார்"

எற நிலைகண்டு மனம் பதைத்தார்.

164. கேள்வி : வளமையும் வறுமையும் ஒருசேர இருந்த நிலைமை எண்ணிப் பாரதியார் கூறுவது என்ன?

தமிழகத்தில் நிலவளம், நீர்வளம், மலைவளம், கடல்வளம் முதலிய பல வளங்கள் உள்ளன. ஆனால், மக்கள் ஏழ்மை, வறுமை, அறியாமை உடையவராக இருப்பதைக் கண்டார். மக்களின் துன்பத்திற்கு அறியாமையே காரணம் என உணர்ந்தார்.

கடையத்தில் ஒரு கதை கலை நிகழ்ச்சியைப் பாரதியார் கேட்டார். கதை சொல்பவர் போக்கு வைச்சான், பழமும் வைச்சான், வெத்தலை வைச்சான், ஒன்று வைக்க மறந்திட்டான். அது சுண்ணாம்பில்லே" என்பதாக, ஆவேசம் வந்த வேடன் கூறுவதாகச் சொன்னார். இதைக்கேட்ட பாரதியார் நண்பர்களிடம்.

"தமிழ் மக்களுக்குக் கடவுள்
நிலமும் வைச்சான் பலமும் வைச்சான்
நிகரில்லாத செல்வமும் வைச்சான்
ஒன்று வைக்க மறந்துட்டான்
அதுதான் புத்தியில்லை. புத்தியில்லை"

என்று பாடினாராம்.

165. கேள்வி : பாரதியின் நாட்டுப் பற்றைக் குறிப்பிடுக?

சுதந்தரதேவியின் அருளொளி பெறாததேசம் ஒருதேசமே இல்லை என்பது பாரதியின் கருத்து. இதனை,

தேவி நின்ஒளி பெறாத தேயமோர் தேயமோ
ஆவியங் குண்டோ செம்மை அறிவுண்டோ ! ஆக்கமுண்டோ !
காவிய நூல்கள் ஞானக் கலைகள் வேதங்க ளுண்டோ ?
பாவியரன்றோ நின்றன் பாலமைதி படைத்திலாதார்"

என்பதில் காணலாம்.

166. கேள்வி : பாரதியார் காலத்தின் கண்ணாடியாக விளங்குபவர் என்பது பற்றி அண்ணா என்ன கூறியுள்ளார்?

"கவிஞன் என்பவன் காலத்தின் கண்ணாடியாகின்றான். காலத்தையே மாற்றுகின்றான் என்பது மட்டுமன்று, மாறிய காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறான். சமயம் கிடைத்தால் முன்னேயும் பிடித்துத் தள்ளுகிறான்" என்கிறார் அண்ணா. இக்கருத்திற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகப் பாரதியார் விளங்குகிறார்.

167. கேள்வி : பாரதியாரின் அறிவியல் தொலைநோக்கு எத்தகையது?

பாரதியின் அறிவியல் பார்வையை, தீர்க்க தரிசனத்தை, தொலை நோக்கத்தை எண்ணி வியக்க வேண்டியுள்ளது.

"காசி நகர்ப் புலவர் பேசுமுறைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்" என்றும்,

"வானை அளப்போம் கடல்மீனை அளப்போம்" என்றும்

"சந்திர மண்டத்தியல் கண்டு தெளிவோம்" என்றும்

பாடிய பாடல்கள் வாயிலாக, அவரின் அறிவியல் தொலைநோக்கு விளங்கும்.

168. கேள்வி : இளசை சுப்பிரமணியன் என்ற பெயரில் எழுதிய கடிதம் யாது?

"கைப்பொருள் அற்றான் கற்பது எவ்வகை
பொருளால் அன்றிக் கல்வியும் வரவில
கல்வியால் அன்றிப் பொருளும் வரவில
முதற்கண் கல்வியே பயிறல் முறையாம்
அதற்குப் பொருளிலை ஆதலின் அடியேன்
வருந்தியே நின்பால் வந்து அசைந்தனை
மாந்தர் புரத்தல் வேந்தர்தம் திருஅருட்கு
இலக்கியம் ஆதலின் எளியோர்கு இந்நாள்
அருள்பொருள் ஈதவிநீ அனைத்தும் அருள்வையால்"

169. கேள்வி : மக்கள்கவிஞராகப் பாரதியார் எவ்வாறு புகழப்படுகிறார்?

மக்கள் தன்னிலை உணரவும், தன்மானம் பெறவும், தாய்மொழியைப் பேணவும், விடுதலைக் கீதம் இசைத்தார் பாரதியார். அடிமைப்பட்டு, முன்னேற வழியறியாது தவித்த மக்களுக்குச் சுதந்தர இனிமையைக் குழைத்துக்காட்டி, அவர்களின் சிந்தனையைச் சிறகடித்துப் பறக்க வைத்தவர். மக்களுக்காகவே பாடிய, அவர்களுக்காகவே வாழ்ந்தவர் என்பதால், மக்கள் கவிஞரெனப் புகழப்பட்டார்.

170. கேள்வி : பாரதியாரின் இளமைக்காலப் புலமை பற்றி நாவலர், சோமசுந்தரபாரதியார் கருத்து யாது?

காளிதாசர், கம்பன் முதலிய வரகவிகளுக்குக் காளிவாக்கில் எழுதிய காலம் முதல், அநாயாசமாய்க் கவி சொல்ல வாய்த்ததென்று நாம் கேட்கும் கதைகளையும், குமரகுருபரர் ஐந்தாவது ஆண்டில் அரும்பாக்கள் இயற்றினார் என்ற கதையினையும் அபூர்வ கற்பனைகள் என்று புறக்கணித்த நான் பாரதியார் ஏழாவது வயதில் முதல் எளிதில் பாடல் இயற்றித் தமிழ்வாணர்கள் மெச்சும்படி காட்டிய திறமையை நேரில் கண்ட பொழுதுதான் கேவலம் படிப்பினால் பாவன்மை வராது. கவிகள் பிறப்பிலேயே அமைய வேண்டும் என்று அறிந்தேன் என உணர்ந்து உரைத்தார்.

171. கேள்வி : இலக்கிய மாலுமி என்ற தலைப்பில், கவிஞர் சிற்பியின் கவிதையைக் கூறுக.

"எட்டைய புரத்துக் கட்டித் தங்கமே
மனிதனைத் தெய்வமாக்கினான் வள்ளுவன்
தெய்வத்தை மனிதனாக்கினான் கம்பன்
மனிதனை, அசல் மனிதனாகவே பார்த்தவன் நீதான்
இலக்கிய பூமியை அடிவாரம் வரையிலும்
புரட்டி எடுத்த ஊழிப் பிரளயம் நீ"

என்பது கவிஞர் சிற்பி பாரதியார் பற்றி எழுதிய கவிதையின் சில வரிகளாகும்.

172. கேள்வி : உண்மையின் மேன்மையினைப் பற்றிப் பாரதியார் கூறியதென்ன ?

எல்லாப் பேறுகளைக் காட்டிலும் உண்மைப்பேறுதான் பெருமை கொண்டது. உண்மை தவங்களுக்கெல்லாம் உயிர். உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி. உண்மை பரமாத்மாவின் கண்ணாடி. ஆதலால் தமிழா எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும் படிச் செய் என்று உரிமையுடன் மேன்மையை எடுத்தியம்பியுள்ளார்.

173. கேள்வி : கற்பனைச் சிறகு விரிக்கும் பாரதியாரின் பாடல்கள் எத்தகையவை?

கவிஞர்கள் பொதுவாக பின்னே வருவதை முன்னே உரைக்கும் ஞானிகள். தெய்வக் குரல் பிடைத்தவர்கள். கவிஞன் கற்பனையில் தன்னை மறப்பவன். உணர்வில் மிதப்பவன். உண்மையை உரைப்பவன். அன்பை வெளிப்படுத்துபவன். அழகை ரசிப்பவன். மேலே கூறியன அனைத்தும் பாரதி பாடல்களில் பார்க்க முடியும். பாரதியின் கற்பனைகள் வருங்கால நல்லுலகைப் படைக்க வெளிப்டுத்தப்பட்டவையாகும்.

174. கேள்வி : பொதுமையை வலியுறுத்திய பாரதியாரின் வரிகள் யாவை?

"எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர் – ஆம்
எல்லோரும் இந்நாட்டு மன்னர்"

என்னும் பாடல் வரிகளால், பாரதியார் வலியுறுத்திய பொதுமையை உணரலாம்.

175. கேள்வி : தொழிலாளர் உயர்வு பற்றிய பாரதியாரின் பாட்டினை வரைக ?

உழைப்பின்றி, தொழிலின்றி உலகில் எவரும் வாழ இயலாது. தொழில் பற்றிய பாரதியார் பாட்டு பின்வருமாறு :

"இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
யந்திரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே!
கடலில் மூழ்கி நன்முத்து எடுப் பீரே!
ஆயிரம் தொழில் செய்திடு வீரே!
பெரும்பு கழ்நுமக்கே இசைக் கின்றேன்
பிரம்ம தேவன் கலையிங்கு நீரே!" – என்ற பாடலால்

உலகில் படைக்கும் தொழிலை உடைய பிரம்மதேவனைப் போன்றவர் தொழிலாளர் என்றார்.

176. கேள்வி : பாரதியார், காந்தியடிகளை முதன்முதலில் எங்ஙனம் அறிமுகப்படுத்தினார்?

கவிஞர் தாகூர் வார்த்தைகள் மூலமாகத்தான் காந்தியடிகளைப் பாரதி நமக்கு அறிமுகப்படுத்தினார்.

“உலகமெலாம் புகழ
இன்பவளம் செறி பண்புபல பயிற்றும்
கவீந்திர னாகிய ரவீந்திர நாதன்
சொற்றது கேளீர் – புவிமிசை இன்று
மனிதர்க் கெல்லாம் தலைப்படு மனிதன்
தர்மமே உருவாம் மோகன தாஸ
கர்ம சந்திர காந்தி என்றுரைத்தான்”

இங்ஙனம் பாரதி காந்தியடிகளை ரவீந்திரநாத் வார்த்தைகள் வழி நமக்கு அறிமுகப்படுத்தினார்.

177. கேள்வி : பொதுவுடைமை என்னும் சொல், யாரால் தமிழுக்கு அருளப் பெற்றது?

சோசலிசம், கம்யூனிசம் என்ற சொற்களுக்கு அபேதவாதம் என்றும் சமதர்மம் என்றும் பலர் தமிழில் கூறியுள்ளனர். “கம்யூனிசம்” என்ற ஆங்கிலச் சொல்லின் உள்ளடக்கத்தை, பொதுவுடைமை என்று கூறுவது பொருத்தமாகும். பொதுவுடைமை என்னும் சொல்லை முதன்முதலில் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர் பாரதியாரேயாவார்.

178. கேள்வி : ருஷ்யப் புரட்சி குறித்துப் பாரதியின் தொலைநோக்குப் பார்வை எத்தகையது?

1905–ஆம் ஆண்டு சனவரி ஒன்பதாம் நாள் இரஷ்யாவில் முதல் புரட்சி நடந்தது. அதைப் பற்றி 1906 செப்டம்பர் முதல் தேதி இந்தியா இதழில் பாரதியார் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். சுயாதீனத்தின் பொருட்டு, கொடுங்கோன்மை நாசத்தின் பொருட்டும், நமது ருஷ்யத் தோழர்கள் செய்துவரும் உத்தமமான முயற்சிகள் மீது ஈசன் பேரருள் செலுத்துவாராக.

1917 பிப்ரவரியில் இரண்டாம் புரட்சி வெடித்தது. அதனை, “காக்காய் பார்லிமெண்ட்” என்ற கற்பனைக் கதையில், “கேட்டீர்களா! காகங்களே அந்த ருஷ்ய தேசத்து ஜார் சக்கரவர்த்தியை இப்பொழுது அடித்துத் துரத்திவிட்டார்களாம்” என்று, குதூகலமாகக் குறிப்பிட்டுள்ளார்.

179. கேள்வி : விடுதலை உணர்வை ஊட்டும் பாரதியின் பாடல்கள் எத்தகையவை?

இந்திய விடுதலை பற்றி மட்டுமன்று, உலகின் பிற நாடுகளின் விடுதலை பற்றியும் பாரதியார் அக்கறை கொண்டிருந்தார். இத்தாலியில் மாஜினி தலைமையின்கீழ் மக்கள் போராடியது, பாரதியாரின் நெஞ்சைத் தொட்டது. பெல்ஜியம் நாட்டின் மீது ஜெர்மனி போர் தொடுத்த போது மனம் நொந்த பாரதியார், அறத்தினால் வீழ்ந்துவிட்டாய் எனப் பாடி வருந்தினார். பூகித்தீவில் மக்கள் விடுதலை பெற விரும்பினர். இங்ஙனம் பாரதியின் விடுதலை உணர்ச்சியைப் பெரும்பாலான பாடல்களில் காணலாம்.

180. கேள்வி : பாரதியார் குறித்து டாக்டர் மு. வரதராசனார் குறிப்பதென்ன?

பாரதியார், பிறவியிலேயே சுதந்தர உணர்வுடையவர். அதனைத் தெய்வமாக வழிபட்டுப் பாடியவர். ஜமீன்தார்களைப் புகழ்ந்து பாடாமல், அதைவிட்டு உயரப் பறந்தது. அவர் எழுதிய உரைநடை, கவிதை, கட்டுரைகளில் புதிய வேகமும் ஆர்வமும் எற்பட்டது. கற்போர் நெஞ்சை மாற்றிச் செயல்படுத்தும் தீவிர உணர்ச்சி அவரின் எழுத்துகளில் காணப்பட்டது என்றார் மு.வ.

181. கேள்வி : பாரதியாருக்கும் நண்பர்களுக்கும் இருந்த தொடர்பை குறிப்பிடுக.

புதுவையில் பாரதியார்க்கும் அரவிந்தருக்கும் நெருக்கமான நட்புண்டு. சென்னைக் கடற்கரையில் வ.வெ.சு. ஐயர் தலைமையில் நடைபெறும் கூட்டங்களில் பாரதியார், தம் பாடல்களைப் பாடுவது வழக்கம். சிதம்பரனாருடன் உள்ள தொடர்பு அளவிட முடியாதது. இவர்களுடன் சுப்பிரமணிய சிவா, வி. கிருஷ்ணசாமி ஐய்யர், வி. சக்கரைச் செட்டியார் முதலியோரும் பாரதியின் நண்பர்களாவர்.

182. கேள்வி : பாரதியாரின் அரசியல் எதிரிகளுக்கும் பாரதி பாடல் கவர்ந்ததை எழுதுக.

வி. கிருஷ்ணசாமி ஐய்யர், பாரதியாருடன் கருத்து வேறுபாடு உடையவர். இருப்பினும், பாரதியார் பாடல்கள் சிலவற்றைச் சிறு புத்தக வடிவில் ஆயிரக்கணக்காக அச்சிட்டு, இனாமாக விநியோகித்தார். நெவின்சன் என்ற ஆங்கிலப் பத்திரிகையாளன், கடற்கரையில் பாரதியார் பாடல்களைக் கேட்டு, "இந்தியாவின் நூதன உணர்ச்சி" எனத் தம் நூலில் புகழ்ந்துள்ளான். இங்ஙனம் அரசியல் எதிரிகளும் பாரதியார் பாடல்களால் ஈர்க்கப்பட்டுள்ளனர்.

183. கேள்வி : காந்தியின் பெருமையைப் பாரதியார் எவ்வாறு புலப்படுத்தினார்?

விடுதலை பெறுவீர் விரை வாநீர்
வெற்றி கொள்வீர் என்றுரைத் தெங்கும்
கெடுத லின்றிநம் தாய்த்திரு நாட்டின்
கிளர்ச்சி தன்னை உணர்ச்சிசெய் கின்றார்
சுடுதலும் குளிரும் உயிர்க் கில்லை
சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக் கில்லை
எடுமினோ அறப் போரினை என்றான்
எங்கோ மேதகம் ஏந்திய காந்தி"

184. கேள்வி : கீதையின் சிகரம் எது என்பதைப் பாரதியார் கூறுகிறார்?

சீதம், உஷ்ணம், இன்பம், துன்பம் என்பவற்றைத் தரும் இயற்கையின் தீண்டுதல்கள் வந்து போகும் இயல்புடையன. அவற்றைப் பொறுத்துக் கொள. இவை எந்த மனிதனைத் துன்புறுத்தமாட்டாவோ இன்பத்தையும், துன்பத்தையும் நிகராகக் கருதும் அந்த தீரன் சாகாதிருக்கத் தகுவான். இஃதே பகவத் கீதையின் சிகரம் எனப் பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.

185. கேள்வி : பாரதியார் பற்றித் தேசிக விநாயகம் பிள்ளையின் மதிப்பீடு யாது?

"பாட்டுக் கொரு புலவன் பாரதியடா – அவர்
பாட்டைப் பண்ணோடு ஒருவன் பாடினானடா
பாட்டைக் கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனடா"

என்பது கவிமணியின் மதிப்பீடாகும்.

186. கேள்வி : புதுச்சேரியில் பாரதியாரின் பாடல்களுக்கு இருந்த செல்வாக்கு எத்தகையது ?

பாரதியார், புதுவையில் இருந்த போது கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு ஆகிய முப்பெரும் படைப்புகளைப் படைத்தவர். புதுவைக்கு வீரராகப் புகுந்த பாரதியார், வெளியேறும் போது ஞானியாக வெளியேறினார். கலவை சங்கர செட்டியார், பொன்னு முருகேசப் பிள்ளை முதலியோர், பாரதியார் பாடல்களால் ஈர்க்கப்பட்டனர். புதுவை வந்த விடுதலை வீரர்களை நேசக்கரம் நீட்டி உதவி அணைத்தனர்.

187. கேள்வி : அன்பின் பெண்மையைப் பாரதியார் எங்ஙனம் கூறியுள்ளார்?

நம்மை மற்றவர் நேசிக்க வேண்டுமென்றால், நாம் மற்றவரை நேசிக்க வேண்டும். நேசத்தாலே நேசம் பிறக்கிறது. அன்பே அன்பை விளைவிக்கும். மற்றஎல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும். அதனால் உயிர் வளரும். பிறரை வெறுத்துக் கொண்டும், பகைத்துக் கொண்டும், சாபமிட்டுக் கொண்டும் இருப்போமாயின் நாம் அழிந்துவிடுவோம் என்பதில் ஐயமில்லை என அன்பின் ஆற்றலைப் பாரதி விளக்கியுள்ளார்.

188. கேள்வி : இராமானுசர் உபதேசத்தைப் பற்றிப் பாரதியார் கூறுவது யாது?

நதியினுள்ளே விழுந்துவிட்ட ஒருவன் இரண்டு கைகளையும் தூக்கிவிடுவது போலே, சம்சார வெள்ளத்தில் விழுந்த ஒவ்வொருவனும் இரண்டு கைகளையும் தூக்கிக் கொண்டு, (அதாவது எவ்விதப்

பொறுப்புமின்றி எல்லாப் பொறுப்புகளும் ஈசனுக்கென்று துறந்துவிட்டு) கடவுளைச் சரண்புக வேண்டுமென்றார் இராமானுசர். பிரகலாதன் சரித்திரத்திலும், திரௌபதி துகிலுரியும் கதையிலும் இந்த உண்மையே கூறப்பட்டிருக்கிறது என்றபாரதியார் எடுத்துக்காட்டுக் கூறியுள்ளார்.

189. கேள்வி : பாரதியாரைச் தீரர் சத்தியமூர்த்தி எங்ஙனம் பாராட்டியுள்ளார்?

பாரதியார் போன்றவர் இங்கிலாந்தில் பிறந்திருந்தால், அரண்மனைக் கவியாக அவர் கொண்டாடப்பட்டிருப்பார். சுயேச்சை அடைந்த எந்த நாட்டிலாவது அவர் ஜனித்திருப்பாராகில், இவ்வளவு பால்யத்தில் மாண்டிருக்கமாட்டார். தேசபாஷைக்கும், தாம் பிறந்த சாதிக்கும் ஒரு மகத்தான செல்வத்தைச் சேர்த்து வைத்திருப்பார். வங்காள சிரேஷ்டர் ரவீந்திரநாத் தாகூருக்கு அவர் சமமானவர். நான் மிகைப்படப் பேசுவதாக நினைக்கக் கூடாது. பாரதியாரை அறிந்தவர்களுக்கே நான் சொல்வதன் உண்மை செம்மையாகப் புலப்படும் என்று, சத்தியமூர்த்தி பாரதியாரைப் புகழ்ந்துள்ளார்.

190. கேள்வி : பாரதியாரை 'வீறுசால் கவிஞர்' என, டாக்டர் எம், சாந்தப்பா கூறுவதென்ன?

வள்ளலார் இராமலிங்க அடிகளார் உருவாக்கிய தெளிந்த உரைநடைக்குப் புதுவலிமை சேர்த்து நல்வாழ்வளித்த பாரதியார், ஒரு சிறந்த பத்திரிகையாளர் என்பதையும், இங்கே பெருமையோடு குறிப்பிட வேண்டும். பழையனவற்றில் சிறந்தனவற்றைப் போற்றும் பண்பும், புதியனவற்றை மகிழ்வோடு முன்நின்று வரவேற்கும் துடிப்பும், இழிவுகளையும், சிறுமைகளையும் எதிர்த்து நிற்கும் வீரமும் ஒருங்கே அமையப் பெற்ற ஒரு 'வீறுசால் கவிஞர்' இந்த மண்ணில் பிறந்தது பற்றி நாம் பெருமைப்பட வேண்டும் என்று, டாக்டர் எம். சாந்தப்பா விவரித்துள்ளார்.

191. கேள்வி : பாரதியார், எதனை யோகம் என்கிறார்?

தொழிலுக்குத் தன்னைத் தகுதியுடையவனாகச் செய்து கொள்வதே யோகம் எனப்படும். யோகமாவது சமத்துவம். ஸமத்வம் யோக உச்யதே. அதாவது பிறிதொரு பொருளைக் கவனிக்குமிடத்தே, அப்போது மனதில் எவ்விதமான சஞ்சலமேனும் சலிப்பேனும் பயமேனும் இன்றி அதை ஆழ்ந்து மனம் முழுவதையும் அதனுடன் லயப்படுத்தி கவனிப்பதாகியப் பயிற்சி, நீ ஒரு பொருளுடன் உறவாடும் போது உன் மனம் முழுவதும் அப்பொருளின் வடிவமாக மாறிவிட வேண்டும். அப்போதுதான் அந்தப் பொருளை நீ நன்றாக அறிந்தவனாவாய் என்று பகவான் சொன்னதைப் பாரதி விளம்பியுள்ளார்.

192. கேள்வி : பாரதியார் கவிஞர் போற்றும் கவிஞரானது எங்ஙனம்?

வெங்கடேச ரெட்டப்ப பூபதிக்கு எழுதிய சீட்டுக்கவியில்,

"புவியனைத்தும் போற்றிட வான்புகழ் படைத்துத்
தமிழ்மொழியைப் புகழில் ஏற்றும்
கவியரசர் தமிழ்நாட்டில் இல்லையெனும்
வசைஎன்னால் கழிந்த தன்றே"

என்று, தம் குறிக்கோள் கருத்தை வெளிப்படுத்தினார். தமிழைக் காக்க, அதன் பெருமையை நிலைக்கச் செய்ய இவர் விரும்பினார். பாட்டுத் திறத்தாலே வெற்றியை நாடி நின்றமையால், இவர் கவிஞர் போற்றும் கவிஞர் என, உலகம் பாராட்டும் நிலைக்கு உயர்ந்தார்.

193. கேள்வி : கவியரசர் கண்ணதாசன், பாரதியார் பற்றிப் பாடியதென்ன?

"பாரதியார் பரங்கியரின் வேரதிர விண்ணதிர
ஊரதிர உறங்கிவிட்ட ஊன்பொதிகள் விடித்துதுற
நீருதிரும் மேகமென நின்றகவி நாயகனே"

என்று கவியரசர் கண்ணதாசன் பாரதியைப் புகழ்ந்துள்ளார்.

194. கேள்வி : பாரதியார், எத்தகைய களங்கள் குறித்துப் பாடியுள்ளார்?

"நாட்டடிமை என்றால் நாகமாகச் சீறிப்
பெண்ணடிமை என்றால் புயலாக மாறிக்
கொத்தடிமை என்றால் கொதித்தெழுந்து
உணவில்லாத் தனியொருவனுக்காக உலகை அழிக்கத்
துணிந்து பாடியவர். பொதுவாகவே இவர் பாடாத் துறைகள்
ஒன்றுமில்லை" எனலாம்.

195. கேள்வி : எவை பாவ புண்ணியமென்று பாரதியார் சொல்லுகிறார்?

உள்ளத் துறவுதான் செய்தற்குரிய தென்றும், மனைத் துறவு செய்யவொண்ணாதொரு பாவமென்றும் நான் சொல்லுகிறேன். தனக்கேனும் பிறருக்கேனும் துன்பம் விளைவிக்கத்தக்க செய்கை பாவம். தனக்கேனும் பிறர்க்கேனும் இன்பம் விளைவிக்கத்தக்க செயல் புண்ணியச் செயல் எனப்படும்" என்று பாரதி விளக்கியுள்ளார்.

196. கேள்வி : இல்லறமேன்மையைப் பாரதியார் எங்ஙனம் கூறியுள்ளார்?

ஒருவனுக்கு மனைத் துறவைக் காட்டிலும் அதிகத் துன்பம் விளையத்தக்க செய்கை வேறொன்றுமில்லை. இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை. கற்புடைய மனைவியுடன் அறம் பிழையாடல் வாழ்தலே இவ்வுலகத்திலே சுவர்க்க வாழ்க்கையை ஒத்ததாகும். ஒருவனுக்குத் தன்வீடே சிறந்த வாசஸ்தலம். மலையன்று. வீட்டிலே தெய்வத்தைக் காணத் திறமையில்லாதவன் மைலைச் சிகரத்தை அடுத்ததொரு முழையிலே கடவுளைக் காணமாட்டான் என்பதிலிருந்து இல்லறமேன்மையை உணர்த்தியுள்ளார்.

197. கேள்வி : இரு அறநெறிகள் பற்றித் தாயுமானவர் கருத்து யாது ?

முக்திக்கு இரண்டும் சம சாதனங்கள் என்று தாயுமானவர் சொல்லுகிறார். காதல் நெறியில் இன்புற்றிருந்தாலென்ன! மலையுச்சியில் தாமொரு பொந்தில் இருந்தாலென்ன! சலனமின்றி மனத்திலே சார்ந்த நிலை பெற்றாற் உய்வார். இரண்டும் ஒருங்கே மோட்சத்துக்குச் சமமான சாதனங்கள் என்று சொல்லியதே நமக்குப் பெரிய ஆறுதலாயிற்று" ஊன்றார் பாரதியார்.

198. பொதுவாகத் துறவிகளைப் பற்றிப் பாரதியாரின் பார்வை யாது?

கடமைகளைத் துறந்துவிட்டுச் சோம்பேறிகளாகத் திரிதம் சாத்தியமா? இந்தச் சோம்பேறித்தனத்தை ஒரு பெரிய சுகமாகக் கருதியே அநேகர் துறவு பூணுகிறார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. இவர்கள் கடமைகளைத் துறந்தாரேயன்றி, இன்பங்களைத் துறக்கவில்லை. உணவின்பத்தைத் துறந்துவிட்டார்களா? சோறில்லாவிட்டால் உயிர் போய்விடுமே என்றால் அப்போது நீங்கள் ஈயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு தொழில் செய்து ஜீவிக்க வேண்டும். இவர்கள் மட்டுமல்ல, மடாதிபதிகள் கூட பண இன்பத்தைக் துறக்கவில்லை என்பது துறவிகள் பற்றிய பாரதியின் பார்வையாகும்.

199. இல்லம் குறித்து பாரதியார் கூறிய கருத்துகள் யாவை?

"வீடு பெருக்கி விளக்கேற்றி வைத்திடுவேன்
சொன்னபடி கேட்பேன் துணிமணிகள் காத்திடுவேன்
தோட்டங்கள் கொத்திச் செடி வளர்க்கச் சொல்லிச்
சோதனை போட்டான்டி"

என்று, கண்ணன் என் சேவகனில் இல்லம் குறித்துப் பாரதியார் பாடியுள்ளார். தூய்மையான வீடு, சுற்றுப்புறத் தூய்மை, விளக்கேற்றுதல், செடி வளர்த்தல், அதனால் சத்துள்ள காய்கறிகள் பெறுதல் முதலியன, இல்லம் குறித்த பாரதியின் கருத்துகளாகும்.

200. மனையியலை விளக்கும் பாரதியார் பாடல் வரிகள் யாவை?

"காத்து மானிடர் செய்கை அனைத்தையும்
கடவுளர்க்கு இனிதாகச் சமைப்பவராம்
ஏத்தி ஆண் மக்கள் போற்றிட வாழ்வாராம்" என்பனவும்,

"ஒற்றைக் குடும்பம் தனிலே பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை,
மற்றைக் கருமங்கள் செய்தே மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை"

என்பனவும் மனை இயலை விளக்க வந்த பாரதியார் பாடல்களாகும்.

201. பாரத நாட்டின் சிறப்புகளாகப் பாரதியார் கூறியவற்றுள் சிலவற்றைக் கூறுக :

"தோட்டத்திலே மரக் கூட்டத்திலே – கனி
ஈட்டத்திலே பயிர் ஊட்டத்திலே
தேட்டத்திலே அடங்காத நிதியின்
சிறப்பினிலே உயர் நாடு.
மங்கைய ராயவர் இல்லற நன்கு
வளர்த்தது இந்நாடே – அவர்
தங்க மதலை கள் இன்று அமுதூட்டி
தழுவியது இந்நாடே" என்று கூறியுள்ளார்.

202. குழந்தை வளர்ப்புப் பற்றிப் பாரதியார் கூறுவன யாவை?

குழந்தையின் பசியறிந்து உணவு ஊட்டுவது, பாட்டுப் பாடுவது, கதை சொல்வது, ஆட்டங்கள் காட்டுவது என்றெல்லாம் அறிந்து, வளர்க்க வேண்டுமெனப் பாரதியார் பாடியுள்ளார். மேலும், நல்லவனாகவும், வல்லவனாகவும் கதைகள், பாடல்கள் வாயிலாகப் பிள்ளைகளுக்குச் சொல்லி வளர்க்க வேண்டுமென்றார்.

"இன்பமெனச் சில கதைகள் – எனக்கு
ஏற்றமென்றும் வெற்றி என்றும் சில கதைகள்" – என்று
குழந்தை வளர்ப்பு பற்றிப் பாடியுள்ளார்.

203. பெண்கள், எவ்வாறெல்லாம் இழிவுபடுத்தப்பட்டனர்?

மொட்டை அடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தை, கொண்டுவந்தே,
வீட்டினில் எம்மிடம் காட்ட வந்தார்

நல்ல விலைகொண்டு நாயை விற்பார் – இந்த
நாயிடம் யோசனை கேட்பதுண்டோ ?

கொல்லத் துணிவின்றி நம்மையும் அந்நிலை
கூட்டிவைத்தார் பழிகூட்டி விட்டார்"

என்ற வரிகள் வாயிலாகப் பெண்கள் நிலை குறித்து பாரதியாரின் கவலை புலப்படும்.

204. பெண்ணடிமையால் விளையும் தீங்குகள் குறித்துப் பாரதியார் பார்வை யாது?

"தாயைப் போலே பிள்ளையென்று முன்னோர் வாக்குள தன்றோ? பெண் அடிமையுற்றால் மக்களெலாம் அடிமையுறல் வியப்பொன்றாமோ! நிலத்தின் தன்மை பயிர்க்கு உளதாகுமாம்! நீசத் தொண்டும் மடமையும் கொண்ட தாய்க் குலத்தில், மாண்புயர் மக்களைப் பெற்றிடல் சாலவே அறிதாவதோர் செய்தியாம்" என்பதில் பெண்ணடிமையால், மக்களும் அடிமைகளாகவே இருப்பர் என்கிறார்.

205. பாரதியார் பாடிய புரட்சிப் பெண்ணின் முழக்கங்கள் யாவை?

"உடையவள் சக்தி ஆண்பெண் இரண்டும்
ஒருநிகர் செய்து உரிமை சமைத்தாள்
இடையிலே பட்ட கீழ்நிலை கண்டீர்
இதற்கு நாம்ஒரு பட்டிருப் போமோ!
அடுப்பூதும் பெண்என்றா எங்களை அவமதித்தீர்
உலையிலே ஊதி உலகக்கனல் வளர்ப்பவள் பெண்"

என்பன புதுமைப் புரட்சிப் பெண்ணின் முழக்கங்களாகும்.

206. பாரதியின் கண்ணன் பாடல்கள் பற்றித் திருமதி, இலலிதா பாரதியார் கருத்தை எழுதுக.

"பார்த்தனைத் தேவநிலைக்கு உயர்த்திய கண்ணன், பாரத நாட்டின் குலதெய்வமாகிவிட்டவன். எப்படி ஆழ்வார்கள் உள்ளத்திலே அற்புதமான அகக்காட்சியினைத் தோற்றுவித்தானோ, அப்படியே உள்ளொளி பெற்ற பாரதியின் உள்ளத்திலும் கண்ணன் பல அற்புதமான அகக்காட்சிகளைத் தோற்றுவித்துவிட்டான்" என, இலலிதா பாரதியார் கூறியுள்ளார்.

207. பாரதியார்க்கு வழிகாட்டிய குருவாக இருந்தோர் யார், யார்?

புதுவையில் பாரதியார் வாழ்ந்த காலத்து மகான் அரவிந்தரின் தொடர்பு, குள்ளச்சாமியின் அறிவுரை, கோவிந்தசாமியின் நட்பு, யாழ்ப்பாணத்துச் சாமி முதலியோரின் தொடர்பு அமைந்ததால்தான், பாரதியார்க்கு ஞான மார்க்கம் கைவரப்பெற்றது. அனைத்துக்கும் மேலாகச் சகோதரி நிவேதிதா தேவியின் தரிசனம், பாரதியார்க்கு ஞானப்பாதை காட்டியது. மேற்குறிப்பிட்டவர்கள், பாரதியார்க்குக் குருவாக விளங்கினர்.

208. நியாயத் தராசு எதனால் சார்புடையதாகிறது?

அளவற்றதவமும் அதனால் விளையும் ஞானத் தெளிவும் உடையோரே எதிலும் பக்ஷபாதமற்றமயக்கமற்றநடு உண்மை கண்டு தேரவல்லார். மற்றபடி உலகத்து வழக்குகள் பெரும்பான்மையிலும், வலிமையுடைய மனிதருக்கும் வகுப்புகளுக்கும் சார்பாகவே நியாயந் தீர்க்கப்படுகின்றது. சொல் வலிமை மட்டுமேயன்று, ஆள் வலிமை, தோள் வலிமை, பொருள் வலிமை – எல்லாவித வலிமைகளும் நியாயத் தராசைத் தமது சார்பாக இழுத்துக் கொள்ளவல்லன.

209. பாரதி எதற்காக. யாருக்காக தெய்வத்தை வேண்டுகிறார்?

நாட்டிலுள்ள பணக்காரர் மற்றெல்லாவித தர்மங்களைக் காட்டிலும், ஜனங்களுக்கு அறிவு விருத்தியும், தைரியமும், தேச பக்தியும் ஈண்டாக்கத் தகுந்த சுதேசியக் கல்வி ஏற்படுத்திக் கொடுப்பதைப் பெரிய தர்மமாகக் கருதி, அதிலே பணம் செலவிட முற்படும்படி மேற்படி பணக்காரருக்கு நல்ல புத்தி ஏற்படுத்திக் கொடுக்குமாறு தெய்வத்தை வேண்டுகிறோம்.

210. பாரதியார், கண்ணம்மாவிடம் இறைஞ்சுவது என்ன?

"நின்னைச் சரணடைந்தேன் கண்ணம்மா
நின்னைச் சரணடைந்தேன்.

நல்லது தீயது நாமறியோம் – அன்னை
நல்லது நாட்டுக தீமையை ஓட்டுக"

என்று பாரதியார் கண்ணம்மாவிடம் இறைஞ்சுகிறார்.

211. வரகவி ஆ.க. முத்துக்குமாரசாமி, பாரதியார் பற்றிப் பாடியதென்ன?

"புதுமைக் கவிதரும் பாரதியே – புகழ்ப்
புவனம் தனில்திகழ் பூரணச் சாரதியே
பதியும் பேருணர்வு பாங்குடன் திகழவே
பாவலர் நாவலர் யாவரும் மகிழவே
புதுமைக் கவிதரும் பாரதியே"

என்று பாடியுள்ளார்.

212. கவிதாமணி திருச்சி அ. வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார், பாரதியார் பற்றிப் பாடியதென்ன?

"எங்களுக்காய் இறங்கி வந்து வாழ்ந்தாய் ஐய்யா!
எளிவர்க்கே கனிந்துருகும் தன்னைப் போலே
துக்கம்நிறை தமிழகத்தில் கவிஞன் வேறு
சொல்லுதற்கு எவருண்டு! பல்துன்பம் ஏற்றும்
மங்காத தமிழமுதம் எமக்குஊட்டி ஊட்டி,
வையகத்துச் செய்தியெலாம் வகுத்துத் தந்த
தங்கமே தலைவனே பாரதியாரே நீயும்
தமிழ்போலே என்றென்றும் தரணியில் வாழ்க!"

என்று, கிருஷ்ணசாமி ரெட்டியார் பாடியுள்ளார்.

213. பாஞ்சாலி சபதத்தின் நோக்கத்தைக் குறிப்பிடுக.

இந்தியா, ஆங்கிலேயர்க்கு அடிமைப்பட்டிருந்தது. அடிமை நீங்கி விடுதலை பெறப் பாரதியார் விரும்பினார். அதற்குப் பாஞ்சாலி சபதத்தைச் சான்றாக எடுத்துக்கொண்டார். அவள் அஞ்சாமல் அவையில் பேசியதும், அவள் செய்த சபதமும் போல, மக்களும் அஞ்சாமல் விடுதலை உணர்வு கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தை உணர்த்தினார். பாஞ்சாலி சபதம், விடுதலை உணர்வை நோக்கமாகக் கொண்டது.

214. கேள்வி : சீதையும், பாஞ்சாலியும் பற்றிப் பாரதியாரின் கூற்று யாது?

"எல்லை நீத்த உலகங்கள் யாவும் என்
சொல்லினால் சுடுவேன், அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசன்று வீசினேன்"

என்பது சீதையின் முடிவு.

சூதில் தன் கணவன்மார் தோற்றார் எனக் கேட்டதுமே,

"என்னை முதலில் வைத்து இழந்தபின் தன்னை என்
மன்னர் இழந்தாரா ! மாறித் தமைத் தோற்ற
பின்னர் எமைத் தோற்றாரா?"

என்பது, பாஞ்சாலியின் கேள்வி. இங்ஙனம் சீதையும், பாஞ்சாலியும் சூழலுக்கேற்பத் தத்தம் கருத்துகளை வெளியிட்டனர்.

215. கேள்வி : பாரதியார் பாஞ்சாலி சபதத்தில், பாஞ்சாலி எப்படி விளங்குகிறாள்?

பணிவுள்ள மனைவியாக, தமிழ்த்தேவதையாக, பண்பின் உயர் பாத்திரமாக, அடிமையாக்கப்பட்ட போது, கணவனின் தவற்றை எடுத்துக்கூறி வாதிடும் வீரப்பெண்மணியாக, தெய்வ பக்தி உடையவளாக, இறைவனைச் சரணாகதி அடைந்து தன்னைத்தானே காத்துக் கொண்டவளாகப் பாஞ்சாலி சபதத்தில் பாஞ்சாலி விளங்குகிறாள்.

216. கேள்வி : காதலின் கீர்த்தி பற்றிக் கண்ணன் பாட்டில் பாரதியார் பாடியிருப்பதென்ன?

“காற்று வெளியிடைக் கண்ணம்மா – நின்றன்
காதலை எண்ணிக் களிக்கின்றேன் – அமு
தூற்றினை ஒத்த இதழ்களும் – நில
ஊறித் ததும்பும் விழிகளும் – பத்து
மாற்றுப்பொன் ஒத்தநின் மேனியும் – இந்த
வையத்தில் யானுள்ள மட்டிலும் – எனை
வேற்று நினைவின்றித் தேற்றியே – இங்கோர்
விண்ணவ னாகப் புரியுமே”

என்பது, காதலின் கீர்த்தியைப் புலப்படுத்தும் பாடலாகும்.

217. கேள்வி : கவிஞர் சாமி பழனியப்பன், பாரதியாரைப் புகழ்ந்த வரியைக் கூறுக.

“விருத்தப்பா தந்தையவன் கம்பனுக்கும்
மெச்சுபுகழ் வெண்பாவாம் புகழேந் திக்கும்
கருத்தூறும் சொல்லழகுச் சந்தச் சிந்தின்
கைவந்த நல்அண்ணா மலையா ருக்கும்
பொருத்தமெனக் கூறுமா இங்குத் தோன்றிப்
புவியினிலே புகழ்கொண்ட புலவன் எங்கள்
திருத்தந்தை பாரதியாரே! அவனே இன்பச்
செந்தமிழ்க் கவிவானில் நிலவு போன்றோன்”

என்று, சாமி பழனியப்பன் புகழ்ந்துள்ளார்.

218. கேள்வி : எதற்கு அழிவில்லை என்று, பாரதியார் பாடியுள்ளார்?

“வெற்றி செயலுக்குண்டு விதியின் நியம மென்று
கற்றுத் தெளிந்த பின்னும் – கிளியே கவலைப்படலாகுமோ ?
துன்ப நினைவுகளும் சோர்வும் பயமுமெல்லாம்
அன்பின் வழியுமடி ! கிளியே அன்புக்கு அழிவில்லை காண்”

என்று பாடினார்.

219. கேள்வி : பாஞ்சாலி சபதம் வாயிலாகப் பாரதியார் உணர்த்திய நீதி யாது?

“தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும் – எனுமியற்கை
மருமத்தை நம்மாலே உலகம் கற்கும்
கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்”

என்ற நீதியைப் பாஞ்சாலி சபதம் வாயிலாகப் பாரதியார் உணர்த்தியுள்ளார்.

220. கேள்வி : பாரதியார் எழுதிய உரைநடை, கட்டுரைகள் சிலவற்றைக் கூறுக ?

பகவத் கீதை முன்னுரை, தராசு, காட்சி, சித்தக் கடல், தத்துவம், மாதர், கலைகள், சமூகம் போன்றவை ஆகும்.

221. கேள்வி : பாரதியாரின் நெடுங்கதைகள் - புனை கதைகள் எவை?

ஞானரதம், சந்திரிகையின் கதை, நவதந்திரக் கதைகள், சின்ன சங்கரன் கதை போன்றவையாகும்.

222. கேள்வி : பாரதியார் படைத்த இரண்டு சிறுகதைகள் யாவை?

கதாமாலிகா, கதைக்கொத்து ஆகும்.

223. கேள்வி : பாரதியார் பாடிய நீதி இலக்கியங்கள் என்னென்ன?

புதிய ஆத்திசூடி, பாப்பாப் பாட்டு, முரசு போன்றவை.

224. கேள்வி : மூதறிஞர் இராஜாஜி, பாரதியார் குறித்ததை வரைக.

மாகாண மொழிகளில், அதாவது வங்காளி, தெலுங்கு, குசராத்தி, மராத்தி போன்றவற்றிலே, சென்ற 300 ஆண்டுகளிலே பாரதியாரைப் போன்ற கவி தோன்றவில்லை. பாரதியார், தமிழ்நாட்டில் திரு அவதாரம் செய்தது தமிழர்களுக்குக் கிடைத்த பாக்கியமாகும்.

225. கேள்வி : வினோபா பாவே, பாரதியாரை எங்ஙனம் புகழ்ந்துள்ளார்?

இந்தியத் தேசியக் கவிஞர்களுக்கு இடையில் திலகம் போன்றவர் பாரதியார். என்று வினோபாபாவே பாரதியாரைப் புகழ்ந்துள்ளார்.

226. கேள்வி : பாரதியார் மொழிபெயர்ப்புப் பற்றி மகான் அரவிந்தர் கருத்து யாது?

பாரதியார் இந்தியத் தத்துவங்களை அனுபவத்தால் உணர்ந்த மேதையாவார். "பதஞ்சலி யோக சூத்திரம்" என்ற நூலுக்குப் பாரதியார் செய்த மொழிபெயர்ப்பு அருமையானது.

227. கேள்வி : பாரதியார் குறித்துத் தேசபக்தர் வ.உ.சி. கூறியது யாது?

என் உள்ளத்தில் மின்மினிப்பூச்சி போன்று மின்னிக் கொண்டிருந்த தேசாபிமான நெருப்பு, பாரதியின் தோழமையினால் விளக்குப் போல ஒளிவிட்டுப் பிரகாசித்தது. என்று வ.ஊ.சி. கூறியுள்ளார்.

228. கேள்வி : கவிக்குயில் சரோஜினி நாயுடு, பாரதியார் பாடல்கள் குறித்து என்ன கூறினார்?

யாரும் பாரதியாரைத் தங்களுடைய மாநிலத்திற்கு மட்டும் கிடைத்த புதையலாக எண்ணிவிடக்கூடாது. இனம், மொழி, நாடு எனும் வேறுபாடுகளைக் கடந்து, உலக நன்மைக்காக அவதாரம் செய்த மகான்களின் வரிசையைச் சேர்ந்தவர் அவர் என்கிறார் கவிக்குயில்.

229. கேள்வி : கவிஞர் எஸ். டி. சுந்தரம் பாரதியார் குறித்துக் கூறியது யாது?

20–ஆம் நூற்றாண்டில் பிறந்த பாரதியார், தனக்குமுன் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உலகில் பிறந்த எல்லாக் கவி மன்னர்களின் ஆற்றலையும் ஒருங்கே சேர்த்ததொரு பேராற்றலைப் பெற்றவர்.

230. கேள்வி : பாரதியார் பற்றிப் பெருந்தலைவர் காமராசர், என்ன கூறியுள்ளார்?

பாரதியார் உலகக் கவிஞர். உலக மக்கள் ஒன்றுபட்டு வாழ, உயரிய கருத்துகளையும் எண்ணங்களையும் அவர் பாடல்களில் காணலாம். பாரதியார் பாடல்களை அச்சில் படிப்பதைவிடப் பிறர் பாடக் கேட்டால், பெரும் பயன் ஏற்படும் என்றார் காமராசர்.

231. கேள்வி : டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் பாரதியார் பற்றிக் குறிப்பிட்டது யாது?

எட்டயபுரம் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரை உலகம் நன்கறியும். பாரதியார் என்றால் அவரே என்று குறிப்பிடும் பெருமை வாய்ந்தவர் அவர். பெரியோர் முதல் பாலர் ஈறாக எல்லாராலும் நன்கறியப்பட்ட தகுதி வாய்ந்தவர். எனக்கு மிக்க பழக்கமுள்ளவர் என்கிறார் டாக்டர். உ.வே.சா அவர்கள்.

232. கேள்வி : தமிழ்த்தென்றல் திரு.வி.க. பாரதியார் பற்றி எங்ஙனம் புகழ்ந்துள்ளார்?

நவீன உலகத்துக்குத் தேவையான புரட்சி மாறுதல்களைத் தமிழிலக்கிங்களிலும் தமிழர்களின் இதயங்களிலும் பதிவு செய்தவர் பாரதியார். நக்கீரர் சகாப்தம், இளங்கோ சகாப்தம், கம்பர் சகாப்தம் என்று சொல்வதைப் போல நடக்கும் இக்காலத்தைப் பாரதியார் சகாப்தம் என்றே கூறவேண்டும். நோபல் பரிசும், உலகப் புகழும் பெற்ற கவிஞர் தாகூரைவிடப் பாரதியார் உயர்ந்து நிற்கிறார்.

233. கேள்வி : அன்பு, கருணை என்பனவற்றின் வேறுபாடு பற்றிப் பாரதியார் என்ன கூறுகிறார்?

மனிதனுக்குத் தன் மகனிடத்தும், அரபிக்குத் தன் குதிரையிடத்திலும், அரசனுக்குத் தனது அடிமையிடத்திலும், நோயாளிகளுக்குத் தன் வைத்தியனிடத்திலும், வைத்தியனுக்குத் தனக்குப் பணம் கொடுக்கும் நோயாளியிடத்திலும், ஆண் சிங்கத்திற்குப் பெண் சிங்கத்தினிடத்திலும், தாய்ப் புலிக்குப் புலிக்குட்டியிடத்திலும் – இன்னும் பலவாறாகவும் தோன்றுகிறஅன்பு சாதாரண அன்பாகும். இவை உயர்தர அன்பு அல்லது கருணை என்று கூறப்படுவதில்லை.

234. கேள்வி : பரலி சு. நெல்லையப்பரின் புகழ் மொழி யாது?

பாரதியார் ஒரு பெரிய மேதாவி, மகா பண்டிதர், தெய்விகப் புலவர், ஜீவன் முக்தர். இவர், தமிழக ரவீந்திரநாதர். இவர், என் தமிழ்நாட்டின் தவப்பயன்.

பாரதியார் ஓர் அவதார புருஷர். இவர் நூலைத் தமிழர்கள் வேதமெனக் கொள்வார்களாக என்கிறார் சு.நெல்லையப்பர்.

235. கேள்வி : பாரதியார் குறித்து ஆசிரியர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி கூறியதென்ன?

காரிருளுக்கு மத்தியில், பேரொளி பொங்கி வரும் அறிகுறிகளைக் கண்டார். அடிமைத்தனத்துக்கு மத்தியில், விடுதலையின் உதயப் பிரகாசத்தைக் கண்டு வரவேற்றார். சுதந்தர பாரதத்தை அகக் கண்ணினால் கண்டு வரவேற்புக் கூறிய மகானுக்கு, ஒரு கொண்டாட்டம் ஊரெங்கும், நாடெங்கும் நடத்தி மகிழலாமே! என்று பாரதி பற்றி கல்கி. ரா. கிருஷ்ணமூர்த்தி கூறியுள்ளார்.

236. கேள்வி : ஞானரதம் என்ற கதையில் பாரதி கூறும் நாட்டு நிலைமை என்ன?

ஐயோ! என்ன உலகமடா இது! ஒழியாத ஏமாற்று, ஒழியாத வஞ்சனை, ஒழியாத கவலை. மனித சாதிக்கு தீராத நோய் ஒன்று பிடித்திருக்கிறது. மாறாத சாபம், இறங்காத விஷம். இழ்ன் பெயர் பணம். சிலர் மட்டும் பணத்துக்குத் தொண்டர். காலாணாவின் அடியார்க்கு அடியார் என்று ஞானரதம் கதையில் எழுதியுள்ளார். இது இன்றைக்கும் பொருத்தமாகவே உள்ளது.

237. கேள்வி : உவமைக் கவிஞர் சுரதா, பாரதியாரை எங்ஙனம் பாராட்டியுள்ளார்?

“தன்கரத்தைக் கண்ணீரில் கழுவிக் கொண்டு,
தமிழ்வளர்த்த பாரதியார் ஒருநா ளேனும்
பொன்மோதி ரம்போட்டுக் கொண்ட தில்லை ;
பொருள்சேர்க்கும் ஆசைஅவர்க்கிருந்த தில்லை ;
தென்பொதிகைச் சந்தனத்தைப் பூசும் முன்னே

செத்துவிட்ட பாரதியின் எழுத்தும் பாட்டும்
இன்றைக்கோ நாளைக்கோ மட்டும் அல்ல,
என்றைக்குமே திருக்குறள்போல் நிலைத்து நிற்கும்".

– என்று உவமைக் கவிஞர் சுரதா, பாரதியாரைப் பாராட்டி உள்ளார்.

238. கேள்வி : பாரதியார் பற்றிக் கவியரசர் கண்ணதாசனின் பாராட்டு யாது?

"எங்கே தமிழென்று என்தமிழர் தேடுகையில்
இங்கே தமிழென் றெடுத்து வந்தோய்! நீ வாழ்க!
கருக்கிருட்டில் பாழ்குழியில் கால்பதிந்த செந்தமிழை
உருக்கொளி மண்டபத்தில் உலவவிட்டோய்! நீ வாழ்க!
பாரதத்தை வாழவைக்கப் பாட்டெழுதிப் பாட்டெழுதிப்
பூரதத்தில் ஏறிவிட்ட பொன்மகனே ! நீ வாழ்க!"

– என்று கவியரசர் கண்ணதாசன் பாரதியைப் பாராட்டியுள்ளார்.

239. கேள்வி : கவியோகி சுத்தானந்த பாரதியாரின் புகழுரை யாது?

"பார்புகழ் பாரதியார், பாரதியார் என்றால்
பரவச மாகுதடா!
பாரதியார் பாட்டினைப் பாடினும் கேட்கினும்,
வீறு துடிக்குதடா!
பாட்டுத் திறத்தாலே நாட்டை எழுப்பிய
பாவலன் பாரதியே!
வீட்டுக்கு வீடிந்தப் பாட்டுக்குயில் வீணை
மீட்டி மிழற்றுதடா!"

– எனப் புகழ்ந்துள்ளார் கவியோகி.

240. கேள்வி : கவிஞரேறு வாணிதாசன், எங்ஙனம் பாராட்டியுள்ளார்?

"கற்ற கல்வி காட்டவென்று கவிபுனைந்த தமிழ்மொழி
கண்டுகேட்டுப் பொருள் விளங்காக் கசப்புக்கொண்ட நாட்களில்,
சொற்றொடரில் இனிமை தந்தான் சுப்பிரமணிய பாரதியார்
தூயன் வாழ்க! வாழ்கவென்று சொல்லிச் சொல்லி ஆடடா!"

241. கேள்வி : பாரதியாரைப் பற்றி கவிஞர் வாலியின் பாராட்டு யாது?

"பாரதியார்,
புதிய தமிழுக்குப் போடப்பட்ட
பிள்ளையார் சுழி!
பண்டிதர்கள் கடத்திச் சென்ற
பைந்தமிழ்க் குழந்தையைக்
கண்டுபிடித்துக் கொடுத்த
காவல் நிலையம்!
திருவல்லிக்கேணி யானை
தின்றுவிட்ட தமிழ்க் கரும்பு!"

242. கேள்வி : கவிக்கோ அப்துல் ரகுமானின் பாட்டுப் பார்வை என்ன?

"அன்று எட்டையபுரத்தில்
இரட்டைப் பிரசவம்!
நீயும், புதிய தமிழும்!
இரும்புப் பெட்டிகளில் கிடந்த
இலக்கியத்தை
ஏழைகளுக்குப் பரிமாறியவன் நீ!"

243. கேள்வி : பாரதியார் பற்றிக் கவிஞர் மு, மேத்தா பாடியதென்ன?

"நீ எழுதுகோல் எடுத்த போதெல்லாம்
எங்களைப் பூட்டியிருந்த விலங்குகள்

புலம்பத் தொடங்கின!

உன்னுடைய

சொல் புதிது, பொருள் புதிது,

தமிழ் வயலில் நீ விளைத்த

நெல் புதிது!

விடுதலைக்காக நீ எடுத்த

வில் புதிது!"

244. கேள்வி : வார்த்தை சித்தர் வலம்புரி ஜான், பாரதியார் பற்றி என்ன கூறியுள்ளார்?

"பாரதியார், கந்தக அமிலத்தைக் கருக்கொண்டிருந்த கற்பூரச் சிமிழ்! அவசரப்பட்டு அவனை அணுகிப் பார்க்கிறவர்களுக்கு, அவன் ஓர் ஊமை நிழல், முன்பனிக் காலத்து வேக நிலவின் வெளிச்ச ஊர்வலம் ! பாரதியார்க்கிருந்த பெருஞ்சிறப்பு, அவரது எழுத்திற்கும் வாழ்க்கைக்கும் இடைவெளி இல்லாதிருந்தது என்பதுதான்!"

245. கேள்வி : பாரதியார் குறித்துக் கவிஞர் ஈரோடு தமிழன்பன் என்ன பாடினார்?

"அகராதிகளின் அந்தப் புரங்களில்

வார்த்தைகளின் பலாத்காரத்தில்

அலறிய கவிதைக்கு,

ஆனந்தச் சுதந்திரத்தை

அறிமுகம் செய்தவனே!"

246. கேள்வி : ஆறில் ஒரு பங்கு கதையில் பாரதியார் கூறியது என்ன?

'இந்து சமூகத்தில் ஒரு பங்குக்குமேல் எண்ணிக்கையுள்ள மக்கள் கூட்டம் தாழ்த்தப்பட்ட கூட்டமாக, தீண்டத்தகாத கூட்டமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. பொருளாதாரத் துறையிலும் அவர்கள் பெரும்பாலோர் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். சமயம் கூறும் அன்பே தெய்வம் என்றஉயர்ந்த இலட்சியத்துக்கும், நடைமுறைவாழ்க்கைக்கும் சிறிதும் தொடர்பில்லை என்று ஆறில் ஒரு பங்கு கதையை கூறியுள்ளார்.

247. கேள்வி : இந்தியா பத்திரிகையும் விடுதலையும் பற்றி விளக்குக?

விடுதலை உணர்வை ஊட்ட பாரதியார் இந்தியா பத்திரிகையை ஒரு மிகச்சிறந்த கருவியாகக் கொண்டார். தேசத்தையும் தெய்வத்தையும் இணைத்தார். நேரடியாகப் பாடல்கள் வாயிலாக விடுதலை உணர்ச்சி ஊட்டினார். தோத்திரப் பாடல்கள் வாயிலாகவும் உணர்வை உண்டாக்கினார். ஸ்ரீ கிருஷ்ண தோத்திரம் என்றபாடலில் 'அன்று ஒரு பாரதம் ஆக்க வந்தோனே' என்று கண்ணனைப் பற்றிப் பாடினார். இங்ஙனம் விடுதலை உணர்வை ஊட்டவே இந்தியா பத்திரிகைப் பெரும்பாலும் பயன்பட்டது.

248. கேள்வி : ஆணும் பெண்ணும் எத்தகையவர் என்கிறார் பாரதியார்?

"ஆண், சமுதாயத்தின் ஒரு கண். பெண் மற்றொரு கண். இரு கண்கள் காண்பதே காட்சி. ஒன்றை ஊனப்படுத்தினால் காட்சி கெடுகின்றது. ஆகவே, சமூகம் நீ பெண்களுக்கு விடுதலை கொடு எனக் கேட்கிறது" என்பதில் ஆண், பெண் இருவருமே கண்கள் என்றும், சமானமானவை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

249. கேள்வி : பாரதியார், சாத்திரங்களை ஏன் கடிந்தார்?

"சாத்திரம் கோடி வைத்தான் – அவை
நம்மினும் உயர்ந்ததோர் ஞானம் வைத்தான் !
மீத்திடும் பொழுதினிலே – நன்
வேடிக்கையுறக் கண்டு நகைப்பதற்கே,
கோத்தபொய் வேதங்களும் – மதக்
கொலைகளும் அரசர்தம் கூத்துகளும்
மூத்தவர் பொய்நடையும் – இருள்
மூடர்தம் கவலையும் அவர் புனைந்தார்."

இதில் குறிப்பிட்டுள்ள காரணங்களால், பாரதி சாத்திரங்களைக் கடிந்தார்.

250. கேள்வி : அறிவியல் துறையில் தமிழின் நிலை என்ன?

"புத்தம் புதிய கலைகள் – பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே – அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை"

என்றார். இக்குறை போக்கப் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழில் மொழிபெயர்த்திடுதல் வேண்டும் என்று வழிவகையும் காட்டியுள்ளார்.

251. கேள்வி : பாரதியார் கற்ற மொழிகள் யாவை?

1894–இல் ஆங்கிலத்தையும் தமிழையும் கற்றார். 1901–இல் காசியில் வடமொழி, இந்தி, உருது படித்தார். 1909–இல் வங்கமொழி, பிரெஞ்சும், 1914–இல் செர்மனி, 1920–இல் தெலுங்கு, மலையாளம் முதலியன கற்றார். இதனால்தான் 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிப்போல் இனிதாவது எங்கும் காணோம்' எனப் பாட முடிந்தது.

252. கேள்வி : பாரதியாரின் கண்ணன் பாட்டில் காணப்படும் அகம், புறத்திணைத் துறைகள் யாவை?

வியந்துரைத்தல், நலம் பாராட்டல், நாணிக்கண் புதைத்தல், ஆற்றாமை தோழிக்கு உரைத்தல், தன் நெஞ்சொடு கிளத்தல், தூது விடுத்தல் முதலிய அகத்திணைத் துறைகள் காணப்படுகின்றன. புறத்திணைத் துறைகளாகப் பாடாண் திணை, அரச வாகை, அரிவன் வாகை, வீற்றினிதிருந்த பெருமங்கலம், கொடிநிலை முதலியன இடம்பெற்றுள்ளன.

253. கேள்வி : சேவகன் என்னவெல்லாம் செய்வான் என்கிறார் பாரதியார்?

வீடு பெருக்குவான் ; மாடு கன்று மேய்ப்பான் ; குழந்தைகளை அழாதபடி பாதுகாப்பான் ; எப்போதும் துணையாக இருப்பான் ; பிள்ளைகளுக்கு ஆசிரியராக, வளர்ப்புத் தாயாக விளங்குவான் ; உணவுப் பொருள் வாங்கி வருதல், நண்பன், மந்திரி போல உதவுதல் முதலியன. ஆகவேதான் பாரதியார், "இங்கிவனை யான்பெறவே என்னதவம் செய்தேன்" எனப் பாடினார்.

254. கேள்வி : தோழனாக விளங்கும் கண்ணனின் செயல்பாடுகள் சிலவற்றைக் கூறுக?

"பிழைக்கும் வழிசொல்ல வேண்டுமென் றாலொரு
பேச்சினிலே சொல்லுவான்
உழைக்கும் வழி வினையாளும் வழி பயன்
உண்ணும் வழியுரைப்பான்
அழைக்கும் பொழுதினில் போக்குச் சொல்லாமல்
அரை நொடிக்குள் வருவான்
மழைக்குக் குடை, பசிநேரத்து உணவு என்றன்
வாழ்வினுக்கு எங்கள் கண்ணன்"

என்பதில், கண்ணன் செயல்கள் சில பாடப்பட்டுள்ளன.

255. கேள்வி : சேவகரால் படும் துயரங்கள் பற்றிப் பாரதி கூறியன யாவை?

"கூலி மிகக் கேட்பார் கொடுத்ததெலாம் தாம் மறப்பார்
வேலை மிக வைத்திருந்தால் வீட்டிலே தங்கிடுவார்
ஓயாமல் பொய் உரைப்பார் என்றுரைக்க வேறுசெய்வார்
தாயாதியோடு தனியிடத்தே பேசிடுவார்
உள்வீட்டுச் செய்தியெல்லாம் ஊரம்பலத்து உரைப்பார்
என் வீட்டில் இல்லையென்றால் எங்கும் முரசறைவார்
சேவகரால் பட்ட சிரமம் மிக மிக உண்டு"

என்று, சேவகரால் படும் துன்பங்களைப் பாரதி பட்டியலிட்டுள்ளார்.

256. கேள்வி : சேவகனாய் வந்த கண்ணனால் விளைந்தவை யாவை?

"கண்ணன் என்னகத்தே கால்வைத்த நாள்முதலாய்
எண்ணம் விசாரம் ஏதுவுமவன் பொறுப்பாய்ச்
செல்வம் களமாண்பு சீர்சிறப்பு நற்கீர்த்தி
கல்விஅறிவு கவிதை சிவயோகம்
தெளிவே வடிவாம் சிவஞானம் என்றும்

ஒளிசேர் நலமனைத்தும் ஓங்கி வருகின்றன காண்."

மேலும், "கண்ணனால் பெற்றுவரும் நன்மையெல்லாம் பேசிமுடியாது" என்றும், கண்ணனால் உண்டான பயன்கள் பலவாகும் என்றும் கூறினார்.

257. கேள்வி : பாரதியார் கூறும், குழந்தை கண்ணம்மா எத்தகையவள்?

"சின்னஞ் சிறுகிளியே – கண்ணம்மா செல்வக் களஞ்சியமே
என்னைக் கலிதீர்த்தே – உலகில் ஏற்றம் புரிய வைத்தாய்
பிள்ளைக் கனியமுதே – கண்ணம்மா பேசும் பொற்சித்திரமே
அள்ளி அணைத்திடவே – என்முன்னே ஆடிவரும் தேனே"

என்றவாறு கண்ணம்மா விளங்குகிறாள்.

258. கேள்வி : கண்ணம்மாவின் செயல்களின் தன்மைகள் யாவை?

"ஓடி வருகையிலே கண்ணம்மா உள்ளம் குளிருதடீ
ஆடித்திரிதல் கண்டால் – உன்னைப்போய் ஆவி தழுவுதடீ
உச்சிதனை முகந்தால் – கருவம் ஓங்கி வளருதடீ
மெச்சி உனைஊரார் – புகழ்ந்தால் மேனி சிலிர்க்குதடீ"

என்பன, கண்ணம்மாவின் செயல் தன்மைகளாகும்.

259. கேள்வி : விளையாட்டுப் பிள்ளையான கண்ணன் தரும் தொல்லைகள் யாவை? கண்ணனின் அன்பும், குறும்பும் யாவை?

தின்னப் பழம் கொண்டுவருவது கண்ணனின் அன்பாகும். பெண்களுக்குத் தொல்லை தருதல், உண்ணும்போது தட்டிப் பறித்தல், பாதி எச்சில் படுத்திக் கொடுத்தல் முதலியன, கண்ணனின் குறும்புகளாகும்.

260. கேள்வி : தலைவி தோழியிடம் தன்னிலையை எங்ஙனம் உரைத்தாள்?

கண்ணன் பேரழகில் உள்ளத்தைப் பறிகொடுத்த தலைவி, தோழியிடம்

"தூண்டில் புழுவினைப்போல் – சகியே சுடர் விளக்கினைப்போல்
நீண்ட பொழுதாக – எனது நெஞ்சம் துடிக்குதடீ

கூண்டுக் கிளியினைப்போல – தனிமை கொண்டு மிகவும் நொந்தேன்
வேண்டும் பொருளையெல்லாம் – மனது வெறுத்துவிட்டதடீ"

என்று, வருந்திப் புலம்பினாள்.

261. கேள்வி : குறியிடம் தவறியமைக்காகத் தலைவன் படும் துன்பம் யாது?

"தீர்த்தக் கரைதனிலே–தெற்கு மூலையில் செண்பகத் தோட்டத்திலே
பார்த்திருந்தால் வருவேன்–"வெண்ணிலாவிலே பாங்கியோடென்று சொன்னாய்
வார்த்தை தவறிவிட்டாய்–அடி கண்ணம்மா மாா்பு துடிக்குதடீ
பார்த்த இடத்திலெல்லாம் – உன்னைப் போலவே பாவை தெரியுதடீ"

என்று, குறியிடம் தவறிய ஆற்றாமைக்குத் தலைவன் வருந்திப் பாடினான்.

262. கேள்வி : காதலனும் காதலியும் ஒருவருக்கொருவர் எங்ஙனம் விளங்குகிறார்கள்?

"பாயுமொழி நீ எனக்கு பார்க்கும் விழி நானுனக்கு
தோயும்மது நீ எனக்கு தும்பியடி நானுனக்கு
வாயுரைக்க வருவதில்லை வாழிநின்றன் மேன்மையெல்லாம்
தூய சுடர் வானொளியே சூறையமுதே கண்ணம்மா."

இங்ஙனம் தலைவனும் தலைவியும் விளங்கிகுகிறார்கள்.

263. கேள்வி : என் ஆண்டான் என்ற தலைப்பில், பாரதிவேண்டுவன யாவை?

"ஒன்பது வாயில் குடிலினைச் சுற்றியொரு சில பேய்கள் வந்தே
துன்பப் படுத்துது மந்திரம் செய்தே தொலைத்திட வேண்டுமையே!
பகையாவும் தொலைத்திட வேண்டுமையே!
பேயும் பிசாசும் திருடரும் என்றன் பெயரினைக் கேட்டளவில்
வாயும் கையும் கட்டி அஞ்சி நடக்க வழிசெய்ய வேண்டுமையே !
தொல்லைதீரும் வழிசெய்ய வேண்டுமையே! "

என்றெல்லாம் என் ஆண்டவன் என்பதில் பாரதி வேண்டியுள்ளார்.

264. கேள்வி : கண்ணம்மா என் குலதெய்வம் என்ற தலைப்பால் நாமறிவது என்ன?

"உலகத் துன்பங்களிலிருந்து நீங்கக் கடவுளைச் சரணடைதல் வேண்டும். ஒருவன்தன் செயல்களைக் கடவுளின் செயல்களாக்க வேண்டும். உலகில் அன்பும் அறமும் வளர வேண்டும். நல்லதும் தீயதும் நாமறியோம். அன்னை நல்லது நாட்டுக. தீமையை ஒட்டுக" என்பன, கண்ணம்மா என் தெய்வம் என்ற தலைப்பில் நாம் அறிவனவாகும்.

265. கேள்வி : கோயில் வகுத்தமைக்குப் பாரதியார் கூறும் காரணம் யாது?

"என்னுடைய ஆத்மாவும், உலகத்தினுடைய ஆத்மாவும் ஒன்று. நீ, நான், முதலை, ஆமை, ஈ, கருடன், கழுதை எல்லோருமே ஒரே உயிர். அந்த உயிரே தெய்வம்.

ஒன்று கூடிக் கடவுளை வணங்கப் போகுமிடத்து, மனிதரின் மனங்கள் ஒருமைப்பட்டு, தமக்குள் இருக்கும் ஆன்ம ஒருமையை அவர்கள் தெரிந்து கொள்ள இடம் உண்டாகுமென்று கருதி, முன்னோர்கள் கோயில் வகுத்தார்கள்.

ஊர் ஒற்றுமை கோவிலால் நிறைவேறும். வீட்டுக்குள் தனியாகச் சிலை வைத்துக் கும்பிடுவது குடும்ப ஒருமை உண்டாகும் பொருட்டாக" எனப் பாரதியார் கோயில் கட்டியதற்கான காரணத்தைக் கூறியுள்ளார்.

266. கேள்வி : ஆண் தெய்வங்கள், பெண் தெய்வங்கள் ஏன் வைத்தனர் எனப் பாரதியார் குறிப்பிடுகிறார் ?

"கவனி! பச்சைத் தமிழில் சொல்லுகிறேன். ஆணாகிய நீ கும்பிடுகின்ற தெய்வங்களில் பெண் தெய்வமெல்லாம் உன் தாய், மனைவி, சகோதரி, மகள் முதலிய பெண்களிடத்தே வெளிப்படாமல் இதுவரை மறைந்து நிற்கும் பராசக்தியின் மகிமையைக் குறிப்பிடுகின்றன. அம்மன் தாய், அவளைப் போலவே நம்முடைய பெண்கள், மனைவி, சகோதரி, மாதா முதலியோர், ஒளிவீச நாம் பார்க்க வேண்டும் என்பது குறிப்பு.

ஆண் தெய்வங்களெல்லாம் நீ, உன் பிதா, உன் சகோதரர், உன் மகன், என்னைச் சார்ந்த ஆண் மக்கள் அடைய வேண்டிய நிலைமையைக் குறிப்பிடுகின்றன.

"சிவன் நீ! சக்தி உன் மனைவி
விஷ்ணு நீ! லட்சுமி உன் மனைவி
பிரம்மா நீ! சரசுவதி உன் மனைவி"

இதைக் காட்டி, மிருக நிலையிலிருந்து மனிதரைத் தேவ நிலையில் கொண்டு சேர்க்கும் பொருட்டாக ஏற்பட்ட தேவப் பள்ளிக் கூடங்களே கோயில்களாம்". இதிலிருந்து ஆண் தெய்வங்கள், பெண் தெய்வங்கள் கோயில்களில் வைத்தமைக்குப் பாரதியார் அருமையான விளக்கமளித்துள்ளார்.

267. கேள்வி : ஒருவனுக்குத் தெய்வத்தன்மை எதனால் உண்டாகும் என்கிறார் பாரதியார்?

பிறரை ஏமாற்றுவதை நிறுத்தினால், தெய்வம் அருள் புரியும். துளிக்கூட ஓர் அணுக்கூட மற்றவர்களை ஏமாற்றுவது கிடையாது என்று ஒருவன் பரிபூரண சித்தி அடைவானாகில், அவனே ஈசுவரன். ஒரு ஜந்துவுக்கும் வஞ்சனை பண்ணக்கூடாது. வஞ்சனை இல்லாமல் ஏதோ உலகத்தில் பிறந்தோம், தெய்வம் விட்டதே வழி என்று ஆற்றின் மீது மிதந்து செல்லும் கட்டையை போல், உலக வெள்ளத்தில் மிதந்து செல்ல வேண்டும். அங்ஙனம் முற்றிலும் பாரதீனனாய் எவன் ஈசுவரன் மீது சகல பாரத்தையும் போட்டுவிட்டு நடக்கிறானோ, அவனுக்குத் தெய்வத்தன்மை உண்டாகும். இதில் சந்தேகமே கிடையாது என்கிறார்.

268. கேள்வி : எப்போது கலியுகம் நீங்கும்? கிருதயுகம் தோன்றும் எனப் பாரதியார் குறிப்பிடுகிறார் ?

பலகீன ஜந்துகளுக்கு மனிதன் எதுவரை அநியாயம் செய்கிறானோ, அதுவரை கலியுகம் இருக்கும். அநியாயம் நீங்கினால் கலி இல்லை. எவன் அநியாயத்தைக் கைவிடுகிறானோ, அவனுக்குக் கிருதயுகம் அந்த க்ஷணமே கைமேலே கிடைக்கும். இதில் சந்தேகமில்லை என்றார். எனவே

ஒவ்வொருவரும் நியாயமாக நடந்துகொள்வது கிருதயுகம் என்பது வெளிப்படை.

269. கேள்வி : தியானத்தின் மேன்மையைப் பாரதியார் எங்ஙனம் விளக்குகிறார்?

தியானத்தின் சக்தியை எளிதாக நினைக்க வேண்டாம். மனிதன் தான் விரும்புகிறபடியே ஆகிறான். புதர்க்கூட்டத்திலே தீப்பிடித்தாற்போல, மனத்திலுள்ள மற்றக் கவலைகளையும், எண்ணங்களையும் எரிக்கும் ஒரே ஜோதியாக விளங்கும் பெரிய விருப்பத்தைத் தியானமென்று கூறுகிறோம். உள்ளத்தில் இவ்வித அக்னி ஒன்று வைத்துக் கொண்டிருப்போமானால், உலகத்துக் காரியாதிகளெல்லாம் நமது உள்ள நிலைக்கு இணங்கியவாறே மாறுபடுகின்றன.

நமது உள்ளத்தில் தீரத்தன்மை, அமைதி, பலம், தேஜஸ், சக்தி, அருள், பக்தி, சிரத்தை இந்த எண்ணங்களை நிரப்ப வேண்டும். இதனால் நல்ல சிந்தனை வந்து, அறிவில் இருந்துகொள்ளும். உன்னைத் தொல்லைப்படுத்திய குட்டிச்சாத்தான் தானாகவே ஓடிப்போய்விடும். யாராயினும் தியானம் அவசியம்.

சோற்றைவிட்டாலும் விடு. நல்ல தியானம் உணவைக் காட்டிலும் இன்றியமையாதது. பரிபூர்ண விருப்பத்துடன் தியானம் செய். ஊற்றிலிருந்து நீர் பெருகுவது போல, உனக்குள்ளிலிருந்து தெளிந்த அறிவும், தீரத் தன்மையும் சக்தியும் மேன்மேலும் பொங்கிவரும். உன் இஷ்ட சித்திகளெல்லாம் நிறைவேறும். இது சத்தியம். அனுபவத்திலே பார் என்றார். தற்போதுதான் உலகம் தியானம் பற்றி உணர்ந்துள்ளது. ஆனால் பாரதியோ 100 ஆண்டுகளுக்கு முன்பே உணர்ந்து கூறியது வியப்பைத் தருகிறது.

270. கேள்வி : ஞானரதம் என்ற கதையில், பாரதியார் கூறும் நாட்டு நிலைமை என்ன?

ஐயோ! என்ன உலகமடா இது! ஒழியாத ஏமாற்று, ஒழியாத வஞ்சனை, ஒழியாத கவலை. மனித சாதிக்குத் தீராத நோய் ஒன்று பிடித்திருக்கிறது.

மாறாத சாபம், இறங்காத விஷம். இதன்பெயர் பணம். சிலர் மட்டும் பணத்துக்குத் தொண்டர். காலணாவின் அடியார்க்கு அடியார் என்று ஞானரதம் கதையில் எழுதியுள்ளார். இது இன்றைக்கும் பொருத்தமாகவே உள்ளது.

271. கேள்வி : பாரயாரின் கதை சொல்லும் பாங்கு யாது?

பாரதியார் கதையின் உருவம், உத்தி, அமைப்பு முறை முதலியவற்றில் அவர் போதிய கவனம் செலுத்தவில்லை. கருத்தை வெளியிடவே சிறுகதைகள் எழுதினார். மேலும் கதைத் துறையில் அவருக்கு முன்னோடி தமிழில் யாருமில்லை. அவரே இதற்கு முன்னோடி. அவர் எளிய நடையில், கொச்சையில்லாத பேச்சுத் தமிழில் எழுதினார். அவரது சமூகப் பொருளாதாரக் கருத்துகள், இன்னும் சிந்திக்கத் தக்கவையாகும்.

272. கேள்வி : பாரதியாரின் கல்லூரிப் பாடல் குறிப்பிடுவது என்ன?

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள் என்பதுதான் அப்பாடல். அதில்,

"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுமற்றவர் வாய்ச்சொல் அருளீர்
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்
மதுரத் தேமொழி மாதர்கள் எல்லாம்
வாணி பூசைக்கு உரியன பேசீர்
எதுவும் நல்கி இங்கு எவ்வகையானும்
இப்பெரும் தொழில் நாட்டுவம் வாரீர்"

எனப் பாடினார்.

273. கேள்வி : பாரதியாருடைய மணியாச்சி இரயில் சந்திப்பில் நிகழ்ந்த நிகழ்ச்சி யாது?

ஒரு சமயம், பாரதியும் மகாலிங்க ஐயரும் சந்திக்க நேர்ந்தது. அப்போது பாரதியார் அவரிடம் தன் பாடல் ஒன்றைப் பாடுமாறு வேண்டினார். பாரதி பாடல்களை மகாலிங்க ஐயர் கணீர்க் குரலில் பாடினார். அங்கிருந்த மூன்று ரயிலில் இருந்தவர்கள் கீழிறங்கிப் பாட்டைக் கேட்டு மயங்கி

மகிழ்ந்தனர். பாட்டுகள் முடிந்த பிறகுதான் மூன்று ரயில்களும் புறப்பட்டுச் சென்றன. இதனால் பாரதியாரின் பாட்டின் மேன்மையும், பாடிய மகாலிங்க ஐயரின் இன்னொலி இசையின் பான்மையும் நன்கு விளங்கும்.

274. கேள்வி : பாரதியார், எந்தெந்தத் தலைப்புகளில் பத்திரிகைகளில் எழுதினார்?

உலக நிகழ்ச்சிகள், ரசத்திரட்டு, விநோதத் திரட்டு, விநோதக் கொத்து, விநோத விஷயங்கள், உலக விநோதங்கள், கால விளக்கு, மணித்திரள், தீப்பொறிகள், புதுமைகள், சிறிதும் பெரிதும் முதலிய பல்வேறு தலைப்புகளில் தம் எண்ணக் கருத்துகளை எழுதி எழுதிக் குவித்தார்.

275. கேள்வி : பாரதியார் கவிதைகளுடன் சிறுகதை, கட்டுரைகள் முதலியவற்றை ஏன் எழுதினார்?

உலகில் பிற நாட்டறிஞர்கள் சிறு கதைகள், நெடுங்கதைகள், கட்டுரைகள் முதலியவற்றைப் பெரும்பாலும் உரைநடையிலேயே எழுதத் தொடங்கினர். அவை மக்களிடையே பெருஞ்செல்வாக்குப் பெற்றன. கதைகள் வாயிலாகச் சொல்வது, மக்களுக்கு மிகவும் பிடித்திருந்தது. அதனால் கவிதைகளை மட்டும் எழுதாமல் கட்டுரை, சிறுகதை என எழுதத் தொடங்கினார். சிறுகதைத் துறையில், பாரதி முன்னோடியாகத் திகழ்ந்தார்.

276. கேள்வி : சந்திரிகை கதையில், பெண் கொடுமை பற்றிப் பாரதியார் எழுதியிருப்பது யாது?

கோமதி என்பவள் விசாலாட்சி என்ற விதவையிடம், “விதவா விவாகம் செய்யத்தக்கது. நீ மறுவிவாகம் செய்துகொள். அடிமைகளாய் அஞ்சி மடிய வேண்டியதில்லை. நீ ஆண்மக்கள் எழுதி வைத்திருக்கும் நீசத்தனமான சுயநலம் கொண்ட சாத்திரத்தைக் கிழித்துக் கரியடுப்பிலே போட்டுவிடு. சென்னைக்குப் போ! கைம்பெண்ணுக்கு உதவி செய்யும் சபையார் வழியாக, விதவா விவாகம் செய்துகொள்” என்கிறாள். இதன் வாயிலாக அக்காலத்தில் பெண்கள் பலர் இளம் வயதிலேயே விதவைகளாகித் துன்பப்பட்டுள்ளனர் என்பது விளங்கும்.

277. கேள்வி : ஆறில் ஒரு பங்குக் கதையில், பாரதியார் கூறியது என்ன?

இந்து சமூகத்தில் ஆறில் ஒரு பங்குக்குமேல் எண்ணிக்கையுள்ள மக்கள் கூட்டம் தாழ்த்தப்பட்ட கூட்டமாக, தீண்டத்தகாத கூட்டமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. பொருளாதாரத் துறையிலும் அவர்கள் பெரும்பாலோர் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். சமயம் கூறும் அன்பே தெய்வம் என்ற உயர்ந்த இலட்சியத்துக்கும், நடைமுறை வாழ்க்கைக்கும் சிறிதும் தொடர்பில்லை என்று ஆறில் ஒரு பங்குக் கதையை கூறியுள்ளார்.

278. கேள்வி : 1908-இல் இந்தியா பத்திரிகையில் பாரதியார், காந்தியடிகளைப் பற்றி எழுதியது என்ன?

தென் ஆப்பிரிக்கா இந்தியர்களுக்கு ஓர் இந்திய பாரிஸ்டர் பெரும் முயற்சி செய்து வருகிறார். எதிர்காலத்தில் இந்தப் பாரிஸ்டர் இந்தியாவின் தலைமைப் பொறுப்பை ஏற்கப் போகிறார். காந்தியடிகளைப் பசுவாகவும் அதனைத் தின்ன வரும் புலியாக ஆப்பிரிக்க அரசையும் முகப்பு அட்டைப் படமாக வெளியிட்டார். இந்தியா பத்திரிகை வாயிலாக நிதி திரட்டி அனுப்பினார்.

279. கேள்வி : இந்தியா பத்திரிகையும் விடுதலையும் பற்றி விளக்குக?

விடுதலை உணர்வை ஊட்டப் பாரதியார், இந்தியா பத்திரிகையை ஒரு மிகச்சிறந்த கருவியாகக் கொண்டார். தேசத்தையும் தெய்வத்தையும் இணைத்தார். நேரடியாகப் பாடல்கள் வாயிலாக விடுதலை உணர்ச்சி ஊட்டினார். தோத்திரப் பாடல்கள் வாயிலாகவும் உணர்வை உண்டாக்கினார். ஸ்ரீ கிருஷ்ண தோத்திரம் என்ற பாடலில், “அன்று ஒரு பாரதம் ஆக்க வந்தோனே” என்று கண்ணனைப் பற்றிப் பாடினார். இங்ஙனம் விடுதலை உணர்வை ஊட்டவே, இந்தியா பத்திரிகைப் பெரும்பாலும் பயன்பட்டது.

280. கேள்வி : ஆங்கிலேயர்க்கு எதிராக இந்தியா பத்திரிகை விளங்கியது எங்ஙனம்?

இந்தியா பத்திரிகை கண்டு ஆங்கிலேயர் கலக்கம் அடைந்தனர். அவரை எப்படியாவது கைது செய்ய எண்ணினர். சமயம் பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது மண்டையம் சகோதரர்கள், அவரைப் புதுவைக்கு அழைத்துச் சென்று, அங்கிருந்து வெளியிடத் திட்டமிட்டனர். இவற்றால் இந்தியா பத்திரிகை, ஆங்கிலேயர்க்கு எதிராகச் செயல்பட்டதை அறியலாம்.

281. கேள்வி : பாரதியாரின் பத்திரிகை ஆற்றல், எத்தகையதாக இருந்தது?

பஞ்ச் என்ற ஆங்கிலப் பத்திரிகை போல, சித்திராவளி என்ற பத்திரிகையை, தமிழிலும் ஆங்கிலத்திலும் தொடங்க எண்ணினார். நகைச்சுவையுடன் படங்களுடன் வெளியிட எண்ணினார். பாரதியார் பொருளுக்கும் புகழுக்கும் ஆசைப்படவில்லை. தமிழைக் கொண்டு சமுதாயக் கொடுமைகளைச் சாடியும், பாடியும் மக்களுக்கு விழிப்புணர்வூட்டினார். ஆங்கிலேயர்க்கு அஞ்சாமல் அக்காலத்தில் பத்திரிகை நடத்தியும், எழுதியும் வந்தவர் பாரதியார் ஒருவர் மட்டுமே.

282. கேள்வி : பாரதியார், ஒரு பத்திரிகையாளர் என்பதை விளக்குக?

பாரதியார், 1904–ஆம் ஆண்டில் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டார். அன்றிலிருந்து 1921#ஆம் ஆண்டு வரை 17 ஆண்டுகள் தாம் உயிருடன் வாழ்ந்த காலம் முழுவதும் பத்திரிகையாளராகவே வாழ்ந்தார். எழுதுகோல் தெய்வம், எழுத்தும் தெய்வம் என்பது அவரது வாக்கு. மக்களுடன் தொடர்புகொள்ளப் பத்திரிகையே சிறந்த கருவி எனப் பணியாற்றினார்.

283. கேள்வி : பாரதியார் எந்தெந்தப் பத்திரிகைகளுடன் தொடர்புடையவராக இருந்தார்?

இந்தியா வார இதழின் ஆசிரியர். சுதேசமித்திரன் நாளிதழின் துணை ஆசிரியர். சக்கரவர்த்தினி என்ற மாத இதழின் ஆசிரியர். பால பாரதம் (2)

யங் இந்தியா என்ற ஆங்கில வார இதழில், கனல் தெறிக்கும் கட்டுரைகளை எழுதி வந்தார். கர்மயோகி என்ற மாத இதழின் ஆசிரியர். விஜயா நாள் இதழில் சில ஆண்டுகள் ஆசிரியர். சித்ராவளி, அமிர்தம் என்னும் பெயர்களில் பத்திரிகை ஆரம்பிக்கத் திட்டமிட்டிருந்தார். இங்ஙனம், பாரதியார் பத்திரிகைகளின் தொடர்பை இடைவிடாமல் பெற்றிருந்தார்.

284. கேள்வி : பாரதியாரின் பாடல்கள், உரைநடைகள், பத்திரிகை வாயிலாக எத்தகைய தாக்கத்தை எற்படுத்தின?

சாதாரண மக்களுடன் நேருக்கு நேர் பேசுவது போல எழுதினார். கொச்சை வார்த்தைகள் இல்லாமல், பேசும் இனிய தமிழ்நடையில் எழுதினார். இதனால் பாரதியார் எழுதிய கட்டுரைகள், பாடல்கள் எல்லாம் தமிழ் மக்களை எல்லாத் துறைகளிலும் உயர்த்தக் கூடியவனாக இருந்தன. பத்திரிகைகளில் கருத்துப் படங்களை வெளியிட்டு, எளிதில் அரசியல் அறிவு பெறவும், செயல்படுத்தவும் உணர்வு பெறவும் தூண்டினாராம்.

285. கேள்வி : திருநாவுக்கரசர் பற்றிப் பாரதியார் கூறுவது யாது?

மனிதனுக்குப் பகை புறத்திலில்லை. நமக்குள்ளே சத்துருக்கள் மலிந்து கிடக்கிறார்கள். பயம், சந்தேகம், சோம்பல் முதலான குணங்கள், நம்மை ஐயம் அடையவொட்டாமல் தடுக்கும் உட்பகைகளாகும். இவை அனைத்துக்கும் ஒரே பெயர், அதாவது நம்பிக்கைக் குறைவு. இந்த ராட்சசனை அழித்தாலொழிய நமக்கு நல்ல காலம் வராது.

பகீரதன் கங்கையை வரவழைத்த கதையை இந்தக் காலத்தில் நாம் பொய்க்கதையாகச் செய்துவிட்டோம். முன்னோர் அக்கதையின் உட்பொருளைக் கொண்டனர். நம்பிக்கையினால் ஆகாய கங்கையைப் பூமியில் வரவழைத்தார்களாம். எத்தனை பெரிய ஆபத்துகள் வந்து குறுக்கிட்ட போதிலும், அவற்றை நம்பிக்கையினால் வென்றுவிடலாம்.

“கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே”

என்று, திருநாவுக்கரசு சுவாமி பாடியிருக்கிறார்.

இங்ஙனம், பாரதியார் நாவரசரின் துணிச்சலை, எடுத்துரைத்துள்ளார். நாவரசர், பகீரதன் முதலியோரின் விடாமுயற்சியை மேற்கொண்டால் வெற்றி நிச்சயம்.

286. கேள்வி : எதனால் வெற்றி உண்டென்று பாரதியார் குறிப்பிடுகிறார்?

“இக்காலத்தில் பலர் நமது பாஷைகளை ஒலி மிகச் செய்து, பூமண்டலத்தார் வியக்கும்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்கள். பலர் நமது பூர்வ சாத்திரங்களின் உண்மையை உலகம் முழுவதும் கேட்டு உஜ்ஜீவிக்கும்படி செய்ய வேண்டுமென்று பாடுபடுகின்றார்கள். பலர் நமது நாட்டுச் செல்வத்தை வெளியேறவொட்டாமல் தடுக்க வழி தேடுகிறார்கள். பலர் இந்து தேசத்துக்குத் தன்னாட்சி வேண்டுமென்று தொழில் செய்து வருகிறார்கள். பலர் ஆரிய வேதத்தைச் சரண்புகுந்து பூமண்டலம் வாழும்படி செய்ய வேண்டுமென்று தீர்மானம் செய்திருக்கிறார்கள். இவ்வனைவருக்கும் வெற்றி உண்டு. நம்பிக்கை உண்டானால் வெற்றி உண்டு”. இவ்வாறு பாரதியார் நம்பிக்கையால்தான் வெற்றி கிடைக்கும் என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார். பாரதி வெற்றிக்கு முதலில் நம்பிக்கை வேண்டும். எண்ணியோர் திண்ணியராகப் பெற்றால் எண்ணியது கட்டாயம் வெற்றியைத் தரும்.

287. கேள்வி : சோழ ராஜாவின் எண்ணம் ஏன் ஈடேறவில்லை?

“சோழனுடைய பயத்தாலே ராமானுஜமுனி சந்நியாசி வேஷத்தை மாற்றி ஸ்ரீரங்கத்தைவிட்டுப் புறப்பட்டு நீலகிரிச் சாரலில் வேடர்களுடைய உதவியினால் தேனும் தினைமாவும் தின்று பசி தீர்த்துக்கொண்டு படாதபாடெல்லாம் பட்டு, மைசூருக்குப் பக்கத்திலே போய் வாழ்ந்தார். இனிமேல் இராமானுஜக் கூட்டம் அதிகப்படாது. ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்துவிட்டோம் என்று ராஜா நினைத்தார். அனுபவத்தில் பார்த்தீர்களா. அந்த ராமானுஜருடைய நம்பிக்கையைக் கணக்கிலே சேர்க்கவில்லை என்றார் பாரதியார். ஆகவேதான் சோழராஜாவின் எண்ணம் நிறைவேறவில்லை. இதிலிருந்து ஒருவன் தன்வலி, மாற்றான்வலி, துணைவலி, வினைவலி என்று எல்லாவற்றையும் ஆராய்ந்து செயல்பட்டால் மட்டுமே, வெற்றி கிட்டும் என்பதை உணரவேண்டும்.

288. கேள்வி : "சிலுவை" என்ற தலைப்பில், பாரதியார் உணர்த்துவது யாது?

யூதர்களை ரோம தேசத்தார் வென்று, யூத நாட்டில் பிலாத்து ரோமன் ராஜாதிகாரியாய்விட்டான். இயேசு கிறிஸ்து தெய்வத்தை நம்பி விடுதலையை முழக்கினார். யூத குருக்களே அவருக்கு விரோதமாய் அன்னியனான அதிகாரியிடம் கோள்மூட்டிவிட்டார்கள். உள்ளூர் யோக்கியர்கள் எல்லோருமாகச் சேர்ந்து, கிறிஸ்துவைச் சிலுவையில் அடித்துக் கொன்றார்கள். கிறிஸ்து மதத்தையே கொன்றுவிட்டோம் என்று அந்த மூடர்கள் நிச்சயித்தார்கள். இன்று கிறிஸ்து மரம், உலகம் முழுவதையும் சூழ்ந்து நிற்கிறது. வருந்தினால் வாராதது ஒன்றுமில்லை என்று, பாரதியார் சிலுவை என்ற தலைப்பில் குறிப்பிட்டுள்ளார்.

மெய்வருத்தம் பாராது, கண் துஞ்சாது, பசி நோக்காது, எவ்வெவர் தீமையைக் கருத்தில் கொள்ளாமல் கருமமே கண்ணாய் இருப்போர் வெற்றி பெறுவது திண்ணம். இடுக்கண் இயல்பென்று செயலாற்றினால், வெற்றி நிச்சயம் உண்டு.

289. கேள்வி : இராமானுஜரின் நம்பிக்கை யாது?

நம்பிக்கை உண்டானால் வெற்றி உண்டு. அந்த நம்பிக்கையின் முக்கிய லட்சணம் என்னவென்றால் விடாமுயற்சி. மனத்திற்குள் நிலைத்த நம்பிக்கை இருந்தால், செய்கை தடைப்படுமா? முயற்சி தூங்குமா? இடுக்கண் பயமுறுத்துமா? உள்ளம் சோருமா? ராமானுஜர் சோழ நாட்டிலிருந்து போகும் காலத்தில் தம்பின்னே தம்மைப் பிடித்துச் செல்லும் பொருட்டுக் குதிரைப்படை வருகிறது என்று கேள்விப்பட்ட பொழுது, தம்முடன் வந்த சிஷ்யர்களிடம் சொல்லிய மந்திரம் நல்ல மந்திரம்.

"கொடுமை செய்யும் கூற்றமும்
என் கோலாடின் வேகம் பெறா"

எனது கோலாகும் பொழுது எமனும் கிட்ட வரமாட்டான் என்று சொன்னார். அதற்குப் பெயர்தான் நம்பிக்கை. நம்பிக்கையின் முக்கிய லட்சணத்திற்கு இராமானுஜரின் வாழ்க்கையை எடுத்துக்காட்டினார்.

290. கேள்வி : முகம்மது நபியின் நம்பிக்கையைப் பாரதியார் எங்ஙனம் விவரித்தார்?

நபிகள்நாயகம், இறைவன் ஒருவனே என உரைத்தார். ஆனால், மக்களோ பல தெய்வ நம்பிக்கையால் அவரைத் தூற்றினர். குரோஷ இனத்தார் அவரைக் கொல்லத் துணிந்தனர். நபிகள், ஒரு சிஷ்யனுடன் மெக்கா நகரிலிருந்து மெதினாவுக்குப் புறப்பட்டார். அவரைக் கொல்ல ஒருஷ்சிய படை நெருங்கி வந்தது. அவர் ஒரு புதரில் மறைந்தார். அப்போது பயந்துபோன சிஷ்யனிடம் நபி அவர்கள், "அப்பா நான் அல்லாவின் தர்மத்தை உலகத்தில் நிலைநிறுத்தும் பொருட்டாக வந்திருக்கிறேன். என் காரியம் நிறைவேறும் வரை எனக்கு மரணமில்லை. என்னுடன் இருப்போர் பயப்படாமல் இருந்தால், அவர்களுக்குமில்லை என்று சொல்லி, அபயதானம் செய்தார். ஆபத்து வரவில்லை. குதிரைப்படையோர் இடம் தெரியாமல் ஏமாறித் திரும்பினார்கள். முகமது நபி பின்னிட்டும் தாமே ராஜசுவரராய் தமது தரிசனத்தை என்றும் அழியாமல் நிலைநிறுத்திச் சென்றார். நம்பிக்கையே காமதேனு. அது கேட்ட வரமெல்லாம் கொடுக்கும்" என்று, பாரதியார் நபிகளின் நம்பிக்கையின் பான்மை மேன்மையை எடுத்தியம்பியுள்ளார். இங்ஙனம் காமதேனு கேட்டதெல்லாம் கொடுப்பது போல, நம்பிக்கை ஒருவனுக்கு எல்லாம் கிடைக்கச் செய்யும் என்பது உண்மையாகும்.

291. கேள்வி : ஒரு புதிய அபிவிருத்தி எனப் பாரதியார், இந்தியாவில் எழுதியதென்ன?

"தமிழ்நாட்டு வர்த்தமானப் பத்திரிகைகளிலே நமது பத்திரிகை ஒன்றுதான் விகட சித்திரங்களைப் பதிப்பித்து வருவதென்ற விஷயம், நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். ஆனால் அடுத்த வாரம் முதல் இன்னுமொரு புதிய அலங்காரம் நமது பத்திரிகைக்கு எடுத்துச் செய்யக் கருதியிருக்கிறோம். அதாவது தடைப்பக்கத்திலுள்ள ஒரு சித்திரம் மட்டுமேயன்றி, பக்கத்துப் பக்கமுள்ள முக்கியமான வர்த்தமானங்களை விளக்குவதன் பொருட்டு, அங்கங்கே சிறிய படங்களும் சித்திரங்களும் போடுவதாக உத்தேசம்". இவ்வாறு இந்தியா பத்திரிகையில் பாரதி ஒரு புதிய அபிவிருத்தி என்ற தலைப்பில் குறிப்பிட்டுள்ளார்.

292. கேள்வி : இந்தியாவில் வந்த சித்திரங்கள் பற்றிப் பாவேந்தர் கூறியதென்ன?

“இந்தியா பத்திரிகையில் படம் வெளிவரும். சித்திர விளக்கமும் தெளிவாக எழுதியிருக்கும். படங்கள் ராஜிய சம்பந்தமானவை. அர்த்தப் புஷ்டியுள்ளவை. பத்திரிகை வெளிவருவதை வாசகர்கள் ஆவலோடு எதிர்பார்ப்பார்கள். படத்தை வெட்டி அட்டையில் ஒட்டி, வீட்டுச் சுவரில் தொங்கவிட்டு வைப்பார்கள்” என்று, இந்தியாவில் வரும் சித்திரங்கள் பற்றிப் பாவேந்தர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

293. கேள்வி : மிதவாதிகள் பற்றிப் பாரதியார் கூறியது யாது?

“அன்னியர்களைச் சென்ற இருபது வருஷங்களாகக் கெஞ்சிக் கெஞ்சித் தொண்டை வற்றிப் போயிருக்கிறது” என்றார். “இந்தியா என்ற வண்டியை சுயராஜ்யம் என்ற ஊருக்கு இட்டுச் செல்ல முயலும் திலகர் என்ற காளைக்கு இடைஞ்சலாக டிரோஸ்ஷா மேத்தா என்ற சண்டிமாடு உள்ளது” என்று விமர்சித்தார். மிதவாதிகளைப் பழைய கட்சியினர், நிதானஸ்தர்கள், நிதானக் கட்சியினர், பவதி பிஷாம் தேகிக் கட்சி என்றெல்லாம் கிண்டல் செய்தார்.

294. கேள்வி : பாரதியார், கால நூலாசிரியர் நிலை பற்றி என்ன கூறியுள்ளார்?

இக்காலத்தில் தமிழ் நூலாசிரியர் படும் கஷ்டங்களை ஈசனே தீர்த்து வைக்க வேண்டும். உண்மையான கவிதைக்குத் தமிழ்நாட்டில் தக்க மதிப்பில்லை. ஜமீன்தார்கள் மீதும், பிரபுக்கள் மீதும் காமாசோமா என்று புகழ்ச்சிகள் பாட்டுப் பாடினால் கொஞ்சம் சன்மானம் கிடைக்கிறது. வக்கீல்களும், வாத்தியார்களும் தமது வாக்கிலும் மனத்திலும் தமிழரசி கொலுவிருக்கும்படி செய்து வணங்க வேண்டுமென்று கூறியுள்ளார்.

295. கேள்வி : தாகூரின் கீர்த்தி பற்றிப் பாரதியார் கூறியது யாது?

கீர்த்தி அடைந்தால் மகான் ரவீந்தரரைப்போல அடைய வேண்டும். வங்காளத்தில் மாத்திரமா? இந்தியா முழுமையுமா ? பூமண்டலம் முழுமையும் பரவின கீர்த்தி. இத்தனைக்கும் இவர் பாடிய பாட்டுகளோ, வங்க பாஷையில் உள்ளன. வெறும் மொழிபெயர்ப்புக்களைத்தான் உலகம்

பார்த்திருக்கிறது. அதற்குத்தான் இந்தக் கீர்த்தி என்று, பாரதியார் தாகூரின் புகழைப் பாராட்டியுள்ளார்.

296. கேள்வி : பரிமளா நாவல் பற்றிய பாரதியாரின் கருத்து யாது?

துப்பறிதலின் புதுச்சுவை ததும்பிய அற்புதமான இனிய தமிழ் நாவல். தமிழ்நாட்டுக்கு வழிகாட்டிய முதல் பத்து வருஷங்களுக்குமுன் வெளியான துப்பறியும் நாவல். கதை இனிமையாயும், வாசகங்கள் அழகாயும், வார்த்தைகள் அர்த்தபுஷ்டி உள்ளனவாயும் இருக்கின்றன. தமிழ்மொழியிலே தற்காலக் கதைகளுக்குள்ளே சுவையிலும் சிறப்பிலும் மற்றதெதற்கும் பின்வாங்காதது என்று, பாரதியார் பரிமளா நாவல் குறித்துக் கூறியுள்ளார்.

297. கேள்வி : பாரதியாரின் சுயசரிதை பற்றிக் கூறுக ?

பாரதியார் எழுதி வெளியிட்ட சுயசரிதை, “கனவு” என்பதாகும். அப்போது அவருக்கு வயது இருபத்தெட்டாகும். “கனவு” வெளியான மூன்றாண்டுகளில் சின்ன சங்கரன் கதை என்ற பெரிய முற்றுப்பெறாத தொடர் ஞானபானுவில் வெளியிட்டார். அப்போது அவருக்கு வயது முப்பத்தொன்று. இவ்வளவு குறைந்த வயதில் பாரதியார், இரண்டு சுயசரிதைகளை எழுதியுள்ளார்.

298. கேள்வி : பாரதியாரைத் தமிழ்த்தென்றலாகப் போற்றி மகிழும் பேராசிரியர் ம.வே. பசுபதியின் அழகிய விருத்த வரிகளைக் காட்டுக.

உயர்வைத்தான் அவன் நினைத்தான் ; தமிழில் தானே
உயிர்வைத்தான் கவிபடைத்தான் மகாத்மாவுக்குப்
பெயர்வைத்தான் நினைவைத்தான் தென்ற லாகப்
பேசவைத்தான் ; கலைக்கெல்லாம் உரிமை யானான்

பெயரைத்தன் பெயராகக் கொண்ட எங்கள்
பாரதியை வணங்குகிறேன் ; அந்தத் தென்றல்
செயற்கைமொழி வெப்பங்கள் தணிவ தற்குத்
தெருவெல்லாம் வீசட்டும் ; வெற்றி கிட்டும் !

299. கேள்வி : கண்ணன் பாட்டின் முன்னுரையில் வ.வே.சு. ஐயர் குறிப்பிட்டுள்ளது யாது?

இந்நூலைத் தமிழுலகம் ஆதரித்துத்தான் இரண்டாவது பதிப்பு வெளிவருகிறது. ஆனால், சட்டோ பாத்தியாயர் எழுதிய ஆங்கிலக் கீர்த்தனைகளின் விலை மூன்று ரூபாயாக இருக்க, அளவில் அந்நூலில் குறையாததும், சுவையில் அதற்கு இணையாக இருப்பதுமான இந்நூல், கால் ரூபாயாகக் குறிக்க வேண்டியிருந்தது என நினைக்கும் போது, நாட்டில் தமிழபிமானம் வெளிப்படையாக விளங்கவில்லை என்றாவது ஒப்புக்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

300. கேள்வி : எங்கும் நிலவும் எங்கள் பாரதியார் என்ற தொடரை விளக்குக.

காக்கை குருவி எங்கள் சாதி என, அனைத்து உயிர்களிடமும் அன்பு பூண்டொழுகினார். தனியொருவனுக்கு உணவிலை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்றார். ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம் என முழங்கினார். உலகம், வான், காற்று, மழை, தீ முதலியன இனிய எனப் பாடினார். இங்ஙனம் பரந்த உள்ளத்துடன் பாரதியார் பாடியிருப்பதால், அவர் எங்கும் நிலவிப் புகழ் பெற்றுள்ளார்.

301. கேள்வி : நாட்டோர் கீர்த்தி பெறப் பாரதியார் கூறியிருப்பது யாது?

"இந்நாட்டை நான்
தொல்லை தீர்த்து உயர்வு கல்வி – வெற்றி
தரும் வீரம் அறிவு, ஆண்மை
கூடும் திரவியத்தின் குவைகள் – திறல்
கொள்ளும் கோடிவகைத் தொழில்கள் – இவை
நாடும் படிக்கு வினைசெய்து – இந்த
நாட்டோர் கீர்த்தி எங்கும் ஓங்க"

வேண்டுமென்றார்.

302. கேள்வி : வறுமை நிலையிலிருந்த பாரதியாரின் உணர்வுகள் எத்தகையவை?

பாரதியார் முப்பத்தொன்பது ஆண்டுகளே வாழ்ந்தார். ஆனால், அவர் வறுமைக்காக, துன்பங்களுக்காகச் சோர்ந்துவிடவில்லை. தேனீயைப் போல இடைவிடாது சுழன்று கொண்டேயிருந்தார். இலக்கியப் பணி, அரசியல் ஈடுபாடு, சமுதாயச் சீர்திருத்தச் செயல்கள், ஆன்மிக விசாரணைகள் என்ற வகைகளில் இவருடைய உணர்வுகள் வெளிப்பட்டன.

303. கேள்வி : செல்லம்மாள், எதற்காக மனம் புழுங்கினார்?

பாரதியார் அவர் நண்பர்களான காக்கை, குருவிகளுக்கு வீட்டிலுள்ள கொஞ்ச அரிசியையும் போட்டுவிடுவார். அப்போதும் செல்லம்மாள் ஒன்றும் கூறமாட்டாராம். ஆனால், கொஞ்ச உணவும் தாம் உண்ணாமல், எல்லாவற்றையும் பறவைகளுக்குப் போட்டு நிற்கும் பாரதியின் உணர்ச்சியை மட்டும் செல்லம்மாவால் சகிக்க முடியாததாக இருந்தது. அவர் பட்டினியாக இருப்பது கண்டு மனம் புழுங்குவாராம் செல்லம்மாள்.

304. கேள்வி : பாரதியாரின் வறுமை குறித்துப் பாரதிதாசன் குறிப்பிட்டிருப்பது யாது?

எப்போதும் ஒரே மாதிரியாக உள்ள உணவைச் சுவைத்துச் சாப்பிடவும், வெறுப்பு இல்லாமல் இருக்கவும் பாரதி பட்டினி இருக்கப் போவதாகச் சொன்னார். செல்லம்மா நான் ஒருநாள் பட்டினி இருந்தால், செத்துப் போகமாட்டேன். இன்றைக்கு நான் பட்டினி இருந்தால், நாளைக்கு எனக்குக் கீரைத்தண்டு குழம்பும் மேற்படி கீரைக் கடையலும் அமிர்தம் என்றாராம். இதனைப் பாரதிதாசன் குறிப்பிட்டுள்ளார்.

305. கேள்வி : ஒருநாள் பாரதியாரின் பட்டினி சொன்ன போது பாவேந்தர் பாரதிதாசன் கூறியதென்ன?

இவ்வளவு தொல்லையேன். நாள்தோறும் உண்டாலும் வெறுப்புத் தராத கறிவகைகளைக் கண்டுபிடித்துவிட்டால் என்கிறார் பாரதிதாசன். நாள்தோறும் உண்டாலும் தெவிட்டாத கறிவகை கிடையவே கிடையாது.

எனக்குத் தெவிட்டாத ஒருத்தி செல்லம்மாள்தான் எனப் பாரதி பதில் கூறினார். செல்லம்மாள் பட்டினித் திருநாள் எப்படி எனப் பாரதியார் கேட்கிறார். கொடி கட்டியாயிற்று என்கிறார் செல்லம்மாள்.

306. கேள்வி : பாரதியாருக்கு உண்மையான மகிழ்ச்சி எதிலிருந்தது?

தீபாவளிக்கு வேண்டிய புதுத்துணிகள், பட்சணங்கள் எல்லாமே வந்து சேர்ந்துவிட்டன. இவை பாரதியை மகிழ்விக்கவில்லை. இதற்குக் காரணம் மறுநாள் தம்மைத் தேடிவரும் தோழர்களுக்கு எதுவும் தரமுடியவில்லையே என்ற ஏக்கம்தான் அவருக்கு. வீரர்க்குக் கொடுப்பதுதான் தனக்கு உண்மையான மகிழ்ச்சி எனப் பாரதியார் கருதியதேயாகும்.

307. கேள்வி : மனித இனத்திற்குப் பாரதியார் விடுத்த வேண்டுகோள் யாது?

மானிடரே! இந்த விரதம் எடுத்துக் கொள்ளுங்கள். இது பிழைக்கும் வழி. தெருவில் நடக்கும்போதே ஒருவர்க்கொருவர் பயத்தோடு பார்த்துக் கொள்கிறார்கள். மனிதனுக்கு மனிதன் இயற்கையில் விரோதம் என்ற நிலையில் உங்கள் மூடத்தனமான மனித நாகரிகம் சேர்ந்து இருக்கிறது. இதை மாற்றி அன்பை மூலாதாரமாக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

308. கேள்வி : பாரதியாரின் இளமைக்காலப் புலமை பற்றி, நாவலர் சோமசுந்தரபாரதியாரின் கருத்து யாது?

காளிதாசர், கம்பன் முதலிய வரகவிகளுக்குக் காளிவாக்கில் எழுதிய காலம் முதல், அநாயாசமாய்க் கவி சொல்ல வாய்த்ததென்று நாம் கேட்கும் கதைகளையும், குமரகுருபரர் ஐந்தாவது ஆண்டில் அரும்பாக்கள் இயற்றினார் என்ற கதையினையும் அபூர்வ கற்பனைகள் என்று புறக்கணித்த நான், பாரதியார் ஏழாவது வயது முதல் எளிதில் பாடல் இயற்றித் தமிழ்வாணர்கள் மெச்சும்படி காட்டிய திறமையை நேரில் கண்ட பொழுதுதான் கேவலம் படிப்பினால் பாவன்மை வராது. கவிகள் பிறப்பிலேயே அமைய வேண்டும் என்று அறிந்தேன் என உணர்ந்து உரைத்தார்.

309. கேள்வி : தமிழ் மீது பாரதியார் கொண்ட பற்றினை விளக்குக?

தமிழர் மறந்தாலும் தமிழை மறவாத புலவர் பாரதியார். புதுப்புது பாவகைகளில் புதுப்புதுக் கருத்துகளை வழங்கினார். பொருளும் உணர்ச்சிகளும் இவர் பாடல்களில் மிளிர்ந்தன. தமிழைப் பற்றி, தமிழ்க் கவிஞர்களைப் பற்றிப் பாரதியார் பாடியதுபோல, எவரும் பாடியதில்லை. தம் உயிரினும் மேலாகத் தமிழை நேசித்தார். தமிழ்வழிக் கல்வி வேண்டுமென வலியுறுத்தினார். இவருக்குத் தாய்மொழிப் பற்றும், தேசப்பற்றும் இருகண்களாகும்.

310. கேள்வி : பாரதியார் பாடிய கடைசிப் பாடல் எது?

"பாரத சமுதாயம் வாழ்கவே வாழ்க வாழ்க
பாரத சமுதாயம் வாழ்கவே" – ஜய ஜய ஜய !

என்பதுதான் பாரதியார் பாடிய கடைசிப் பாடலென அமரர் சர்க்கரைச் செட்டியார் குறிப்பிட்டுள்ளார். சாதி, இன, மத பேதமற்ற சமதர்ம சமுதாயத்தை, சுரண்டலும் ஊழலுமற்ற அரசை, எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறை என்ற சமத்துவச் சமுதாயத்தைக் காண விரும்பினார்.

311. கேள்வி : அமர வாழ்விற்குப் பாரதியார் சொன்னது என்ன?

"ஆத்திசூடி இளம்பிறை அணிந்து
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்
கருநிறம் கொண்டு பார்கடல் மிசை கிடப்போன்
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்து உணராது
பல்வகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே அதனியல் ஒளியுறும் அறிவாம்
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்
அதனருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்"

என்றார்.

312. கேள்வி : பாரதியார் எதை நீக்க வேண்டுமென விரும்பினார்?

மனித இனத்துக்குத் தேவையான உணவை பூமிதேவி கொடுக்கும். பூமிதேவியின் பயனை கையாளத் தெரியாமல் பொறாமையாலும், அறியாமையாலும் தாறுமாறாக விழல்படுத்திச் சோறு தேடும் இடத்தில் சோறு தேடாமல் ஒருவர்க்கொருவர் கொல்ல வழிதேடி, பலர் வயிறு வாடச் சிலர் வயிறு ஜீரண சக்தியில்லாமல் போக, மனிதர் பரிதாபகரமாகக் காக்கையிலும் கடைப்பட்ட வாழ்வு வாழ்ந்து வீடே நசித்துப் போவதை நீக்க வேண்டுமெனப் பாரதி விரும்பினார்.

313. கேள்வி : உண்மையின் மேன்மையினைப் பற்றிப் பாரதியார் கூறியதென்ன?

எல்லாப் பேறுகளைக் காட்டிலும் உண்மைப்பேறுதான் பெருமை கொண்டது. உண்மை தவங்களுக்கெல்லாம் உயிர். உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி. உண்மை பரமாத்மாவின் கண்ணாடி. ஆதலால் தமிழா எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும் படிச் செய் என்று உரிமையுடன் மேன்மையை எடுத்தியம்பியுள்ளார்.

314. கேள்வி : ஆத்திசூடியின் இன்றியமையாமையைக் கூறுக?

தமிழர் அறம் உரைப்பதில் முன்னிற்பவர். அதனால் ஏராளமான அற நூல்கள் தோன்றின. அறநூல் வகையில் ஆத்திசூடி ஒன்று. இது இருசீர் ஓரடி யாப்பில் அமைந்தது. நெஞ்சில் எளிதாகப் பதியும். முதன்முதலில் ஆத்திசூடி பாடியவர் ஔவையார். பின் பாரதியின் புதிய ஆத்திசூடி, பாரதிதாசன் ஆத்திசூடி முதலியன வெளிவந்தன.

315. கேள்வி : காலத்திற்கேற்ற வகையில் பாரதியார் ஆத்திசூடி எங்ஙனம் அமைந்தது?

ஔவை கூறியன		பாரதி கூறியன
முனை முகத்து நில்லேல்	–	முனையிலே முகத்து நில்
மீதூண் விரும்பேல்	–	ஊண்மிக விரும்பு
தையல் சொல் கேளேல்	–	பெண்மை போற்று

முதலியன காலத்திற்கேற்ற வகையில் பாரதியாரின் ஆத்திசூடி விளங்கியது.

316. கேள்வி : பாரதியாரின் புதிய ஆத்திசூடி குறித்துப் பாரதிதாசன் கருத்து யாது?

இந்த நாளில் இந்நாட்டு மக்களுக்கு வேண்டும் பண்பு, வேண்டும் செயல்களைக் கொஞ்சமும் பாரதி அஞ்சாது கூறினார். கோல்கைக்கொண்டு வாழ். குன்றென நிமிர்ந்து நில். நன்று கருது. நெற்றி சுருக்கிடேல். எழுத்தில் சிங்க ஏற்றின் குரலைப் பாரதி ஏற்றினார் என்று வானொலி நிலையத்தில் ஐந்தாவது கவியரங்கத் தலைமையுரையில் பாரதிதாசன் குறிப்பிட்டார்.

317. கேள்வி : கற்பனைச் சிறகு விரிக்கும் பாரதியார் பாடல்கள் எத்தகையவை?

கவிஞர்கள் பொதுவாக பின்னே வருவதை முன்னே உரைக்கும் ஞானிகள். தெய்வக் குரல் படைத்தவர்கள். கவிஞன் கற்பனையில் தன்னை மறப்பவன். உணர்வில் மிதப்பவன். உண்மையை உரைப்பவன். அன்பை வெளிப்படுத்துபவன். அழகை ரசிப்பவன். மேலே கூறியன அனைத்தும் பாரதி பாடல்களில் பார்க்க முடியும். பாரதியின் கற்பனைகள் வருங்கால நல்லுலகைப் படைக்க வெளிப்டுத்தப்பட்டவையாகும்.

318. கேள்வி : காந்தியின் பெருமையைப் பாரதியார் எவ்வாறு புலப்படுத்தினார்?

“விடுதலை பெறுவீர் விரை வாநீர்
வெற்றி கொள்வீர் என்றுரைத் தெங்கும்
கெடுத லின்றிநம் தாய்த்திரு நாட்டின்
கிளர்ச்சி தன்னை உணர்ச்சிசெய் கின்றார்
சுடுதலும் குளிரும் உயிர்க் கில்லை
சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக் கில்லை
எடுமினோ அறப் போரினை என்றான்
எங்கோ மேதகம் ஏந்திய காந்தி”

என்று பாரதியார் காந்தியடிகளின் பெருமையைப் புலப்படுத்தினார்.

319. கேள்வி : யார் மேலோர். கீழோர் எனப் பாரதியார் குறிப்பிடுகிறார்?

“சீலம் அறிவு கருமம் இவை
சிறந்தவர் குலத்தினில் சிறந்தவராம்
மேலவர் கீழவரென்றே – வெறும்
வேடத்தில் பிறப்பினில் விதிப்பனவாம்”

என்பதில் குறிப்பிட்டார்.

320. கேள்வி : பெண் கல்வியும் விடுதலையும் குறித்துப் பாரதியார் பாடியவை யாவை?

“பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் – நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.

கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ!
பெண்கள் அறிவை வளர்த்தால் வையம்
பேதமை அகற்றிடும் கண்டீர்”

என்று பெண் கல்வி குறித்துப் பாரதியார் பாடியுள்ளார்.

321. கேள்வி : பாரதியார் என்னென்ன பெயர்களில் எழுதினார்?

பாரதியார் பல்வேறு செய்திகளைத் தொடர்ந்து எழுதி வந்தவர். தம் சொந்தப் பெயரிலும் காளிதாசன், சக்திதாசன், ஷெல்லிதாசன், சாவித்திரி, நிருபநேயர், ஈத்தமதேசாபிமானி, நித்திய தீரர் எனப் பல்வேறு புனை பெயர்களிலும் எழுதிவந்தார்.

322. கேள்வி : பாரதியார் ஒரு பத்திரிகையாளர் என்பதை விளக்குக?

பாரதியார் 1904–ஆம் ஆண்டில் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டார். அன்றிலிருந்து 1921–ஆம் ஆண்டு வரை 17 ஆண்டுகள் தாம் உயிருடன்

வாழ்ந்த காலம் முழுவதும் பத்திரிகையாளராகவே வாழ்ந்தார். எழுதுகோல் தெய்வம், எழுத்தும் தெய்வம் என்பது அவரது வாக்கு. மக்களுடன் தொடர்புகொள்ள பத்திரிகையே சிறந்த கருவி எனப் பணியாற்றினார்.

323. கேள்வி : பாஞ்சாலி சபத நூலில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கைச் செய்தி யாது?

தமிழ்மொழிக்கு அழியாத உயிரும் ஒளியும் இயலுமாறு இனிப் பிறந்து காவியம் செய்யப் போகிறவரகவிகளுக்கும், அவர்களுக்குத் தக்கவாறு கைங்கரியங்கள் செய்யப் போகிறபிரபுக்களுக்கும் இந்நூலைப் பாத காணிக்கையாகச் செலுத்துகிறேன் என்று பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.

324. கேள்வி : பாரதியார் கால நூலாசிரியர் நிலை பற்றி என்ன கூறியுள்ளார்?

இக்காலத்தில் தமிழ் நூலாசிரியர் படும் கஷ்டங்களை ஈசனே தீர்த்து வைக்க வேண்டும். உண்மையான கவிதைக்கு தமிழ்நாட்டில் தக்க மதிப்பில்லை. ஜமீன்தார்கள் மீதும், பிரபுக்கள் மீதும் காமாசோமா என்று புகழ்ச்சிகள் பாட்டுப் பாடினால் கொஞ்சம் சன்மானம் கிடைக்கிறது. வக்கீல்களும், வாத்தியார்களும் தமது வாக்கிலும் மனதிலும் தமிழரசி கொலுவிருக்கும்படிச் செய்து வணங்க வேண்டுமென்று கூறியுள்ளார்.

325.கேள்வி : எவ்வகைத் தியானம் பயன் நல்கும் என்கிறார் பாரதியார் ?

வாயினால் ஒன்று முணுமுணுப்பது அதிகப் பயன் தரமாட்டாது. உன்னுடைய உள்ளுயிரிலிருந்து அந்தப் பிரார்த்தனை வெளியேறவேண்டும்.

நீயாக உனது சொந்தக் கருத்துடன், சொந்த வசனங்களில், உயிர் கலந்து தியானம் செய்வதே பயன்படும்.

326. கேள்வி : பாரதியார் எதனை முக்தி என்கிறார்?

கடவுளை உள்ளத்தில் இருத்தி, தானென்றகொள்கையை மாற்றி, இசபோதத்தை எய்தி, அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று புருஷார்த்தங்களிலும் பொறுப்பு நீங்கியிருப்பதே முக்தி.

327. கேள்வி : நமது தாய்மொழி மேம்படப் பாரதியார் என்ன கூறுகிறார்?

மயிலாப்பூரில் சிறிது காலத்திற்கு முன்னே நடந்த ஸ்ரீ வைஷ்ணவ சபைக் கூட்டத்தில் பெரும்பான்மையோர் இங்கிலீஷ் தெரியாத வைதிக பிராமணராக இருந்தும் அதிலே சில இங்கிலீஷ் உபந்நியாசங்கள் நடந்ததை எடுத்துக்காட்டி மேற்படி விகிதக்காரர் பரிதாப்படுகிறார். 'நமது ஜனத் தலைவர்கள் இங்கிலீஷில் யோசிப்பதையும் பேசுவதையும் நிறுத்தினால் ஒழிய, நமது பாஷை மேன்மைப்பட இடமில்லை' என்று அவர் வற்புறுத்திச் சொல்லுகிறார்.

இங்கிலீஷ் பேச்சைவிட்டுத் தாம் தமிழரென்பதை அறிந்து நடக்க வேண்டும். பந்தாடும்போதும், சீட்டாடும் போதும், ஆசாரத் திருத்த சபைகளிலும், வருணாசிரம சபைகளிலும், எங்கும், எப்போதும், இந்தப் பண்டிதர்கள்" இங்கிலீஷ் பேசும் வழக்கத்தை நிறுத்தினால், உடனே தேசம் மாறுதலடையும். கூடியவரை இவர்கள் தமிழெழுதக் கற்றுக்கொள்ள வேண்டும். இவர்கள் அத்தனை பேரும் தமிழ்ப் பத்திரிகை வாங்கிப் படிக்க வேண்டும்.

328. கேள்வி : பாரதியாரின் நகைச்சுவைக்கு ஒரு சான்று தருக.

ஒரு வீட்டில் ஆர்மோனியம்" வாசித்தால் பக்கத்திலே ஐம்பது வீட்டுக்குக் கேட்கிறது. அறியாதவன் தனது அறியாமையை வீட்டில் இருந்தபடியே இரண்டு, மூன்று வீதிகளுக்குப் பிரசுரம் பண்ண வேண்டுமானால், அதற்கு இந்தக் கருவியைப் போலே உதவி வேறொன்றுமில்லை. வீணை தவறாக வாசித்தால் வீட்டில் உள்ள ஜனங்களுக்கு மாத்திரந்தான் துன்பம். ஆர்மோனியம் தெரு முழுவதையும் இம்சைப்படுத்துகிறது. ஒரு தேசத்தாரின் செவியைக் கெடுத்து சங்கீத உணர்ச்சி குறையும்படி செய்ய வேண்டுமானால் கிராமந்தோறும் நாலைந்து ஆர்மோனியம்" பரவும்படி செய்தால் போதும்.

329. கேள்வி : பாரதியார் உலக வாழ்க்கையின் பயன் எது என்றார்?

உலக வாழ்க்கையில் மானிடராலும் மற்றஉயிர்களாலும் விரும்பப்படும் மிகச்சிறந்த பயன் யாது? எப்போதும் மாறாத, எப்போதும் குறையாத இன்பமெய்தி வாழ்தல்.

இவ்வகையான இன்பத்தை எய்தும் பொருட்டாகவே மானிடர் கல்வி கற்பதும், பொருள் சேர்ப்பதும், தவங்கள் செய்தலும், அரசாள்வதும், களவு செய்தலும், கொலை செய்வதும், பேசுதலும், சிரித்தலும், ஆடுதலும், பாடுதலும், அழுதலும், உழுதலும் # எல்லாத் தொழிலும் செய்கிறார்கள். மனிதர் மட்டுமேயன்றி மற்றஎல்லா உயிர்களும் தாம் செய்யும் எல்லாத் தொழில்களையும் மேற்கூறிய ஒரே நோக்கத்தோடுதான் செய்கின்றன.

330. கேள்வி : பாரதியார் எப்படி உழைக்க வேண்டுமென்றார்?

உழைப்பு எப்போதும் உண்டு. இதிலே நான் என்றபாரத்தை நீக்கிவிட்டு உழைத்தல், வேலை கிறுகிறுவென்று வேகமாகவும் பிழையில்லாமலும் நடக்கும். தன்னைத் தூக்கித் தலையிலே வைத்துக் கொண்டு வேலை செய்தால் வேலை குழம்பும்.

331. கொள்கை என்பது பற்றிப் பாரதியார் கருத்து யாது?

ஒரு கொள்கையாவது, பகுத்தறிவின் துணையால் செய்யத்தக்கது இது, செய்யத்தகாதது இது" என்று ஒருவன் அறிந்து முன்பின் யோசித்துத் தன் வாழ்நாளில் நீடித்துச் செய்ய மனத்தால் ஒப்புக்கொள்ளும் கருமத் தொடரின் அஸ்திவாரமாகிய ஒரு கருத்தாம். நம் நாட்டில் இவ்வாறு கொள்கைகளைத் தேர்ந்து எடுத்துக் கொள்ளும் சக்தி வாய்ந்த மனிதர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் கொள்கைகளை அவரோடு மனத்தால் கிரகித்தல் வேறு, அவற்றின்படி நடத்தல் வேறு. யாதேனும் ஒரு கொள்கையை ஒருவன் அங்கீகரித்துக் கொண்டு அதன்படி நடக்க முடியாதவனாய் இருந்தால், அவனும் ஜீவப் பிரேதந்தான்.

332. கேள்வி : பாரதியார் கூறும் இன்பம் என்பது யாது?

இன்பம் என்பது இனிய பொருள்களுடன் உயிர் கலந்து நிற்பது. பெண், பாட்டு, கூத்து முதலிய ரஸ வஸ்துக்களை அனுபவிப்பது. இவ்வின்பங்கள் எல்லாம், தமிழா, உனக்கு நன்றாக அமையும்படி பராசக்தி அருள் புரிக. உன்னுடைய நோய்களெல்லாம் தீர்க. உனது வறுமை தொலைக. உனக்கு இனிமையும் அழகுமுடைய வஸ்துக்களெல்லாம் வசப்படுக. பஞ்ச பூதங்களும் ஈனக்கு வசப்படுக. நீ எப்பொழுதும் இன்பம் எய்துக.

333. கேள்வி : அமரன் ஆவதற்குப் பாரதியார் கூறும் வழி யாது?

தீராத கவலை பொதிந்த சாதாரண மனித வாழ்க்கை சற்று நீடிப்பினால் என்ன பயன் தரும்? நான் கவலையை ஒழித்தேன். ஆதலால் எப்போதும் வாழ்வேன். எப்போதும் வாழ்வேன். ஆதலால் கவலையை விட்டேன். கவலையாலும், பயத்தாலும் மரணமுண்டாகிறது. கவலையும் பயமும் பகைவர். நான் இப்பகைவரை வென்று தீர்த்தேன். ஆதலால் மரணத்தை வென்றேன். நான் அமரன்.

334. கேள்வி : குருவி என்ன சொல்லி உணர்த்துவதாகப் பாரதியார் கூறியுள்ளார்?

இந்தக் குருவி என்ன சொல்கிறது? "விடு", "விடு", "விடு" என்று கத்துகிறது. இஃது நான் விரும்பிய இன்பத்திற்கு வழி இன்னதென்று தெய்வம் குருவித் தமிழிலே எனக்குக் கற்றுக்கொடுப்பது போலிருக்கிறது.

335. கேள்வி : எதனை விரைவுபடுத்த வேண்டுமெனப் பாரதியார் கூறியுள்ளார்?

ஓயாமல் தூற்றல் போட்டால் அது மழையாக மாட்டாது. சிணுங்கல் மழையினால் கெடுதிதான் உண்டாகும். தூற்றலாகத் தொடங்கியது மழையாக விரைவிலே பெய்து முடித்துவிட வேண்டும். ஒரு நல்ல காரியம் செய்யத் தொடங்குவோன், அதை ஒரே நீட்டாக வருஷக்கணக்கில் நீட்டி, மற்றவர்களுக்கு அதுவே ஒரு தீராத் தொல்லையாகும்படி செய்யலாகாது, சுபஸ்ய சீக்கிரம்" நன்மையைத் துரிதப்படுத்த வேண்டும்.

336. கேள்வி : சமத்துவம் பற்றிப் பாரதியாரின் கருத்து யாது?

சமத்துவக் கொள்கையிலே இரண்டு செய்திகளைப் பற்றிய விசாரணையுண்டாகிறது. முதலாவது செல்வத்தையுண்டாக்குதல். இரண்டாவது, அதைப் பங்கிட்டுக் கொடுத்தல். முதலாவது செய்தியில் தொழிலைப் பற்றிய ஆராய்ச்சி ஏற்படுகிறது. இரண்டாவது செய்தியில் கடவுளைப் பற்றிய பேச்சு.

337. கேள்வி : மகாகவிகளுக்கு விழாக் கொண்டாட பாரதியார் விரும்பியதை விளக்குக.

மயிலாப்பூரில் திருவள்ளுவர் கோயிலைச் செம்மையாகக் கட்ட வேண்டும். இப்போது மிகவும் ஏழை நிலைமையில் இருக்கிறது. திருவழுந்தூரிலும், கரூரிலும் ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்த வேண்டும். ஜன்ம தினங்கள் நிச்சயப்பட வழியில்லை. ஆதலால் சரஸ்வதி பூஜைக்கு முன்பு அல்லது பின்பு குறிப்பிட்டதொரு தினத்தில் இந்த மகான்களின் ஞாபகத்தைக் கொண்டாடுதல் பொருத்தமுடைய செய்கையாகும். நவராத்திரி உத்ஸவங்கள் நமக்குள் வழக்கமாக உள்ளதால், அந்த ஸமயத்தை ஒட்டி நமது மகாகவிகளுக்குத் திருவிழாக் கொண்டாடுதல் சுலபமாக இருக்கும்.

338. கேள்வி : மொழிபெயர்ப்புப் பற்றிப் பாரதியார் கூறியதென்ன?

மொழிபெயர்ப்புகளில் ஸ்வபாஷையின் வழக்கங்களையும் பிரயோகங்களையும் கைவிட்டு அன்னிய பாஷையின் வசன நடையைப் பின்பற்றும் வழக்கம் கிடையாது. ஆனால், தமிழ்நாட்டிலோ முழுதும் தமிழ் நடையை விட்டு இங்கிலீஷ் நடையில் தமிழை எழுதும் வினோதமான பழக்கம் நமது பத்திராதிபர்களிடம் காணப்படுகிறது.

339. கேள்வி : பெண்கள் பாடல்களாகப் பாரதியார் கூறுவன யாவை?

கும்மிப் பாட்டு, பல்லிப் பாட்டு, கிளிப் பாட்டு, நலங்குப் பாட்டு, பள்ளியறைப் பாட்டு, அம்மானைப் பாட்டு, தாலாட்டுப் பாட்டு முதலிய பெண்களுடைய பாட்டெல்லாம் மிகவும் இன்பமான வர்ணமெட்டு. தமிழர்களின் தாய், அக்காள், தங்கை, காதலி முதலிய இவர்கள் பாடும் பாட்டு மறக்கக்கூடிய இன்பமா? ஞாபகம் இல்லையா?

340. கேள்வி : வீணை பற்றிப் பாரதியாரின் கருத்தென்ன?

பெண்கள் வீணை கற்றுக்கொள்ளுதல் சிரமமில்லை என்பது தெரியும். வீணை பழகினால் அதிலேயே நல்ல தாள ஞானம் உண்டாய்விடும். வீணை மனிதர் குரல் போலவே பேசும். இன்பச் சுருள்களுக்கும் பின்னல்களுக்கும் வீணை மிகவும் பொருத்தமானது. அதன் ஒலி சாந்தி மயமானது. சரஸ்வதி தனது கையில் வீணையைத் தரித்துக் கொண்டிருக்கிறாள். காளிதாச கவி பராசக்தியைப் பாடும் போது மாணிக்க வீணாம் உபலாயந்தீம்" என்று தொடங்குகிறார்.

341. கேள்வி : பிரம்மராய ஐயரைப் பற்றிப் பாரதியார் கூறுவதென்ன?

வேதபுரத்தில் தர்ம வீதியில் வாத்தியார் பிரமராய அய்யர் என்றொரு பிராமணர் இருக்கிறார். இவர் சாக்த மதத்தைச் சேர்ந்தவர். "சக்தி பூஜை" பண்ணுவோரில் சிலர் மதுமாம்ஸ போஜனம் செய்கிறார்கள். இந்த வாத்தியார் அப்படியில்லை. இவர் "சுத்த சைவம்". அதாவது ஆட்டுக்குட்டியை மாமிசம் தின்னும்படி செய்தாலும் செய்யலாம், இந்த வாத்தியாரை மாமிசம் தின்னும்படி செய்யமுடியாது.

342. கேள்வி : நான்கு நூற்பயனும் கொண்ட ஔவையார் பாடல் யாது?

ஔவைப் பிராட்டி வீட்டுப் பாடலையும் கூட்டி நான்கு புருஷார்த்தங்களையும் ஒரே சிறிய வெண்பாவுக்குள் அடக்கிப் பாடினார். இந்த ஆச்சரியமான வெண்பா பின்வருமாறு :

உதலறம் தீவினைவிட் டீட்டல்பொருள் எஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித் – தாதரவு
பட்டதே இன்பம், பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு".

343. கேள்வி : சாதி பற்றித் தாகூரின் கருத்தாகப் பாரதியார் கூறியது யாது?

சாதி என்றசொல் இரண்டு அர்த்தமுடையது. அதாவது ஒரு தேசத்தார் தமக்குள் ஏற்படுத்தி வைத்துக் கொள்ளும் பிரிவு, வேளாள சாதி, பிராமண சாதி, கைக்கோள சாதி என்பது போல. இரண்டாவது, தேசப் பிரிவுகளைத்

தழுவிய வேற்றுமை. ஜப்பானிய சாதி, சீன சாதி, பாரசீக சாதி, ஆங்கிலேய சாதி, ஜர்மானிய சாதி, ருமானிய சாதி என்பது போல. இவ்விரண்டிலும் அதிக அநுகூலமில்லையென்பது ஸ்ரீமான் ரவீந்திரநாத் தாகூருடைய கக்ஷி.

344. கேள்வி : எவை மூன்றையும் செய் எனப் பாரதியார் கூறுகிறார்?

நமக்குத் தொழில்கவிதை நாட்டிற்கு குழைத்தல்
இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல், – உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நங்குடியை வாழ்விப்பான்,
சிந்தையே, யிம்மூன்றுஞ் செய்.

345. கேள்வி : பாரதியார் 'அச்சமில்லை' எனச் சொல்வன யாவை ?

அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெல்லாம் எதிர்த்துநின்றபோதினும்,
அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்ப தில்லையே
துச்சமாக வெண்ணிநம்மைத் தூறுசெய்த போதினும்,
அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்ப தில்லையே
பிச்சைவாங்கி யுண்ணும்வாழ்க்கை பெற்றுவிட்ட போதினும்,
அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சைகொண்ட பொருளெலாம் இழந்துவிட்ட போதினும்,
அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்ப தில்லையே.

346. கேள்வி : பாரதியார் தம் மனத்திற்குக் கூறும் கட்டளை யாது?

பேயா யுழலுஞ் சிறுமனமே
பேணா யென்சொல் இன்றுமுதல்
நீயா யொன்றும் நாடாதே
நினது தலைவன் யானேகாண்
தாயாம் சக்தி தாளினிலும்
தரும மெனயான் குறிப்பதிலும்
ஓயா தேநின் றுழைத்திடுவாய்
உரைத்தேன் அடங்கி உய்யுதியால்.

347. கேள்வி : பாரதியார் வருகின்ற பாரதத்தை எங்ஙனம் வாழ்த்திப் பாடினார்?

ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா
களிபடைத்த மொழியினாய் வா வா வா
கடுமைகொண்ட தோளினாய் வா வா வா
தெளிவுபெற்றமதியினாய் வா வா வா
சிறுமைகண்டு பொங்குவாய் வா வா வா
எளிமைகண் டிரங்குவாய் வா வா வா
ஏறுபோல் நடையினாய் வா வா வா

348. கேள்வி : பாரதியார் என்ன சொல்லி முரசு கொட்ட வேண்டுமென்றார்?

வெற்றி யெட்டுத் திக்கு மெட்டக்
கொட்டு முரசே
வேத மென்றும் வாழ்க வென்று
கொட்டு முரசே
நெற்றி யொற்றைக் கண்ண னோடே
நிர்த்தனஞ் செய்தாள்
நித்த சக்தி வாழ்க வென்று
கொட்டு முரசே

349. கேள்வி : பாஞ்சாலி என்ன சபதம் செய்ததாகப் பாரதியார் பாடியுள்ளார்?

தேவி திரௌபதி சொல்வாள் ஓம்
தேவி பராசக்தி யானை யுரைத்தேன்,
பாவிதுச் சாதனன் செந்நீர் – அந்தப்
பாழ்த்துரி யோதனன் ஆக்கை யிரத்தும்
மேவி யிரண்டுங் கலந்து – குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல்முடிப் பேன்யான் – இது
செய்யுமுன் னேமுடியே'னென் றுரைத்தாள்.

350. கேள்வி : எத்தகைய புதுமைப் பெண்ணைப் பாரதியார் படம்பிடித்துக் காட்டுகிறார்?

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்
நிமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்
அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்
அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளதல் பெண்ணறமாகுமாம்
உதய கன்னி யுரைப்பது கேட்டிரோ!

351. கேள்வி : பாரதியார் கூறும் இன்பத்திற்கான வழி யாது?

ஏந்து புலனை அடக்கி – அர(சு)
ஆண்டு மதியைப் பழகித் தெளிந்து
நொந்து சலிக்கும் மனதை – மதி
நோக்கத்திற் செல்ல விடும்வகை கண்டோம்.

352. கேள்வி : அபிநயம் பற்றிப் பாரதியார் கூறுவதென்ன?

நாட்டிய சாஸ்திரத்தை ஆதியில் பரமசிவன் நந்திக்குக் கற்றுக் கொடுத்தார். அப்போது பகவான் நந்தியை நோக்கி, கேளாய்! நந்தி! அபிநயம் தவறுவதாலே ஜனங்கள் நரகத்தை அடைகிறார்கள். தர்மிஷ்டனாகிய கூத்தன் அபிநய உண்மைகளை ஆச்சாரியனிடமிருந்து நியமங்களுடனே கற்றுக் கொள்ள வேண்டும். அடிமைகள் சாஸ்திர விரோதமாக நைச்யம் ஒன்றையே காட்டி நடத்தும் கூத்தைப் பார்ப்போம் நரகத்தை அடைகிறார்கள்". இங்ஙனம் அபிநயம் பற்றிப் பாரதி கூறியுள்ளார்.

353. கேள்வி : பாரதியாருக்கு உண்மையான மகிழ்ச்சி எதிலிருந்தது?

தீபாவளிக்கு வேண்டிய புதுத்துணிகள், பட்சணங்கள் எல்லாமே வந்து சேர்ந்துவிட்டன. இவை பாரதியை மகிழ்விக்கவில்லை. இதற்குக் காரணம்

மறுநாள் தம்மைத் தேடிவரும் தோழர்களுக்கு எதுவும் தரமுடியவில்லையே என்ற ஏக்கம்தான் அவருக்கு. வீரர்க்குக் கொடுப்பதுதான் தனக்கு உண்மையான மகிழ்ச்சி எனப் பாரதியார் கருதியதேயாகும்.

254. கேள்வி : பண்டமாற்று முறையினைப் பாரதி எங்ஙனம் குறிப்பிட்டுள்ளார்?

"கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்
சிங்க மாராட்டியர்தம் கவிதை கொண்டு,
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்."

இப்பாடல், பண்டமாற்று முறையினை நினைவூட்டுகிறது.

355. கேள்வி : கண்ணன் பாட்டில் இடம்பெற்றுள்ள உவமைகள் சிலவற்றைக் கூறுக?

கண்ணை இமை காப்பது போல், தூண்டில் புழுவினைப் போல், நல்ல உயிரும் நாடியும் போல, தீபத்தில் விழும் பூச்சி போல, ஆலகால விடத்தினைப் போல, வானத்தை மறந்துவிட்ட பயிர் போல என, ஏராளமான உவமைகள் கண்ணன் பாட்டிலே காணப்படுகின்றன.

356. கேள்வி : பாரதியின் புதிய ஆத்திசூடி குறித்து பாரதிதாசன் கருத்து யாது?

இந்த நாளில் இந்நாட்டு மக்களுக்கு வேண்டும் பண்பு, வேண்டும் செயல்களைக் கொஞ்சமும் பாரதி அஞ்சாது கூறினார். கோல்கைக்கொண்டு வாழ். குன்றென நிமிர்ந்து நில். நன்று கருது. நெற்றி சுருக்கிடேல். எழுத்தில் சிங்க ஏற்றின் குரலைப் பாரதி ஏற்றினார் என்று வானொலி நிலையத்தில் ஐந்தாவது கவியரங்கத் தலைமையுரையில் பாரதிதாசன் குறிப்பிட்டார்.

357. கேள்வி : பாரதியாரைக் குறித்துப் பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் புகழ்வது யாது?

"பாரதியார்க்கு நிகர் பாரதியே – மண்ணில் யாரெதிர்த்தாலும், மக்கள் சீருயர்த்தும் பணியில் பாரதியார்க்கு நிகர் பாரதியே."

358. கேள்வி : பாரதியாரின் மொழி பெயர்ப்புகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

(1) ஆங்கிலத்திலிருந்து புதிய கட்சியின் கொள்கைகள், மகாகவி ரவீந்திரநாத் தாகூர் அருளிய பஞ்ச வியாஸங்கள், பாரத ஜன சபை – முதலிருபாகங்கள், தாகூர் சிறுகதைகள்.

(2) சமஸ்கிருதத்திலிருந்து ஸ்ரீமத் பகவத்கீதை, தேவரிஷிகளின் கவிதை, பதஞ்சலியோக சூத்திரம்.

359. கேள்வி : தொழில் செய்வது பற்றிப் பாரதியார் கூறுவது யாது?

உபநிஷத் எழுதுவது முதல் பல்லக்குச் சுமப்பது வரை எல்லாத் தொழில்களையும் தெய்விகமாகச் செய்யலாம். இப்போது மனிதர்களிலே பெரும்பாலோர் தமது தொழில்களை மிருக வழிகளிலேயும் (சுய இலாபத்தை மட்டுமே கருதி), பிசாச, ராக்ஷஸ வழிகளிலேயும் (தமது இலாப–நஷ்டங்களைக் கூடக் கருதாமல்) மனோ விகாரங்கள் சென்றபடி நடத்தி வருகிறார்கள்.

இதை நீக்கி, ஆத்ம தர்மப்படி தொழில்கள் செய்வதே தெய்வ மார்க்கமாகும்.

360. கேள்வி : தமிழ்க் காப்பியங்களின் சுவையைப் பற்றிப் பாரதியார் கூறுவதென்ன?

"கள்ளையும் தீயையும் சேர்த்து – நல்ல
காற்றையும் வானவெளியையும் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப் புலவோர்கள் பல
தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்"

என்று, தமிழ்க் காப்பியச் சுவையை உணர்த்தினார்.

361. கேள்வி : கல்வி நிலையங்களை உருவாக்கிய வள்ளலாகத் திகழ்ந்த தருமமூர்த்தி இராவ் பகதூர் கலவல கண்ணன் செட்டியார் பணிகளைப் பாரதியார் பாராட்டிய குறிப்பைச் சுட்டிக்காட்டுக !

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பார்வையில் தர்மமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டியார்

மயிலாப்பூரில் ஸ்ரீ கலவல கண்ணன் செட்டியார் ஏற்படுத்திய புதிய ஸம்ஸ்க்ருத கலாசாலையின் க்ருகப் பிரவேசத்தை ஒட்டி நீதிப்ரவீண ஸ்ரீ சுப்பிரமணிய அய்யர் செய்த ஆசி வசனங்களிடையே, ராமானுஜாசார்யருடைய மகிமையைப் பற்றிச் சில வார்த்தைகள் சொன்னார்......

பக்தியின் பெருமையை உலகத்துக்கு விளங்கக் காட்டிய மஹான்களிலே ராமானுஜாசாரியார் ஒருவர், பக்தியாவது தெய்வத்தை நம்புதல், குழந்தை தாயை நம்புவது போலவும், பத்தினி கணவனை நம்புவது போலவும், பார்த்த பொருளைக் கண் நம்புவது போலவும், தான் தன்னை நம்புவது போலவும் தெய்வத்தை நம்ப வேண்டும். இரவிலும் பகலிலும், இன்பத்திலும் துன்பத்திலும், தொழிலிலும் ஆட்டத்திலும், எப்போதும் இடைவிடாமல் நெஞ்சம் தெய்வ அருளைப் பற்றி நினைக்க வேண்டும். நோய் வந்தால் அதனைத் தீர்க்கும்படி தெய்வத்தைப் பணிய வேண்டும். செல்வம் வேண்டுமானால், தெய்வத்தினிடம் கேட்க வேண்டும். கல்வி, அறிவு, புகழ், ஆயுள் தலிய எல்லா மங்களங்களையும் தெய்வத்தினிடம் உண்மையுடன் கேட்டால் அது கொடுக்கும். தெய்வம் கொடுக்காவிட்டாலும் அதை நம்பவேண்டும். கேட்டவுடனே கொடுப்பது தெய்வத்திற்கு வழக்கமில்லை. பக்தி பக்குவமடைந்த பிறகுதான் கேட்ட வரம் உடனே கிடைக்கும். அதுவரை தாமஸங்கள் உண்டாகும். இது கர்ம விதி.....

இந்த உலக முழுமைக்கும் ஈசனே தலைவன். அவனும் பக்தர்களுக்கு வசப்பட்டவன். பக்தன் எது கேட்டாலும் கைகூடும். நம்பு, கேள். ஓயாமல் தொழில் செய்து கொண்டிரு பயனுக்கு அவசரப்படாதே. தெய்வம் நிச்சயமாக வரம் கொடுக்கும். தெய்வம் பிரஹ்லாதனை ஹிரண்யனிடமிருந்து காத்தது. தெய்வம் விக்கிரமாதித்யனுக்கும், காளிதாஸனுக்கும், சிவாஜி ராஜாவுக்கும், நிகரில்லாத வெற்றியும் தீராத

புகழும் கொடுத்தது. இவ்விதமான தெய்வ பக்தியை ராமாநுஜர் மனிதருடைய இஹபரவாழ்வுக்கு தல் ஸ்தானமாகச் சொன்னார்......

இப்படிப்பட்ட மனுஷ்யர்களுடைய தர்மத்தை இக்காலத்தில் வளரும்படி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் ஸ்ரீ கண்ணன் செட்டியார் ஏற்படுத்தியிருக்கும் கலாசாலையில், பிற மதங்களும் உண்மையென்ற சமரஸ ஞானத்தை ஊட்டத் தவறலாகாது.

எல்லா உயிர்களிடத்திலும் நாராயணன் விளங்குவது கண்டு, அந்த ஞானத்தாலே கலியை வென்று தர்ம ஸ்தாபனம் செய்வதற்குள்ள பயிற்சி, மேற்படி கண்ணன் செட்டியார் கலாசாலையிலும், அதுபோன்று எல்லாப் பாடசாலைகளிலும் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்தால், தேசம் மறுபடி மேன்மையடையும்.

இது கைகூடும் வண்ணம் பராசக்தி அருள் செய்க.

362. கேள்வி : "யாமறிந்த புலவரிலே" என்ற பாடலில் கருத்தைக் கவரும் நுண்பொருள் பலவுண்டு என்பதை அறிஞர் கோவை இளஞ்சேரன் குறிப்பிடும் திறத்தைக் காட்டுக ?

புகழ்வாய்ந்த இப்பாடலின் வழியாக இலக்கியத்தின் திறவுகோலராக நம் பாரதியார் வெளிப்படுகிறார்.

பாரதியார் புகழ்ந்த புலவர்களையும் அவர்தம் இலக்கியங்களை அணுகாதவர்களையும் அறிமுகப்படுத்தும் முறையைச் சிந்தித்தால் ஓர் இலக்கியத் திறவுகோல் கிடைக்கும்.

ஓர் இலக்கியத்தின் முழுப் பயனையும் பெற அதனை முதலில் வாயரப் பேசி அடுத்துச் செவிகுளிர கேட்டுப் பின் கண்குளிரக்கண்டு பயின்று சுவைக்கவேண்டும் என்ற குறிப்பை உமையராய்ச், செவிடர்களாய்க், குருடர்களாய் என்பதனுள் வைத்துள்ளார் .

இக்குறிப்பு இலக்கியங்களைப் பொதுவாக அணுகுவதற்கும், சுவைப்பதற்கும் பாரதியார் வழங்கிய திறவுகோல்.

மூன்று புலவர்களை அறிவித்த அவர் அம்மூவரை அணுகாதவர்களை மூவகையினராக அறிவித்தமையை கூர்ந்து நோக்க வேண்டும் பாரதியார்

அமைத்த புலவர் வரிசையைக் காண வேண்டும்.

கம்பரை அனுகாதவர் உமையராம் – திருவள்ளுவரை அனுகாதவர் செவிடர்களாம் – இளங்கோவை அனுகாதவர் குருடர்களாம்.

கம்பர் பாடல்களை வாயாரப் பாடவேண்டும் – பேசவேண்டும் என்கிறார். திருக்குறளின் அறவுரைகளை செவியாரக் கேட்டு வாழ்வைச் செம்மை செய்துகொள்ள வேண்டும் .

இளங்கோவடிகளின் நாடக இலக்கியத்தை மனக்கண் குளிரக் கண்டு மகிழவேண்டும் என்கிறார் .

இவ்வகையாய் தமிழர் நலம்பெறவேண்டும் என்றால் தமிழ் இலக்கியங்களைப் பயில வேண்டும் – பயின்றவற்றைத் தெருவில் உள்ளோர்க்கெல்லாம் பயிற்றுப் பரப்ப வேண்டும். பரப்பித் தமிழ் முழக்கம் எழுப்பவேண்டும். என்பது பாரதியாரின் பேரவா .

இந்த ஒரு பாடலே நுண்பொருளைப் பலவகையில் காணத் தூண்டுகிறது .

பாரதியாரின் பாடல்கலே நம் மனத்தில் தோன்றும் வினாக்களுக்குப் பதிலாகஅமைகின்றன.

363. கேள்வி : அறிஞர் மு.வ பாரதியாரைப் பாராட்டிய புகழுரையைக் குறிப்பிடுக.

நாட்டு மக்கள் நலம் பெற்று வாழ்வதற்காகப் பாடல் பல பாடிய பாரதி யாருடைய நெஞ்சம், நாட்டு விடுதலையை மட்டும் பாடி அமையவில்லை. நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு இடையூறாக இருந்து வந்த பலவகைக் கொடுமைகளையும் எதிர்த்துச் சாடியது. சாதி வேறுபாட்டைத் தாக்கிப் பாடினார், மூடநம்பிக்கைகளை எதிர்த்து முழங்கினார், குழந்தைகளுக்கு ஊக்கம் ஊட்டிப் பாடினார். பெண்களை அடிமைப்படுத்தும் கொடுமையை எதிர்த்துப் போரிட்டார். தாய்மொழியைப் புறக்கணித்து விட்டு ஆங்கிலத்திற்கே மதிப்புக் கொடுத்து வந்த அந்நியக் கல்வி முறையைத் தாக்கினார். இவ்வாறு அவர் சமுதாய நன்மைக்கான பாடல்கள் பலவற்றைப் பாடினார். அவை இன்றும் உணர்ச்சி மிகுந்த கவிதைகளாகப் பாடிப் போற்றப்படுகின்றன.

பாரதியார் பிறவியிலேயே சுதந்தரமான மனப்பான்மை உடைய கவிஞர், சுதந்தரத்தைத் தெய்வமாக வழிபட்டுப் பாடிய கவிஞர். செல்வம் நிரம்பிய ஜமீன்தார்களிடையே வாழ்ந்து, அவர்களைப் புகழ்ந்து பாடிக்கொண்டிருக்கும் சூழலில் வளர்ந்து, அவருடைய மனம் அதைவிட்டு உயரப் பறந்தது . சென்னையில் சுதேசமித்திரன் என்னும் நாளிதழுக்கு துணையாசிரியராக அமர்ந்த பிறகு, நாட்டில் நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தில் அவர் நெஞ்சம் ஈடுபட்டது. அவர் எழுதிய உரை நடையிலும் கவிதையிலும் புதிய வேகமும் ஆர்வமும் ஏற்பட்டன. கற்பவர்களின் நெஞ்சை உடனே மாற்றிச் செயல் படுத்தும் தீவிர உணர்ச்சி அவருடைய எழுத்துக்களில் காணப்பட்டது.

364. கேள்வி : கவியரசியார் செளந்தரா கைலாசம் அம்மையாரின் பாட்டு வரிகளில் பாரதியாரைப் புனைந்த திறத்தினை எழுதுக.

பாரதியே ! வெள்ளைப் பரங்கியரின் ஆட்சியினை
வேரறவே வீழ்த்தியது நின்கவிதை ! பாரினையே
என் கவிதை பாலிக்கும் என்றுருகிப் பாடினையே !
நின்கவிதைக் கேது நிகர் ?

அறிவாலும் பொல்லா அறியாமை யாலும்
பிறப்ப தெளிமையெனும் பெற்றி ! – அரசே
தெளிந்த அறிவுடையாய் ! நீகவிதை சிந்த
எளிமையதில் ஆளும் இருந்து !

தான்பிழைக்கப் பாட்டெழுதும் தன்மை நினக்கில்லை
நான் செழிக்க என்னருமை நாடதுவும் – தான் செழிக்கப்
பாடிப் பணிசெய்த பாவலனே ! நின்சொல்லை
நாடப் பெருகும் நலம் !

பாரதியே! உன்னினிய பாடல் தெள்ள முதில்
ஊறித் திளைத்தால் உருவாகும் – ஊறிக்
குவிகின்ற நல்லுணர்வைக் கோலமுறும் இன்பக்
கவியென்றே கொட்டும் கலை !

மூத்த அறிவுடையாய் ! முத்துத் தமிழுடையாய் !
காத்து மகிழ்ந்திடநற் காவியங்கள் பாடுவதில் வல்லானே !

உன்னையெவர் வாவென் றழைத்தாரோ ?

சொல்லாயோ யாரென்று ? சொல் !

தாவிப் பறந்திருப்பாய், சக்தி அழைத்திருப்பாள்
நீவிட்டுச் சென்றாலும் நீங்கிடுமோ உன் நினைவு ?
கொஞ்சு தமிழ் பாடும் குயிலே ! நீதேயா(து) எம்
நெஞ்சினிலே நீந்தும் நினைவு !

365. கேள்வி : கவிப்பேரரசு வைரமுத்து தீட்டிய கவிராஜன் கதையை இளைஞர்கள் ஒப்பிவித்த சில வரிகளை எடுத்து மொழிக .

அது எப்படி?
எட்டயபுரத்தில் மட்டும்
ஒருத்திக்கு
நெருப்பைச் சுமந்த கருப்பை?
அது கூடச் சாத்தியம்தான்
ஆனால் – இது எப்படி
ஏகாதிபத்திய எரிமலையை
ஒரு
தீக்குச்சி சுட்டதே
இது எப்படி?
என்கிறார்...

தவிர்த்து பாரதியாரின் எளிமை, இனிமையை.. தமிழன்னை விரும்பினாள்.. ஆகவேதான் 'கிழிசல் கோட்டில் தஞ்சம் புகுந்தாளாம் ..

என் பேனா
தமிழ்த் தாயின் கூந்தலுக்குச்
சிக்கெடுத்தது !
கிழிசல் கோட்டு
கவிதா தேவிக்குப்
பீதாம்பர மானது
என்கிறார்.

366. கேள்வி : பாவலர் வ. சிவசங்கரனின் பாரதியார் குறித்த பாவரிகளைப் பதிவு செய்க ?

பாரதியார் பாடாத பொருளு முண்டா ?
பாருக்கு ளவர்போலக் கவியு முண்டா ?
பாரதத்தின் சீருயர்த்த மறந்த துண்டா ?
பண்புதனைப் பேசாத நிலையு முண்டா ?
'இல்லை' என்பதுதானே பதில் !
உள்ளத்தி லுண்மையொளி வேண்டு மென்றார் ;
உரைக்கின்ற சொல்லுக்கே வுயிர்கொ டுத்தார் !
கள்ளமனங் கொண்டோரைச் சாடு கின்றார் ;
கவிஞருக்குப் பயமேது ? கவிதை தூது !

என்கிறார்.

சொல்லுக்குச் சூடேற்றிச் சொல்லு கின்றார் ;
சோறில்லை யொருவனுக்கே யென்று சொன்னால்,
பொல்லாத உலகத்தை யழிப்போ மென்றே,
பொதுநலத்தின் தத்துவத்தைப் புரிய வைத்தார் !

என்னே பொதுநலத் தத்துவம்.

மனதில் உறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்

– மகாகவி பாரதியார்

ஊக்கமூட்டிய வரிகள்

அமுதசுரபி

இதழியல் திலகம் திருப்பூர் கிருஷ்ணன்

தற்கால இலக்கியம்: பாரதி இயல்: புத்தகத்திலிருந்து | மகாகவி பாரதியார் நினைவுதினம்: செப்டம்பர் 11

கேள்வி பதில் பாணியில்

ஒரு குறிப்பிடத்தக்க நூல்!



■ பாரதியாரின் தமிழ் உணர்வு வெளிப்பட்ட சில இடங்கள் கூறுக?

ஒருமுறை புதுவைக் கடற்கரையில் பாரதியார், வ.வே.சு. ஐயர், வ.ரா., திருச்சி வழக்கறிஞர் முதலியோர் உரையாடிக் கொண்டிருந்தனர். இடையிடையே பாரதியார் சில பாடல்களை ஆவேசமாகப் பாடினார். பாட்டு முடிந்தது. திருச்சி வழக்கறிஞர் வ.வே.சு. ஐயரைப் பார்த்து "உங்க திலக் இப்போது எப்படி இருக்கான்" என வெகுளித்தனமாகக் கேட்டார். திலக் என்று கேட்டது "சுதந்தரம் எமது பிறப்புரிமை" என்று முழங்கிய பாலகங்காதர திலகரைத்தான். வ.வே.சு. ஐயருக்குச் சொல்லொணாக் கோபம். முகமே சிவந்து விட்டது. ஆனாலும் மௌனமாய் இருந்தார்.

பாரதியாருக்குக் கோபம் பீறிட்டு வந்தது. புயலெனச் சீறினார். "ஏண்டா! நீ தமிழன் இல்லையா, வெள்ளைக்காரனா! என்னடா டிலக் வேண்டியிருக்கு? திலகர் என்று கூற உன் நாக்கு கூசுகிறதோ? எங்கள் தலைவர் திலகர் உன் வீட்டு மாட்டுக்காரனா! அந்த மகானை மரியாதை இல்லாமல் பேசுகிறாயே! முழு மூடா!" எனக் கோபத்துடன் பொரிந்து தள்ளிவிட்டார்.

வழக்கறிஞரின் முகம் அச்சத்தால் வெளுத்துப் போயிற்று. பாரதியாரிடம் தம் பேச்சுக்கு வருத்தம் தெரிவித்தார். தமிழர்கள் ஒருவரோடு ஒருவர் பேசும்போது தமிழிலே பேச வேண்டும் என்பது பாரதியாரின் பெருவிருப்பமாகும். மேலும் பிழையிருந்தாலும் தமிழிலேயே எழுத வேண்டும் என்பதும் அவரது எண்ணமாகும். இதனை மனைவி செல்லம்மாள், தம்பி விசுவநாதன் முதலியோர்க்கு எழுதிய கடிதங்கள் வாயிலாக உணரலாம்.

■ பாரதியாரின் பாடலைக் கேட்டுக்கொண்டே உயிர்நீத்த சுதந்திரப் போராட்டத் தலைவர் யார்?

ஔவையாரும் கபிலரும், பிசிராந்தையாரும் கோப்பெருஞ்சோழனும், கபிலரும் பாரியும் போல வ.உ. சிதம்பரனாரும் பாரதியாரும் நட்புப் பூண்டவர்கள். தமிழ்ப் பற்றாலும், விடுதலை உணர்வாலும் ஒரே சிந்தனையுடையவர்கள். இத்தகைய உள்ளம் ஒன்றிய நண்பர்களைக் காண்பது அரிது. சிதம்பரனார் முதன்முதலில் பாரதியாரை இந்தியா இதழ் அலுவலகத்தில் சந்தித்தார். அது குறித்துச் சிதம்பரனார் கூறியன நம்மைக் கவர்வன.

'இந்த முதல் சந்திப்பும் பேச்சுமே என்னைச் சோழனாகவும், அவரைக் கம்பனாகவும் நான் நினைக்கும்படிச் செய்தது. பாரதியார் என்னைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்றார். அங்கு வெகுநேரம் அரசியல் விஷயங்களைப் பற்றிப் பரஸ்பரம் பேசிக் கொண்டிருந்தோம்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

அப்போது சிதம்பரனார் தன் உள்ளத்தில் தேசாபிமான ஒளி பிரகாசித்த விதம் பற்றி கூறினார். அப்போது கடற்கரை மின்விளக்குகள் பளிச்சென எரியத் தொடங்கின. அப்போது பாரதியார், "பிள்ளைவாள்! சக்தி துணை செய்வாள். நம் உள்ள ஒளி பிரகாசிக்கும்போது மின்னொளியும் பிரகாசிக்கச் செய்தது. எடுத்ததெல்லாம் வெற்றி

12 செப்டம்பர் 2019 | அமுதசுரபி

அமுதசுரபி

ஔவை அருள்

என்பதற்கான சுபசகுனம் இதுதான்'' என்றார் பாரதியார்.

சிதம்பரனார் தமது இறுதிக் காலத்தில் பாரதியாரின் "என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்ற பாடலைக் கேட்டுக் கொண்டே உயிர் நீத்தார், என்று சிலம்புச் செல்வர் ம.பொ.சி. `வரலாற்றுப் புதையல்` என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தேச பக்தர் சிதம்பரனார் பிறவிச் சைவர். சைவ சித்தாந்த சாத்திரமான சிவஞானபோதத்துக்கு உரை எழுதிய உத்தமர். ஆனால் உயிர் விடுங்கால், அவர் சிவாயநம என்று சொல்லவில்லை, வந்தேமாதரம் என்று சொல்லித்தான் உயிர்விட்டார். மரணம் நெருங்கியபோது மணிவாசகரின் திருவாசகப் பாடலைக் கேட்க விரும்பவில்லை. தேசபக்த மதத்தாரின் திருவாசகமான பாரதியாரின் தேசியப் பாடலைக் கேட்கவே விரும்பினார்.

''என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்''

என்ற பாடலை தேசபக்தர் ஒருவர் பாட, அதைக் கேட்டுக் கொண்டே, மரணத்தைத் தழுவினார். உயிர் விடும்போதும் தேசபக்தர் கேட்க விரும்பிய உருக்கமான பெருமை படைத்தது பாரதியாரின் தேசியப் பாடல்.

பாரதியார் சிதம்பரனார் பற்றிப் பாடிய பாடல்கள் பாகாய் நெகிழ்வூட்டுவன. ஒப்பற்ற தியாகியான சிதம்பரனாரைத் தமிழ்கூறும் நல்லுலகம் நாளும் நினைவு கூர வேண்டும். காலம் மாற மாற மொழி, இன, வரலாற்றை எழுதி நாட்டுத் தலைவர்களைப் போற்றிப் புகழும் திறம் அமைய வேண்டுமென்பதை பாரதியார் பல இடங்களில் வலியுறுத்தியுள்ளார். "பூர்வீக மகான்களின் ஞாபகத்தைத் தீவிரமான பக்தியுடன் வளர்க்காத நாட்டில், புதிய மகான்கள் பிறக்க வழியில்லை" என்ற பாரதியார் கூற்று இங்கு ஆழ்ந்து எண்ணத்தக்கதாகும்.

■ பாரதியாருடைய தொடர்பு குறித்து இராஜாஜி கூறியன யாவை?

`1906 ஆம் வருஷம் 48 ஆண்டுகளுக்கு முன் பாரதியாரை முதன்முதலில் சந்தித்தேன். சென்னையில் தம்புசெட்டித் தெருவில் இச்சந்திப்பு நடந்தது. கல்கத்தா காங்கிரசுக்குப் போகப் பாரதியாரும் ஆயத்தமாக இருந்தார். என் வக்கீல் தோழர் சேலத்து நரசிம்மய்யரும் நானும் பாரதியாரோடு சேர்ந்து மூவருமாகக் கல்கத்தா போக ஏற்பாடு செய்து கொண்டிருந்தோம்.

'தேஜஸ் பொருந்திய முகம், உருமாலையும் இல்லை, கையில் தடியுமில்லை, அழகும் ஒளியும் சிரிப்பும் வீசிய முகம் பளிச்சென்று இப்போதும் கண்முன் வந்து நிற்கிறது. பிறகு புதுச்சேரியிலும் அந்த முகத்தைக் கண்டேன். குதித்துக் குதித்துப் பாடுவதையும் கேட்டேன். நல்ல சாப்பாடு போட்டார். சேலத்து வக்கீல் நரசிம்மய்யருக்கும் சாப்பாடு போட்டுப் பாடல் பாடினார். பிறகு சென்னையில் பல தடவை சந்தித்திருக்கிறோம்' என்று இராஜாஜி பாரதியார் சந்திப்பைக் குறிப்பிட்டுள்ளார். இச்சந்திப்புகளைப் பாரதியாரின் ஆய்வாளர் பாரதியறிஞர் பத்மநாபன் எழுதியுள்ள பாரதியார் கவிநயம் என்ற தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பாரதியார் பாடல்களில் வந்தேமாதரம் முதலாக ஏறத்தாழ பதினாறு பாடல்களை இராஜாஜி ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். அவை பல இதழ்களில் வெளியிடப்பட்டன. இந்தியா இதழில் 13.03.1909இல் `துடிக்கின்ற இதயம் (பாரத ஜனங்களின் தற்கால நிலை)` என்னும் பாடல் வெளிவந்தது. இராஜாஜி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 17.01.1928இல் இது வெளியிடப்பட்டது. இது குஜராத்தி மொழியிலும் வெளிவந்தது. 1936ஆம் ஆண்டு அகில இந்திய காங்கிரசின் பொன்விழாவாகும். அப்போது இராஜாஜி, தமிழ்த்தாத்தா உ.வே. சா. அவர்களைக் கொண்டு பாரதியார் படம் திறக்க ஏற்பாடு செய்தார். வசிட்டர் வாயால் பிரம்மரிஷி எனப் பாரதியார் பாராட்டப் பெற்றார் என இராஜாஜி குறிப்பிட்டு மகிழ்ந்தார். ●

புத்தகம்: பாரதியார் பதில்கள் நூறு,
ஆசிரியர்: ஔவை அருள்
வெளியீடு:
ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம்,
12/6, போயஸ் சாலை,
தேனாம்பேட்டை, சென்னை-18.
பக் 148, விலை: குறிப்பிடப்படவில்லை.

தினமலர்

12

படிக்கலாம் வாங்க!

பாரதியார் பதில்கள் நூறு

ஆசிரியர்: ஔவை அருள்
வெளியீடு: ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம், சென்னை – 600 018
தொலைபேசி: 044 – 4341 8700
பக்கம்: 148 விலை: இல்லை

காலங்கள் கடந்து போயினும் பாரதியார் பாடல்களின் வாசம் உலகெங்கும் வானளாவி நித்தியமாய்ச் சுழம்ந்து கொண்டிருக்கிறது.

இந்திய விடுதலைப் போராட்டக் கொந்தளிப்புகளின்போது சற்றும் அஞ்சாமல் வீரியமாகப் பாடி, பாமரர்களைத் தட்டியெழுப்பி மக்கள் மனதில் அழியாத தடம் பதித்த மகாகவியை, உலக வரலாறு அழுத்தமாகப் பதிவு செய்து கொண்டது.

விழித் தீப்பந்தங்களோடு விடுதலைக்குப் பாடிய பாரதியின் வரலாற்றை, இக்கால இந்தியக் குடிமக்கள் அனைவரும் அறிய வேண்டும்.

பாரதியின் இளமைப்பருவம், தமிழ்ப்பற்று, தேசப்பற்று, அறிவார்ந்த புலமைத்திறம், விடுதலை வேட்கை, நகைச்சுவைக் கவியரங்க நிகழ்வுகள், நுண்ணறிவு உரையாடல்கள், பெண் விடுதலை விழைவு, சமத்துவச் சிந்தனைகள், பாட்டு வகைகள், அரிய வாழ்க்கைச் சம்பவங்கள் அனைத்தையும் உள்ளடக்கி மிளிரும் கருத்துக்கருவூலம் இந்நூல்.

வழமையான வடிவில் வரும் வாழ்க்கை வரலாற்று நூல்களைப்போல் அன்றி பெரும்பான்மையினரையும் ஈர்க்கும் வகையில் பாரதியைப் பற்றிய, 100 கேள்விகளுக்குத் தெளிவான, சுவையான விடைகளாக புதிய உத்தியோடு வடிவமைத்துச் சுவைபட வழங்கியிருக்கிறார், நூலாசிரியரும், தமிழக அரசின் மொழி பெயர்ப்புத்துறை இயக்குநருமான ஔவை அருள்.

'பழங்கதைகள் பேசுவதிலோர் மகிமையில்லை. இறவாப் புகழுடைய நூல்களைத் தமிழ்ப் புலவர்கள் இயற்ற வேண்டும்.

அயல் நாட்டார் அவற்றை வணக்கம் செய்தல் வேண்டும்' என்று அன்றே சொன்ன தீர்க்க தரிசியான பாரதியார் வரலாறு முழுவதையும் செழுமையாகத் தொகுத்துத் தந்திருப்பது பாராட்டுக்குரியது. அவை, நூலின் மதிப்பைக் கூட்டுகிறது.

பாரதி – காந்தி சந்திப்பு, பாரதி – நிவேதிதா சந்திப்பு, பாரதியைப் பற்றிய கல்கி, ராஜாஜி, வையாபுரிப்பிள்ளை, அறிஞர் வெ.சாமிநாத சர்மா ஆகியோரது கருத்துக்கள் என எதுவும் விடுபடாமல் நூலில் இடம் பெற்று உள்ளன.

— மெய்ஞானி பிரபாகரபாபு

தினத்தந்தி

பாரதியார் பதில்கள் நூறு

மகாகவி பாரதியார் பற்றி நீண்ட உரைநடையாக எழுதுவதை விட பாரதியார் பற்றி 100 கேள்விகளைக் கேட்டு அவற்றுக்கு பதில் அளிக்கும் விதமாக பாரதியாரின் முழுமைப்பாடு இருக்கும் இந்த நூல், நல்ல தகவல்களைத் தந்து இருப்பதுடன் படிக்க சுவையாக உள்ளது. பலவிதமான பாடல்களைப் பாடிய பாரதியார், தாலாட்டுப் பாடல் மட்டும் பாடாதது ஏன்? பாரதியார் பாடலைக் கேட்டபடி உயிர்நீத்த சுதந்திர போராட்ட வீரர் யார்? சக்திதாசன் என்ற புனைபெயரை பாரதியார் வைத்துக் கொண்டது ஏன்? என்பது போன்ற பல கேள்விகளுக்கு இந்த நூலில் பதில் இருக்கிறது.

(ஆசிரியர்: அவ்வை அருள்; வெளியீடு: ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம், 12/6, போயஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை-18; போன்: 044 43418700)

துக்ளக்

புத்தக விமர்சனம்

நூல்: பாரதியார் பதில்கள். ஆசிரியர்: ஔவை அருள். விலை: அன்பளிப்பு. பக்கம்: 148. வெளியீடு: ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம், 12/6, போயஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 18.

மகாகவி பாரதியின் ... [illegible]

SHRIRAM
Capital

"Shriram House"
No. 4, Burkit Road,
T.Nagar, Chennai - 600 017.
Ph : 044 - 4905 2500

EMPOWERING PEOPLE THROUGH PROSPERITY

கவிப்பேரரசின் கரும்பு வரிகள்

அறிவுப் பரம்பரையின் அருள்

மனித இனத் தொடர்ச்சியில் மரபணுக்களின் வினைப்பாட்டுக்கு எடுத்துக்காட்டு மொழிபெயர்ப்புத்துறை இயக்குநர் முனைவர் ந.அருள்.
தமிழின் நெடும்பரம்பரையின் நீட்சி அவர்.

உரைவேந்தர் என்று தமிழுலகம் உச்சிமேற்கொண்டு உவந்து கொண்டாடும் அறிஞர் பெருமகன் ஔவை துரைசாமி அவர்களாவார், முனைவர் ஔவை அருள் அவர்களின் பாட்டுத் திறனறிந்த பாட்டனார் ஆவார்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணை வேந்தராகத் திகழ்ந்த - தமிழாய்ந்த மேடைகளில் இணையில்லா வேந்தராகத் திகழ்கிற அறிஞர் திருமகன் முனைவர் ஔவை நடராசன் அவர்கள் அருள் அவர்களின் தந்தையார் ஆவார்.

பாட்டனாரின் மரபறிவும், தந்தையாரின் புத்தறிவும் கூடிப் பெற்ற திறமும் உரமும் வாய்க்கப்பெற்ற முனைவர் ந.அருள் அவர்கள் வினாவிடை வடிவில் எழுதியிருக்கும் இந்த பாரதியார் பனுவல் ஆய்வுலகத்தின் அணிகலனாகவும், அறிவுலகத்தின் படைக்கலனாகவும் திகழத்தக்கது.

விரிந்த எண்ணம் - பரந்த பார்வை - செறிந்த மொழி - சிறந்த வடிவம் என்பனவற்றால் உங்கள் வினா விடைத்தொகுப்பு உயர்ந்து விளங்குகிறது. ஆட்சித்துறையில் தமிழ் வளர்க்கும் அருமைக்குரிய அருள் இன்று, தமிழ் உலகத்தின் அறிவடையாளங்களுள் ஒருவராக அறியப்படுகிறவர்.
இந்த நூல் அவரது மாட்சிக்குச் சாட்சி. விளம்பரமே தேவையில்லை.

இளவல் அருள் ஏற்கெனவே தேன்கூடு ; நான்வேறு ! சர்க்கரை தெளிக்கவேண்டுமா என்ன ? வளர்பிறை மகனாகிய உங்கள் அறிவாற்றலைப் பாராட்டுகிறேன் தமிழ் நீளும் ; நாளை உலகை ஆளும் என்ற நம்பிக்கை பெறுகிறேன்.

அன்போடு...

சென்னை
26.01.2020

வைரமுத்து